
கல்கி
இரண்டு புத்தகங்கள்
KALKI 17.1.99
விலை ரூ.4.50
பொங்கல் ஸ்பெஷல்!
திருமணச் சிறப்பிதழ்!

புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

PBF

மத்திய அரசாங்க அங்கீகாரம் பெற்ற "நிதி" கம்பெனி

துவக்கம் 1985. பதிவு எண்: 11600/85

பதிவு அலுவலகம்

223, தெற்கு தங்க சாலை தெரு, சென்னை - 600 003.

☎ 5352676, 5355472, 5359316

கிளைகள்

2, கிழக்கு மாட வீதி, திருவான்மியூர், சென்னை - 600 041.
☎ *4416417, 4413582, 4425518*

995-P II அவின்யூ, 12வது மெயின் ரோடு ஜங்ஷன்,
அண்ணாநகர், சென்னை - 600 040. ☎ *6262656, 6280750*

73 & 74 ஆற்காடு ரோடு, முதல் மாடி கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. ☎ *4846528, 4843017*

215, எம்.டி.எச். ரோடு, முதல் மாடி அம்பத்தூர்,
சென்னை 600 053, ☎ *6357725, 6255733*

8, மகாலட்சுமி தெரு, தி. நகர்.
சென்னை - 600 017. ☎ *4344319, 4332378*

537, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.
☎ 5965208, 5965256

22. நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002.
☎ *0431 706187, 706681, 706368.* (செவ்வாய் விடுமுறை)

நம்பிக்கை ♦ நாணயம் ♦ பாதுகாப்பு



● நகைகள் மற்றும் வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்



இயக்குநர் குழு தலைவர்

Dr. R. விவேகானந்தன்
B.com., MBA.,

நிர்வாக இயக்குநர்

Dr. P. பாலசுப்ரமணியம்
B.Sc.,

அலுவலக நேரம்

காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை

மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை

ஞாயிறு: காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை

• வார விடுமுறை வெள்ளிக்கிழமை •

புதிய பகுதி

அப்புறம் என்ன ஆச்சு?

சாதாரண பொருட்கள்தாம். ஆனால், பயன்படுத்துபவர் பிரபலமானவராக இருந்து விட்டால் - பொருளும் ஒரு 'வெரி இம்பார்டண்ட்' விஷயமாகிவிடும். பிரபலமான அந்த விஐபி மறைந்த பின், அவரது அந்தப் 'பிரபலமான பொருளி'ன் தற்போதைய நிலை என்ன? சிலவற்றைத் தேடிப் போனோம்.

இந்த வாரம் எம்.ஜி.ஆரின் தொப்பி!





• எம்.ஜி.ஆர். நினைவில்லத்தில் தொப்பியும் பிற பொருட்களும்

எம்.ஜி.ஆர். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு, முதலமைச்சரான பின்னர்தான் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிய ஆரம்பித்தார் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது தவறு. 1968-ம் வருடத்திலேயே அவர் தொப்பி அணிய ஆரம்பித்து விட்டார்.

"1968-ல் அவர் அடிமைப் பெண் ஷூட்டிங்கிற்காகக் காஷ்மீருக்குப் போயிருந்தார். அப்போது ஷேக் அப்துல்லா, எம்.ஜி.ஆருக்கு ஒரு விருந்து அளித்தார். அந்த விருந்தின் போது, காஷ்மீரத்து மண்ணுக்கேயுரிய, பிரத்யேக மென்மை கொண்ட தொப்பி ஒன்றை எம்.ஜி.ஆருக்கு அணிவித்தார். மறுநாள் ஷூட்டிங்கிற்கு அந்தத் தொப்பி+கறுப்புக் கண்ணாடி சகிதம் எம்.ஜி.ஆர். வந்தபோது, அனைவரும், அந்தத் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாய்க் கூறிப் பாராட்டினார்கள். படப்பிடிப்பு முடிந்து சென்னைக்கு வந்த பிறகும் தொப்பி அணிவதை எம்.ஜி.ஆர். தொடர்ந்தார்!" என்று நினைவுகூர்ந்தார் எம்.ஜி.ஆரின் உதவியாளராக இருந்த முத்து. இப்போது தி. நகரிலுள்ள அவரது நினைவாலயத்தில் பணிபுரிகிறார்.

"ஷேக் அப்துல்லா அணிவித்தது சுத்த வெள்ளை நிறத் தொப்பி. ஆனால் வெகு சீக்கிரம் அதே பாணியில் சற்றே பழுப்பு நிறம் கொண்ட தொப்பி தயாரித்து, அணிந்து கொண்டார் எம்.ஜி.ஆர். திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பகுதியில் இருந்த ஒருவர்தான் அந்தத் தொப்பியைத் தயாரித்துக் கொடுப்பார். அவர் ஆறு தொப்பிகள் தயாரித்துக் கொடுத்தார். ஆறு இருக்கிறதே என்று மாற்றி, மாற்றி அணிகிற பழக்கம் எம்.ஜி.ஆரிடம் இடையாது. ஒரு தொப்பியை எடுத்தால், அது பழசாகிறவரை தொடர்ந்து அணிந்து கொள்ளுவார். அதன் பிறகு, புதிதாக இன்னொன்றை எடுத்துக் கொள்வார்.

"இங்கே (எம்.ஜி.ஆர். நினைவு இல்லம்) கீழே ஹாலில் எம்.ஜி.ஆரின் கறுப்புக் கண்ணாடி, விசிட்டிங் கார்டு, கை கடிகாரம், பேனா இவற்றுடன் அவரது தொப்பியும் இருக்கிறது! அடுத்து, மாடியில் உள்ள எம்.ஜி.ஆரின் அலுவலக அறையில் இன்னொரு தொப்பியும் வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக ஒன்று, எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்தில் இருந்தது. (இப்போது இருக்கிறதா என்று தெரியவில்லை) நான்காவதாக, அவரிடம் பல வருடங்கள் ஊழியம் செய்த நான் ஒரு தொப்பியை பொக்கிஷமாய்ப் பாதுகாத்து வருகிறேன்!" என்றார் முத்து.

இன்று எம்.ஜி.ஆர். நினைவகத்துக்கு வரும் பார்வையாளர்கள் நின்று நிதானித்துப் பார்க்கிற ஐட்டம் எம்.ஜி.ஆரின் தொப்பி!

'இரட்டை இலைச் சின்னத்தில் ஒரு கழுதையை நிறுத்தி, எம்.ஜி.ஆரின் தொப்பியை தொகுதிக்குப் பிரசாரத்துக்கு அனுப்பினால் கூடப் போதும்! மற்ற வேட்பாளர்களுக்கு நிச்சயம் டெபாசிட் காலி!' என்று சும்மாவா சொன்னார்கள்?

— கௌதம்

படம் : ஸ்ரீஹரி

காலைப் பிடிப்பதன் காரணம் என்ன?

இந்து திருமணங்களின்போது கூறப்படும் மந்திரங்கள் சிலவற்றின் பொருள் பொதிந்த, உள்ளம் உருக்கும் அர்த்தத்தை இங்கே விளக்குகிறார் கடலங்குடி சரஸ்வதி.



• கடலங்குடி சரஸ்வதி

திருமணம் என்பது என்ன? இருவர் 'இனி இணைந்தே வாழ்வோம்' என்பதை வலியுறுத்தும் நிகழ்ச்சிதானே. எல்லாவிதமான திருமணங்களிலும் பிரார்த்தனை என்பது இருக்கும். இந்து கலாசாரத்தின்படி நடைபெறும் திருமணங்களில் அக்னிக்கு மிக முக்கிய இடம் உண்டு. தீயவற்றை அழிக்கும் சக்தி கொண்டது நெருப்பு. எதையும் புடம் போட்டுப் புனிதமாக்குவது நெருப்பு. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அக்னியை சாட்சியாகக் கொண்டு நடைபெறுவது திருமணம். இப்படியொரு வலுவான சாட்சிக்கு முன் திருமணம் செய்து கொள்பவர்கள் தங்கள் சத்தியங்களை மீற மாட்டார்கள் என்பது நம்பிக்கை. அக்னியிலிருந்து கிளம்பும் மஞ்சள் நிற ஜுவாலைதான் தேவர் குருவான பிரகஸ்பதி. இவர் விண்வெளியில் உள்ள தேவர்களுக்குத் தகவல் அனுப்ப, அத்தனை தேவர்களும் இந்தத் திருமணத்திற்கு வந்திருந்து வாழ்த்துவதாக ஐதீகம்.

திருமணத்தின்போது கூறப்படும் பாணிக்கிரஹண மந்திரங்கள் முக்கியமானவை. அவற்றுள் நான்கின் அர்த்தங்கள் :

• "ஓ கன்னிகையே, நமக்கு வாரிசுகள் உண்டாவதற்காகவும், என்னுடன் இணைபிரியாது முதுமை வரை சுகமாக வாழ்வதற்காகவும் தேவர்களின் சம்மதத்தின் பேரில் உன்னுடைய கையை நான் பிடிக்கிறேன்."

• "தேவர்களில் முதல்வரான அக்னி தேவர் மணவாழ்க்கையில் பிரகாசித்தது போல், நாமும் பிரகாசிக்க உன்னைக் கைப்பிடிக்கிறேன்."

• "சரஸ்வதி தேவியே, உன்னைப் போலவே நாங்களும் தனம், தானியம் முதலிய பலவித செளகரியங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ எங்களுக்கு ஆசி கூற வேண்டும்."

• "கிழக்கு போன்ற பெரும் திசைகள், தென்கிழக்கு போன்ற மூலை திசைகள் ஆகியவற்றுக்குப் பயணம் செய்பவரும், அக்னிக்குத் தோழனும், துதிப்பவர்களுக்குக் கொடுக்கத் தயாராக செல்வத்தை வைத்துக் கொண்டிருப்பவருமான வாயுதேவன், உன் மனதிற்குள் புகுந்து என்னிடம் இடைவிடாத நட்பை அடையச் செய்ய வேண்டும்."

ஆக இறுதிவரை இணைபிரியாமல் இருப்பது, நல்ல குழந்தைகளைப் பெறுவது, நட்புணர்வோடு சுகமாக வாழ்வது ஆகிய உயர்ந்த கருத்துகள் இந்த மந்திரங்களில் காணப்படுகின்றன.

சப்தபதி மந்திரங்கள் திருமணத்தில் மிக முக்கியமானவை. அக்னிக்கு வடக்குப் பக்கத்தில் மணப்பெண்ணின் வலது காலைப் பிடித்து மணமகன் ஏழு அடி எடுத்து வைக்க வேண்டும். கிழக்கு அல்லது வடக்கு திசையை நோக்கி இப்படி ஏழு அடிகள் நடக்கச் செய்ய வேண்டும்.

ஏழு அடிக்கு ஏழு மந்திரங்கள். அத்தனையும் மணமகளுக்குப் பலவித நலங்கள் உண்டாவதற்காக மணமகன் வேண்டிக் கொள்வது.

இதோ அந்த மந்திரங்களின் பொருள் :

• அனைத்துலகிலும் பரவியுள்ள நாராயணன் உனக்கு என்றும் உணவு கிடைக்க ஒரு அடி அனுசரித்து வரவேண்டும்.

• உனக்குப் பலவிதமான முன்னேற்றங்கள் ஏற்பட நாராயணன் இரண்டு அடி அனுசரித்து வர வேண்டும்.

• உனக்கு நல்ல காரியங்களைச் செய்யவும், அவற்றிற்குப் பலனளிக்கவும் நாராயணன் மூன்றடி தூரம் உன்னைத் தொடர்ந்து வரட்டும்.

• உனக்கு மனநிம்மதி உண்டாவதற்காக நாராயணன் நான்கு அடி தூரம் அனுசரித்து வரட்டும்.

• பசுக்களின் ஆசி உனக்கு உண்டாக நாராயணன் ஐந்தடி தூரம்



அனுசரித்து வரட்டும்.

● ஆறு பருவங்களிலும் ஆரோக்கியம் உண்டாக நாராயணன் உன்னை ஆறு அடி அனுசரித்து வரட்டும்.

● பெரும் உத்தமர்களைக் கொண்டு நடைபெறுகிற யாகங்கள் போன்ற நன்னெறிகளைப் பின்பற்றுவதற்குரிய பேறு உனக்கு உண்டாக நாராயணன் ஏழடி தூரம் உன்னை அனுசரித்து வரட்டும்.

அதாவது மணமகன், மணமகளை இப்படி ஏழு அடி தூரம் நடத்தி வருவதற்குள், ஒவ்வொரு அடிக்கும் மேற்கூறிய பலன்களை மகாவிஷ்ணு அளித்து அருள்புரிய வேண்டும் என்று வேண்டுவது இம் மந்திரம். இவற்றில் பசு என்பது கோமாதாவைக் குறிக்கிறது. காமதேனுவில் அனைத்து தெய்வங்களும் வசிக்கிறார்கள். எனவே எல்லா சௌபாக்யங்களும் தன் மனைவிக்குக் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்வதாகப் பொருள் கொள்ளலாம். எல்லா காலத்திலும் மனைவி உடல் நலத்தோடு வாழ, கணவன் வேண்டிக் கொள்வது என்பது மிக உயர்வான தத்துவம்தானே.

அம்மி மிதிப்பது என்ற சடங்கை, "அட இப்பவே பெண்டாட்டி காலைப் பிடிக்கிறான்" என்று சிலர் கேலி செய்வதுண்டு. ஆனால் கருங்கல்லில் மணப்பெண்ணின் வலது காலை வைப்பதற்குத் தனி அர்த்தமுண்டு.

அந்தச் சமயத்தில் மணப்பெண் அக்னிக்கு வடக்குப் பக்கத்தில் வைக்கப்பட்ட கல்லின் மீது தன் வலது காலை வைத்து ஏற வேண்டும். அதாவது, அவளது வலதுகாலைப் பிடித்து மணமகன் கல்லின் மீது ஏற்றி வைக்க வேண்டும். அப்போது கூறப்படும் மந்திரத்தின் பொருள் இதுதான் :

"ஓ மணப்பெண்ணே! இந்தக் கல்லில் ஏறுவாயாக. இந்தக் கல்லைப் போன்றே நீயும் உறுதியையும் தைரியத்தையும் பெற்றவளாக ஆக வேண்டும். உன்னோடு போரிடுவோரை எதிர்த்து நிற்கும் பலம் பெற வேண்டும். எதிரிகள் சண்டை போட வந்தால் நீ அச்சப்படாமல் இந்தக் கல்லைப் போன்ற உறுதியான மனத்துடன் அவர்களை வெற்றி கொள்ள வேண்டும்."

நம் திருமணத்தில் நிறைவான, அற்புதமான அர்த்தங்கள் பொதிந்த மந்திரங்கள் பல உண்டு. கவனத்துடன், மனப்பூர்வமாக, அவசரப்படாமல் இவற்றைக் கூறினால் நிச்சயம் தெய்வத்தின் அருள் கிடைக்கத்தான் செய்யும்.

— ஜி.எஸ்.எஸ்.



எழுத்து மூலம் இந்தச் சமூகத்தை மாற்றி விடலாம் என்று நினைத்துத் தான் எழுத ஆரம்பித்தேன். ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது என் முதல் சிறுகதை (என்ன உலகமடா?) 'பரணி' என்கிற இதழில் வெளியானது. அப்போதிலிருந்தே இதே நினைப்புத்தான். என் இருபத்தைந்தாவது வயதுக்குள் தமிழ்நாட்டில் ஒரு தீவிரமான புரட்சி வெடித்துவிடும் என்று நம்பினேன். முப்பது வயது வரை கூட அந்த எண்ணம் ஒரு நப்பாசையாக இருந்தது. காரணம், நான் படித்த புத்தகங்கள், பழகிய நண்பர்கள், அமைந்த குடும்பச் சூழ்நிலை.

"தாய் என்கிற நாவலை மக்ஸிம் கார்கி எழுதினார்... உடனே ரஷ்யாவில் புரட்சி வெடித்தது! வால்டேரும் ரூஸோவும் எழுதினார்களே, அந்த எழுத்து மூலம் பிரான்ஸின் சுதந்தரப் போராட்டத்துக்கான அடித்தளம் இடப்பட்டது!"

மேடைப் பேச்சு போலிருக்கிறதா? கம்யூனிஸ்ட் தோழர்களின் அன்றைய பேச்சு இப்படித்தானிருக்கும். இதை நான் அப்படியே ஏற்றுக் கொண்டதன், உள்வாங்கிக் கொண்டதன் விளைவுதான் அந்தப் 'புரட்சிக் கனவு'. 'நாம் எழுத வேண்டியதுதான் பாக்கி; உடனே புரட்சி வெடித்துவிடும்' என்று நம்பினேன்.

ஆனால், எழுத்து மட்டுமே ஒரு போதும் புரட்சிக்குக் காரணமாக இருக்க முடியாது; அது மனம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். பக்குவப்பட்ட மனத்தை நல்ல இலக்கியம் மேலும் பக்குவமாக்கலாமேயொழிய, திருடனையும் பிக்பாக்கெட்காரனையும் எழுத்தால் மாற்றிவிட முடியாது என்பதை உணர நீண்டகாலம் ஆகி விட்டது. அதற்குள் வாழ்க்கை என்னென்ன விதமாக விளையாடிப் பார்த்து விட்டது!



ஜெயித்த கதை!

— சொல்கிறார் பிரபஞ்சன்

பாண்டிச்சேரியில் ரொம்ப வளமாக வாழ்ந்த குடும்பம் எங்களுடையது. என் தந்தை சாரங்கபாணி அந்நாளில் பெரிய புள்ளி. கள் இறக்குவதுதான் அவரது தொழில். பணத்துக்குப் பஞ்சமா என்ன? நாங்கள் வசித்த தெருவில் இருந்த வீடுகளுள் பாதிக்கு மேல் எங்களுடையனவாக இருந்தன! உணவு, உடை, கல்வி எல்லாவற்றிலும் முதல் தரமானதையே என் தந்தை எங்களுக்குத் தந்தார். அவர் ஒரு சிறந்த கலாரசிகர். நாட்டியம், இசை, நாடகம் போன்ற நுண் கலைகளில் அவருக்கு ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது.

பி.ஆ. சின்னப்பாவை அழைத்து வந்து, ஊரில் சுமார் ஒரு மாத காலம் அவரது நாடகங்கள் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

கலை – கலைஞர்களுடனான என் முதல் பரிச்சயம் அப்போது ஏற்பட்டதுதான்.

திரு. சின்னப்பா தம் மனைவியுடன் (புதுக்கோட்டை சகுந்தலா) தங்கியிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் நாங்கள் இருந்தோம். அவரது வித்தியாசமான, உல்லாசமான வாழ்க்கை முறை, அந்த வயதில் என்னை ரொம்பவே பாதித்திருக்கிறது.

காலை விடிந்ததும் மொட்டை மாடிக்கு வந்து ஒரு நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்வார். "பையா" என்று அவர் குரல் கேட்டதும் "இதோ வந்துட்டேன் மாமா..." என்று படி ஏறி ஓடுவேன்.

அவர் அருகே ஒரு பானை நிறைய கள் வைத்திருக்க வேண்டும். அவருக்குக் காப்பி, டிபன் எல்லாமே அந்தத் தென்னங்கள்தான்!

குளித்து ஆனதும் ஜவ்வாது, அத்தர் என்று வாசனை திரவியங்களைப் பூசிக் கொண்டு பட்டுச் சட்டை பட்டு வேட்டியுடன் வெளியே வருவார்.

சின்னப்பா கொஞ்சம் குள்ளமாக இருப்பார். அவர் வேட்டி கட்டினால் அது அவர் காலுக்குக் கீழே ஒரு முழம் தவழ்ந்து, பெருக்கிக் கொண்டே வரும்! அவரது பட்டு முழுக்கை சட்டையும் அப்படித்தான். விரலுக்கு வெளியே ஒரு முழம் நீண்டு தொங்கும்.

மனுஷனின் கம்பீரமும் மிடுக்கும் ஊரையே விழி உயர்த்த வைக்கும்!

இரவு ஒன்பதுக்குத் தொடங்கும் நாடகம் அதிகாலை இரண்டு மணி வரை நீளும்! உற்சாகமான மன நிலையில் அவர் இருந்தால் விடியும் வரை கூட நடக்கும்! சின்னப்பாவின் நாடகத்தையும் அவரையும் பிரமித்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறேன்.

இந்த பிரமிப்பு ஒரு பக்கம், என் அப்பா மூலம் கிடைத்த வளமான வாழ்க்கை ஒரு பக்கம் – இரண்டும் சேர்ந்தால் நான் என்னாவது? போதாக் குறைக்கு, நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சி மலர்' படித்து விட்டு மனசுக்குள் என்னை அரவிந்தனாக வேறு உருவகப்படுத்தி வைத்திருந்தேன். கனவுகளில் அடிக்கடி 'பூரணி' வந்து போனாள். தோதாக என் கவிதை ஒன்று அப்

போது பிரசுரமாகியிருக்க, 'நான் ஒரு கவிஞன் தான்' என்று முடிவு செய்து கொண்டேன்.

பேன்ட் போடுவதை நிறுத்திவிட்டு வேட்டி கட்ட ஆரம்பித்தேன். கவிஞன் சட்டை போடலாமோ? ஜிப்பாதான். தவிரவும் பரிமளகந்தமாக வாழ்வது பற்றிய கனவுகள் இருந்ததால் சென்ட், அத்தர் போன்ற வாசனை திரவியங்களையும் உபயோகிப்பேன். இந்தக் கோலத்துடன் ஒரு பந்து மல்லிகைப்பூ வாங்கி கையில் சுற்றிக் கொண்டு நண்பர்களுடன் கடற்கரைக்கு உலாவப் போவேன்!

நான் தமிழ் படிப்பது – தமிழ்க் கவிதை எழுதுவது பற்றி என் அம்மாவுக்குத் தீராத கவலை வந்து விட்டது. இதமாகவும் பதமாகவும் கடிந்தும் பலமுறை சொல்லிப் பார்த்தார். நானா கேட்கிறவன்? புரட்சி வெடிக்கப் போகிற தினத்தைப் பற்றி அல்லவா நான் கனவு கண்டு கொண்டிருந்தேன்!

நண்பர்களுடன் சேர்ந்து 'திரு.வி.க. படிப்பகம்' என்று வாசல் திண்ணையில் ஒரு நூலகம் தொடங்கினேன். நல்ல தமிழ் நூல்கள் பல படிக்கும் வழக்கம் தோன்றலாயிற்று. பொறுக்கவில்லை, என் தாயாருக்கு. ஒரு நாள் என் புத்தகங்களை அடுப்பில் போட்டு வெந்நீர் காய்ச்சி விட்டார்.

யோசித்துப் பார்த்தால், அன்றைய காலகட்டத்தில் இருந்த எல்லா பெண்களைப் போலவேதான் என் தாயும் இருந்திருக்கிறாள் என்று புரிகிறது. ஆங்கில மோகம் ஆட்டுவித்துக் கொண்டிருந்தது அப்போது. நான் படித்ததோ, பிரெஞ்சுப் பள்ளியில்.

என் தந்தையார் திடீரென்று ஒரு நாள் கள்ளுக்கடையை மூடிவிட்டு, தேசிய இயக்கத்தில் இணைந்து விட்டதால் என் பிரெஞ்சுப் படிப்பு தடைபட்டது.

அதனாலென்ன? ஆங்கிலம் படிக்கலாமே. அப்பா சீட் வாங்கித் தருவார்; மருத்துவக் கல்லூரியில் சேரலாமே என்பது அம்மாவின் கனவு.

ஆனால் நான் விடாப்பிடியாக இருந்து, கரந்தை (தஞ்சை) பல்கலைக் கழகத்தில் தமிழ் படிக்கச் சேர்ந்தேன். 'உருப்படாதவன்' என்று அப்போதே முடிவு செய்து விட்டார், என் அம்மா. ஆனால், என் தந்தை மட்டும் என் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவாக இருந்தார். எதுவுமே தானாகக் கனிய வேண்டும் என்பது அவரது சித்தாந்தம் போலும்.

தொழிலை நிறுத்தியதால் வீடு விரைவில் ஏழைமையை எட்டிப் பார்க்கத் தொடங்கியது. சொந்தமான வீடுகள் ஒவ்வொன்றாக விற்கப்பட்டே உணவுக்கு வழி செய்து கொள்ள



வேண்டிய நிலைமை. நான் கரந்தையில் தமிழ் படித்துக் கொண்டிருந்தேன். மனசுக்குள் மாறாத அதே 'புரட்சி'க் கனவு!

அப்போதுதான் எனக்குப் பிரகாஷ் அறிமுகமானார். 'தஞ்சை பிரகாஷ்' என்கிற பெயரில் கதைகள் எழுதும் அன்பர். பிரகாஷ் ஒரு பெரிய புத்தகக் கிடங்கையே தம் வீட்டில் வைத்திருந்தார். மணிக்கொடி தொடங்கி அந்தக் காலகட்டத்தில் வெளியான அனைத்து நல்ல இலக்கியங்களின் தொகுப்பும் அவரிடம் இருந்தன.

பிரகாஷ் எனக்கு கு.ப.ரா.வின் மூன்று நாவல்களைப் படிக்கத் தந்தார். (பசி, சர்மாவின் உயில், ஒருநாள்.) அவற்றைப் படிக்கப் படிக்க, எனக்குள் உலவிக் கொண்டிருந்த 'அரவிந்தன்' தோற்றம் கரைந்து போக ஆரம்பித்தது. நான் அதுவரை படித்தறியாத ஒரு புதிய பாணி எழுத்து அது!

கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் நான் படித்த எம்.எஸ். கல்யாணசுந்தரத்தின் 'இருபது வருஷங்கள்' என்கிற நாவலும் என்னுள் பெரிய மாறுதலை உண்டாக்கியது.

'அழகும் சூட்சுமமான மூளையும் படைத்த சிறந்த கவிஞன்' என்று என்னைப் பற்றி நான் வைத்திருந்த மதிப்பீடு நொறுங்கிப் போனது. என் கவிதைகள் (அநேகமாக எல்லாமே 'ஓ, மனிதர்களே...' என்கிற மாதிரி ஆரம்பிக்கும்) எல்லாம் இரவல் உணர்ச்சிகளால் ஆனவை என்பதைக் கண்டு கொண்டேன். இலக்கியம் என்பது இதுவல்ல என்று புரிந்தது. மேலும் கவிதை இனி எழுதுவதில்லை; உரைநடைதான் வலுவானது என்றும் முடிவு செய்தேன்.

முதல் காரியமாக, நான் படித்த அந்த 'இருபது வருஷங்கள்' நாவலுக்கு ஒரு விமர்சனம் எழுதி 'தாமரை'க்கு அனுப்பினேன். அந்தக் கட்டுரை பிரசுரமானது கூடப் பெரிய மகிழ்ச்சி அல்ல. அதைப் படித்துவிட்டு திருநெல்வேலியிலிருந்து தி.க.சி. ஒரு கடிதம் எழுதியிருந்தார். 'கவிதையை விட்டு விடுங்கள்; உரைநடை உங்களுக்குச் சிறப்பாக வருகிறது' என்கிற அவரது வாழ்த்து எனக்கு ராட்சஸ பலம் தந்தது. கதைகள் எழுத ஆரம்பித்தேன்.

கல்லூரிப் படிப்பு முடிவதற்குள் வீடு வறுமையில் மூழ்கி விட்டது. ஒரு வேளை மட்டும் தான் உணவு. காலையும் இரவும் பட்டினிதான். மதியம் செய்யப்படும் சாப்பாடு மீந்தால் மட்

''தலைவர் கட்சியை விட்டு விலகுவதாகக் கடிதம் எழுதிட்டு, யாருகிட்ட கொடுக்கிறதுனு தெரியாமல் குழம் பிட்டாரு...''

''ஏன்? என்னாச்சு?''

''கட்சியில் அவரைத் தவிர வேற யாரும் இல்லையே!''

– பொள்ளாச்சி கே. சித்ரா

டுமே இரவுக்கு என்கிற நிலை. கஷ்டம் என் றால் எல்லாம் கூடி வருவதுதானே? தோதாக எங்கள் வீடு மழையில் இடிந்து போனது.

மூத்த பையன் – நான் ஏதாவது செய்ய வேண்டுமல்லவா? என் தாயின் எதிர்பார்ப்பு அதுதான். ஆனால், தமிழ் படித்தவன் என்ன செய்து விட முடியும் அப்போது? வேலை கிடைக்காமல் வீட்டில் இருந்த காலங்களில் தினசரி என் தாய் குத்திக் காட்டுவார். ஒரே விஷயம்தான். ஆனால் அதையே விதவிதமான தொனிகளில், விதவிதமான வடிவத்தில் திரும் பத்திரும்பச் சொன்னதில் மிகவும் வெறுத்துப் போனேன்.

ஒரு டுடோரியல் கல்லூரியில் பாடம் சொல்லிக் கொடுப்பதுதான் அதிகபட்ச உத்தி யோகம். கதைகள் எழுதுவது வாழ்க்கை. கஷ்ட ஜீவனம். ஆனால் கனவுகளுக்குக் குறைச்ச லில்லை.

இந்த நிலையில்தான் பாண்டிச்சேரியில் என் நண்பர்களுள் ஒருவராக விளங்கிய கவிஞர் கங்கை கொண்டான், படமெடுக்கும் ஆசையில் சென்னை சென்றிருந்தார்.

ஒரு நாள் அவரிடமிருந்து அழைப்பு வந்தது. புரட்சிகரமான ஒரு படமெடுக்க சந்தர்ப்பம் கூடி வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும் என்று சொல்லியிருந்தார்.

'மீன்' போன்ற சிறந்த கதைகள் பல எழுதி, ஒரு அடையாளம் பெற்றிருந்த நேரம் அது. எல்லா எழுத்தாளர்களைப் போலவே நானும் சினிமா மோகினியின் வலையில் சிக்கினேன். திருமணம் வேறு ஆகியிருந்த நிலையில், குடும் பத்தையும், பார்த்துக் கொண்டிருந்த டுடோ ரியல் கல்லூரி ஆசிரியர் பணியையும் விட்டு விட்டு சென்னைக்குப் புறப்பட்டேன். சாதிக் கும் வெறி. முன்னேறும் கனவுகள்.

ஆனால், ஒரு படம் எடுத்து முடிந்த பிறகுதான் தெரிந்தது, எனக்கு மட்டுமல்ல; என் டைரக்டருக்கே சினிமா தெரிந்திருக்கவில்லை என்பது.

வாழ்க்கை பற்றிய பயமும் கவலையும் என்னைத் தாக்கின. வருமானம் ஏதும் இல்லாத நிலையில் குடும்பத்தைக் காப்பாற்றுவது எப் படி? வாழ்வின் வளமான பகுதியை மட்டுமே அதுவரை அனுபவித்து வந்தவன் நான். ஏழை மையும் இருளும் முதல் முறையாக மிரட்டிய போது சற்றுக் கலங்கினேன்.

தத்தளித்துக் கொண்டிருந்தவனைக் கை தூக்கிவிடும் விதமாக பாவை சந்திரன் மூலம் 'குங்குமம்' பத்திரிகையில் வேலை கிடைத்தது.

என் வாழ்வின் இரண்டாம் பாகம் தொடங் கிய இடம் அது.

குடும்பத்துக்குப் பணம் அனுப்ப ஒரு உத்தி யோகம். அந்த வரையில் நிம்மதி அடைந்து, நான் என் பணியைத் தொடர ஆரம்பித்தேன்.

நிறைய படிப்பது. பழைய இலக்கியங்கள், சமகால இலக்கியங்கள், மொழி பெயர்ப்புகள் என்று படிப்பதே என் சுவாசமாகிப் போனது.

புதிய எழுத்தாளர், பழைய எழுத்தாளர், புகழ் பெற்றவர், பெறாதவர் என்று எந்த வட்ட மும் நான் போட்டுக் கொள்வதில்லை. தம் மொழியில் தம் காலத்தில் வெளியாகிற எழுத் துகளைப் புறக்கணிக்கிற யாரும் தன்னளவில் ஒரு நல்ல எழுத்தாளனாக ஆகிவிட முடியாது என்று உறுதியாக நம்பினேன். நான் மிகவும் மதித்த, மதிக்கிற அசோகமித்திரன், சுந்தர ராம சாமி போன்றோர் வேறுபாடு இல்லாமல் எல் லாவற்றையும் படித்து விடுவதை முக்கியப் பணியாகக் கொண்டிருப்பதை இன்னும் காண் கிறேன்.

அதே வழியாக நானும் அனைத்துத் தரப்பு எழுத்தையும் தீவிரமாக வாசிப்பதை வழக்க மாக்கிக் கொண்டேன். அதற்கான ஆர்வமும் பொறுமையும் அக்கறையும் எனக்கு இயல்பா கவே இருந்தன.

ஆனால், பத்திரிகை வாழ்க்கை எனக்கு வேறு விதமான ஒரு மனச்சோர்வை அளிப்ப தாக இருந்தது. எத்தனையோ பலபேரின் கதை களைத் தேர்ந்தெடுத்து, படித்து, திருத்தி, வெளி யிடும் வேலையில் இருந்தேனே தவிர, என் கதைகளை அங்கே வெளியிட இயலவில்லை. அதாவது, என்னைக் கதை எழுதச் சொல்லி யாரும் கேட்கவில்லை! அதே சமயத்தில்தான் (82) என் 'பிரும்மம்' சிறுகதை அவ்வாண்டின் மிகச் சிறந்த கதையாக 'இலக்கியச் சிந்தனை' அமைப்பால் தேர்வாகி, பரிசும் பாராட்டும் பெற்றது.

ஊர் மெச்சும் எழுத்தாளனுக்கு உழைக்கும் இடத்தில் மரியாதை இல்லையே என்கிற வருத் தத்தில், குங்குமத்தை விட்டு விலகினேன். வாழ் வில் மறுபடி இருள். வறுமை.

வறுமையின் மிகக் கோரமான தோற் றத்தை அடுத்தச் சில ஆண்டுகளில் தொடர்ந்து கண்டு களித்தேன். குழந்தை பிறந்திருந்தது. ஆனால் அதற்குப் பால் வாங்கக் கையில் காசு கிடையாது! நூறு மில்லி பால் வாங்கி, அதில் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் ஊற்றி நாளெல்லாம் குழந்தைக்குத் தர வேண்டிய நிலைமை. புகழைத் தேடித் தந்த எழுத்து, அப்

அட்டையில் : கணேஷ் பிரசன்னா, சங்கீதா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

போது பொருள் சேர்க்க உதவவில்லை. என் மனைவி, அரவிந்தர் ஆசிரமத்துக்கு 'பீஸ் ரேட்'டில் துணிகள் தைத்துத் தந்து ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் சம்பாதித்து வருவாள். பிறந்த வீட்டிலிருந்து அவள் எடுத்து வந்த நகைகளெல்லாம் முன்னதாக அரிசியாகவும் பாலாகவும் மளிகைச் சாமானாகவும் மாறிக் கறைந்து போயிருந்தன.

ஓரிரு வருடங்களுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பிக்கு ஒரு கடிதம் எழுதினேன், என் நிலைமையை விளக்கி.

அடுத்த முறை நான் சென்னை வந்திருந்தபோது குமுதம் நிருபர் பால்யூ என்னைச் சந்தித்தார். 'புறப்படுங்கள். இன்றே உங்களை ஆசிரியர் அழைத்துவரச் சொன்னார்' என்று அவர் கூறிய சொற்கள் என்னை நம்பிக்கை கொள்ள வைத்தன.

அவருடனே சென்று குமுதம் அலுவலகத்தில் திரு. எஸ்.ஏ.பியைச் சந்தித்தேன். அன்று வெள்ளிக்கிழமை. மாலை நேரம். பூஜை முடிந்து வந்த எஸ்.ஏ.பி. என்னிடம் மிகுந்த அன்புடன் பேசினார். முன்னதாக நான் எழுதியிருந்த சிறந்த கதைகள் அனைத்தையும் அவர் படித்திருந்தது, அவர் பேச்சில் தெரிந்தது. எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதைவிடவும் மகிழ்ச்சி, எனக்கு உடனே வேலை கிடைத்தது.

குடும்பத்தைச் சென்னைக்கே அழைத்து வந்து விடலாம் என்று நினைத்தேன். தோதாக ஆசிரியர், குமுதம் குவாட்டர்ஸிலேயே தங்கிக் கொள்ள அனுமதியும் அளித்தார். கவலை நீங்கி, நான் நிம்மதியாகப் பணியாற்ற ஆரம்பித்தேன்.

எத்தனை நெருக்கடி நேர்ந்தாலும் படிப்பதையோ, எழுதுவதையோ நான் நிறுத்தவில்லை. இலக்கியம், அன்பை வளர்க்கிற விஷயம். ஆரோக்கியமான மனங்களை ஆக்கிரமிக்க வல்லது. வாழ்வில் நம்பிக்கையை - பிடிப்பை உருவாக்குகிற அற்புதம் என்று நம்புகிறவன் நான். என் வாழ்க்கை, இலக்கியத்துடன் மணமுடித்துக் கொண்டது என்பதை முழுப் பிரக்ஞையுடன், மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாலேயே அதற்கு இடையூறாக என் பத்திரிகைப் பணி வந்தபோது, அதையும் உதறத் தயாரானேன்.

பத்திரிகையைத் தொழிலாகவும் இலக்கியத்தை வாழ்க்கையாகவும் கொள்வதில் எப்போதும் எனக்கு ஆட்சேபணை இருந்ததில்லை.

ஆனால் என் இலக்கு, நோக்கு, பயணம் எல்லாமாகவும் இருக்கும் இலக்கியத்துக்கு என் பத்திரிகை உத்தியோகமே தடையாக வந்தபோது, நான் இழக்க விரும்பியது என் உத்தியோகத்தைத்தான்!

என் மிகச் சிறந்த கதைகள் பல குமுதத்தில் வந்திருக்கின்றன. அதை நான் மறக்கவில்லை. என் தனி வாழ்க்கையைச் சிக்கலின்றி நடத்தக் குமுதம் அளித்த சம்பளம் உதவியிருக்கிறது. அதை நான் மறக்கவில்லை. எஸ்.ஏ.பி. போன்ற மிகச் சிறந்த ஓர் ஆசிரியருடன் பழகக் கிடைத்த அனுபவம், மாலன் என்கிற உன்னதமான நண்பர் கிடைக்கக் காரணம் - எல்லாம் குமுதம்தான்; எதையும் நான் மறப்பதற்கில்லை. ஆனாலும் என் லட்சியம் - இலக்கியம், எழுத்து. அதற்கு இடையூறாகப் பத்திரிகைப் பணி இருந்தபோது, தயங்காமல் அங்கிருந்தும் விலகினேன்.

பிறகு விகடனிலும் சிறிது காலம் இருந்தேன். அங்கும் இதே பிரச்னைதான்.

குறிக்கோளுக்கு இடையூறாக இருக்கிற எது ஒன்றையும் உடனே விலக்கி விடுவதுதான் வெற்றியின் முதல்படி என்பதால் அங்கிருந்தும் வெளியேறினேன். இனி ஒருபோதும் எங்கும் கைகட்டி வேலை பார்ப்பதில்லை என்கிற முடிவுக்கு வந்தேன்; சுதந்திரமான எழுத்தாளன் ஆனேன்.


பரமசுகம்! என் நேரம் முழுவதும் என் கட்டுப்பாட்டில் இருந்தது. என் திட்டங்களை யார் தலையீடும் இல்லாமல் நானே வகுத்துக் கொண்டேன். காலை ஏழு மணியிலிருந்து பத்து மணி வரை எழுதுவது. பிறகு உணவு. சிந்தனை, நண்பர்கள், சின்ன உறக்கம், ஓய்வு. மறுபடி மாலை நாலுமணியிலிருந்து இரவு சுமார் எட்டு வரை எழுத்து. பிறகு படிப்பு - உறக்கம் வரும் வரை படிப்பு.

அனுபவங்கள் எனக்கு உரமூட்டின. தரமான வாசகர்கள் உற்சாக மூட்டினார்கள். என் சகல குறைபாடுகளுடன் என் குடும்பம் என்னை ஏற்றுக் கொண்டது. எழுத்துக்குச் செய்ய முடிகிற அளவு குடும்பத்துக்குச் செய்ய முடியாத வருத்தம் இன்னும் இருக்கிறது. ஆனால், தொடங்கிய பயணத்தைப் பாதியில் விடத் தோன்றியதில்லை. வாழ்வின் கஷ்டங்களுக்காக ஒருபோதும் என்னை நான் நொந்து கொள்வதில்லை.

என் முயற்சிகள் நேர்மையாக இருக்கின்றன. என் விருப்பமெல்லாம், எழுத்தைப் போலவே, என் மரணமும் கௌரவமாக இருக்க வேண்டும் என்பதுதான். ●

சந்திப்பு : **ஔரங்கசீப்**
படம் : **ரவிசங்கரன்**

அடுத்த வாரம்
'ஜெயித்த கதை' சொல்பவர் : வைகோ



1999 ஜனவரி 17
வெகுதான்ய தை 3
மலர் : 57
இதழ் : 25

கல்கி


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

வியாஸர்பாடி தீ விபத்து!

அம்பத்தூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள 78 வீடுகளைத் தகர்க்கும்படி உத்தரவு பிறப்பித்துள்ளது சென்னை உயர்நீதி மன்றம்! 'அபாயகரமான தொழிற் பேட்டைப் பகுதியான இவ்விடத்தில் குடியிருப்புகள் கட்டுவது சட்ட விரோதம். அரசாங்கம் செய்தது என்பதால் ஒரு சட்டவிரோத காரியத்தை ஆதரிப்பதற்கில்லை...' என்று கண்டனம் தெரிவித்த நீதிபதி, சுய அதிகாரம் பெற்ற அரசு அமைப்பான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இதை அனுமதித்தது பெரும் தவறு என்று சுட்டிக்காட்டி குட்டு வைத்திருக்கிறார்.

அரசு அமைப்புகளும் விதிகளை உருவாக்கிப் பேணவேண்டிய சுயாட்சி அமைப்புகளும் கூட விதிகளை மதிக்காதது அதிர்ச்சி தருகிறது. படித்தவர்களும் வல்லுனர்களும் அடங்கிய அலுவலகங்கள் இவ்வாறு பாதுகாப்பு விதிகளை அலட்சியப்படுத்தும்போது படிக்காத பாமரர்கள் அபாயத்தை இரு கை நீட்டி வரவேற்பதில் ஆச்சர்யம் எதுவுமில்லை.

பதிமூன்று உயிர்களை பலிகொண்ட தீ விபத்து பரிதாபகரமான அறியாமையின் விளைவு தான். விபத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் தீயணைப்பு வாகனங்கள் அணுகும்படியான சாலை அமைப்பு அப்பகுதியில் இல்லை. சாக்கடைத் தண்ணீரைச் சேந்திக் கொட்டி நெருப்பை அணைக்க முயற்சி செய்துள்ளனர்! அறுந்து விழுந்த மின் கம்பியை மிதித்ததால் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். சாலை வசதி இல்லாத ஒரு பகுதியில் எளிதில் தீப்பிடிக்கக்கூடிய ஓலைக் கீற்றுகளைக் கொண்டு வீடமைத்து வாழ்வதில் உள்ள அபாயங்களை யோசித்துப் பார்க்கிற நிலையில் அப்பகுதி மக்கள் இல்லை.



அவர்களுக்காக, மெத்தப் படித்த அதிகாரிகளும் அவர்களை இயக்கும் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும்தான் யோசிக்க வேண்டும்.

நகர்ப் புறங்களில் உள்ள சேரிகளிலெல்லாம் ஓலைக் கூரைக்குப் பதில் அஸ்பெஸ்டாஸ் கூரை அமைக்க அரசு உதவி அளிக்கலாம். ஆனால் அது பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஆகாது. சேரிகள் ஏன் உருவாகின்றன என்பதை முதலில் ஆராய வேண்டும். பெரும்பாலான குடிசைப் பகுதிகளில் வசிப்போர் கிராமத்திலிருந்து வேலை தேடி நகரத்துக்குக் குடிபெயர்ந்தவர்கள்தான்.

தொழிற்சாலைகள் பெரும்பாலும் பெரிய நகரங்களைச் சுற்றி அமைவதால்தான் இது நடக்கிறது.

விவசாயம் தழைக்காத பருவத்தில் பிழைப்பு நடத்த வசதியாக சிறு, மற்றும் விவசாய அடிப்படையிலான தொழிலகங்களை கிராமப் பகுதிகளிலேயே ஆரம்பிக்க வேண்டும். இவை அளிக்கக்கூடிய வேலை வாய்ப்புகள் கிராமப்புற மக்களின் நகர் நோக்கிய படையெடுப்பைப் பெரிய அளவில் குறைக்கும். கிராமங்களும் தன்னிறைவு அடைந்து அவற்றின் பொருளாதார நிலையுடன் நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

ஆனால், சுதந்தரம் பெற்று ஐம்பத்தோரு ஆண்டுகள் ஆகியும் நம் நாட்டின் கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ரொம்பக் குறைவாகவே இருக்கின்றன. தொழில் தொடங்கி தடையின்றி நடத்துவதற்கான சாலைகள், மின் வசதி, நவீன போக்குவரத்துச் சௌகரியங்கள் போன்றவை மிகச் சொற்பமாகவே இருக்கின்றன.

சொந்தத்தில் தொழில் தொடங்கி பிழைப்பு நடத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துகிற அளவுக்கு நமது கிராம மக்களுக்குப் படிப்பறிவும் பயிற்சியும் நிதியாதாரமும் போதவில்லை. வேறு வழியின்றி இவர்கள் பிழைப்புத் தேடி நகரங்களுக்குக் குடிபெயர்கிறார்கள். அங்கே குடிசைப் பகுதிகள் பெருகக் காரணமாயிருக்கிறார்கள்.

புறம்போக்கு நிலங்களிலும், சில சமயம் தனியார் நிலங்களிலும் கூட குடிசைப் பகுதி



ஆக்கிரமிப்புகள் தோன்றி விட்டால், அவற்றை அகற்றுவது பெரும்பாடாகி விடுகிறது. சட்டச் சிக்கலானது, மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டிய பிரச்னையாக மாறிப் போகிறது. போதாக்குறைக்கு, தொழிற்சங்கம் அல்லது அரசியல் கட்சிகளின் ஆதரவும் இந்தப் பகுதி மக்களுக்குக் கிடைத்துவிட, அவர்களை அப்புறப்படுத்துவது மக்கள் விரோத நடவடிக்கையாகவே சித்திரிக்கப்படுகிறது.

பலமான வோட்டு வங்கிகளாகவும் அரசியல்வாதிகளின் தொண்டர்படை முகாம்களாகவும் குடிசைப் பகுதிகள் மாறிப் போகின்றன. அவற்றை அப்படியே பாதுகாத்து வைத்துக் கொள்வதும் அரசியல்வாதிகளுக்குச் சௌகரியமாகயிருக்கிறது.

ஏழை எளியோருக்குச் சலுகைகளையும் இலவசங்களையும் சட்டத்தை மீறிய தாற்காலிக சௌகரியங்களையும் அளித்து ஏமாற்றுவதே, தொடர்ந்து வரும் அரசுகளுக்கு வாடிக்கையாகி விட்டது.

அடிப்படைக் கல்வி, வாழ்க்கைக்கு உபயோகமான சுகாதாரம் மற்றும் தொழிலறிவு, வேலை வாய்ப்புகளைப் பெருக்கக்கூடிய தொழில் முயற்சிகளுக்கு ஊக்கம், அதற்குத் தேவையான வசதிகள் செய்து தருவதில் முனைப்பு.... - இப்படியிருக்க வேண்டிய அரசின் முன்னுரிமைப் பட்டியல் நேர் விரோதமாக இருக்கிறது.

அதனால்தான் தனியார்மயமாக்கல் முயற்சிகளும், புதிய பொருளாதாரக் கொள்கையும், உலகளாவிய நோக்கும் நம் நாட்டில் எந்தப் பலனையும் ஏற்படுத்தாமல் போய் விட்டன.

கல்வி வளர்ச்சியோடு இணையாத பொருளாதார வளர்ச்சி, நிலைத்த பலனைத் தராது என்பதையே சமீபத்திய சரிவுகள் உணர்த்துகின்றன.

சாண் ஏறினால் முழம் சறுக்குகிற இந்த நிலை மாற வேண்டுமானால் அதிகார வர்க்கத்தின் பார்வை கிராமப்புறங்கள் நோக்கித் திரும்ப வேண்டும். பொங்கல் திருநாளில் இதைத் தமிழக முதல்வருக்கு மட்டுமின்றி, அனைத்துத் தரப்புத் தலைவர்களுக்கும் நினைவூட்டுகிற சோக நிகழ்வாகவே வியாஸர்பாடி தீ விபத்து அமைந்திருக்கிறது.

அற்புதமான இசை சஞ்சாரம். நாதஸ்வர வித்வான் புது உலகத்திற்கே போய்விட்டது போல ஒன்றிப் போய் அலை அலையாகப் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருப்பார்.

'கெட்டி மேளம்... கெட்டிமேளம்'

அவ்வளவுதான். எல்லா அலைகளும் கடலுக்குத் திரும்பிவிடும்! அப்புறம் கெட்டி நாயனம்தான்!

உறவுக் கும்பல், பந்திகும்பல், பொடிசு கும்பல் என்று எதிலும் சேராமல் திருமண மண்டப ஓரத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் நாதஸ்வர குரூப்பை,

• சீனிவாசன்



'சாப்டீயளா?' என்று விசாரிக்கக் கூட ஆள் இருக்காது. வாசிப்பையே வாழ்க்கையாகக் கொண்ட நால்வரைச் சந்தித்தோம்.

கல்யாண வீட்டு அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார்கள்.

"நல்லா தெரியுதே சார்!"

– மாம்பலம் எம்.கே.எஸ். சிவா:

மவுண்ட்ரோட்ல அப்ப (1980) இருந்த பத்மாவதி



• மஞ்சுளா



கல்யாண மண்டபத்துல ஒரு கச்சேரி. செம்மங்குடி சீனிவாச அய்யர் வந்திருந்தார். அன்னைக்கு நான் வாசிச்ச காம்போதியைக் கேட்டுட்டு செம்மங்குடி நெகிழ்ந்து பாராட்டினார். அதுக்கப்புறம் என் வாழ்க்கையிலேயே பெரிய மாற்றம் ஏற்பட்டுடுச்சு. நிறைய வாய்ப்புகள் வர ஆரம்பிச்சது.

திருப்பதி தேவஸ்தான ஆஸ்தான

• மாம்பலம் சிவா

வித்வானா ஆறு வருஷமா இருக்கேன். முப்பது வருஷமா வாசிக்கிறேன்.

கல்யாண வீட்ல மந்திரம்தானே முக்கியம். நாதஸ்வரமா முக்கியம்? சிலர் ரசிப்பாங்க. சிலர் கிட்ட வந்து பாராட்டுவாங்க. 'இந்தப் பாட்டை வாசிங்க' அப்படின்னு உரிமையா கேட்பாங்க.

நான்தான் வாசிக்கணும்னு ஒருத்தர் பிடிவாதம் பண்ணியதாலே அவங்க வீட்டுக் கல்யாணப் பத்திரிகையிலே என் பேரைப் போட்டு அச்சடிச்சுக் கொடுத்துட்டார் கான்ட்ராக்டர். கல்யாணம் முடிஞ்சு அந்த பார்ட்டி என்கிட்ட வந்து ஒத்துக்கிட்டபடி வரலையேன்னு சண்டை போட்டப்பதான் எனக்கே விஷயம் தெரியும்! இது மாதிரி வேலையெல்லாம் நடக்கும்.

சினிமாவில் 250 படங்கள்ல வாசிச்

"வேதமும் நாதமும் ஒண்ணு!"

சிருக்கேன். நல்ல வேளை, நாதஸ்வரத்தோட ஒரிஜினல் டோன் இன்னும் கம்ப்யூட்டர்ல கிடைக்கல. 'சலங்கை ஒலி' படத்துல என்னோட காம்போதியைக் கேட்டுட்டு உடனே போன் பண்ணி ஒரு ரசிகர், 'நீங்கதான் வாசிக்கறீங்கன்னு நல்லா தெரியுதே சார். அற்புதமா இருக்கு'ன்னார். இதுதான் எங்களை மாதிரி கலைஞர்களை ஊக்குவிக்குது!

"மரியாதை தராவிட்டால் போகமாட்டேன்!"

– திருவல்லிக்கேணி பி.எஸ். சதாசிவம்:

காண்ட்ராக்ட் காரங்களால நிறைய வித்வான்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு தவறிப் போகுது. சைடுல வேற ஏதாவது தொழில் செஞ்சாத்தான் நிம்மதியா இருக்க முடியும்கிற நிலைமை!

பாடகி நித்யஸ்ரீ கல்யாணத்துக்கு வாசிச்சது மறக்க முடியாதது. டி.கே. பட்டம்மாள் ரொம்ப ரசிச்சுக் கேட்டாங்க! ரொம்ப நல்லா வாசிக்கிற, நல்லா இருன்னு ஆசீர்வாதம் பண்ணாங்க. பிரபலமான நடிகர்கள் வீட்டு விசேஷத்துக்கு எல்லாம் வாசிக்கிறதுதான். வேதம் எவ்வளவு புனிதமோ அதேபோலத்தான் நாதமும். சரியா மரியாதை தரமாட்டாங்கன்னு தோணற இடத்துக்குப் போறதில்லை.

வரதராஜன்னு ஒரு ரசிகர் வீட்டுக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முந்தி எனக்கு ஆக்ஸிடென்ட் ஆகி கை, காலெல்லாம் கட்டுபோட்டு ஆஸ்பத்திரிலே இருக்கேன். இவங்களுக்கு நான் வந்து சேரலையேன்னு ஒரே கவலை. ஏமாத்த மனசு வரலை. கட்டோட போய், ஒத்துக்கிட்டபடி வாசிச்சுக் குடுத்துட்டு வந்தேன்.



• சதாசிவம்

"நம்ம வீட்டுக் கல்யாணம்னு நினைச்சுக்கோ!"

சீனிவாசன் – மஞ்சுளா:

"**கு**டும்பத்தோட வாசிக்கிறது அநேகமா இப்ப நாங்களாத்தான் இருப்போம். என்னோட கணவர், மகன்தான் மூணு பேரும் வாசிக்கறோம். எல்லாரும் 'பொம்பளையாச்சே, எப்படி வாசிக்கிற?' எங்கே கத்துக்கிட்டேன்'னு ஆர்வமா கேட்பாங்க.

முதல் குழந்தை பிறக்கறப்பதான் ஏழு மாசம் வாசிக்கலை. மத்தபடி வாசிக்கிறதுல எந்தக் கஷ்டமும் இருந்ததில்லை. எட்டு வருஷம் ஆச்சு, வாசிக்க ஆரம்பிச்சு. குடும்பமா உட்கார்ந்து சாதகம் பண்ணுவோம். இவர் நிறைய கீர்த்தனைகள் எல்லாம் சொல்லித்

தருவார்.

டெல்லியில் ஒரு கச்சேரி. திரும்பி வரும் போது ரொம்ப லேட்டாயிடுச்சு. அந்தத் தேதியில் இங்க ஒரு கல்யாணத்துல வாசிச்சாகணும். சென்ட்ரல்ல இறங்கினதும் அவசர அவசரமா ஓடி வந்தோம். நேரமோ நெருங்கிக்கிட்டு இருக்கு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றதுக்கு ஐந்து நிமிஷம்தான் இருக்கு. தெருவிலேயே பிரிச்சு, நாயனத்தை எடுத்துக் கட்டி, உடனே வாசிக்க ஆரம்பிச்சு மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வரவேற்றோம். அப்பா! அதுக்குள்ள பட்ட அவஸ்தை இருக்கே!

பெரும்பாலான கல்யாணங்களிலே ஒரே அன்புத் தொல்லையா இருக்கும். 'நம்ம வீட்டுக் கல்யாணம்னு நினைச்சுக்கோ- தனியா கவனிக்கலைன்னு வருத்தப்படாதே' என்று சில மாமிகள் வந்து கெஞ்சுவாங்க. ரொம்பப் பிரியமா நடந்துக்குவாங்க. பொண்ணுங்களால வாசிக்க முடியாதுன்னு சொல்றதெல்லாம் சும்மா. விழா மேடைகள்ல, அரசு விழால வாசிச்சா ரொம்ப பேர் மங்களமாயிருக்குன்னு பாராட்டறாங்க" என்றார் மஞ்சுளா.

"எங்களுக்கு எந்த வித்யாசமும் கிடையாது. மரியாதையா கூப்பிடற எடத்துல வாசிப்போம். ஜெயலலிதா வளர்ப்பு



• ராஜேந்திரன்

மகன் சுதாகரன் கல்யாண வரவேற்புக்கும் வாசிச்சிருக்கேன், கலைஞரின் பவள விழாவுக்கும் வாசிச்சிருக்கேன். கேட்டரிங் காண்ட்ராக்ட் எடுக்கிறவங்களால சில வாய்ப்பு போகும்... அது பெரிய விஷயம் இல்லை" என்றார் சீனிவாசன்.

"ஆயிரமாயிரம் பெண்களுக்கு வாழ்வளித்த எங்கள் இதயத் தலைவர் வாழ்க! வளர்க அவர் தொண்டு!"

"யோவ்! இது என் ஜான்வாச ஊர்வலம்! கண்டபடி கூவி சொதப்பிடாதீங்க!"

— மாதுரி



"வேதமும் நாதமும் ஒண்ணு!"

– மயிலாப்பூர் எஸ். ராஜேந்திரன்:

"கல்யாணக் கச்சேரிகள்ல நல்லா உச்சஸ்தாயில வாசிக்கிறப்ப கெட்டி மேளம்னு கத்துவாங்க. உடனே கெட்டி மேளம்தான் வாசிக்கணும். அதுக்காகக் கஷ்டப்பட முடியாதே. வேதமும், நாதமும் ஒண்ணு. அந்த நேரத்துல நாதஸ்வரம் முக்கியமில்லை. வேதம் தான் முக்கியம். கல்யாணங்கள்ல சில வாண்டுகள் எல்லாம் சுத்தி சுத்தி விளையாடி, குறும்பு பண்ணும். சுவாரசியமா இருக்கும்.

காண்ட்ராக்ட் எடுத்து கேட்டரிங் செய்யறதுல சில பேர், நல்ல ரசனை உள்ளவங்களா இருப்பாங்க. நாதஸ்வரத்தோட சாக்ஸஃபோன், தவில், ம்ருதங்கம் எல்லாம் மிக்ஸ் பண்ணி வாசிக்க வைப்பார். அது மாதிரி காண்ட்ராக்டர்கள் கூப்பிட்டா வாசிக்கறதுதான்."

— க. பார்வதிபாமா

படங்கள்: ஸ்ரீஹரி



நிலா வட்டம் 5

ரிஷபன்

வாசல் கதவு சரேலெனத் திறந்த சத்தத்தில் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'என்ன...' கண் விழித்துப் பார்த்தான்.

ஸ்வேதா. பூவுடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. நெற்றியில் வியர்வைப் பொடிகள்.

ஸ்வேதாவா. தெரியாமல் உள்ளே வந்து விட்டாளா. அல்லது....

சிவராம் எழுந்து விட்டான்.

"என்ன ஸ்வேதா."

பெயரைச் சொன்ன போதே உள்ளே இனித்தது. திரும்பிப் பார்த்தாள்.

"நீங்களா?"

"என்ன நடந்தது?"

முன்னேறிக் கதவைத் திறக்க முயன்றான்.

"பிளீஸ். வேண்டாம்."

கதவுக்கும் அவனுக்கும் இடையில் நின்றாள்.

மருண்ட விழிகளுடன் உதட்டைக் குவித்து அவள் பேசிய விதம் அந்த நேரத்திலும் ரசனையைத் தூண்டியது.

"வா... இப்படி உட்கார் முதலில். குடிக்கத் தண்ணீர் தரட்டுமா."

"வேணாம். ரெண்டே நிமிஷம். நானே போய் விடுவேன்."

இதன் சொந்தக்காரியே நீதான் ஸ்வேதா. முழு உரிமை உள்ளவள். சொல்லவில்லை. நினைத்துக் கொண்டான்.

ஐந்தே நிமிடங்கள். என்ன கேட்பது என்று புலப்படாமல். பேசத் தயார் நிலையில் இருக்கிறாளா என்ற தயக்கத்தில்.. நாகரிகம் காரணமாய் ஒரேயடியாய் உற்றுப் பார்க்கவும் மனமின்றி... சிவராம் திணறிப் போனான்.

ஆனாலும் அந்த நிமிடங்கள்.

கண் எதிரே எந்த இடையூறும் இன்றி முழுவதும் அவனுக்கே சொந்தமாய். பார்க்க முடிந்த வினாடிகளில் ஸ்வேதா துல்லிய மாய்ப் பதிந்தாள்.

பாதி இடிபட்ட நிலையில் நின்றிருந்தது.

ஆட்கள் எவருமில்லை.

சிவராமுக்குக் குழப்பம் வந்தது. ஆறு மணி வரை வேலை செய்பவர்கள் இன்று நான்கு மணிக்கே வேலையை நிறுத்தி விட்டார்களா.

மேஸ்திரி சைக்கிளில் வருவது தெரிந்தது.

''என்ன ஆச்சு. ஏன் யாரையுமே காணோம்?'' என்றான் அவனையும் மீறி படபடப்பாக.

''அடிபட்டுப் போச்சுங்க. ஆசுபத்திரிக்குக் கூட்டிகிட்டு போனோம்.''

''அடி பலமா.''

''ஆமாங்க. ரத்தம் ஏத்தற மாதிரி... நல்ல வேளை. நம்மாளுங்க ரெண்டு பேரு அதே குருப்பு.''

''செலவு என்னவானாலும் சரி. புரியுதா. நல்லா பார்த்துக்குங்க'' என்றான் நிதானத்திற்கு வந்து.

''ஒண்ணும் பயமில்லே. ரெண்டு வாரம் ரெஸ்ட்டுல இருக்கணுமாம்.''

''எந்த ஹாஸ்பிடல்?''

பெயரைக் கேட்டுக் கொண்டான்.

''மத்த ஆளுங்க நாளைக்கு வந்துருவாங்க. அப்புறம் அய்யா... வந்து...''

''என்ன...''

''ஒண்ணுமில்லீங்க.'' மேஸ்திரி பின் வாங்கி விட்டார்.

சிவராம் அதை உன்னிப்பாய் கவனிக்கும் மன நிலையில் இல்லை. ஸ்வேதா வந்து விட்டுப் போன நினைவு அவனை அலைக்கழித்தது.

ஹூம். பேச வாய்ப்பே இல்லையே.

வேதாசலம் தம் எதிரில் வந்து நின்ற மேஸ்திரியை வியப்புடன் பார்த்தார்.

''என்னடா?''

''அய்யா... ஒரு சின்ன விஷயம்.''

''என்னது...''

''முனீஸ்வரனுக்கு கோழி... வழக்கமாச் செய்யிறதுதானுங்க. இன்னைக்கு ஒரு ஆளுக்கு அடிபட்டுப் போச்சு. அது செய்யாம விட்டதாலன்னு... வம்பு பண்றாங்க.''

''சரி... சரி. இதை ஏன் பெரிசு பண்றே... செஞ்சுட்டு வந்து கேட்டா... வேணாம்னா சொல்லப் போறேன்'' என்றார் வேதாசலம்.

''இல்லீங்க. தம்பிக்கு இதுல...''

''அவன் கிட்டே பேச வேணாம். நீயே பார்த்துக்க. எவ்வளவு வேணும், சொல்லு... தரேன்.''

மேஸ்திரி நிம்மதியாகித் திரும்பிப் போனார்.

நன்றாகத்தான் அடிபட்டிருந்தது. அவன் மனைவி சிவராமைப் பார்த்ததும் இன்னும் பலமாய் அழுதாள். பரட்டைத் தலையாய் ஒரு சிறுமி அவள் மேல் ஈஷிக் கொண்டது.

''கவலைப்படாதீங்க. சரியாயிடும்.''

''ரெண்டு வாரம் வேலைக்கு வர முடியாதுங்க.''

சம்பளம் போய்விடும் என்ற யதார்த்தக் கவலை வேறு.

''மேஸ்திரி பணம் தருவாரு. ஆஸ்பிடல் செலவும் பார்த்துக்குவாரு. நல்லா ஆன பிறகு வந்தாப் போதும்... சரியா...''

அடிபட்டவனின் முகத்தில் தெளிவு வந்தது.

ஹாஸ்பிடல் வாசலுக்கு வந்து ஸ்கூட்டரை உதைக்கப் போனவன் பார்வையில் ஸ்வேதா தென்பட்டாள்.

இவள் எங்கே... இந்தப் பக்கம்...

சுற்று முற்றும் பார்வையை அலைபாய விட்டபடி நின்றிருந்தாள். யாருக்காகக் காத்திருக்கிறாள்? சிவராமுக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை.

ஸ்கூட்டரை அப்படியே நிறுத்திவிட்டு பூட்டிக் கொண்டான். ஸ்வேதாவின் பார்வையில் படாதபடி நின்றான்.

பத்து நிமிடம் காத்திருத்தலுக்குப் பின் ஸ்வேதா அந்தக் கட்டடத்தின் உள்ளே போனாள்.

சிவராமுக்கு என்ன செய்வதென்ற தயக்

''அதென்ன மாடில மேகக் கூட்டம் மாதிரி மேடை செட் அப்?''

''அது நிச்சயதார்த்த மேடை. கல்யாணம் சொர்க்கத்தில் நிச்சயக்கப்படுவது இல்லையா?''

– மாதுரி



கமே இல்லை. பின் தொடர்ந்து போனான்.

பெரிய ஹால். மீட்டிங் நடக்கிற இடம். ஏற்கெனவே நிறைய நபர்கள் அமர்ந்திருந் தனர். யாரோ பேசிக் கொண்டிருந்தவர் தொடர்ந்து சொன்னார்.

"இனி நாம் நேரத்தை விரயம் செய்ய வேண்டாம். நமது அன்பிற்குரிய புரபசர் பாலகிருஷ்ணனைப் பேச அழைத்து விட லாம். எண்களும் நம் வாழ்வும் என்ற தலைப் பில்..."

யாரோ பின்னாலிருந்து சிவராமைப் பிடித்து இழுத்து அமரச் சொன்னார்கள். வேறு வழியின்றி உட்கார, மூன்று வரிசை களின் முன் ஸ்வேதா அமர்ந்திருந்தது புலனானது.

ராஜப்பா சுற்று முற்றும் பார்த்தார்.

"என்ன. யாரைத் தேடுகிறீர்கள்."

சிவராம் புரியாமல் பார்த்தான்.

"உனக்கு யாரைப் பார்க்க வேண்டும்."

"உங்களைத்தான்" என்றான் சிரிப்புடன்.

"அதுதான் என் சந்தேகமே. நீதான் என்னைத் தேடி வருவதில்லையே."

சிவராம் அவர் கேலி புரிந்தவனாய்ச் சிரித்தான்.

"இல்லை. இந்த முறை எனக்கு உங்களைத்தான் பார்க்க வேண்டும்."

எதிரில் அமர்ந்தான். சில வினாடிகள் மௌனமாய்க் கழிந்தன.

"உன் காதல் எந்த அளவு முன்னேறி யிருக்கிறது? அம்பது பர்செண்ட்டா?"

"ம். என் வரையில்...."

"அவ்வளவுதானே. பாதிக் கிணறு."

"என் காதல் பற்றி பேசுவதை விட... என் தனிமை பற்றிப் பேசி விடலாம்."

"சொல்" என்பது போலக் காத்திருந்தார்.

"ரொம்பக் கஷ்டமானது எது தெரியுமா ஸார்."

பதிலுக்குக் காத்திராமல் தொடர்ந்தான்.

"ஒரே வீட்டில் இருக்கிற நபர்களுக்குள் மன இடைவெளி. ரொம்பக் கொடுமை."

ராஜப்பா இடைமறிக்க விரும்பவில்லை. 'அவனே பேசட்டும்.'

"எனக்கு ஒரு தமக்கை உண்டு. பம்பாயில். இல்லை... மும்பையில் இருக்கிறாள். சீக் கிரமே அவளுக்குத் திருமணமாகி விட்டது.

அதில் அவளுக்கு வருத்தம்தான். ஏனென் றால் எங்கள் அப்பா... அவள் திருமணமாகிப் போன பிறகுதான்... இத்தனை வசதி, வாய்ப்புகளைத் தேடிக் கொண்டார். இதைத் தான் இருந்து அனுபவிக்கவில்லை என்பதில் ரொம்ப வருத்தம் அவளுக்கு."

"சீர் வரிசையில் ஈடுகட்டி விட வேண்டி யதுதானே...." என்றார் மௌனத்தைக் கலைத்து.

"செய்யலாம். செய்தோம் என்றே வைத் துக் கொள்ளுங்களேன். என்ன இருந்தாலும் அது புகுந்த வீட்டிற்குச் செய்ததுதானே. முழு உரிமை இவளுக்கு இல்லையே."

ராஜப்பா ஏதோ ஆட்சேபிக்க முயன்று வாய் மூடிக் கொண்டார்.

"அல்லது... அவளுக்குத் திருப்தி இல்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள். அவள் மணமாகிப் போனாளா. நாங்கள் மட்டுமே இருந்தோமா. அதுவும் நான் கூட ஹாஸ் டலில் இருந்தேன். ஆர்.ஈ.சியில் படித்த நேரம்... வெகேஷனுக்கு வருவேன்."

"அம்மா... அப்பா மட்டும் தனிக் குடித் தனமா" என்றார் குறும்பாக.

"அம்மா..." பெருமூச்சு விட்டான்.

"அப்பாவி. வெளுத்ததெல்லாம் பால். எதிர்த்து பேசத் தெரியாது. எல்லோரையும் கபடமாய் நம்பி விடுவாள். ப்ச்... எல்லாம் காலங் கடந்து போன நிலையில்... அம்மாவுக்கு விவரம் தெரிந்து விசாரித்தால்... ஆமா... இப்ப என்ன செய்யணும் என்றாரே பார்க்கலாம்."

சிவராமின் கண்கள் கலங்கி விட்டன.

"பூ மாதிரி மனசு ஸார், அம்மாவுக்கு. வாடிப் போனது... வியாதி என்று ஒரு நாள் கூடப் படுக்காதவள். நிரந்தர நோயாளி யானாள். ஒரு வருஷம். படுத்தே கிடந்தாள்."

சிவராமின் குரல் பிசிறு தட்டியது.

"போய் விட்டாள். இனிமேல் எந்த மனக் கஷ்டமும் வராத இடத்திற்கு."

கைகளை உயர்த்தி வானத்தைக் காட்டி னான். ராஜப்பா அவன் படும் துயர் புரிந்து தாமும் சங்கடப்பட்டார்.

"கடைசியா.. என்ன சொன்னாங்க தெரி



"ரொம்ப குழப்பிக்க வேண்டாம். திங்கட்கிழமை 24 ஜனவரி, 2020க்கு இந்தக் கல்யாண மண்டபத்தை அட்வான்ஸ் புக்கிங் பண்ணிக்கறேன். ஆண் குழந்தையா பிறந்திட்டா நானே புக்கிங்கைப் பெண் வீட்டாருக்கு ப்ளாக்கில வித்துத் தர்றேன். கவலைப்படாதீங்க!"

— மாதுரி

யுமா. சிவா.... இங்கே வாயேன் என்றாள். எனக்கு ஒரு வரம் தருவியா. உங்கப்பாவை நான் மன்னிச்சுட்டேன். நீயும் எனக்காக அவரை மன்னிச்சுடு... வயசான காலத்துல அவரைத் தனியா விட்டுட்டு போறேன்டா. எனக்கு நிம்மதி வேணும். செய்வியா. என்றாள்...."

சிவராமின் குரல் தழுதழுத்தது.

"அம்மாவின் கெட்டிக்காரத்தனம் என் கையைக் கட்டிப் போட்டதே தவிர. மனத்தின் குமுறல் அடங்கவேயில்லை. என் வெறுப்பைத் துளிக்கூட வெளிக்காட்டவில்லைதான். ஆனால் அவருக்கு அருகில் இருக்கவும் விருப்பம் இல்லை. நல்ல வேளை... எனக்கு வேலை கிடைத்த சாக்கில் கிளம்பிப் போய் விட்டேன். அப்பாவின் வற்புறுத்தலுக்காக இந்த அபார்ட்மெண்ட்ஸில் ஒரு ஃப்ளாட் வாங்கினேன். வாங்கினேன் என்று சொல்வதை விட, அவர் தந்து விட்டார் என்றுதான் சொல்லணும்."

ராஜப்பா சுவாரசியமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார். எப்போதும் சிரிப்பும் கலகலப்புமாய் வளைய வருபவனிடம்தான் எத்தனைக் குமுறல்கள்.

"ஊரிலிருந்து வந்திருக்கவே மாட்டேன். என்னவோ ஒரு அசட்டுத்தனம். சொன்னால் கேலியாய்ச் சிரிப்பீர்கள். ஒரு கனவு எனக்கு. அம்மா வந்தாள். சிவான்னு அதே குரல் ஸார். என்னால... நம்பவே முடியலே. ஏன்டா... அம்மா மேல இவ்வளவுதான் மரியாதையா... எனக்கு வேற என்னடா கேட்கப் போறேன். நீதான் இனிமேல் எனக்கு என்ன செய்யப் போறே... என்னோட கடைசி ஆசையைக் கூட உன்னால நிறைவேத்த முடியலே, இல்லியான்னு கேட்டான் பாருங்கள்.. வெலவெலத்துப் போய் விட்டேன்."

ராஜப்பாவைத் தயக்கமாய்ப் பார்த்தான். கேலி செய்யப் போகிறார்.

"ம்... அப்புறம்..." என்றார் சீரியசாய்.

"அப்புறம் என்ன... இதோ.. இங்கே வந்தாச்சு. வேலையையும் விட்டாச்சு."

"ஸார்... நாம இப்ப பேசினது... வேற யார் கிட்டேயும்..."

"ஊஹூம். நாம் பேசினதை போன நிமிஷமே மறந்து விட்டேன்" என்றார்.

"என்னவோ, அப்பாவிடம் ஒட்டுதல் போனதாலோ... உங்களிடம் அலாதியாய் ஒரு பிரியம். எதையும் மறைக்கத் தோன்றவில்லை... சொல்லி விட்டேன்."

'அது சரி. அப்படி என்னதான் வேதாசலம் தப்பு செய்தார்? இவன் ஏன் தனியாகவே இருக்க வேண்டும்.'

கேள்விகள் ராஜப்பா மனத்தில் வேறு ரூபத்தில் விசுவரூபம் எடுத்தன.

புரபசர்தான் ஃபோனில் அழைத்தார்.

"உன்னை நிகழ்ச்சி முடிவில் பார்க்க நினைத்தேன். அதற்குள் போய் விட்டாயே."

"நான் எங்கே வந்தேன்" என்றான் பலவீனமாக.

"சிவராமுக்கு வேறென்ன திறமைகள் இருக்கிறதோ.... நிச்சயம் பொய் சொல்லும் திறன் இல்லை..." என்றார் கேலியாக.

"தப்பு. அது சரி. என்னை அந்தக் கூட்டத்தில் எப்படிப் பார்த்தீர்கள்" என்றான் வேறு வழியின்றி.

"என் சக்தியை இன்னமும் நீ முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை."

"என் சக்தியா. என் சக்தியா..." என்று உற்சாகமாய் மடக்கினான்.

"அப்படி வா. இப்போதாவது என்னை ஏற்றுக் கொள்கிறாயா?"

"ஸாரி. ப்யூர் கொயின்சிடன்ஸ்."


புரபசர் முகம் இறுகியிருக்க வேண்டும். சீண்டி விடப்பட்டது குரலில் புலப்பட்டது.

"இதோ பார்... நீ கேட்காமலேயே சொல்கிறேன். உன் தங்கைக்கு..."

லைன் திடீரெனக் கட்டாகி விட்டது.

(தொடரும்)

HAPPY NEW YEAR - 1999



விவேகானந்தாவின்
புத்தாண்டுப்
பரிசு!

FREE

விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேருவோருக்குப் பாடங்களுடன் **டீலக்ஸ் டைரி** ஒன்று புத்தாண்டுப் பரிசாக அனுப்பப்படும்.

விவேகானந்தாவின்
ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ் விவரம்

LEVEL 1 (அடிப்படை ஆங்கிலம்) ஆரம்ப நிலையிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லாமல் எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.175/- மட்டுமே.

LEVEL 2 (இலக்கணப் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.225/- மட்டுமே.

LEVEL 3 (ஸ்போக்கன் இங்கிலீஷ்) தவறாகப் பேசிவிடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 250/- மட்டுமே.

LEVEL 2 & 3 இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 375/- மட்டும் செலுத்தினால் போதும்.

LEVEL 1, 2 & 3 மூன்று லெவல்களிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ.525/- மட்டும் செலுத்தினால் போதும்.

உங்களுக்குத் தேவையான லெவலில் சேர்ந்து, வீட்டிலிருந்தபடியே, தபால் மூலம் சுலபமாக இங்கிலிஷ் கற்றுக் கொள்ளுங்கள். தயக்கமின்றி, சகஜமாகப் பேசத் தொடங்குங்கள்.

முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை. கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து 15 நாட்களுக்குள் அனுப்புங்கள். பாடங்களையும், புத்தாண்டுப் பரிசாக டீலக்ஸ் டைரியையும் V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன். எனக்கு பாடங்களுடன் டைரியை V.P.P.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக்கொள்கிறேன்.

தேவையான கட்டத்திற்குள் ✓ குறியிடவும்

- LEVEL 1 ☐
- LEVEL 2 ☐
- LEVEL 3 ☐
- LEVEL 2 & 3 ☐
- LEVEL 1, 2 & 3 ☐

பெயர்:..............................

முகவரி:..............................

....

....

..............................பின்கோடு..............

VIVEKANANDA INSTITUTE

KLD

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-600 017.

INDIA'S NO. 1 ENGLISH TRAINING INSTITUTE

விவேகானந்தாவின் நேர்முகப் பயிற்சி மையங்கள்: சென்னையில்: தி.நகர், தாம்பரம், தண்டையார்பேட்டை, நுங்கம்பாக்கம், போரூர், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், குன்னூர், திண்டுக்கல், தஞ்சாவூர், அரக்கோணம், வேலூர் மற்றும் பாண்டிச்சேரி.
*** சேலத்தில் எங்களது நேர்முகப் பயிற்சி மையம் F 12 ஃபேர்லாண்ட்ஸ், சேலம்-16 என்ற புதிய விலாசத்தில் இயங்கிவருகிறது.**



• ராகவன்

படுகொலை நடந்த போதும் பதறாத மனத்திடம்!

டி. கார்த்திகேயனுக்குப் பின், மறுபடி ஒரு தமிழ் நாட்டுக்காரர் சி.பி.ஐ. இயக்குனர் ஆகியிருக்கிறார். ஆ.கே. ராகவன், ஐ.பி.எஸ். (தமிழ்நாடு கேடர்) லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குனராக இருந்து வந்த ராகவன், சி.பி.ஐ. இயக்குனராக நியமிக்கப்படுவார் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

மந்தைவெளிப்பாக்கத்தில் உள்ள அவரது பிளாட்டில், செய்தி வெளியானது முதலே நண்பர்கள் 'பொக்கே' சகிதம் வந்து புது வருட + புதுப் பதவிக்கான வாழ்த்துகளைச் சொன்னவண்ணம் இருந்தனர். சாதாரண போனும், செல்போனும் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தன.

டெல்லி புறப்படும் அவசரத்தில் இருந்தவர், டெலிபோன் பேச்சுக்கு இடையிடையே, தடங்கலுக்கு இயல்பான வருத்தம் தெரிவித்தபடியே நம்மிடம் பேசினார்.

அப்பா, கடலூரில் பிரபல வக்கீல். எனவே அப்பாவுக்கு போலீஸ் மீது மரியாதை. மகனுக்கு ஐ.பி.எஸ். ஆசை இளமையிலேயே வந்து விட்டது. விவேகானந்தாவில் பி.எஸ்ஸி. பிஸிக்ஸ், அப்புறம் மாநிலக் கல்லூரியில் எம்.ஏ. பொலிடிகல் சயின்ஸ்.

ஐ.பி.எஸ். தேர்வானவுடன் முதல் போஸ்டிங் நாகைப் பட்டினத்தில். அப்புறம் கிரைம் பிராஞ்ச், இன்டலிஜென்ஸ் பீரோ என்று பல முக்கிய பொறுப்புகள்.

வாழ்க்கையின் மறக்க முடியாத தருணம் என இவர் குறிப்பிடுவது ராஜீவ்காந்தி படுகொலையைத்தான். மனித வெடிகுண்டில் ராஜீவ் மரணத்தைத் தழுவியபோது ஸ்பாட்டில் இருந்த சிலர் மரணமடைய, பலர் தப்பியோடி விட, ராகவன் மட்டும் அங்கேயே இருந்து ஆற்றிய பணி மகத்தானது!

"என் முன்னே இரண்டு முக்கியப் பணிகள் இருந்தன. ஒன்று, கொலையான ராஜீவ் காந்தி உடலை பத்திரமாகச் சென்னைக்கு அனுப்புவது. என் கீழே இருந்த திறமையான, பொறுப்பான அதிகாரியொருவர் மூலம், ராஜீவ் உடலை உடனடியாக அனுப்பி வைத்தேன். அடுத்தது ஸ்தலத்தில் சாட்சிகளைப் பாதுகாப்பது. கணநேரத்தில் வியூகம் வகுத்து, அந்த இடத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வளையம் அமைத்து, அந்நியர் எவரும் புகுந்து சாட்சிகளைக் கலைத்து விட முடியாதபடிச் செய்தேன். ஹரிபாபுவின் கேமராவைக் கைப்பற்றினேன். அது, எத்தனை உதவியாக இருந்தது என்பதை உலகமே அறியும். என் பணியை, நீதிபதி வர்மா தம் அறிக்கையில் சிறப்பாகப் பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்" என்கிறார் ராகவன்.

"கொடுமையான அந்தச் சம்பவம் பலருக்கும் அதிர்ச்சியளித்த வேளையில், பதற்றமின்றி செயல்பட உங்களால் எப்படிச் சாத்தியமாயிற்று?"

"ஆண்டவன் எனக்கு அந்தத் தருணத்தில் அபரிமிதமான மனோதைரியத்தை அளித்தான் என்றே நான் நம்புகிறேன்."

"இப்போது அரசாங்கம், கோர்ட் இரண்டு பக்கமும் இடி வாங்கும் பதவியாகி விட்டது சி.பி.ஐ. தலைமைப் பொறுப்பு. நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?"

"சட்டம் யாரையும் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. சட்டப்படி சரியாக நடந்து கொண்டால், நாம் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. இது என் பாலிசி. இதைக் கடைப்பிடித்தால் எதையும் சமாளிக்க முடியும்."

ராகவனின் மனைவி சாந்தி, மாநிலக் கல்லூரியில் ஆங்கிலத் துறைத் தலைவர். மகன் ராஜேஷ், சிடி பாங்கில் பணிபுரிகிறார்.

ராகவனுக்கு காக்கிச் சட்டையின் பின்னால் பல முகங்கள் உண்டு. காவல் துறை பற்றி நிறைய எழுதியுள்ளார். கிரிக்கெட்டில் அதிக ஆர்வம். மாட்சுகளுக்கு அம்பயராக இருந்திருக்கிறார். ரேடியோ, டீவியில் வர்ணனை செய்ததுமுண்டு! தினமும் உடற்பயிற்சிக்காக டென்னிஸ் ஆடுகிறார். இவர் ஒரு க்விஸ் மாஸ்டரும் கூட.

— எஸ். சந்திரமௌலி



ஜீவன் ஸ்ரீ



சிறப்பான நபர்களுக்கான தனிப்பட்ட பாலிசி

நீங்கள் பாரதத்தின் கிராமவாசியாகவோ அல்லது நகரவாசியாகவோ - திறமைவாய்ந்த வியாபாரி அல்லது தொழில் வல்லுனர் அல்லது வளமைமிக்க விவசாயியாகவோ உங்கள் துறையில் சிறந்து விளங்கி நிலைபெற்றிருக்கும் நிலையில் உங்களுடையஆயுள் இன்ஷூரன்ஸ் தொகை தேவையான அளவிற்கு இருக்கிறதா? உங்கள் தொழில்துறையின் ஆதாயத்திற்கு காரணமான முக்கிய நபர்களின் சேவையை காப்பீடு செய்ய வேண்டாமா?

ஜீவன் ஸ்ரீ உங்கள் தேவைகள், நிலைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டது.

சிறப்பம்சங்கள்:

- குறைந்தபட்ச உத்தரவாதத் தொகை ரூ. 5 லட்சங்கள்
- ரூ. 75/- வீதம் ஒவ்வொரு ஆண்டும் காப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆயிரத்திற்கும் கூடுதல் தொகை உறுதியளிக்கப்படுகிறது.
- பாலிஸி முதிர்வுத் தொகையினை தவணை முறையில் பெற்றிட வாய்ப்பு உண்டு.
- விசுவாசத் தொகை எனப்படும் கூடுதல் தொகையும் பெற வாய்ப்புண்டு.

ஜீவன் ஸ்ரீ நிறைவான காப்பீடு செய்ய தகுதிபடைத்தவரே நீங்கள்

இதர விபரங்களுக்கு உங்கள் முகவரையோ அல்லது அருகிலுள்ள கிளை அலுவலகத்தையோ தயவு செய்து தொடர்பு கொள்க.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

மக்களின் மகத்தான சேவையில்

Please visit us at www.licindia.com

Mode(Mum)/LIC/129/98/ Tam

பொன்னியின் செல்வன்

பூர்வகதை

தமிழகத்தின் சரித்திரத்தில் இராஜ ராஜ சோழர் என்று புகழ்பெற்ற அருள்மொழி வர்மர் இளவரசராயிருந்த சமயத்தில் இலங்கையில் சோழ நாட்டுப் படைகளுக்குத் தலைமை வகித்துப் போர் நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டுத் தஞ்சையில் படுத்த படுக்கையில் இருந்தார். சுந்தர சோழரின் மூத்த குமாரரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் காஞ்சியில் தங்கியிருந்தார். இரண்டு இராஜ குமாரர்களுக்கும் நடுவில் பிறந்தவரான குந்தவை, பழையாறை நகரில் செம்பியன் மாதேவியின் ஆதரவில் இருந்து வந்தார்.



கல்கி கலெக்ஷன்

சோழ சாம்ராஜ்யத்துப் பெருந்தரத்து அதிகாரிகளிலே மிக முக்கியமானவர்கள் அண்ணன்தம்பிகளான பழுவேட்டரையர்கள். பெரிய பழுவேட்டரையர் ஏறக்குறையச் சோழ நாட்டின் சர்வாதிகாரி பதவியை வகித்து வந்தார். சாம்ராஜ்யத்தின் தன பொக்கிஷமும் தானிய பண்டக சாலையும் அவருடைய வசத்தில் இருந்து வந்தன. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் தளபதி பதவியை வகித்து வந்தார். சுந்தர சோழ சக்கரவர்த்தி பெரிதும் இந்த இரு சகோதரர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தார்.

பெரிய பழுவேட்டரையர் முதுமைப் பிராயத்தில் நந்தினி என்னும் அழகிய பெண்ணை மணந்தார். நந்தினியும் குந்தவையும் ஒருவரையொருவர் துவேஷித்தனர். ஒருவரையொருவர் அவமானப் படுத்தவும் பழிவாங்கவும் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நந்தினியின் தூண்டுதல்

அமரர் கல்கி

காரணமாகப் பெரிய பழுவேட்டரையர் ஒரு பெரிய சதியில் ஈடுபட்டார். சுந்தர சோழரின் இரு புதல்வர்களுக்கும் பட்டமில்லாமல் செய்துவிட்டு, அவருடைய பெரிய தந்தை மகன் மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றத் தீர்மானித்தார். இதற்குக் கடம்பூர் சம்புவரையர் முதலிய சிற்றரசர்களின் பூரண சம்மதத்தையும் பெற்றார். காஞ்சியிலிருந்த ஆதித்த கரிகாலர் தம் தந்தையைத் தஞ்சையிலிருந்து காஞ்சிக்கு வரும்படி செய்வதற்காகக் காஞ்சியில் ஒரு பொன்மாளிகை கட்டினார். அதை வந்து பார்க்கும்படி தந்தையை வேண்டிக் கொண்டு தஞ்சைக்கு ஓலை கொடுத்து அனுப்பினார். ஓலையை எடுத்துச் சென்றவன் வந்தியத்தேவன் என்னும் பழைய வாணர் குலத்து வீரன். அவன் வழியில் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்தபோது மேற்படி சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். தஞ்சை சென்று சுந்தர சோழரிடம் ஓலையைக் கொடுத்தபிறகு பழையாறைக்குப் போய்க் குந்தவை தேவியைக் கண்டான். அவளிடம் தான் அறிந்ததையெல்லாம் சொன்னான். குந்தவை அவனை இலங்கை சென்று தன் அருமைச் சகோதரனை அழைத்து வரும்படி ஏவினாள். வழியில் பல அபாயங்களுக்குத் தப்பி வந்தியத்தேவன் இலங்கை வந்து அருள்மொழி வர்மரிடம் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான். அதேசமயத்தில் இளவரசரைத் தேடிக் கொண்டு இன்னும் சிலரும் வந்து சேர்ந்தார்கள். முதன்மந்திரி அநிருத்தர் ஆழ்வார்க்கடியானிடம் இளவரசர் இலங்கையிலேயே இருத்தல் நலம் என்று சொல்லி அனுப்பினார். தம்பியைக் கையோடு காஞ்சிக்கு அழைத்து வரும்படி ஆதித்தகரிகாலர் பார்த்திபேந்திரனை அனுப்பியிருந்தார். சோழ குலத்தை அடியோடு கருவறுக்கச் சபதம் செய்திருந்த கொலைகாரர் கூட்டத்தைச் சேர்ந்த இருவரும் இலங்கைக்கு வந்திருந்தார்கள்.

அருள்மொழி வர்மர் இலங்கைக்கு வந்த புதிதில் அவர் தண்டு இறங்கியிருந்த இடத்தை ஊமை ஸ்திரீ ஒருத்தி சுற்றிச் சுற்றி வந்து ஓலமிட்டாள். இளவரசர் அவளருகில் சென்று பார்த்தபோது குழந்தைப் பிராயத்தில் தன்னைக் காவேரி நதியில் மூழ்கிப் போய் விடாமல் காப்பாற்றியவள் அவள் தான் என்று அறிந்தார். இளவரசர் தங்கியிருந்த இடம் கொடிய நடுக்கு சுரம் பரவியிருந்த இடம் என்பதை அம் மாதரசி உணர்த்தி, அங்கிருந்து போய் விடும்படி எச்சரித்தாள்.

அநுராதபுரத்தின் வீதிகளில் அருள்மொழி வர்மரும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் மகாபோதி விஹாரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது அவர்கள் மீது ஒரு பழைய மாளிகையின் முகப்பு இடிந்து விழுவதற்கிருந்தது. அந்தச் சமயத்தில் மேற்கூறிய மூதாட்டி தோன்றிக் கைதட்டி அழைத்து அவர்களைக் காப்பாற்றினாள்.

மூவரும் இளவரசர் வழக்கமாகத் தங்கிய விடுதிக்குச் சென்று படுத்துக்கொண்டார்கள். ஆனால் ஒருவருக்கும் தூக்கம் வரவில்லை. இளவரசர் இலங்கையில் அம் மூதாட்டியைத் தாம் சந்தித்த வரலாறை அவர்களுக்குக் கூறினார்.

வந்தியத்தேவன் இலங்கைக்கு வந்து சேரப் பெருதவியாக இருந்த ஓடக்காரப் பெண் பூங்குழலி மூலமாகச் சேநாதிபதிக்கு ஓர் அதிர்ச்சி தரும் செய்தி கிடைத்தது. அச் செய்தியை அப் பெண்ணைக் கொண்டே சொல்ல வைக்க முயற்சி செய்தபோது அவள் பயந்து ஓடிக் காட்டுக்குள் மறைந்து விட்டாள். அவளைப் பின் தொடர்ந்து வந்தியத்தேவன் ஓடினான். அவளை இளவரசரிடம் வந்து பேசும்படி வற்புறுத்தினான். அச்சமயத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு அருகே புதர் மறைவில் அசைவு ஏற்பட்டது. வந்தியத்தேவன் பூங்குழலியின் கத்தியைப் பிடுங்கி அப்புதரை நோக்கி வீசினான். கத்தி விழுந்த இடத்திலிருந்து ஓர் அலறல் வெளிப்பட்டது. இளவரசரை அபாயம் சூழ்ந்திருப்பதை அறிந்த பூங்குழலி வந்தியத்தேவனுடன் அவரைக் காணச் சென்றாள். அவர் ''சமுத்திரகுமாரி, என்னை உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார்.

''நன்றாக நினைவிருக்கிறது!'' என்று பதில் சொன்ன பூங்குழலி, இளவரசரைக்

கைது செய்து வரச் சொல்லி, சுந்தரசோழ மகாராஜா அனுப்பிய வீரர்கள் இரு மரக் கலங்களில் வந்து தொண்டைமான் ஆற்று முகத்துவாரத்தின் அருகில் காத்திருப்பதாகச் சொன்னாள்.

இலங்கை இராஜ்யத்தைக் கைப்பற்றி முடி சூட்டிக் கொள்ள இளவரசர் முயற்சி செய்வதாகவும் அதனாலேயே சக்கரவர்த்தி அவரைக் கைது செய்து வரப் படை அனுப்பியிருப்பதாகவும் அவர்கள் பேசிக் கொண்டதைத் தான் கேட்டதாகச் சொன்னாள்.

சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் தடுத்தும் கேளாமல் தந்தையின் கட்டளைப்படி நடப்பதே உசிதம் என்று சொல்லி, வந்துள்ள வீரர் படையை நோக்கித் தாமே சென்று கைதாகப் போவதாக இளவரசர் அறிவித்தார். தொண்டைமான் ஆற்றின் முகத்துவாரத்துக்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி இளவரசர், பூங்குழலியிடம் கேட்க, அவளும் சம்மதித்தாள். பூங்குழலி மேல் நம்பிக்கை இல்லை எனவும், தாமும் உடன் வருவதாகவும் சேநாதிபதி கூறவே, இளவரசர், ஒரு புன்னகையுடன் அதை ஆமோதித்தார்; புறப்பட்டார்கள்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

யானை மிரண்டது!

மேற்கண்டவாறு முடிவு ஏற்பட்டதும் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி பார்த்திபேந்திரனைத் தனியாக அழைத்துச் சென்று சிறிது நேரம் அந்தரங்கமாகப் பேசினார். பின்னர், தம்முடன் வந்த படை வீரர்களுக்குத் தனித்தனியே சில கட்டளைகளைப் பிறப்பித்தார்.

பார்த்திபேந்திரன் இளவரசரிடம் விடைபெற்றுக் கொண்டான். "ஐயா! நான் வந்த காரியம் நிறைவேறாமல் வெறுங்கையோடு திரும்புகிறேன். இதற்காகக் கரிகாலர் என்னை மிகவும் கோபித்துக் கொள்ளப் போகிறார். ஆயினும் என்ன செய்வது? தாங்கள் பிடிவாதமாக இருக்கிறீர்கள். என் பேரில் குற்றமில்லை. இதற்கு இங்குள்ளவர்கள் எல்லாரும் சாட்சி!'' என்றான்.

இளவரசர் "அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? தாங்களும் சேநாதிபதியோடு தொண்டைமானாறு வரை வந்துவிட்டுப் போகக் கூடாதா?'' என்று கேட்டார்.

"அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தையாயிருக்க மாட்டேன். நான் வந்த கப்பல் திரிகோணமலையில் நிற்கிறது. அங்கே போய்க் கப்பல் ஏறிக் கூடிய சீக்கிரம் நான் காஞ்சிக்குப் போக வேண்டும். கரிகாலரிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

பின்னர் வந்தியத்தேவனைப் பார்த்து, "வல்லத்தரையரே! என்னுடன் நீர் காஞ்சிக்கு வரவில்லையா?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறிது திடுக்கிட்டு நின்றுவிட்டு, "இல்லை; இளவரசருடன் போக விரும்புகிறேன்'' என்றான்.

"நல்லது; என்னுடன் வராததற்காகப் பிறகு வருத்தப்படுவாய்!'' என்று சொல்லிவிட்டுப் பார்த்திபேந்திரன் புறப்பட்டான். சேநாதிபதியின் கட்டளையின்படி அவருடன் இன்னும் சில வீரர்களும் கிளம்பிச் சென்றார்கள்.

வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானிடம், "அந்தப் பல்லவன் கூறியதன் பொருள் என்ன? தன்னுடன் வராததற்காக நான் வருத்தப்படுவேன் என்று ஏன் கூறினான்? உமக்கு ஏதாவது தெரிகிறதா?'' என்று கேட்டான்.


"சேநாதிபதியும் அவனும் கலந்து பேசி ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்! அதன் விவரம் இன்னதென்று, தானே சீக்கிரத்தில் தெரியும். உண்மையில், இபபோது ஏற்பட்டிருக்கும் சங்கடத்துக்கு மூல காரணம் இந்தக் கொடும்பாளூர்க் கிழவர்தான்!" என்றான்.

"அது எப்படி? சேநாதிபதி என்ன செய்திருக்க முடியும்?"

"எல்லாம் அவருடைய வேலைதான். அவருடைய குடும்பப் பெண் ஒருத்தி பழையாறில் வளர்கிறாள் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?"

"நன்றாய்த் தெரியும். வானதி தேவியைத்தானே சொல்கிறீர்?"

"ஆமாம்; அந்தப் பெண்ணை இளவரசருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து இலங்கை அரசராக இவருக்கு முடிசூட்டி விட வேண்டும் என்று சேநாதிபதிக்கு ஆசை. புத்த குருக்களைக் கொண்டு இலங்கைக்



கிரீடத்தை அளிக்கும்படி ஏவியவர் இவர்தான். இவருடைய முயற்சியை இரகசியமாக வைத்திருக்கவாவது தெரிந்ததா? அதுவும் இல்லை. செய்தி தஞ்சைக்கு எட்டி விட்டது. அதனால்தான் முதன்மந்திரி அநிருத்தர் இலங்கைக்கு வந்தார்; என்னையும் இளவரசரிடம் அனுப்பி வைத்தார். வந்தியத்தேவா! எது எப்படியானாலும் நம்முடைய உயிரை நாம் பத்திரமாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இளவரசர் இலங்கைச் சிம்மாசனத்தை ஏற்க மறுத்தது பற்றி நீயும் நானும் தஞ்சையில் சாட்சி சொல்லும்படி நேரிடலாம்.''

இதற்குள் சேநாதிபதியின் காரியங்கள் முடிந்து விட்டன. அவருடன் வந்திருந்த படை வீரர்களில் நாலுபேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வெவ்வேறு திசையில்



புறப்பட்டுச் சென்றார்கள்.

கடைசியாக இளவரசரின் கோஷ்டியும் புறப்பட்டது. இளவரசர், சேநாதிபதி, வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் இவர்களுடனே மேற்கூறிய நாலு வீரர்களும் உயர்ந்த சாதிக் குதிரைகள் மீதேறி வடதிசை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இவர்களைப் பின் தொடர்ந்து பூங்குழலி ஏறியிருந்த யானை, ஜாம் ஜாம் என்று கம்பீரமாக நடந்து வந்தது. பூங்குழலியைத் தவிர அதன் மீது யானைப் பாகன் ஒருவன் மட்டுமே ஏறிக் கொணடிருந்தான்.

கொஞ்ச தூரம் இராஜபாட்டை வழியாக அவர்கள் சென்றார்கள். ஆனால் இராஜபாட்டையில் பிரயாணம் செய்வது சுலபமாக இல்லை. வழியெங்கும் ஜனக்கூட்டமாயிருந்தது. இளவரசர் அவ்வழியில் வருகிறார் என்பதும் எப்படியோ ஜனங்களுக்குத் தெரிந்து போயிருந்தது. இலங்கைத் தீவின் வடபகுதியில் அப்போதெல்லாம் தமிழர்களே அதிகமாக வசித்து வந்தார்கள். அங்கங்கே ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று "இளவரசர் அருள்மொழி வர்மர் வாழ்க!" "சேநாதிபதி கொடும்பாளூர் வேளார் வாழ்க!'' என்று கோஷித்தார்கள். சில இடங்களில் ஜனங்கள் குதிரைகளைச் சூழ்ந்து கொண்டு பின் தொடர்ந்து வந்தார்கள். வரவரப் பின்தொடர்ந்து வரும் கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. குதிரைகள் வேகமாகப் போகமுடியவில்லை.

இளவரசர் சேநாதிபதியுடன் இதைப் பற்றி விவாதித்ததன் பேரில் இராஜபாட்டையிலிருந்து விலகிக் காட்டு வழியில் போவதென்று தீர்மானமாயிற்று. ஜனங்களை மெதுவாகக் கழித்துக் கட்டிவிட்டு அவர்கள் காட்டு வழியில் இயற்கை இடையூறுகள் காரணமாக வேகமாகப் போக முடியவில்லை. கொஞ்ச தூரம் போனதும் தாமரைத் தடாகம் ஒன்று தென்பட்டது. அதன் கரைக்கு வந்ததும் எதிர்க் கரையில் ஒரு பெரிய ஜனக்கும்பல் நிற்பது தெரிந்தது. இவர்களைப் பார்த்தவுடனே அந்த ஜனக் கும்பலின் மத்தியிலிருந்து தாரை, தப்பட்டை, கொம்பு, பேரிகை முதலிய வாத்தியங்களின் பெருமுழக்கம் கிளம்பிற்று.

"கொஞ்சம் இருங்கள்; நான் போய் அவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன்!'' என்று கூறிவிட்டுச் சேநாதிபதி குதிரையைத் தட்டிவிட்டுக் கொண்டு முன்னதாகச் சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, "இளவரசர் இந்த வழி வருவது எப்படியோ பக்கத்துக் கிராம வாசிகளுக்குத் தெரிந்து போயிருக்கிறது. இளவரசருக்கு மரியாதை செய்யத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள்!'' என்றார்.

ஜனங்கள் நெருங்கி வந்தார்கள். இளவரசரைச் சுற்றிச் சுற்றி வந்து அடங்காத ஆர்வத்துடன் பார்த்தார்கள். பலவகை ஜயகோஷங்களையும் வாழ்த்தொலிகளையும் கிளப்பினார்கள். அவற்றில் "ஈழத்தரசர் அருள்மொழி வர்மர் வாழ்க!" என்ற கோஷம் மட்டும் பிரதானமாயிருந்தது.

இளவரசர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அந்த ஜனக்கூட்டத்திற்குத் தலைவன் என்று தோன்றிய ஒருவனை அருகில் அழைத்தார். "இவர்கள் எதற்காக எனக்கு ஈழத்து அரசுப் பட்டம் கட்டுகிறார்கள்?'' என்று கேட்டார். அவன் மிகப் பணிவுடன், "அரசே! பன்னெடுங்காலமாக இந்த ஈழ நாடு நிலையான அரசு இல்லாமல் அவதிப்பட்டு வருகிறது. பொன்னியின் செல்வர் ஈழ நாட்டின் மன்னர் ஆக வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இந்நாட்டில் வாழும் எல்லா ஜனங்களுடைய விருப்பமும் அதுதான். தமிழர்கள், சிங்களவர்கள், சைவர்கள், பௌத்தர்கள், துறவிகள், இல்லறத்தார் எல்லாரும் அதையே விரும்புகிறார்கள்'' என்று கூறினான்.

இளவரசருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விருந்து அளிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தை ஏற்றுக் கொள்ளாமல் போக முடியவில்லை. விருந்துண்ட பிறகு விடை பெற்றுப் புறப்படுவதற்கு வெகு நேரமாகி விட்டது.

இளவரசருக்கு உபசாரங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் தனித்துப் பேசிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

''தம்பி! பார்த்தாயா? இதெல்லாம் சேநாதிபதியின் சூழ்ச்சி என்று தெரியவில்லையா? முன்னாலேயே அவசரமாகச் செய்தி அனுப்பி இந்த உபசாரங்களையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''சேநாதிபதியின் ஏற்பாடுதான் என ஒருவாறு தெரிகிறது. ஆனால் இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் என்னவென்று தெரியவில்லையே? இப்படியெல்லாம் இந்தத் தீவில் வாழும் ஜனங்கள் சொல்வதைக் கேட்டு இளவரசர் நேற்று வேண்டாம் என்று மறுத்த சிம்மாசனத்தின் பேரில் இன்றைக்கு ஆசை கொண்டு விடுவார் என்ற எண்ணமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''அது ஒரு நோக்கமாயிருக்கலாம். அதைக் காட்டிலும் முக்கியமானது நம் பிரயாணத்தைத் தாமதப்படுத்துவதுதான்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''பிரயாணத்தைத் தாமதப்படுத்துவதனால் சேநாதிபதி என்ன பலனை எதிர்பார்க்கிறார்?''

''அது எனக்கும் தெரியவில்லை; ஆனால் சீக்கிரத்தில் தெரிந்துதானே ஆக வேண்டும்? இளவரசருடைய முகத்தைப் பார்! அவருக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லையென்று தெரிகிறதல்லவா?''

வந்தியத்தேவன் இளவரசரின் முகத்தைப் பார்த்தான். ஆத்திரமான வார்த்தைகளைப் பேசும்போதுகூட மலர்ந்து விளங்கிய அவருடைய முகத்தில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தன. புருவங்கள் நெரிந்திருந்தன. கண்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின.

அதே சமயத்தில் பூங்குழலி அத்தாமரைக் குளத்தின் இன்னொரு கரையில் தன்னந்தனியாக உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எதிர்பாராதபடி அவளுக்கு இந்தப் பிரயாணம் உற்சாகம் தருவதாக இல்லை.

பிரயாணத்தின்போது இளவரசருடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமென்று நினைத்தாள். அவர் தன்னுடனே அளவளாவிப் பேசுவார் என்று எண்ணினான். தன் மனத்தில் பொங்கும் உணர்ச்சியில் ஒரு சிறிதேனும் வெளியிடலாம் என்று ஆசைப்பட்டாள். அதற்கெல்லாம் சமயமே கிட்டாது போலிருக்கிறது. இளவரசரைச் சுற்றி ஒரே கூட்டமாகவே இருக்கிறது.

அவரை எதிரிகளிடம் கொண்டுபோய் ஒப்புவித்த பழி ஒன்றுதான் மிஞ்சும் போலும். அந்தப் பழி தனக்கு எதற்காக ஏற்பட வேண்டும்? ஏன் இங்கிருந்தபடி ஒருவருக்கும் தெரியாமல் ஓடி விடக் கூடாது? சேநாதிபதியின் கோபத்திலிருந்தாவது தப்பியபடி ஆகும்!

சே! சேநாதிபதியின் கோபம் என்னை என்ன செய்து விடும்? யாருடைய கோபந்தான் என்ன செய்து விடும்? அதற்கெல்லாம் நான் பயப்படவில்லை. ஆனால் என்னுடைய எண்ணமெல்லாம் ஏன் மண்ணோடு மண்ணாக வேண்டும்? இந்த நெஞ்சில் உள்ள தீ எத்தனை நாள் இப்படி என்னைத்

தகித்துக் கொண்டிருக்கும்? – இந்த உடம்பில் உயிர் எதற்காக இருக்கிறது? திடீரென்று ஒரு இடி விழுந்து என்னைக் கொன்று விடக் கூடாதா? – இப்படி எத்தனையோ ஆயிரம் தடவை ஆசைப்பட்டாகி விட்டது. பயன் ஒன்றுமில்லை. இந்த உயிர் தானாகப் போகப் போவதில்லை. நானாக ஏதேனும் செய்து கொண்டால்தான் இந்த உயிர் போகும்...!

ஆ! இது என்ன? கனவு காண்கிறேனா? இல்லை. கனவு இல்லை! அங்கே அந்தப் பாழும் மண்டபத்துக்குப் பக்கத்தில் இளவரசருடைய சிநேகிதர் என்னிடமிருந்து பிடுங்கி எறிந்த கத்தி இதோ வந்து என்னருகில் விழுந்திருக்கிறதே? இதை யார் எறிந்திருப்பார்கள்?



யாரோ அவருடைய பகைவர்கள்தான் எறிந்திருப்பார்கள்! என்னைக் கொல்லு வதற்குத்தான் எறிந்திருப்பார்கள்! என்ன துரதிர்ஷ்டம்! என் மேலே விழாமல் சற்று நகர்ந்து விழுந்து விட் டதே! - இதுவும் நல்லதற்குத்தான். கையில் இந்தக் கத்தி இருக்கட்டும்.

அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய பிறகு, அவரை, அந்தப் பாதகர்களிடம் கொண்டு போய் ஒப்பு வித்த பிறகு, அவர் எதிரிலேயே இந்தக் கத்தியினால் குத்திக் கொண்டு இறந்து விடுகிறேன். சீச்சீ! எதற்காக அவர்



மனத்தை அப்படிப் புண்படுத்த வேண்டும்? அவர் கப்பலில் ஏறிப் போன பிறகு, படகில் ஏறி நடுக்கடலில் சென்று அங்கே குத்திக் கொண்டு சாகலாம். என் அருமைக் கத்தியே! நீ திரும்பி வந்தாயல்லவா? உன்னை அனுப்பியவர்களுக்கு வந்தனம்.

ஒருவேளை இளவரசர் மேலே எறிய எண்ணி இதை எறிந்திருப்பார்களோ? ஆம்: அவருக்கு வழியில் எத்தனையோ அபாயங்கள் நேரலாம் என்று சேநாதிபதிகூடச் சொன்னாரே...? அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? அவர் பேரில் குறி பார்த்து எறிந்த கத்தி என் நெஞ்சில் விழக் கூடாதா? அவ்விதம் நேர்ந்தால், நான் இரத்தம் பெருக்கி உயிர் துறக்கும் சமயத்தில்...!

பூங்குழலியின் மனத்தில் ஒரு விசித்திரமான தோற்றம் ஏற்பட்டது. அவளுடைய மார்பில் கத்தி பாய்ந்திருந்தது. அதிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. இளவரசர் ஓடி வந்தார். "ஐயோ! எனக்காக உயிர் துறக்கிறாயா?" என்று கேட்டார். பூங்குழலியின் உள்ளம் பூரித்து நெஞ்சிலிருந்து இரத்தம் அதிகமாகப் பீறிட்டு வந்தது. இளவரசர் அவளை வாரி எடுத்துத் தம் மடியில் போட்டுக் கொண்டார். அவளுடைய நெஞ்சிலிருந்து பெருகிய இரத்தம் அவர் உடம்பையும் உடைகளையும் நனைத்தது. பூங்குழலி கலகலவென்று சிரித்தாள். "இளவரசே! இப்போதாவது என் நெஞ்சில் உள்ளது என்னவென்று தெரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டாள். "அடிபாவி! அது எனக்கு முன்னமே தெரியுமே? இதற்காகவா உயிரை விடுகிறாய்?" என்று இளவரசர் அலறினார். பூங்குழலிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உரத்த சப்தம் போட்டுச் சிரித்தாள்...!

"ஏ, பைத்தியமே!" என்ற குரலைக் கேட்டுப் பூங்குழலி நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தான்.

"இளவரசர் ஏற்கெனவே கோபமாயிருக்கிறார்; பிரயாணம் தாமதப்படுகிறது என்று. உன்னால் வேறு தாமதம் வேண்டாம். சீக்கிரம் எழுந்து வா!" என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி சிரித்துக் கொண்டு எழுந்து ஓடிப் போய் யானையின் மீது ஏறிக் கொண்டாள். கத்தியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

காட்டு வழியில் மேலும் கொஞ்ச தூரம் சென்ற பிறகு எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிரயாணிகளின் வலது பக்கமிருந்த அடர்ந்த காட்டிலிருந்து 'விர்' என்ற சத்தத்துடன் ஓர் அம்பு பாய்ந்து வந்தது. இளவரசரைக் குறி பார்த்து அது எய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அம்பைவிட வேகமாக இளவரசர் குதிரையின் தலைக் கயிற்றை இழுத்துத் திருப்பினார். அம்பு அவருக்கு வெகு சமீபமாகச் சென்று அவருக்கு அப்பால் வந்து கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுடைய தலைப்பாகையில் பாய்ந்து அதைக் கொத்திக் கொண்டு சென்றது.

ஆழ்வார்க்கடியான் தலையைத் தடவிக் கொண்டு வியப்புடன் பார்த்தான்.

சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி திடுக்கிட்டுப் போய்விட்டார்.

எல்லாருமே திகைத்து நின்றார்கள்.

பூங்குழலியோ, அந்த அம்பு தன் பேரில் விழுந்து தன்னைக் கொன்றுவிடவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

சிறிது திகைப்பு நீங்கிய பிறகு சேநாதிபதி "இளவரசே! பார்த்தீர்களா? தங்களைப் பாதுகாப்பின்றித் தனியே அனுப்பியிருந்தால் எவ்வளவு பிசகான காரியமாயிருக்கும்?" என்று சொல்லிவிட்டுக் காவலுக்கு வந்த வீரர்களைக் காட்டுக்குள் புகுந்து தேடச் சொன்னார். அவர்கள் சிறிது நேரம் தேடிவிட்டுத் திரும்பி வந்து, "யாரும் அகப்படவில்லை" என்றார்கள்.

சேநாதிபதி மேலே பிரயாணத்தைப் பற்றி ஏற்பாடு செய்யத் தொடங்கினார். "இளவரசரை நடுவில் நிறுத்தி நாம் நாலுபுறமும் சூழ்ந்து

வர வேண்டும்'' என்று கூறி, வியூகம் வகுக்க ஆரம்பித்தார்.

அப்போது இளவரசர், "சேநாதிபதி! ஒரு வேண்டுகோள்!" என்றார்.

"இது என்ன வார்த்தை? கட்டளை யிடுங்கள்!" என்றார் சேநாதிபதி.

"நான் உயிரோடு தஞ்சை செல்ல விரும்புகிறேன். நான் குற்றமற்றவன் என்பதை என் தந்தையிடம் மெய்ப்பிக்க விரும்புகிறேன்..."

"தங்கள் தந்தை தங்களை ஒருநாளும் சந்தேகிக்க மாட்டார், இளவரசே!"

"தந்தை மட்டுமல்ல, மக்கள் எல்லாரும் ஒப்புக் கொள்ளும்படி நிரூபிக்க விரும்புகிறேன். அந்தக் காரியத்தை நிறைவேற்றிய பிறகு என் உயிரைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டேன். அதற்கு முன்னால் வழியிலேயே உயிர் துறக்க விரும்பவில்லை."

"ஐயா! தங்கள் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தால் அந்த க்ஷணமே இந்தக் கொடும்பாளூர் வாளை என் நெஞ்சிலே செலுத்திக் கொள்வேன்."

"அதில் ஒன்றும் பயனில்லை. சோழ நாடு மகத்தான நஷ்டம் அடையும்."

"தங்களை இழப்பதைக் காட்டிலும் பெரிய நஷ்டம் சோழ நாட்டுக்கு வேறு என்ன இருக்க முடியும்? தங்களுக்கு ஆபத்து வருவதற்குக் காரணமாயிருந்துவிட்டு அப்புறம் இந்தக் கொடும்பாளூர்க் கொடும்பாவி ஒருகணமும் உயிரை வைத்துக் கொண்டிருப்பேனா?"

"அப்படியானால் என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்ளுவது இன்னும் முக்கியமாகிறது."

"அதைக் காட்டிலும் முக்கியமானது இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை."

"அதற்கு எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"சொல்லுங்கள், ஐயா!"

"குதிரை மேல் பிரயாணம் செய்யும் வரையில் சற்று முன் வந்த அம்பைப் போல் வேறு அபாயங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும்."

"நடந்து போகலாம் என்று சொல்லுகிறீர்களா? அல்லது..."

"எனக்கு யானைகளின் பாஷை நன்றாய்த் தெரியும்; யானைகள் நான் சொன்னபடி கேட்கும் என்று தங்கள் அறிவீர்கள் அல்லவா?"

"ஆம், ஐயா! யானைப் பாகன் வேஷம் பூண்டு இந்த இலங்கைத் தீவில் பெரும் பகுதியைத் தாங்கள் சுற்றிப் பார்த்திருப்பதும் எனக்குத் தெரியும்."

"ஆகவே நான் சொல்கிறது என்னவென்றால், மறுபடியும் சிறிது நேரம் நான் யானைப் பாகன் ஆகிறேன். இப்போது யானையை நடத்துகிறவன் கொஞ்ச தூரம் என் குதிரை மேல் ஏறிக் கொண்டு வரட்டும்."

இதைக் கேட்ட சேநாதிபதி சிறிது மனத் தடுமாற்றமடைந்ததாகத் தோன்றியது. இளவரசருடைய யோசனைக்கு யாராவது ஆட்சேபம் சொல்ல மாட்டார்களா என்று ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தார். ஆனால் எல்லாரும் கம்மென்று இருந்தார்கள்.

"ஐயா! யானைப் பாகனுக்குக் குதிரை ஏறத் தெரியுமோ, என்னமோ?"

"தெரியாவிட்டால், நடந்து திரும்பிப் போகட்டும்."

"அந்தப் பெண் பெரிய சங்கோசியாயிருக்கிறாளே? அவள் தங்களுக்குச் சரிசமமாக யானை மீது உட்கார மாட்டேன் என்று சொன்னால்..."

"கீழே குதித்து நடந்து வரட்டும்."

"தங்கள் சித்தம், இளவரசே!"

இளவரசர் உடனே குதிரை மீதிருந்து குதித்தார். யானையின் அருகில் சென்றார். பூங்குழலியின் கரிய கண்கள் ஆர்வத்தினால் நீண்டு வியப்பினால் அகன்று அவரை நோக்கின. யானைப் பாகனை இறக்கி விட்டுத்தான் யானை மீது பாய்ந்து அதன் கழுத்தில் உட்கார்ந்து கொண்டார்.

தடைப்பட்ட பிரயாணம் மறுபடியும்

ஆரம்பமாகியது.

பூங்குழலி புளகாங்கிதம் அடைந்தாள். யானையின் முதுகின் மேலிருந்து மேகங்களின் மீது பாய்ந்தாள். வானவெளியில் உலாவினாள். சொர்க்கத்தை எட்டிப் பார்த்து அதன் விவரிக்க முடியாத இன்ப சுகத்தின் இயல்பு இதுவென்பதை ஒருவாறு உணர்ந்து அறிந்தாள்.

ஆகா! இதுவென்ன தேவகானமா? இவ்வளவு இன்பமாயிருக்கிறதே? இல்லை, இல்லை. தேவகானத்துக்கு இவ்வளவு இனிமை ஏது? இளவரசர் அல்லவா பேசுகிறார்?

"சமுத்திரகுமாரி! என்னுடன் இந்த யானை மீது தனியாக இருப்பது உனக்கு அருவருப்பாயிருக்கிறதா?"

"ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தினால் இந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது, பிரபு!"

"திடீரென்று இந்த யானைக்கு மதம் பிடித்து இது ஓட ஆரம்பித்தால் நீ பயப்படுவாயா?"

"தாங்கள் பக்கத்தில் இருக்கும்போது வானம் இடிந்து விழுந்தாலும் பயப்படமாட்டேன், ஐயா!"

"உன் படகை எங்கே விட்டு விட்டு வந்திருக்கிறாய், பூங்குழலி?"

"யானை இறவுத் துறைக்குச் சமீபத்தில், ஐயா!"

"இக்கரையிலா, அக்கரையிலா?"

"அக்கரையிலேதான் படகை நிறுத்தத் தனி இடம் கிடைத்தது. அங்கேயே படகை நிறுத்தி விட்டு வந்தேன்."

"யானை இறவுத் துறையை எப்படிக் கடந்து வந்தாய்?"

"நான் வரும்போது கடல் நீர் மிகவும் குறைவாயிருந்தது. ஆகையால் பெரும்பாலும் நடந்து வந்தேன். கொஞ்சம் நீந்தியும் வந்தேன்."

"இப்போது இந்த யானை கடலில் இறங்கிச் சென்றால் பயப்படுவாயா?"

"கடலிலே என்னைத் தள்ளிவிட்டாலும் கவலையில்லை; நான்தான் சமுத்திரகுமாரி ஆயிற்றே? தாங்கள்தானே பெயர் கொடுத்தீர்கள்?"

"உன் படகு இருக்குமிடம் சென்றதும் அதில் நாம் ஏறிக் கொள்வோம். நீதான் படகு தள்ளிக் கொண்டு வர வேண்டும். இரண்டு பேரையும் வைத்துத் தள்ள முடியும் அல்லவா?"

"பத்து வயது முதல் துடுப்புப் பிடித்த கரங்கள் இவை, பிரபு! அரண்மனைப் பெண்களைப் போல் மலரினும் மிருதுவான கரங்கள் அல்ல. தங்கள் சிநேகிதர் வந்தியத்தேவரை வைத்துத் தள்ளி வந்ததை அவர் சொல்லவில்லையா?"

"சொன்னார்! ஆனால் இன்று அதை விட வேகமாகத் தள்ள வேண்டும். தொண்டைமான் ஆற்றின் முகத்துவாரத்தில் கப்பல்கள் வந்து நிற்கும் இடத்துக்கு அதி சீக்கிரமாகப் போய்ச் சேர வேண்டும்."

"இளவரசே! அவ்வளவு கொடூரமான காரியத்தை என்னை ஏன் செய்யப் பணிக்கிறீர்கள்? தங்களைச் சிறையாகாமல் தப்புவிப்பதற்காக ஓடோடியும் வந்தேன். சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களைக் கொண்டு ஒப்புவிக்கும்படி பணிக்கிறீர்கள்? இந்த ஏழையின் பேரில் ஏன் இவ்வளவு கொடூரம்?"

"பூங்குழலி! என் தந்தை – சக்கரவர்த்தி – நோய்ப்பட்டிருப்பது உனக்குத் தெரியும், அல்லவா?"

"தெரியும், ஐயா! வானத்தில் சில நாளாக வால் நட்சத்திரம் தோன்றுவது பற்றி ஜனங்கள் பேசிக் கொள்ளுவதும் எனக்குத் தெரியும்."

"எந்த நிமிஷத்திலும் என் தந்தையின் வாணாள் முடிவுறக் கூடும் அல்லவா?"

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"அவர் ஒருவேளை இவ்வுலகை நீத்துச் செல்ல நேரிட்டால், அவருக்கு எதிராக நான் சதி செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற முயன்றேன் என்ற எண்ணத்துடன் அவர் போவது நல்லதா?"

"சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஒரு நாளும் அப்படி நம்ப மாட்டார். இது பழுவேட்டரையர்களின் சூழ்ச்சி!"

"அப்படிப்பட்ட பழுவேட்டரையர்களுக்குங்கூட நான் குற்றமற்றவன் என்

பதை நிரூபிக்க விரும்புகிறேன்..."

"எதற்காக, ஐயா?"

"உண்மையிலேயே எனக்கு இராஜ்யம் ஆளுவதில் ஆசையில்லை, பூங்குழலி!"

"வேறு எதில் தங்களுக்கு ஆசை?"

"படகில் ஏறி முடிவில்லாத கடலில் என்றென்றும் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசை! கடல்களுக்கு அப்பால் இந்த ஈழ நாட்டைப் போல் எத்தனையோ நாடுகள் இருப்பதாகக் கேள்வி. அந்த நாடுகளுக்கெல்லாம் போக வேண்டும் என்று ஆசை. அந்தந்த நாட்டு மக்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஆசை!"

"விந்தை! விந்தை!"

"எது விந்தை?"

"என் மனத்தில் குடி கொண்டுள்ள ஆசையே தங்கள் மனத்திலும் இருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுகிறேன். தாங்கள் அப்படிக் கடல் பிரயாணம் தொடங்கும்போது என்னையும் அழைத்துப் போவீர்களா?"

"முதலிலே, இப்போது நான் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுகிறேன். அதற்கு நீ உதவி செய்வாய் அல்லவா?"

"தங்கள் சித்தம்!"

"நீ உட்கார்ந்திருக்கும் பீடத்திலிருந்து இரண்டு பக்கமும் கயிறுகள் தொங்குகின்றன அல்லவா? அவற்றை எடுத்து உன்னைக் கெட்டியாகக் கட்டிக் கொள்."

"எதற்காக, இளவரசே!"

"யானை இப்போது மதங் கொண்டு ஓடப் போகிறது. ஜாக்கிரதை, பூங்குழலி!"

இவ்விதம் கூறிவிட்டு இளவரசர் யானையின் மத்தகத்தைக் கையினால் தடவிக் கொடுத்தவண்ணம் அதன் காதண்டை ஏதோ சொன்னார்.

யானையின் நடை வேகம் திடீரென்று அதிகமாயிற்று.

இளவரசர் யானையின் செவியண்டையில் குனிந்து மேலும் ஏதோ சொன்னார்.

அவ்வளவுதான்! நடை, ஓட்டமாயிற்று. துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஒரு தடவை பயங்கரமான பிளிறல் சப்தம் போட்டுவிட்டு ஓடத் தொடங்கியது. சூறாவளி சுழன்று அடிக்கும்போது காடுகளின் மரங்கள் படும்பாடு அந்த யானையின் வேகத்தினால் பட்டன. சடசடவென்று மரங்களும் மரக்கிளைகளும் சரிந்து விழுந்தன. பூமி அதிர்ந்தது. எட்டுத்திக்குகளும் நடுநடுங்கின. மரங்களின் மீதிருந்த பறவை இனங்கள் சிறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டும் பீதி கொண்ட குரலில் கூவிக் கொண்டும் பறந்தன. காட்டில் மறைந்து வாழ்ந்த மிருகங்கள் வெளிப்புறப்பட்டு நாலாபுறமும் விழுந்தடித்து ஓடின.

"ஐயையோ! யானைக்கு மதம் பிடித்து விட்டது போலிருக்கிறதே! இது என்ன விபரீதம்!" என்று சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி கூவினார்.

இவ்வளவு தூரம் இளவரசர் சொல்லியிருந்தும் பூங்குழலியின் உள்ளமும் திகில் அடைந்தது. அவள் முகத்தில் பயப்பிராந்தியின் அறிகுறி தோன்றியது.

பூங்குழலி ஒரு பெரிய, பயங்கரமான, பிரம்மாண்டமான கடல் சுழலில் அகப்பட்டுக் கொண்டாள். அதே சுழலில் அகப்பட்டுக் கொண்டு இளவரசரும் சுற்றிச் சுற்றி வந்தார். யானையும் அப்படியே சுழன்று சுழன்று வந்தது.

பூங்குழலி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

புயற்காற்றினால் தள்ளப்பட்டு ஓடும் கரிய மேகத்தைப் போல் யானை போய்க் கொண்டேயிருந்தது.

கடைசியில் யானைஇறவுத் துறையை அடைந்தது.

அங்கே இலங்கைத் தீவின் கீழ்ப்புறத்துக் கடலும் மேற்புறத்துக் கடலும் ஒன்றாய்ச் சேர்ந்தன. அந்த ஜலசந்தியின் மிகக் குறுகலான இடத்துக்குத்தான் யானை இறவு என்று பெயர். இலங்கைத் தீவின் வடபகுதியையும், மத்தியப் பகுதியையும் ஒன்று சேர்த்த அக்கடல் துறையில் யானை இறங்கியது. அனுமார் தூக்கி எறிந்த மலை கடலில் விழுந்தது போல விழுந்தது.

(தொடரும்)

அருப்புக்கோட்டைப் படிப்பினை!

அருப்புக்கோட்டைத் தேர்தல் முடிவு பல காங்கிரஸ்வாதிகளைத் திகைக்கச் செய்து விட்டது. ராஜாஜியின் மனத்தையும் அது கலக்கி விட்டது. சட்டசபையில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வருவதற்குக் காரணமாயிற்று.

பொதுத் தேர்தலின் படிப்பினைகளை நன்கு உணர்ந்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளாதபடியினால்தான், அருப்புக்கோட்டையில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. ஆகையால் அருப்புக்கோட்டை முடிவின் காரணங்களையாவது நன்கு ஆராய்ந்து, அதன் படிப்பினைகளைக் காங்கிரஸ்வாதிகள் நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

அருப்புக்கோட்டைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்விக்குக் காரணம் என்ன?

“வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செயல்.”

என்ற வள்ளுவர் வாக்கை மேற்படி தேர்தலில் காங்கிரஸ் தலைவர்கள் பின்பற்றாததுதான் காரணம்.

இந்தத் தொகுதியில் சென்ற பதினைந்து வருஷங்களாக ஸ்ரீ முத்துராம லிங்கத்தேவர், சிறையிலிருந்த காலத்தைத் தவிர, மற்றக் காலமெல்லாம் இடைவிடாமல் வேலை செய்து வந்திருக்கிறார். இவர் ஏற்கெனவே காங்கிரஸ்வாதியாயிருந்தவர். பரம்பரைக் குடும்ப கௌரவத்தினாலும் தமது சொந்த ஒழுக்கத்தினாலும் அந்தப் பகுதி மக்களின் மரியாதையைப் பெற்றவர். முதுகுளத்தூர் தாலூகாவில் பலர் இன்னமும் நேதாஜி போஸ் உயிரோடிருப்பதாகவும் அவர் முதுகுளத்தூருக்கு வந்து 'தேவர் மக'னுடன் பேசிவிட்டுப் போவதாகவும் நம்புகிறார்கள். அப்படிப்பட்ட தொகுதியில், சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் சென்னைச் சட்டசபைக்கும் இந்தியப் பார்லிமெண்டுக்கும் நின்று இரண்டிலும் வெற்றி பெற்றார். பார்லிமெண்டு பதவியை ராஜினாமா செய்து, அதற்கு இன்னொருவரை அபேட்சகராக நிறுத்தினார். தமது பூரண செல்வாக்கையும் உபயோகித்து மீண்டும் வேலை செய்து வந்தார்.

இப்படிப்பட்டவரை எதிர்ப்பதற்குக் காங்கிரஸின் சார்பாக அபேட்சகரை நிறுத்துவதென்றால், அது போகிற போக்கில் அலட்சியமாகச் செய்து விடக் கூடிய காரியமன்று.

முதலில், ராட்சதனுக்குத் தகுந்த போட்சகனாகச் சரியான தகுதி வாய்ந்த, உழைப்பாளியான அபேட்சகரை நிறுத்த வேண்டும்.

“காங்கிரஸின் பெயரால் யாரை வேணுமானாலும் நிறுத்தி ஜயிக்கலாம்” என்கிற காலம் மலையேறி விட்டது என்பதை இரண்டு வருஷத்துக்கு முன்னாலேயே பலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சென்ற பொதுத் தேர்தலில் அது வெட்ட வெளிச்சமாகி விட்டது.


அப்படியிருக்கும்போது, மேற்படி தொகுதியில் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரோடு போட்டியிடுவதற்கு உலகமறியாத ஒரு இளம் பெண்ணை நிறுத்தியது எப்படிப் பொருத்தமாகும்? தேர்தல் தினம் நெருங்க நெருங்க, இந்தப் பெண்மணி திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாமல் தவிப்பவர் போலானார்.

சொந்த பலத்தினால் வேலை செய்ய முடியாத அபேட்சகரை நிறுத்தியவர்கள், அதற்கு ஈடு செய்யும்படியாகத் தாங்களாவது முனைந்து வேலை செய்திருக்க வேண்டும் அல்லவா? ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் பதினைந்து வருஷங்களாகப் பலப்படுத்தி வைத்திருக்கும் கோட்டையைப் பிடிப்பதற்குத் தேர்தலுக்குப் பதினைந்து நாளைக்கு முன்பு வேலை ஆரம்பித்தார்கள்.

அதையாவது சரியாகச் செய்தார்களா?

மூன்றேகால் லட்சம் வோட்டர்களிடம் போய்த் தகவலைச் சொல்லுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டதா?

இந்த மூன்றேகால் லட்சம் வோட்டர்களில் மூன்று லட்சம் பேர் படிக்கத் தெரியாதவர்கள். ஆகையால் இவர்கள் பத்திரிகையைப் படித்து விஷயம் தெரிந்து கொள்வதற்கில்லை.



* முத்துராமலிங்கத் தேவர்

பார்லிமெண்டுக்கு மறு தேர்தல் நடக்கும் விஷயமே ஒரு லட்சம் பேருக்குத் தெரியாது. இன்னும் ஒரு லட்சம் பேருக்குத் தேர்தல் நடக்கும் விஷயம் தெரியும்; ஆனால் அதன் முக்கியத்துவம் தெரியாது.

தேர்தலைப் பற்றித் தெரிந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரிடமிருந்தும் அவருடைய சகாக்களிடமிருந்துந்தான் தெரிந்து கொண்டனர். அவர்கள் சொற்படியே வோட்டுப் போட்டனர்.

முதுகுளத்தூர் தாலூகாவுக்குக் காங்கிரஸின் சார்பாகத் தேர்தல் பிரசாரம் செய்யச் சிலர் போனார்கள். தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கும் முன்பு போனார்கள். முன்னும் பின்னும் போலீஸ் ஜீப்புகளின் துணையுடன் போனார்கள். மறவர் சமூகத்தினர் போலீஸாரிடம் எப்போதுமே விசுவாசம் கொண்டவர்கள்! போலீஸ் துயையுடன் வோட்டுக் கேட்க வருகிறவர்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அப்படி வருகிறவர்களுக்கு வோட்டுக் கொடுத்து விடுவார்களா?

வோட்டுக் கேட்கப் போகிறவர்கள் அடிதடி எதுவானாலும் அஹிம்சா முறையில் சமாளிப்பதற்குத் தயாராகப் போக வேண்டும். போலீஸ் துணையுடன் போனால் நிச்சயம் வோட்டுக் கிடைக்காது என்று நம்பலாம்.

அபேட்சகர் விஷயம் எப்படியிருந்தாலும், அருப்புக்கோட்டை முதுகுளத்தூர் வோட்டர்களின் மனோபாவம் எப்படியிருந்தாலும், கோவில்பட்டி தாலூகாவில் முழு மூச்சுடன் சரிவர வேலை செய்திருந்தால் காங்கிரஸ் ஜயித்திருக்கலாம்.

கோவில்பட்டி தாலூகா சென்ற பொதுத் தேர்தலில் சென்னைச் சட்டசபைக்குக் காங்கிரஸ் அபேட்சகரை அனுப்பியது. அந்தத் தாலூகாவில் மொத்தம் 74111 வோட்டுக்கள் உண்டு.

ஆனால் இருபதினாயிரம் வோட்டுக்கள்தான் பதிவாயின. இவற்றில் 13,000 காங்கிரஸ் அபேட்சகருக்குப் போடப்பட்டது என்பது ஒருவாறு திருநெல்வேலி ஜில்லாவின் கௌரவத்தைக் காப்பாற்றுகிறது. ஆனால் வெற்றிக்கு அது போதவில்லை.

அருப்புக்கோட்டைத் தேர்தலில் பிர

அமரர் கல்கி

சாரம் செய்வதற்காக மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ டி.டி. கிருஷ்ணமாச்சாரி, சென்னை மந்திரிகள் ஸ்ரீ சி. சுப்பிரமணியம், டாக்டர் யு. கிருஷ்ணராவ், மாஜி மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் ஆகியவர்கள் சென்றிருந்தார்கள். இவர்கள் போனது வியர்த்தம், வீண் பணச் செலவு, அருமையான காலச் செலவு.

அதற்குப் பதிலாக, திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த உற்சாகமுள்ள இருநூறு வாலிபத் தொண்டர்களைக் கோவில்பட்டி தாலூகாவைச் சேர்ந்த கிராமங்களுக்கு அனுப்பி இரண்டு வாரம் வேலை செய்யச் சொல்லியிருந்தால் இன்னும் இருபதினாயிரம் வோட்டுக்கள் காங்கிரஸுக்கு விழுந்திருக்கும்.

கோவில்பட்டியிலும், எட்டயபுரம் முதலிய சில பெரிய கிராமங்களிலுந்தான் வோட்டுக்கள் பெருவாரியாகப் பதிவாயின. கிராமாந்தரங்களில் வோட்டுப் பெட்டிகள் காலியாக எடுத்துக் கொண்டு போகப்பட்டன. காரணம், கோவில்பட்டி கிராமவாசிகள் பலருக்குத் தேர்தல் நடக்கும் விஷயமே தெரியாது. தெரிந்தவர்களும் அதன் முக்கியத்தை உணர்ந்திருக்கவில்லை.

வருங்காலத்துக்குப் படிப்பினையாக இருக்க வேண்டும் என்றுதான் அருப்புக்கோட்டையைப் பற்றி இவ்வளவு தூரம் எழுதினோம்.

பொதுத் தேர்தல் எந்த நிமிஷத்திலும் ஏற்படலாம் என்பதை மாகாண காங்கிரஸ் நிர்வாகிகளும் நாடெங்குமுள்ள காங்கிரஸ் வாதிகளும் நினைவு கூர வேண்டும்.

மாகாணமெங்கும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளும் தாலூகா காங்கிரஸ் கமிட்டிகளும் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

எந்த ஜில்லா கமிட்டி அல்லது தாலூகா கமிட்டி இதுவரை உணவு கண்ட்ரோல் நீக்கம் சம்பந்தமாகத் தீர்மானம் போட்டுப் பொதுக் கூட்டம் நடத்தி, ஜனங்களுக்கு அதைப் பற்றி எடுத்துச் சொல்லவில்லையோ, அந்தக் கமிட்டி உயிரில்லாத செத்த கமிட்டி என்று வைத்துக் கொள்ளலாம்.

மதுரையில் ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்களின் தலைமையில் ஏற்பட்டிருக்கும் புதிய நகர காங்கிரஸ் கமிட்டி எப்படி விழிப்புடனிருந்து வேலை செய்கிறது என்று பாருங்கள். அத்துடன் மற்றக் கமிட்டிகளையும் ஒப்பிடுங்கள்.

காங்கிரஸ் கமிட்டிகள் புத்துயிர் பெறுவதைத் தவிர, ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தபட்சம் இருநூறு தொண்டர்கள் நிரந்தரமான முறையில் பிரசார வேலை செய்ய வேண்டும்.

மாகாணம் முழுதும் பிரயாணம் செய்து அம்மாதிரி தொண்டு செய்வதற்குக் குறைந்தது ஐம்பது சொற்பொழிவாளரைத் தயார் செய்ய வேண்டும்.

"பொய்யுடையொருவன் சொல்வன் மையினால்
மெய்போலும்மே மெய் போலும்மே"

என்றும்,

"மெய்யுடையொருவன் சொல் மாட்டாமையால்
பொய் போலும்மே! பொய் போலும்மே!"

என்றும் பழந் தமிழ் முது மொழிகள் வழங்குவதை நினைவுகூர வேண்டும்.

ராஜாஜி மந்திரி சபை, எவ்வளவுதான் நன்மைகளைச் செய்யட்டுமே? காங்கிரஸ் எதிரிகள் கிராமங்களுக்குப் போய் "நன்மைகள் எல்லாம் எங்களால் விளைந்தது" என்று சொல்லலாம்; அதைக் கிராமவாசிகள் நம்பும்படியும் செய்யலாம்.

ஜனங்களுக்குப் பிடிக்காத காரியம் எதற்கும் சர்க்கார் மீது குற்றம் சுமத்தலாம்.

ஆகையால் ராஜாஜியும் ராஜாஜி மந்திரி சபையும் எவ்வளவு நேர்மையாகவும் திறமையாகவும் இராஜ்ய நிர்வாகம் செய்தாலும் போதாது. அதைப் பற்றியெல்லாம் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஒரு காங்கிரஸ் முன்னணிப்படை வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

அருப்புக்கோட்டைத் தேர்தலிலிருந்து ஏற்பட்ட இந்தப் படிப்பினைகள் வருங்காலத்துக்காவது உபயோகப்படும் என்று நம்புகிறோம். ●

கல்கி, ஜூலை 13, 1952



• மேடையில் பேச்சாளர்கள்

கல்கத்தாவில் கல்கி நூற்றாண்டு விழா!

“தேசியம் என்பது அரசியல் மட்டும் அன்று— அதில் மொழி, இலக்கியம், கலை, இசை, பண்பாடு – இவையெல்லாம் அடங்கும். இவை அனைத்தையும் தமது எழுத்துகளில் உள்ளடக்கி இவற்றின் ஏற்றங்களை வெளிப்படுத்தினார் கல்கி. அவர் எழுத்தும் ஏற்றம் பெற்றது...”

– பேசியவர் க. கிருஷ்ணமூர்த்தி. நெடுநாளைய கல்கத்தா தமிழர். அங்கு பாரதி தமிழ்ச் சங்கம் சமீபத்தில் நடத்திய முப்பெரும் விழாவில் உரையாற்றினார் க. கிருஷ்ணமூர்த்தி. அமரர் கல்கி நூற்றாண்டு விழாவுடன் சங்கத்தின் நிறுவனர் டாக்டர் கே.எஸ். கிருஷ்ணனின் நூற்றாண்டு விழாவும் சேர்ந்து கொண்டது. சங்கத்துக்குப் பெயர் கொடுத்த மகாகவியோ இவ்விரு நூற்றாண்டு விழா நாயகர்களுக்கும் ஆதர்சமானவர். திரிவேணி சங்கமமாக ஒரு முப்பெரும் விழா மலர, சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார் திருச்சியிலிருந்து வந்திருந்த இரா. மாது (பேராசிரியர் ராதாகிருஷ்ணனின் புதல்வர்). ரவீந்திர சரோவர் அரங்கிலும் சங்கத்தின் அரங்கிலுமாக மூன்று தினங்கள் விழா நடந்தது.

கே.எஸ். கிருஷ்ணனின் பணிகள் நினைவு கூரப்பட்டன. அறிவியல், இலக்கிய உலகங்களுக்கு அவர் ஆற்றிய இரட்டைத் தொண்டின் சிறப்புகளை விளக்கினார் மாது. பின்னர், ‘பழந்தமிழ் இலக்கியங்களில் இயற்பியல்’ என்ற தலைப்பில் அவர் உரையாற்ற, கல்கத்தா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பதிப்பித்த நூல்கள் வெளியிடப்பட்டன. இந்திரா ரங்கநாதன் குழுவினர் தமிழிசை நிகழ்ச்சி வழங்கினர்.

மறுநாள் பாரதி ஜெயந்தி, தொடர்ந்து ‘பாரதி நாட்டிய’ நிகழ்ச்சி!

இறுதி நாள் (டிசம்பர் 27) நடந்ததே கல்கி நூற்றாண்டு விழா. நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர் ராதாகிருஷ்ணன். துவக்கி வைத்தவர் ஜி. பாலசந்திரன் (ஐ.ஏ.எஸ்).

பேச்சாளர்கள் அமரர் கல்கியின் பன்முகச் சிறப்புகளைப் பட்டியலிட்டு மகிழ்ந்தார்கள். சரித்திர நாவலாசிரியர் என்ற தகுதியில் வால்டர் ஸ்காட்டுடன் ஒப்பிட்டு வியந்தார் பாலசந்திரன். பெண் பாத்திரங்கள் படைப்பு மூலம் பெண்மைக்கு அவர் அளித்த ஏற்றத்தைப் பாராட்டினார். மென்மையான நகைச்சுவையுடன் கடுமையான அங்கதமும் வழங்கக்கூடிய அவருடைய வல்லமையைப் போற்றினார் மாது.

எழுத்து மூலம் தேசப் பற்று வளர்த்தவர்களுள் கல்கி முன்னணியில் இருப்பதைச் சுட்டிக் காட்டினார் க. கிருஷ்ணமூர்த்தி. ‘நாட்டுப் பணி புரிந்த தியாகிகள் குறித்து அவர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டால் தமிழகத் தியாகிகள் ஆல்பம் ஒன்று கிடைத்து விடும்...’ என்றார்.

கல்கியின் மிகச் சிறந்த பணியென அன்று குறிப்பிடப்பட்டது எட்டையபுரத்தில் அவர் எழுப்பிய பாரதி மணி மண்டபம்தான். ‘அது பாரதிக்கு மட்டுமல்ல; அமரர் கல்கிக்கும் கூட ஒரு நினைவுச் சின்னம்’ என்று வங்கத் தமிழர்களின் சார்பாக க. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டது பொருத்தமான முத்தாய்ப்பு. ●


— ரோகிணி

சென்னைக்கே வந்த சீன முத்துக்கள்!

சீன முத்துக்கள்தான் ஹைதராபாத் வந்த பிறகு, ஹைதராபாத் முத்துக்களாகப் புகழ் பெறுகின்றன.

முத்துக்களைப் பாதுகாக்க சில டிப்ஸ்:

- முத்து மாலைகளைக் கழற்றி வீட்டில் வைக்கும்போது, மென்மையான பருத்தித் துணிகளில்தான் சுற்றி வைக்க வேண்டும்.
- வண்ணத் துணிகளிலோ, வண்ண பேப்பர்களிலோ சுற்றி வைத்தால் முத்துக்கள் அதன் இயற்கையான நிறத்தை இழந்து விடும்.
- மருந்து பாட்டில்கள் போன்ற திரவப் பொருள்களை வைக்கும் அலமாரிகளில் முத்துக்களை வைக்காதீர்கள்.



- பிசுபிசுப்புத் தன்மை கொண்ட இடங்களில் முத்துக்களை வைக்கக் கூடாது. உலர்ந்த இடங்களில்தான் வைக்க வேண்டும்.
- முத்துக்களோடு மற்ற தங்க நகைகளையும் ஒன்றாகச் சேர்த்து வைக்காதீர்கள்.
- நீங்கள் பர்ஃப்யூம் உபயோகிப்பவராக இருந்தால் முத்துமாலைகளை அணிவதற்கு முன்பே பர்ஃப்யூமை போட்டுக் கொண்டு விடுங்கள். முத்துக்களின் மேல் பர்ஃப்யூம் படுவது முத்துக்களுக்கு நல்லதல்ல.
- முத்துக்களைக் கோப்பதற்கு பட்டு நூல்களை மட்டும்தான் உபயோகிக்க வேண்டும்!

எல்லாம் சரி, இந்தக் காலத்தில் ஒரிஜினல் பொருள்களைக் கண்டு பிடித்து வாங்குவதே பெரும் பாடாக இருக்கும்போது, ஒரிஜினல் முத்துக்களை எங்கே போய் வாங்குவது என்கிறீர்களா?

''அதற்குத்தானே நாங்கள் இருக்கிறோம்!'' என்கிறார் சென்னை தி. நகரிலுள்ள 'நாராயணா பேர்ல்ஸ், ஜெம்ஸ் அண்ட் ஜுவெல்ஸ்'ஸின் உரிமையாளர் **கே.வி. நாராயணா.**

''என் அப்பா, தாத்தா, கொள்ளுத் தாத்தா என்று எங்கள் பரம்பரையே முத்து வியாபாரம்தான் செய்தார்கள். அவர்களெல்லாம் ஹைதராபாதில் செய்தார்கள். சென்னை வாசிகளும் தமிழக மக்களும் ஒரிஜினல் முத்துக்கள் வாங்க வேண்டுமானால் ஹைதராபாதுக்குத்தான் வர வேண்டுமா? சென்னையிலேயே வாங்கும்படி செய்யலாமே என்று நினைத்தேன். அதன் விளைவாகத்தான் கடந்த ஏழாண்டு காலமாகச் செய்து கொண்டிருக்கிறேன்!'' என்கிறார்.

அது சரி, கடலே இல்லாத ஹைதராபாத் எப்படி முத்துக்களுக்குப் பிரபலம் ஆனது?

''ஹைதராபாத் முத்துக்கள் என்று மக்கள் மத்தியில் பிரபலம் என்றாலும், ஹைதராபாத் முத்து வியாபாரிகள் முத்துக்களைத் தருவிப்பது சீனாவிலிருந்துதான்! ஹைதராபாத் அதிக அளவில் முத்துச் சந்தை நடக்கிற இடம். அதனால்தான் அந்தப் பெயர்!

''மேலும் சீனாவிலிருந்து வருகிற முத்துக்கள், சிப்பிகளிலிருந்து எடுக்கப்பட்டவுடனே, அப்படியே ஹைதராபாதுக்கு வந்துவிடும். அங்குள்ள எங்களைப் போன்ற

தேர்ந்த முத்து வியாபாரிகள்தான், அவ
றைத் தர வாரியாகவும் சைஸ் வாரியாகவும்
பிரித்து, முத்து மாலைகளையும் முத்துக்கள்
பதிக்கப்பட்ட நகைகளையும் செய்து மக்
களைக் கவருகிறார்கள். என் பரம்பரை
யினர் ஹைதராபாதில் செய்ததைத்தான்
நான் இப்போது சென்னையில் செய்து
கொண்டிருக்கிறேன்!'' என்கிறார் கேவி
நாராயணா.

''நீங்கள் முத்து வியாபாரி. அதனால் ஒரி
ஜினல் முத்துக்களைப் பார்த்தவுடனேயே
அடையாளம் கண்டு கொண்டு விடுவீர்கள்
எங்களைப் போன்ற வாடிக்கையாளர்கள்.
உங்களைப் போன்ற வியாபாரிகள் சொல்
வதைத்தானே நம்ப வேண்டியிருக்கிறது?''

''உண்மைதான். அதனால்தான் என்
வாடிக்கையாளர்களிடம், 'என் கடையில்
வாங்கும் முத்துக்களை ஒரு மணி நேரம் தண்
ணீரில் போட்டுக் கொதிக்க விடுங்கள்.
ஒன்றுமே ஆகாது. காரணம் நாங்கள் விற்பது
ஒரிஜினல். டூப்ளிகேட்டாக இருந்தால் அவ்
வளவுதான்' என்று நானே உத்தரவாதம்
கொடுக்கிறேன்!'' என்கிறார் நாராயணா.

''இப்போதெல்லாம் ராசிகளைப் பார்த்து
அதற்குத் தகுந்த மாதிரி பவளம், மரகதம்
போன்ற கற்களை அணிபவர்களின் எண்
ணிக்கை அதிகமாகி விட்டதே?''

''அதனால்தான் எங்கள் கடையிலேயே
ஜோதிடர் ஒருவரையும் வைத்திருக்கிறோம்.
உங்கள் பிறந்த தேதி, நேரம் ஆகியவற்றைச்
சொன்னாலே போதும் உடனடியாக உங்கள்
ராசிக்கு எப்படிப்பட்ட கற்களை அணிய
வேண்டும் என்பதைச் சொல்லி விடுவார்
அவர். மிகக் குறைந்த கட்டணம்தான்.
மேலும் எங்கள் வாடிக்கையாளர்களின்
முத்து மாலைகள் அறுந்து போகிறபோது,
இலவசமாகவே கோத்தும் தருகிறோம்.





வாடிக்கையாளர்களின் விருப்பத்துக்கேற்ற
படியான நகைகளையும் நாங்கள் டிசைன்
பண்ணிச் செய்து தருகிறோம். அவர்களிட
மிருக்கும் பழைய முத்துக்கள், பவளம்
போன்றவற்றைக் கொடுத்து நகைகள் செய்து
தரச் சொன்னாலும் செய்து தருகிறோம்!''
என்று சொல்லும் நாராயணாவிடம்,
''இன்றைய இளைய தலைமுறையினர் மத்தி
யில் முத்து நகைகளுக்கான வரவேற்பு
எப்படியிருக்கிறது?'' என்ற கேட்டால் –

''தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளியா
லான '**ரோஜாப்பூ பவளம் & ஜேட்** இலை
கள் கொண்ட நெக்லஸுக்கு' ஏகப்பட்ட
டிமாண்ட்!

''வெளியூர்களிலிருந்து மட்டுமல்ல; வெளி
நாடுகளிலிருந்து வருபவர்கள் கூட எங்கள்
கடைக்கு வந்து வாங்கிச் செல்கிறார்கள்.
'இனி ஒரிஜினல் முத்துக்களுக்கு ஹைதரா
பாத் செல்ல வேண்டியதில்லை; உங்கள்
கடைக்கு வந்தாலே போதும்!' என்று அவர்
கள் சந்தோஷமாகச் சொல்கிறபோது, எனக்
கும் வியாபாரம் என்கிற நிலையைக் கடந்து,
சேவை செய்கிற உணர்வே ஏற்படு
கிறது!''என்கிறார் கேவி. நாராயணா.

விலை விவரம் எப்படி?

''நூறு ரூபாயிலிருந்து இரண்டாயிரம்
ரூபாய் வரைக்குமான தரத்துக்குத் தக்க
படியான ஒரிஜினல் முத்துமாலைகள் எங்க
ளிடம் கிடைக்கும்!'' என்கிறார்.

காணாமல் போனவர் பற்றிய

காசை எண்ணிக் கொடுத்துவிட்டு அரங்கத்தின் வாசலில் அவர் ஆட்டோவிலிருந்து இறங்கும்போது, மிதந்து கடந்த காரில் அமைச்சர் இருந்தார். உடனே, காத்திருந்த கனவான்கள் பரபரப்படைந்து விரைந்து வந்தார்கள். காற்றில் படபடத்துச் சுருளப் பார்த்த பேனரில், நூற்றாண்டு விழாக் காணும் மேதை, நீல எழுத்துகளில் பாதி தெரிந்தார். அமைச்சருக்கு ஒரு நிமிடம் முன்னதாக வந்திருந்தால் தாம் கவனிக்கப்பட்டிருப்போம் என்று நினைத்தபடி அவர் படியேறினார். நுழைவாயில் அருகே பன்னீர் தெளித்து வரவேற்ற நீலப் பட்டுப் புடைவைப் பெண்ணின் பார்வை கூடத் தன்னைத் தாண்டி எங்கோ அலை பாய்ந்தது சங்கடமாக இருந்தது. முன்னொரு சமயம் தனக்காக இப்படிக் காத்திருந்த கூட்டம் நினைவுக்கு வந்தது. முகங்கள் ஞாபகம் இல்லை. கூட்டம்தான். எப்போதும் கூடுகிற கூட்டம். நின்று, ஒருதரமும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. புறக்கணித்து நடந்த தருணங்கள் அசந்தர்ப்பமாக நினைவில் நகர, அவசரமாகத் தலை கவிழ்த்து, விரைந்து உள்ளே சென்று அமர்ந்தார்.

ஐம்பத்தெட்டில் ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள். மூச்சிறைப்போ, மூட்டு வலியோ வரும்போது ஓய்வுபெறும் விளையாட்டு வீரர்கள். முகச் சுருக்கம் ஒப்பனையை மீறி வெளியே தெரியும்போது ஓய்வு தரப்படும் நடிகர்கள் மற்றும் நடிகைகள். ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிற காலம். எலக்ட்ரானிக் சின்தஸைஸருடன் யார் யாரோ உள்ளே நுழைந்தபோது, தனக்கும் தன் பழைய ஆர்மோனியப் பெட்டிக்கும் கட்டாய ஓய்வு தந்து விட்ட திரை இசை உலகம் அவரளவில் ஒரு நம்பிக்கை துரோகி. ஒதுக்கி ஓரமாக அமரச் செய்து விட்ட பிறகு, தீபாவளிக்கு இனாம் கேட்க வருகிற கேரியர் தூக்கும் பையன்கள் கூட, கவனமாக அவர் வசிக்கும் தெருவைத் தவிர்த்து விட்டு, அடுத்த வீதி வழியே சுற்றிக் கொண்டு ஸ்டுடியோக்களுக்குப் போனார்கள்.

புகழ், புளிக்காத விஷயம். வெற்றி ஒரு வசீகரம் மிக்க விஷக்கன்னி. தன் ஆளுமையின் முழுச் சக்தியையும் பிரயோகித்து, வெற்றி வீரனாக வலம் வந்த காலத்தில் உலகமும் அதன் மக்களும் வெகு தூரத்தில் கடந்து மறையும் ரயில் புள்ளி போலவே அவருக்குத் தெரிந்தன.

அப்போதெல்லாம் அவர் வாழ்க்கை நான்கு சுவர்களுக்குள்ளே இரவும் பகலுமற்று, ஸ்வரங்களால் நெய்யப்பட்டிருந்தது. சட்டைகளின் அளவுக்கேற்ப உடல்களைத் தயார் செய்வதில் விற்பன்னராக இருந்தார். அவர் பணியாற்றும் அறைக்கு வெளியே தயாரிப்பாளர்கள் எப்போதும் காத்திருப்பார்கள். இயக்குநர்கள் கைகட்டி நின்றிருப்பார்கள். விநாடி நேரம் திறந்து மூடும் கதவிடுக்கில் புலப்படும் தரிசனத்துக்காக அவர் மனைவி வந்திருப்பாள். முன்னதாக அவர் வீடு சென்று படுத்துறங்கி சில தினங்கள் ஆகியிருக்கும்.

ஜவஹர்லால் நேரு செத்துப் போனார். பல தேசங்கள் போரிட்டுக் கொண்டன. ராஜ்கபூர் காலமானார். இந்திரா ஆட்சியைப் பிடித்தார். எமர்ஜென்ஸி வந்தது. கம்ப்யூட்டர் வந்தது. வித்வான்கள் அதனை சேவித்தார்கள். வெண்டைக்காய் விலை ஏறியது. பூமி பல முறை சூரியனைச் சுற்றி வந்தது. அவர் அறையை விட்டு வெளியே அனுப்பப்பட்டபோது, உலகம் மாறுவேடம் பூண்டிருந்தது. இருபது ஆண்டுகள் உறங்கி எழுந்த ரிப்வேன் விங்கின் போல மலங்க மலங்க விழித்தார். அவர் மனைவி மட்டும் அப்படியே இருந்தாள். அது ஒன்றுதான் அவருக்கு ஆசுவாசம் தரத்தக்கதாக இருந்தது.

யார் யாரோ, யார் யாரையோ வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். எல்லாமே புதிய

அறிவிப்பு

முகங்களாயிருந்தன. ஆடை ஆபரணங்கள், புன்னகை, கைகுலுக்கும் விதம், பேச்சுத் தொனி - எதனைக் கொண்டும் யார் எந்தத் துறையில் இருக்கிறார் என்று அனுமானம் செய்ய முடியவில்லை. நூற்றாண்டு விழாக் காணும் இசை மேதை, வாழ்வில் சட்டை கூட அணிந்தவரல்லர். வெறும் வேட்டி மட்டும் தான். மேலே ஒரு மெல்லிய அங்கவஸ்திரம் அவரது ஒடுங்கிய மார்பை மூடியிருக்கும். கிண்ணென்று விரைத்து நிற்கும் கட்டுக் குடுமி ஒன்றே அவர் அனுஷ்டித்த ஆசாரத்தைச் சொல்லும். நெற்றியில் தனித் தனியே துலங்கும் மூன்று பட்டைகள் வசீகரித்து, யாரையும் கைகூப்பச் செய்யும். மேடையில் அமர்ந்து வாசிக்க ஆரம்பித்தால், நெஞ்சம் இளகிக் கண்கள் சொரியும். அவர் விரல்கள் படுவதனாலேயே வீணையில் தெய்வீகம் கவியும்.

திரை இசை அமைப்பாளராக மாறாமல் இருந்திருந்தால், தானும் ஒரு வைணிகனாகத்தான் அடையாளம் காணப்பட்டிருப்போம் என்பது நினைவுக்கு வந்தது. துவையல் சாதத்துக்குப் பிரச்னையில்லாத கோயில் கச்சேரிகள் கிடைத்திருக்கும். ஆனால், கோயில் கட்டத் தயாரா

பா. ராகவன்



யிருந்த வெகுஜன ரசிகர்கள் அகப்பட்டிருக்க மாட்டார்கள். செய்து கொள்ள வேண்டியிருந்த சமரசங்கள் அப்போது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. இசையில் தாம் செய்த கலப்படங்கள் மீதான விமர்சனங்கள் செவியில் விழவில்லை. தயாரிக்கப்பட்ட வரிகளுக்கு மலினமான மெட்டுகள் சேர்த்தபோது, கிடைக்கப் போகிற கைதட்டல் – விஸில்களுக்கு மட்டுமே காத்திருந்த தருணங்கள் நினைவுக்கு வந்தன. அவற்றை மறந்து விட மிகவும் விரும்பினார். விழாவில் கவனத்தைத் திருப்பியபோது, மேடையில் ஒரு பெண் இறைவணக்கம் பாடிக் கொண்டிருந்தாள்.

காலை செய்தித்தாள் பார்த்துத்தான் அவருக்கு விழா விவரம் தெரிந்திருந்தது. வீணைக்கு ஒரு விழா. நூற்றாண்டு கண்டவருக்கு, நேற்று ஆண்டவர்களும் இன்று ஆள்பவர்களும் நடத்துகிற நினைவு அஞ்சலி. நூற்றுக்கணக்கானவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறார்கள். அரங்கம் நிரம்பித் ததும்புகிறது. தனக்கொரு அழைப்பிதழ் அனுப்பலாம் என்று ஏன் யாருக்கும் தோன்றவில்லை?

தாம் வீணை பயின்று, அரங்கேறிய ஆரம்பக் கச்சேரி ஒன்றில் அந்த மேதை பெருந்தன்மையுடன் கலந்து கொண்டு ஆசீர்வதித்த காட்சி அவர் மனத்தில் ஒரு விநாடி மின்னி மறைந்தது. பிறகு திரை இசையில் நுழைந்த பின்னர், சுத்தமான சங்கீதத்துடனான தொடர்பு முற்றிலுமாக அறுந்து விட்டது. இசையோ, வேறெதுவோ – வெறும் பிளாஸ்டிக் வடிவங்களுக்கு மட்டுமே சந்தையில் இடம் என்றான பிறகு செய்யக்கூடியதுதான் என்ன? இந்தப் பிரக்ஞையே கூட ஓய்வு பெற்றபின் தற்செயலாக உதித்த ஒன்றுதான் என்பதை நினைக்க அவருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. இந்த விழாவுக்கு வருவதையே கூட ஒரு பாபவிமோசனமாகத்தான் கருதினார். யாரும் அழைப்பிதழ் அனுப்பாவிட்டாலும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றே ஆக வேண்டும் என்று தோன்றியதும் அதனால்தான்.

ஆனால், இத்தனை துப்புரவாகத் தன்னைப் புறக்கணிப்பார்கள் என்று அவர் நினைத்திருக்கவில்லை. வந்து பத்து நிமிடங்களுக்கு மேலாகி விட்டன. ஒருத்தரேனும் வந்து வரவேற்கவில்லை. கடந்து போகிறவர்களும் வருகிறவர்களும் நின்று ஒரு மரியாதைக்கேனும் கைகூப்பவில்லை. முகத்தை நேருக்கு நேர் பார்க்கிறவர்கள் கூட, புன்னகை புரிந்து அங்கீகரிக்கவில்லை.

சட்டென்று தாக்கிய துக்கத்தில் அவர் நிலைகுலைந்து போனார். திசை தப்பித் தீவில் ஒதுங்கியவன் போலிருந்தது. இருபது வருடங்கள் முன்பு, தன் கால் பட்ட மண்ணைத் தொட்டுக் கும்பிட்டுச் செல்லத் தயாராயிருந்த கூட்டத்துக்கு முகம் மறந்து போகக் கூடுமா? திரை இசை உலகில் அவர் புறக்கணித்து விட்டுப் போக முடியாத ஓர் அதிகார பீடமாக இருந்தார். எத்தனை பாடல்கள் நெக்குருகச் செய்திருக்கின்றன! எத்தனை பாடல்கள் நிலை மறந்து ஆடச் செய்திருக்கின்றன! எல்லாமே கால மழையில் கரைந்தோடிப் போனவையாக அல்லவா ஆகி விட்டன? கடவுளே, என் தலைக்குப் பின்னால் சுழன்று கொண்டிருந்த ஒளிவட்டத்தை எப்போது சுழற்றி எடுத்து ஒளித்து வைத்தாய்?

விழாவுக்குத் தம் மனைவியையும் அழைத்து வரலாம் என்று எண்ணியிருந்தார், முதலில். வாழ்வில் ஒருமுறை கூட அவளை எங்கும் உடன் அழைத்துச் சென்றதில்லை அவர். அவளைப் புறக்கணிக்கிறோம் என்று தோன்றாமலே புறக்கணித்த நாட்கள் சில. புறக்கணிப்பதில் திருட்டு சந்தோஷம் அனுபவித்துக் கொண்டே புறக்கணித்த சந்தர்ப்பங்கள் சில. குடும்பப் பற்று, பாசம் – இவை கூட இல்லாமல் தொழிலில் கரைந்து போகிறவன் என்று காட்டிக் கொள்கிற விதமாகப் புறக்கணித்த தருணங்கள் சில. அதற்காகவெல்லாம் வருத்தப்பட்டு இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இன்று 'வருகிறாயா' என்று கேட்ட போது, மௌனமாக மறுத்து விட்டாள். விருப்பமில்லை என்றாவது சொல்லியிருக்கலாம். 'வழக்கமில்லை' என்றபோது வலிக்கத்தான் செய்தது.

ஆனால், அவருக்கு அதுவே இப்போது நிம்மதியாகவும் ஆறுதலாகவும் கூட இருந்தது. இங்கே தம் அனுமதியின்றி யாரோ தன் ஆடைகளை உருவிக் கொண்டிருப்பதாகப்பட்டது. தான் சாதித்தது, சாதித்ததாக நினைத்துக் கொண்டிருப்பது எல்லாமே ஒன்றுமில்லாதவை என்று சுட்டிக் காட்டுவதாக இருந்தது இந்தப் புறக்கணிப்பு.

அவராகத் தேர்ந்தெடுத்து, சிலருக்கு வணக்கம் சொன்னார். கிடைத்த பதில் வணக்கங்களில் வெறும் கடமைதான் இருந்தது. விசை அழுத்தினால் ஓடத் தொடங்கும் இயந்திரங்கள் போல் ஒரு பாவனை. உலர்ந்த பூமி போல் வறண்டு

கிடந்த முகங்கள்.

மேலும் யாரையும் பார்க்கப் பிடிக்காமல் கண்களை மூடிக் கொண்டார்.

முன்னெல்லாம் வருஷம் தவறாமல் அவருக்கு யாரேனும் பாராட்டு விழா நடத்துவார்கள். அரசாங்கமோ, அமைப்பு சார்ந்த பிரபலங்களோ கூப்பிட்டு விருதளிப்பார்கள். இரண்டு முறை இசை வேந்தனாகவும் மூன்று முறை மன்னனாகவும் ஒருமுறை பிதாமகராகவும் சக்கரவர்த்தியாகவுங்கூட உயர்த்தி, சால்வை போர்த்தி, கேடயம் தந்து, காலில் விழுந்திருக்கிறார்கள். புகழ், மாலை ரூபத்தில் தோளை அழுத்த, பீறிடும் கர்வமும் மேலோட்டமான அடக்கமுமாக மேடையை விட்டு இறங்கும்போது, மோதியடித்துக் கொண்டு முகம் பார்க்க முந்தும் கூட்டம். தாங்கவொண்ணாத தன்னடக்கம் கவிந்து, அவர் தலைகுனிந்தது போன்ற பாவனையில் நீந்திக் கடந்து, விரைந்து போய் காரில் ஏறிக் கண்ணாடித் திரையிட்ட தருணங்கள். பிரபலமாயிருந்த காலங்களில் பிரசுரமான புகைப்படங்களில் கூட, நேர்த் தோற்றம் ஒருபோதும் இருந்ததில்லை. யாரோ சொன்னார்களென்று (மேதைகள் போஸ் கொடுக்கலாகாது.) எப்போதும் பக்கவாட்டுத் தோற்றத்தை மட்டும் படமெடுக்க அனுமதித்திருக்கிறார். அதனால்தான் அடையாளம் தெரியவில்லையோ என்று இப்போது நினைத்தார்.

சமாதானம் கொள்வதற்கான காரணங்கள். அவற்றைத் தேடும்போதே அபத்தம், நெருஞ்சிமுள்ளாகக் குத்தத் தொடங்கி விடுகிறது.

மேடையில், மேதையின் படத்தைத் திறந்து வைத்து அமைச்சர் பேச ஆரம்பித்திருந்தார். மிகவும் யோக்கியமானவர். தமக்கும் இசைக்கும் தொடர்பேதும் இல்லை என்று முதலிலேயே சொல்லி விட்டார். அதனாலென்ன? பெரியோரைப் போற்றலாம்; தப்பில்லை. நல்லவர், வல்லவர், நாளைய தலைமுறை கற்றுக் கொள்ள நிறைய விட்டுச் சென்றவர்.

அவருக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. சின்ன வயது ஞாபகம். அப்பாதான் சொன்னாரா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

திருக்கண்ணபுரம் உடையவர் சந்நிதியில் இவர் கச்சேரி. கூட்டமான கூட்டம். பனி பொழியும் மார்கழி இரவில் போர்வையும் சால்வையும் போர்த்திக் கொண்டு, உஸ் உஸ் என்று காற்றை ஊதிக் குளிரை விரட்டிக்



''இவ்வளவு தொந்தி இருக்கே, திருடனை எப்படி துரத்திப் பிடிப்பீங்க?''

''எதுக்கு துரத்தணும்...? அவங்களே மாமூலை டாண்ணு கொண்டு வந்து கொடுத்துடுவாங்க!''

– சீர்காழி வி. ரேவதி

கொண்டு காத்திருந்த கூட்டம்.

அதே கட்டுக் குடுமி. பட்டைத் திருநீறு. மீட்டும் விரல்களால் உயிர் பெறும் வீணை. மணி ஒன்றா? இரண்டா? மங்களம் ஆனதும் கண் சொருகிக் கலைந்து போன கூட்டம்.

கோயிலை ஒட்டிய மானிய வீடுகளுள் ஒன்றில்தான் தங்கியிருந்தார் வித்வான். போற்றித் துதித்து விட்டு, கச்சேரி முடிந்ததும் அழைத்துப் போய் விட்டு விட்டுத் திரும்பிய நிர்வாகிகள், மறுநாள் காலை எழுப்பச் சென்றபோது அதிர்ந்து நின்றார்கள்.

''என்னண்ணா இது? இப்படிப் பண்ணிட்டேளே...?''

தீயில் தகித்தெடுத்த அவரது இடதுகைப் பெருவிரல் ரணமாகிக் கசிந்திருந்தது.

"ஒண்ணுமில்லை, விடுங்கோ. நேத்து வாசிக்கறப்போ ஓரிடத்திலே விரல் கொஞ்சம் தப்பிப் பட்டுடுத்து. யாரும் கவனிக்கலே! கவனிக்காததனாலேயே தப்பு சரியாயிட்டதா நான் எடுத்துண்டுடக் கூடாதில்லையா? காயம் ஆற ஒரு மாசம் ஆகுமோ? அதுவரைக்கும் மறக்காது! அப்புறமும் மறக்கக் கூடாது இல்லையா?"

அமைச்சர் திறந்து வைத்த படத்தில் அசையாமல் புன்னகை செய்து கொண்டிருந்தவரைப் பார்த்தார் அவர். வாழ்வில் சில அழுத்தமான கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் கொண்டு வாழ்கிறவர்கள் எப்போதும் ஏற்றம் பெறுகிறவர்களாகவே இருக்கிறார்கள். ராட்சஸத் தோற்றத்தில், காலமெல்லாம் பயமுறுத்தும் வறுமையும் ஏழ்மையும் ஒரு நிலைக்கு மேல் பொருட்படுத்தத் தேவையில்லாதவையாகி விடும் போலும். உபாசிக்கிற உன்னதமே உயிரோடிருக்கப் போதுமானதாயிருக்கிறது. எத்தனை காலதாமதமாக இது புரிகிறது! இன்னுமொரு நூற்றாண்டு போன பிறகும் யாராவது இவருக்கு அஞ்சலி செய்து கொண்டுதானிருப்பார்கள் என்று தோன்றியது.

தனக்கென்ன வயது என்று அவர் நினைத்துப் பார்த்தார். எழுபத்தொன்பது? அல்லது எண்பது. இன்னும் சில நாட்களில் விடைபெற்று விடக்கூடும். அடுத்த இருபது வருடங்கள் நினைவில் வைத்திருந்து தனக்கு யார் நூற்றாண்டு விழா கொண்டாடுவார்கள்? அனிச்சையாக அவர் விழிகள் ஒருதரம் அரங்கைச் சுற்றிப் பார்த்தன. அவரும் ஒரு இசை மேதை என்று சொல்லப்பட்டவர் தான். ஆனால், வாழும்போதே கல்லறை எழுப்பி விட்டாற்போலிருந்தது. வந்திருந்தோரின் புறக்கணிப்பு. ஒருகணம் எழுந்து நின்று, புகழ் பெற்ற தம் பாடல்களுள் ஒன்றை உரக்கப் பாடி, "நான்தான்! நான் தான்!" என்று அலறலாம் போலிருந்தது.

இனி ஒருக்கணமும் அங்கே அமர்ந்திருக்க இயலாது என்று தோன்றவே, எழுந்து கொண்டார். மேடையில் யார் யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். எதுவும் பொருட்படுத்தும்படி இல்லை. தடியை மெள்ள ஊன்றி, முன்னேறிக் கடந்து வாசலை அடைந்தார்.

இருளில், ஒளிச் செல்வகங்களாக விரைந்து கொண்டிருந்த வாகனங்களில் ஆயிரக்கணக்கான மக்கள். யார் ஒருத்தரும் அவரது பாடல்களைக் கேட்காமலிருந்திருக்க முடியாது. அரச பீடத்தில் அவர் இருந்த நாட்களின் ஞாபகம் அழியக்கூடியதல்ல. பீடம் இப்போதும் இருக்கிறது. அரசர்கள்தான் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

நீண்டதொரு பெருமூச்சு வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டார். வழியோடு சென்ற ஆட்டோவை நிறுத்தி, வீட்டு விலாசம் சொல்லி ஏறிக் கொண்டபோது, உற்றுப் பார்த்த டிரைவர் அடையாளம் கண்டுகொண்டாற்போல் தோன்றியது அவருக்கு. "சார், நீங்களா?" என்று கேட்டு விடப் போகிறானே என்று அஞ்சி, அவசரமாகத் தலையைக் குனிந்து கொண்டு, "போகலாம்!" என்றார்.

நூற்றுக்கணக்கான வாகனங்களின் நடுவே கலந்து, ஆட்டோ வேகமெடுத்த போதுதான் அவருக்கு நிம்மதியாக இருந்தது. ⬤



ஜாண்டு சைகாலஜி!

விஜி

புதிய பகுதி

ஜூனியர்கள் கேட்கும் சீனியர்தனமான கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்வது..? ஐந்து முதல் பத்து வயது வரையிலான பிஞ்சுகள் விடுக்கும் ஏவுகணைகளை மட்டும் முதலில் எடுத்துக் கொள்வோம். சில அடிப்படை விதிகளை வகுத்துக் கொள்

"அப்பா, நான் சுரேஷைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்..." என்று வெட்கமெல்லாம் படாமல் இருபது வயது மகள் வந்து சொல்லும்போது, அதிர்ச்சியுறாமல் 'அப்படியா, சரி!' என்று ஏற்கும் அளவுக்குப் பெற்றோர் உலகம் இன்றைக்குப் பதப்பட்டுவிட்டது.

ஆனால், "அம்மா! நான் யாரைக் கல்யாணம் பண்ணிக்கட்டும்...? டாடியைப் பண்ணிக்கலாமில்லே..." என்று ஆறு அல்லது ஏழு வயதுக் குழந்தை கள்ளமில்லாமல் கருவண்டு விழிகளை உருட்டிக் கவலைப்படும்போது எம்.பி.ஏ, எம்.எல், எம்.டி., பி.எச்.டி. படித்த பெற்றோர் கூட பதில் சொல்லத் தெரியாமல் திணறத்தான் வேண்டியிருக்கிறது.

அசடு வழிவதோ, குழந்தையை அதட்டி அடக்குவதோ, மழுப்பலாக பதில் சொல்வதோ உதவாது.

பெற்றோர் அல்லது பெரியவர்கள், ஆசிரியர்களிடம் குழந்தைகள் கொண்டுள்ள அன்பு மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடு இத்தகைய சிக்கலான கேள்விகள்.

ஆறு வயது முதல் பிஞ்சு மனங்களில் முளைவிட ஆரம்பிக்கும் இத்தகைய கேள்விகளுக்குத் தரப்படும் பதில்கள் குழந்தையின் சிந்தனைப் போக்கை, மதிப்பீடுகளை, எதிர்காலத்தை நிர்ணயிப்பவை.

வோம்:

எந்தக் கேள்வியானாலும் அது கேட்கப்படுகிற கணம் மிகவும் முக்கியம். குழந்தையைப் பொருத்தவரை நிர்மலமான உள்ளத்தில் ஏற்பட்ட நிஜமான கவலை அல்லது சந்தேகத்தின் வெளிப்பாடு. ஆகவே, என்ன வேலையாக இருந்தாலும் குழந்தையின் கேள்விக்குச் செவி கொடுக்க வேண்டும். நமது அதிர்ச்சியையோ கோபத்தையோ சங்கடத்தையோ வெளிப்படுத்தலாகாது. பதில் தெரியாத அல்லது சொல்ல இயலாத கேள்வி என்பதால் நமது இயலாமையை எரிச்சலாக்கிக் குழந்தைமேல் காட்டுவது மென்மையான அதன் உள்ளத்தைப் புண்படுத்தும் அநீதி.

பொய்யான பதிலைச் சொல்வது மிகவும் ஆபத்து. பதில் உண்மையானதாக இருப்பதுடன் குழந்தையின் புரிந்து கொள்கிற திறனுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

உதாரணத்துக்கு, 'நான் யாரைக் கல்யாணம் பண்ணிக்கட்டும்..?' என்ற கேள்வியையே எடுத்துக் கொள்வோம்.

"சே! வாயை மூடு!" என்றோ, "ஆமாம்! இப்போ அதான் ரொம்ப முக்கியம்!" என்றோ "முளைச்சு மூணு இலை விடலை, அவசரத்தைப் பார்த்தியா..." என்றோ பதில் சொல்லத் தோன்றும்.

குழந்தையின் நிலையிலிருந்து பிரச்னையை அணுக மறுக்கும் பதில்கள் இவை. கல்யாணம் என்பது எப்படியுமே நடந்தாக வேண்டிய ஒன்று என்ற அளவுக்குப் புரிந்து கொண்ட சிறுமி, அதைக் குறித்து இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படும் ஆர்வமான கணம் அது.

''நீ பக்கத்து வீட்டு பாஸ்கரைக் கட்டிக்கோ'' என்றோ "மாமா பையன் மகேஷ் தான் உனக்கு மாப்பிள்ளை'' என்றோ சொல்வது விஷயத்துக்குத் தாற்காலிக முற்றுப்புள்ளி வைக்கலாம். குழந்தைக்குத் திருப்தி தரக்கூடிய பதிலாகக் கூட இருக்கலாம். ஆனால், ஆபத்தான பொய். குழந்தை நிஜமென்று நம்பக்கூடிய பொய். சில வருடங்கள் சென்று விவரம் புரிகிற பருவத்தில் சம்பந்தப்பட்ட இரு குழந்தைகளுக்கும் பெருத்த அவமானம் தரக்கூடிய பொய்!

உண்மை என்ன? 'தெரியாது' என்கிற பதில்தான் உண்மை! ஆனால் அந்த பதில் குழந்தையின் ஆர்வத்தைத் தணிக்காது; கவலையைப் போக்காது. எனவே, புரிகிற தொனியில்- மொழியில் உண்மை பரிமாறப்பட வேண்டும்.

''இப்போ நீ சின்னவளில்லையா...? ரொம்ப வருஷம் கழிச்சு பெரியவளாகிற போது அப்போ உனக்கு யாரைப் பிடிக்கிறதோ அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம். அந்த நேரத்தில் நாம் இதைப் பத்தி சேர்ந்து யோசிப்போம்...''

- இந்த பதில் பெரும்பாலும் திருப்தி அளிக்கும். பாதுகாப்பு உணர்வைத் தரும். பெரியவளாகிறபோது இன்னும் என்னென்ன செய்யலாம்- படிக்கலாம், ராக்கெட் ஓட்டலாம், டாக்டர் ஆகலாம் என்று வேறு திசைகளில் கற்பனை விரிவதற்கு வசதியாகத் தூண்டிவிடும்.

இத்தகைய கேள்விகளைக் கேட்க குழந்தைகள் தேர்ந்தெடுக்கும் நேரங்கள் பெரும்பாலும் அந்தரங்கமான கணங்களாகவே இருக்கும். குழந்தையின் அந்தரங்க உணர்வை மதிப்பது அவசியம்.

"எங்க மீனு இன்னிக்கு என்ன கேட்டா தெரியுமோ...?" என்று அக்கம்பக்கத்தில் நாம் தம்பட்டம் அடிக்க, அவர்கள் 'ஏன் மீனு, எங்க சேகரை நீ கல்யாணம் பண்ணிக்கிறியா?' என்று சீண்டுவதோ 'இந்தக் காலத்துல புள்ளைங்களுக்கு அவசரத்தைப் பார்த்தியா?' என்று கமென்ட் அடிப்பதோ, 'ஆமா! நீ கல்யாணங் கட்டிக்கிட்டு எத்தினி புள்ள பெத்துக்கப் போறே' என்று விவஸ்தையில்லாமல் வார்த்தையை வளர்த்துவதோ அரும்பைக் கசக்கிப் பிய்ப்பதற்குச் சமமானது!

உங்களுடன் மட்டுமே குழந்தை பகிர விரும்பும் கணத்தை அம்பலப்படுத்தாதீர்கள்.

அடுத்த வாரத்துக்கான அதிரடி கேள்வியைச் சொல்லட்டுமா...?

''அப்பாவும் நீயும் ஃபர்ஸ்ட் நைட்ல என்ன பேசிக்கிட்டீங்க...?''- கேட்டது ஒன்பது வயதுச் சிறுவன்!

(பார்ப்போம், பின்னே...)


படம்: **ஸ்ரீஹரி**



''ஏன் சார் ஒரே சோகமா, பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்திருக்கீங்க? சாப்பிடக் கிளம்பலையா...?''

''சம்திங்கை நம்பி ஒய்ஃப்கிட்ட காசு கேட்டு வாங்காமல் வந்துட்டேன் சார்! இன்னிக்கின்னு பார்த்து ஒரு கவர் கூட போணியாகலை!''

- சீர்காழி வி. ரேவதி



குறையொன்றுமில்

ஸ்ரீயோடு சேர்ந்து விளங்குவதனாலே தான் அவன் ஸ்ரீநிவாஸன் ஆனான். சஹஸ்ர நாமத்திலும் பின்னால் ஸ்ரீநிவாஸ சப்தமானது ஸ்ரீதர: ஸ்ரீகர: ஸ்ரீ: என்று தியான நாமாக்களாக வருகிறது. அப்படி லக்ஷ்மியோடு சேர்ந்து இருப்பதனாலேயே எம்பெருமானுக்கு சர்வ விதத்திலும் ஏற்றம்.

அதனால்தான் வாலி கேட்டான் ராமனைப் பார்த்து :

''உனக்குத் தீங்கு செய்தவன் ஒரு ராக்ஷஸன். உனக்கு சக்தியிருந்தால் அவனிடம் போய்க் காட்டு – என்னைப் போய் – குரங்கினத்தரசனைப் போய் அடித்தாயே! மனு நெறியிலே இப்படித்தான் கூறப்பட்டிருக்கிறதா? ராக்ஷஸன் தப்பு பண்ணினால் குரங்கை அடி... குரங்கு தப்பு பண்ணினால் கோட்டானை அடி... தப்பு பண்ணியவர்களுக்கு சிக்ஷை இல்லையா? நீ தயாநிதி என்று கேள்விப்பட்டிருக்கிறேனே... இத்தனை நாளாகயிருந்த அந்தக் கருணையையெல்லாம் எங்கேயாவது மூட்டை கட்டித் தொலைத்து விட்டாயா?...''

– வாலி கேட்டது வாஸ்தவமானது தானே!

''மஹாலக்ஷ்மியை நீ தொலைத்து விட்டாய்! அந்த மஹாலக்ஷ்மி பக்கத்தில் இருக்கிற போது தப்பு செய்த காகாசுரன் பிழைத்துப் போனான். இப்போது அவள் பக்கத்தில் இல்லை... தப்பே பண்ணாத நான் அடிபட்டேன்! அவள் பக்கத்தில் இருந்தால் தான் நீ நிறம்பெறுவாய்...'' என்றான்.

அப்படியாக, மஹாலக்ஷ்மி பக்கத்தில் இல்லையானால் பகவான் ரொம்ப க்ரூரனாக மாறிப் போய் விடுவானாம். அதனால்தான் ராமாயணத்தில் பாதுகா தேவியை முதலில் கொடுத்தனுப்பி விட்டான். பஞ்சவடியில் சீதையையும் பறி கொடுத்து விட்டான்... ஏனென்றால், ராவணனைக் கொல்வதற்குக் கடினமாகத் தான் இருக்க வேண்டும் என்பதற்காக! தயையெல்லாம் முன்னே அனுப்பிவிட்டால் தான் அவனால் கடினமாக மாற முடிந்தது!

ஆகையினால் நம்மைக் குறித்து பகவானிடத்திலே சொல்லி அவன் அனுக்கிரகம் நமக்கு உண்டுபண்ணக்கூடிய மஹாலக்ஷ்மியினுடைய கடாக்ஷமானது நமக்கெல்லாம் வேண்டாமா...?

இந்த இடத்திலே, மைத்ரேயர் பராசரரைப் பார்த்து விசேஷமாகக் கேட்பதை கவனிக்க வேண்டும் :

'மஹாலக்ஷ்மியினுடைய ஸ்தானம் என்னவென்று தெரியவில்லை... அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே...?' என்று கேட்டால், பராசரர் சொல்கிறார் :

"ஹே மைத்ரேயா! நீ சந்தேகப்படாதே. பொருளாக இருக்கக்கூடியவன் மஹாவிஷ்ணு; சொல்லாக இருக்கக்கூடியவள் மஹாலக்ஷ்மி.

வேதத்தில் ஒரு பதம் சொல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்... அந்த சப்தமாக இருப்பவள் மஹாலக்ஷ்மி. பொருளாக இருப்பவன் நாராயணன். யக்ஞ வடிவானவன் பரமாத்மா; 'ஸ்வாஹா' என்கிற சப்தம் மஹாலக்ஷ்மி.

ஸ்வாஹா இல்லாத யக்ஞம் உண்டா?!

புருஷன் என்று சொன்னால் அது விஷ்ணுவைக் குறிக்கும்.

ஸ்த்ரீ என்று சொன்னால் அது மஹாலக்ஷ்மியைக் குறிக்கும். அதனால் லக்ஷ்மியினுடைய அம்சம் உடையவர்கள் அத்தனை பேரும் ஸ்த்ரீகள். புருஷ சப்தத்தினாலே சொல்லப்படக் கூடிய அத்தனை பேரும் நாராயணனுடைய அம்சம் என்று சொல்லி இந்த விஷயத்திலே நாம் தெளிவு பெறுவதற்காக ஒரு கதையும் சொல்கிறேன் :

வித்யாதர ஸ்த்ரீகளெல்லாம் பூலோகத்தில் வந்து தாயார் சந்நிதியில் அர்ச்சனை பண்ணி

93

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

லை

விட்டு, அந்த மஞ்சள் காப்பு, குங்குமம், புஷ்பம் இதெல்லாம் எடுத்துக்கொண்டு இந்திர லோகம் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஏன் பூலோகத்துக்கு வர வேண்டும் என்று கேட்கலாம்.... தேவதைகளெல்லாம் கூட யக்ஞம் பண்ணவேண்டும் என்று இருக்கிறது வேதத்திலே. நாமெல்லாம் எத்தனையோ தேவதைகளைக் குறித்து யக்ஞம் பண்ணுகிறோம். அப்படிப் பண்ணி பலனை சம்பாதிக்க வேண்டும் என்கிறது வேதம்.

ஆனால், தேவலோகத்திலிருப்பவர்கள் அங்கேயிருந்தபடி யக்ஞம் பண்ண முடியாது. அது போக பூமி என்று பெயர். அங்கே பண்ணுகிற யக்ஞம் பலனைக் கொடுக்காது. அவர்கள் யக்ஞம் பண்ண வேண்டுமானால், இங்கே தான் வர வேண்டும். ஆகையினால், 'பாரத தேசம், பரத கண்டம் என்று பெயர் - இந்த இடத்திலே பண்ணக்கூடிய யக்ஞ யாதாதிகளின் பலன் சொல்லி முடியாது' என்று பூமண்டலத்திலேயே ஏற்றமுடைய ஸ்தலமாக விவரிக்கிறது சாஸ்திரம். ஆகையினாலே, அப்பேர்ப்பட்ட ரீதியிலே, பூலோகத் துக்கு அவர்கள் இறங்கி வரவேண்டும்.

லக்ஷ்மி கடாக்ஷம் வேண்டும் என்பதற்காக இறங்கி வருகிறார்கள் அந்த வித்யாதர ஸ்த்ரீகள். வந்து பிரசாதத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு ஆகாச மார்க்கமாகப் போய்க் கொண்டிருக்கிறபோது, நடு மார்க்கத்திலே துர்வாஸ மஹரிஷி





அருள்வாக்கு



வாழ்க்கைத் தொல்லைகளிடையே கொஞ்சம் உல்லாசமாகப் பொழுது போக்குவது ஒரு தப்பா என்று கேட்பீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன். பரோபகாரமாகச் சேவை செய்தால் அதுவே பெரிய உல்லாசம் என்று தெரியும். அதுவே விளையாட்டு, அதுவே இன்பம்.

கிருஷ்ண பரமாத்மா இப்படித்தான் வெளியிலே விளையாடுவதாகத் தெரிந்தாலும், உள்ளே அத்தனையும் பரோபகார சேவைதான் செய்தான். எத்தனை பேருடைய, எத்தனை எத்தனை கஷ்டங்களை விளையாட்டாகவே போக்கடித்தான்? குன்றைத் தூக்கிப் பிடித்தது விளையாட்டு மாதிரி இருக்கும். ஆனால் கோபர்களைக் காப்பதற்கே அவ்வளவு பெரிய மலையை பால கிருஷ்ணன் தூக்கினான். சின்னக் குழந்தை விஷம் கக்கும் காளிங்கனின் படத்திலே நர்த்தனம் செய்தது வெளியிலே பார்த்தால் விளையாட்டு; உண்மையில் அதுவும் ஜனங்களைக் காத்து அவர்களுக்கு நீர் நிலையை மீட்டுத் தருவதற்காக செய்த சேவைதான். இப்படித்தான் எத்தனையோ விளையாட்டுகள் செய்தான். அத்தனையும் சேவை. எவனைப் போல் விளையாடினவன் இல்லையோ அவனைப்போல் சேவை செய்தவனும் இல்லை என்று கிருஷ்ணபரமாத்மாவின் உதாரணத்தில் பார்க்கிறோம்.

நின்று கொண்டிருக்கிறார்.

துர்வாஸரைப் பார்த்தவுடனே நடு நடுங்கிப் போய்விட்டார்கள் அவர்களெல்லாம்!

கோபத்துக்கே துர்வாஸம் என்று பெயர்! அத்தனை கோபக்காரரல்லவா துர்வாசர்!

மீதி மஹரிஷிகளெல்லாம் சாபம் கொடுத்தால் அவர்களுடைய தபோ பலம் குறையும். துர்வாஸர் சாபம் கொடுத்தால் அது பல்மடங்காகப் பெருகும்! அதனால் அவர் உடனே சாபம் கொடுத்து விடுவார். அவருக்குப் பொறுமையே கிடையாது. ஏதாவது தப்பு நடந்து விட்டதென்றால் உடனே சாபம்தான் – 'பிடி சாபம்!' என்று கூறி விடுவார்.

முன்கோபம் உள்ளவர்களிடம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதனால்தான் அந்த வித்யாதர ஸ்த்ரீகள் அவரைப் பார்த்ததும் நடுநடுங்கிப் போய் விட்டார்கள்.

"என்னது கையிலே?...." என்றார் துர்வாஸர்.

"தாயார் பிரசாதம்..."

"கொடுங்கள் அதை என் கையிலே..."

அப்படியே கொடுத்து விட்டார்கள்!

கொடுத்தவுடனே 'நாங்கள் போய்விட்டு வரலாமா...?' என்றார்கள்....

"ஊம்...." என்றார்.

ஏனென்றால் அதிக நாழி இருந்தால் ஏதாவது அபசாரம் பண்ணி, சாபத்துக்கு ஆளாகி விடுவோமோ என்ற பயம் அவர்களுக்கு!

அவரும் 'போ' என்று அனுப்பி விட்டார்.

பிரசாதத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருந்தவர், என்ன பண்ணுவது என்று பார்த்தார். தாயார் பிரசாதமாயிற்றே. கையில் கிடைத்து விட்டது. அதை எங்கே வைப்பது...? யாருக்குக் கொடுப்பது? – யோசனை பண்ணுகிறார் துர்வாஸர்.

அன்றைய தினம் இந்திரனுக்குப் பட்டாபிஷேக மகோத்ஸவம். ஜன்ம தின உத்ஸவம் நடக்கிறது. ஐராவதத்தின் மேலே இந்திர லோகத்திலே பவனி வந்து கொண்டிருக்கிறான் அவன். அவனுக்குத்தான் இதைக் கொடுக்க வேண்டும். இன்னும் ஐச்வர்யத்தோடு அவன் விளங்குவான் என்று இங்கேயிருந்து நேராக இந்திரலோகம் புறப்பட்டுப் போனார்.

போனால், ஐராவதத்தின் மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிறான் இந்திரன். வெள்ளை யானை அது...

'யக்ஞத்திலே இந்திரா ஆச்ராவயா...' என்று மூன்று தடவை கூப்பிட வேண்டும் என்று சொன்னேன். இவரும் இங்கே இந்திரா, இந்திரா, இந்திரா என்று மூன்று தடவை கூப்பிடுகிறார்.

இந்திரன் மேலேயிருந்து கீழே பார்க்கிறான். வந்திருப்பவர் துர்வாசர் என்பது தெரியவில்லை அவனுக்கு. அப்படியானால் அந்த யானை எவ்வளவு உயரம் இருக்கும் என்று நாம் நிர்ணயம் பண்ணவேண்டும்! அவ்வளவு உயரத்திலே உட்கார்ந்திருக்கிறான் மண்டபத்திலே. அதனால் அந்த யானையைக் குத்தக்கூடிய சட்டியை – அங்குசத்தை – அங்கேயிருந்து நீட்டினான்.

லௌகிக சேவை மட்டும் இல்லை. ஞான சேவையும் நிறையச் செய்தான். அர்ஜுனன், உத்தவர் போன்றவர்களுக்கு மகா உபதேசங்கள் செய்தான். சேவை, ஞானம், விளையாட்டு எல்லாம் அவனிடம் ஒன்றாக இருந்தன. துளிக்கூடப் பற்றுதல் இன்றியே இத்தனையும் செய்தான். சிரித்துக் கொண்டே சாந்தமாக இவ்வளவையும் செய்தான். அதனாலேயே அநாயாசமாகச் செய்ய முடிந்தது. நம்மிலும் சேவை செய்கிறவர்களுக்கெல்லாம் இந்தச் சிரிப்பும் சாந்தமும் எப்போதும் இருக்க வேண்டும்- தைரியம், ஊக்கம் இவற்றோடு.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

ஈட்டியை நீட்டுகிறபோதே மஹா கோபம் வந்து விட்டது துர்வாஸருக்கு! சாபம் கொடுக்கிற அளவுக்குக் கோபம் வந்து விட்டது! ஆனால் அந்தக் கோபம் ஒரு க்ஷணத்திலே போய் விட்டது. பரம சாந்தமாக அந்த பிரஸாதத்தை ஈட்டியிலே வைத்தார் அவர்!

இப்போது, புராணத்திலே ஒரு கேள்வி! என்ன கேள்வி...?

'துர்வாஸருக்குக் கோபம் வந்து சாபம் கொடுக்காமல் உடனே தணிந்த இடம் ஒன்று உண்டா...?' என்ற கேள்வி.

உண்டு! அது இந்த இடம்தான்! மீதி எல்லா இடங்களிலேயும் சாபம் கொடுத்துக் கொண்டிருப்பவருக்கு இந்த ஒரே ஒரு இடத்தில்தான் சாபம் கொடுக்கும்படியான புத்தி வரவில்லை. தணிந்து விட்டது!

ஏன் இந்த மாதிரி சாந்தமடைந்தார் என்றால், இயற்கையிலே தனித்து நின்றிருந்தாரானால் கோபம் வந்திருக்கும். மஹாலக்ஷ்மியினுடைய பிரசாதத்தினுடைய தொடர்பு அவருக்கு இருந்ததனாலே அவ்வளவு கோபத்தையும் அது அடக்கி விட்டது... லக்ஷ்மியினுடைய கடாக்ஷம் மஹாகோபிஷ்டரான அவர் கோபத்தையே அடக்கி விட்டதென்றால் அந்தப் பிரசாதத்தின் மகிமையை என்ன சொல்வது!

நித்தியம் லக்ஷ்மியினுடைய பிரசாதத்தை நாம் தரித்து வந்தோமானால் நமக்குக் கோபம் வருமா! கோபம் வரவேண்டிய இடத்திலே கூடக் கோபம் வராது!

ராமாயணத்திலே கூட நாரதரைப் பார்த்து வால்மீகி கேட்கிறபோது என்ன கேட்கிறார்... 'கோபத்தை ஜெயித்தவன் உண்டா?' என்று கேட்கிறார். ஆகையினால் கோபம் எல்லோருக்கும் வரும். அதை ஜெயிக்க வேண்டும்.

சரி, இந்திரன் என்ன பண்ணினான். அந்த பிரசாதத்தோடு பெட்டியை அப்படியே மேலே தூக்கினான். அதைக் கண்ணிலேயும் ஒற்றிக் கொள்ளவில்லை; ஒன்றும் பண்ணவில்லை. அதை எடுத்து உதாசினமாக அப்படிப் போட்டான்... அப்போது அவனுடைய துர்பாக்யம் - அவன் உட்கார்ந்திருந்த மண்டபத்தில் விழாமல் யானையினுடைய தலை மேலே போய் விழுந்தது அது! யானை தலை மேலே 'பொத்'தென்று விழுந்தவுடனே அதற்கு உறுத்திற்று...

உடனே துதிக்கையாலே அதை எடுத்துக் கீழே போட்டு, இரண்டு கால்களாலும் தேய்க்கிறது யானை!

இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார் துர்வாசர்...

(தொடரும்)



''மானேஜர் சார், சத்திரத்தில எல்லா ரூமையும் காட்டினீங்க, நல்லா இருக்கு. இதென்ன அறைன்னு சொல்லலையே?''

''பாத்தீங்களா? இது சம்பந்தி சண்டை ரூம். சகல லேட்டஸ்ட் ஆயுதங்களும் இருக்கு. சௌகர்யத்திற்கு ஏத்த மாதிரி சண்டை போட்டுக்கலாம்.''

— மாதுரி

AAA

கேர் மற்றும்
க்ரிஸில்
வழங்கும்
மதிப்பீடு

14%*

வருடாந்தர
வருவாய்

ஐடிபிஐ ஃப்ளெக்ஸிபாண்ட்ஸ் 5

பத்திரமான எதிர்காலத்திற்கு

ரெகுலர் இன்கம் பாண்ட்*

வருடாந்தர வட்டி
ஆண்டிற்கு 14%

அரை வருடத்திற்கு (ஆண்டிற்கு 13.5%)
கால் வருடத்திற்கு (ஆண்டிற்கு 13.3%)
ஒரு 7 ஆண்டுத் திட்டம்.
5வது வருட இறுதியில்
திருப்பித் தரும் வசதித் தேர்வு
(ஒரு வருடத்திற்கான ஒய்டிஎம்
13.69% முதல் 13.75% வரை.)

குரோயிங் இன்ட்ரெஸ்ட் பாண்ட்

வருடாந்திர வட்டி

முதல் ஆண்டிற்கான 11% வட்டி
7வது வருடத்தில் ஆண்டிற்கு **20%** ஆக
வளருகிறது. 12 மாதங்களுக்குப் பிறகு
எப்போது வேண்டுமானாலும் திருப்பித்
தரும் வசதித் தேர்வு

பாதுகாப்பு#
ஆதாயம்
நம்பிக்கை

மல்டி ஆப்ஷன் பாண்ட்

சமமான வருடாந்தர
வட்டித் தொகை முறையே

2 ஆண்டுகள் வைப்புக் காலத்திற்கு பிறகு
வருடத்திற்கு **17.5%** அல்லது 3 ஆண்டு
வைப்புக் காலத்திற்கு பிறகு வருடத்திற்கு
22.5% அல்லது 4 ஆண்டு வைப்புக்
காலத்திற்கு பிறகு ஆண்டிற்கு **30.0%**
வட்டி 7 ஆண்டு திட்டம்.

இன்ஃப்ராஸ்ட்ரக்சர் (டாக்ஸ் ஸேவிங்) பாண்ட்

பிரிவுகள் 88, 54EA மற்றும்
54EB-ன் கீழ் வரிச் சலுகை

பிரிவு 88 மற்றும் 54EA-ன் கீழ் 3 வருடங்
களுக்கு வட்டி ஆண்டிற்கு **12.5%**
மற்றும் பிரிவு 54EB-ன் கீழ் 7
வருடங்களுக்கு வட்டி, ஆண்டிற்கு **13%.**
வருடாந்தர மற்றும் ஒன்று திரண்ட
வட்டித் தேர்வு. பங்குக்கான முந்துரிமை.

இஷ்யூ நடப்பிலிருக்கும் தேதிகள் டிசம்பர் 21, 1998 முதல் ஜனவரி 14, 1999 வரை.

பாதுகாப்பு 'AAA ரேட்டிங்'. ஆதாயம் '14%' வருடத்திற்கு' நம்பிக்கை '26 லட்சத்திற்கும் கூடுதலான முதலீட்டாளர்கள். ஐடிபிஐயின் ஈக்விடியில் இந்திய அரசின் பங்கு 72%க்கும் கூடுதலாக உள்ளது'. அன்செக்யூர்ட் பாண்டுகளின் பப்ளிக் இஷ்யூ மூலமாகச் செய்யப்படும் மொத்தத் திரட்டு ரூ. 750 கோடிகள். ஓவர் சப்ஸ்கிரிப்ஷன் ரூ. 750 கோடி வரை வைத்துக் கொள்ளும் தேர்வு. **அனைத்து பாண்டுகளுக்கான பொதுவான அம்சம் :** குறிப்பிட்ட அனைத்து மதிப்பு/ஆதாயம் தற்போதுள்ள வசிட்டங்களில் உள்ள டிடிஎஸ்க்கு உட்பட்டது. சிபிடிடி அலுவலகத்தின் அறிவிப்பிற்கு உட்பட அனைத்து பாண்டுகளுக்கான வட்டி பிரிவு 80L-ன் கீழ் வரிக்கழிப்பிற்கு தகுதிபெறும் நியமான வசதி உண்டு. பாண்டுகளை அடமானம் வைப்பதன் மூலம் கடன் வசதி பெறலாம். **இழப்பு நேர்வுக்குரிய நிலைமைகள் : பொதுவான இழப்பு.** இந்த முதலீட்டு அழைப்பில் முதலீடு செய்ய விரும்புவோர், அபாயகாரணிகளை மிக்க கவனத்துடன் படித்துவிட்டுச் செயல்பட எச்சரிக்கை செய்யப்படுகிறது. இந்த முதலீட்டில் பங்கெடுக்க விரும்புவோர்கள், இந்த இஷ்யூவை வழங்குபவர்கள் மற்றும் இஷ்யூ ஆகியவை பற்றிய விவரங்களையும் மற்றும் அபாயங்களை பற்றியும் சுயமாக விசாரணை செய்துவிட்டு பிறகு முதலீடு செய்ய தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த பாண்டுகள் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்சு போர்ட் ஆஃப் இந்தியாவால் சிபாரிசு அல்லது அங்கீகாரம் பெற்றவை அல்ல. மேலும், செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்சு போர்ட் ஆஃப் இந்தியா இந்த பாண்டுகளை பற்றிய நுணுக்கம் அல்லது சான்றுகோ உத்திரவாதம் அளிக்கவில்லை. ஆஃபர் பத்திரத்தின் பக்கம் 1 மற்றும் பக்கம் 56 இல் கொடுக்கப்பட்டுள்ள அபாயகாரணிகளுக்கு தங்கள் விசேஷ கவனத்தை திருப்புமாறு முதலீட்டாளர்களை கேட்டுக்கொள்ள படுகிறது. **கடன் இழப்பு.** ஐடிபிஐ நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கியவர்கள் கடன்களைத் திருப்பி அளிக்காவிட்டால் நிறுவனம் பாதிப்பிற்கு உள்ளாகும். ஆனால், காலவரைக் கடன் வழங்கும் வர்த்தகத்தில் இந்நிலைமை வழக்கமானதே. **வட்டி விகிதச்சார இழப்பு.** வட்டி விகிதங்களில் ஏற்படும் அதிகப்படியான மாறுதல்களினால், கடன் வழங்குதல் மற்றும் பெறுதலினால் ஏற்படும் வித்தியாசங்களின் மூலம் ஐடிபிஐ நிறுவனம் வட்டி விகிதாச்சார இழப்பு நிலைமைக்கு உள்ளாகலாம். **தளர்த்தப்பட்ட நிலைமைகளினால் இழப்பு.** அரசாங்க கொள்கைகளில் செய்யப்படும் மாறுதல்களினால் தொழில்துறையின் செயல்பாட்டில் பாதிப்பு ஏற்படலாம். இதைப் போன்ற இழப்புகளுக்கு எதிராக ஐடிபிஐயின் பலவகையான போர்ட்ஃபோலியோக்கள் கணிசமான அரணாக வழங்குகிறது. **போட்டியினால் ஏற்படும் பாதிப்பு.** நிதித் துறையில் வர்த்தக வங்கிகள் மற்றும் பல நிறுவனங்கள் காலவரை கடன் வழங்குவதில் போட்டி அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் பாதிப்பு நிலைமைகள் ஏற்படலாம். **இடைப்பட்டவர்களை தவிர்ப்பதால் ஏற்படும் இழப்பு.** மூலதன மார்க்கெட்டுகளின் வளர்ச்சியின் காரணமாக கடன் வாங்குபவர்கள் மூலதனத் தேவைகளை நேரடியாகப் பெறும் நிலையில் இடைப்பட்டவர்கள் தவிர்க்கப்படலாம். **தற்செயலான பொறுப்புகள்.** செப். 30, 1998 அன்று ஐடிபிஐ நிறுவனத்தின் தற்செயலான பொறுப்புகள் ரூ. 4086 கோடிகளாகும். இத்தகைய பொறுப்புகள் வழக்கமான நடவடிக்கைகளினால் ஏற்பட்டவை மற்றும் கடன் வழங்கும், முதலீட்டு நடவடிக்கைகளின் விவேகமான கோட்பாடுகளுக்கு உட்பட்டவை. **டிபென்ச்சர் மீட்பு ஒதுக்கீடு.** நிறுவனம் வழங்கும் ஈடு செய்யப்படாத பாண்டுகளுக்கான டிபென்ச்சர் மீட்பு ஒதுக்கீடு உருவாக்கப்படவில்லை என்பதை முதலீட்டாளர்கள் கவனிக்கவும். **பாண்டுகளின் தன்மை.** நிறுவனம் வழங்கும் பாண்டுகள் பிராமிஸ்ஸரி நோட்டுகளின் வடிவிலுள்ளன. இவைகளை கையொப்பமிட்டு வழங்குவதன் மூலம் மாற்றம் செய்ய முடியும். **பூர்த்தியாகாத குறைகள்.** நவம்பர் 31, 1998 அன்று ஃப்ளெக்ஸி பாண்டுகள் சீரிஸ் 1 பற்றிய தீர்வு காணாத கோரிக்கைகள் 534, ஈக்விடி இஷ்யூ அல்லது ஃப்ளெக்ஸி பாண்டுகள் சீரிஸ் 2,3,4ஐப் பற்றிய தீர்வு காணாத கோரிக்கைகள் எதுவும் இல்லை. **வரிப் பொறுப்புகள்.** வரி விதிப்பு ஆண்டுகள் 1992-93, 1993-94, 1994-95 மற்றும் 1995-96க்கான கூடுதல் வரி செலுத்த வேண்டிய கோரிக்கைகளுக்கு எதிராக செய்யப்பட்ட மனுக்கள் தீர்வு காணாத நிலையில் உள்ளன. 1993-94 மற்றும் 1994-95 வரி விதிப்பு ஆண்டுகளுக்கான கூடுதல் சர்ச்சைக்குள்ளான வரிக்கோரிக்கை ஐடிபிஐ நிறுவனத்திற்கு திருப்பி அளிக்க வேண்டிய மற்ற தொகைகளுக்கு எதிராக முழுமையாக ஈடு செய்யப்பட்டுள்ளது. வரி விதிப்பு ஆண்டான 1995-96க்காக கோரப்பட்ட ரூ. 41.02 கோடி சர்ச்சைக்குள்ளான வரித் தொகையை செயல்படுத்தாமல் இருக்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

இஷ்யூக்களை லீட் மானேஜர்கள் : ஐடிபிஐ காபிடல் மார்க்கெட்ஸ் லிமிட். தொலைபேசி : (022) 2189166. ஃபாக்ஸ் : (022) 2180196. **டிஎஸ்பி மெரில் லின்ச் லிட்.,** தொலைபேசி : (022) 2845275 ஃபாக்ஸ் : (022) 2048518. **ஜெஎம் ஃபினான்ஷியல் கன்ஸல்டன்ட் பி. லிட்.,** தொலைபேசி : (022) 2650172 ஃபாக்ஸ் : (022) 2653193. **ஜேஎம் ஃபினான்ஷியல் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் கன்ஸல்டன்ஸி ஸர்வீஸஸ் லிட்.,** தொலைபேசி (022) 2831237. ஃபாக்ஸ் (022) 2042137 **கோடக் மஹிந்திரா காபிடல் கம்பெனி (பொறுப்பு வரையறை இல்லாத நிறுவனம்)** தொலைபேசி : (022) 2826655. ஃபாக்ஸ் : (022) 2826632. **பிரின்ஸிபல் மார்க்கெட்டிங் கோ-ஆர்டினேட்டர் : ஐடிபிஐ காபிடல் மார்க்கெட் ஸர்வீஸஸ் லிட்.** தொலைபேசி : (022) 2160180. ஃபாக்ஸ் : (022) 2154256. **இஷ்யூக்களை ரெஜிஸ்ட்ரார்கள் : கர்வி கன்ஸல்டன்ட்ஸ் லிட்.,** தொலைபேசி : (040) 3312454. ஃபாக்ஸ் : (040) 3311968. **பீட்டர்லெட்டிகஸ் பைனான்சியல் ஸர்வீஸஸ் லிட்.** தொலைபேசி : (022) 8375519. ஃபாக்ஸ் : (022) 8350217. **பாண்ட் ஹோல்டர்களுக்கான ட்ரஸ்டீ : ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா,** தொலைபேசி : (022) 2651363. ஃபாக்ஸ் : (022) 2665604.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா

ஐடிபிஐ டவர், டபிள்யூடிசி காம்ப்ளெக்ஸ், கஃப் பரேட், மும்பை - 400 005 தொலைபேசி : (022) 2181876. www.idbi.com

இழப்பு நேர்வுக்குரிய நிலைமைகள் மற்றும் விவரங்களுக்கு வழங்கு பத்திரத்தைப் பார்க்கவும்.

காண்டிராக்டர்களை அணுகாமல், தாமே எல்லா திருமண ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டும் என்று துடிக்கும் ஆர்வலர்களுக்குச் சில யோசனைகள்:

● முதன் முதலில் புக் பண்ண வேண்டியது கல்யாண மண்டபமும் சமையல்காரரும்தான். மண்டபம் எந்த ஏரியாவில், எத்தனை பெரிய அளவில் என்று முடிவு செய்துகொண்டு, டெலிபோன் டைரக்டரி உதவியுடன் மண்டபங்களுக்கு டெலிபோன் செய்து, குறிப்பிட்ட முகூர்த்தத்தில் மண்டபம் கிடைக்குமா என்று விசாரித்துக் கொண்டால் அலைச்சல் குறையும். மண்டபம் புக் பண்ணுகிறபோதே மண்டப வாடகை தவிர, எக்ஸ்ட்ரா கட்டணம் என்னென்ன, அங்கே எத்தனை அறைகள், டைனிங் ஹால் கொள்ளளவு என்ன? போன்ற விவரங்களை எல்லாம் கேட்டுக் கொள்ள வேண்டும். கையோடு, மண்டபத்துக்குப் பக்கத்தில் உள்ள மளிகைக்கடை, பால் டெப்போ போன்ற அத்தியாவசியத் தகவல்களையும் தெரிந்து கொண்டு விட வேண்டும்.



● சமையல்காரரை முடிவு செய்தவுடன் அவரை நேரில் சந்தித்து, எத்தனை பேர், என்னென்ன வேளைக்கு என்னென்ன சமையல் ஐட்டம் என்பதை எழுத்து மூலம் முடிவு செய்து கொள்ளுங்கள்.

● எந்தெந்த வேளைக்கு எவ்வளவு பால் தேவை என்பதை முடிவு செய்து, பால் எங்கே வாங்குவது என்று தீர்மானியுங்கள். ஆவின் போன்றவற்றிலிருந்து என்றால் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். மண்டபத்துக்கே சப்ளை செய்வதா? ஒரு குறிப்பிட்ட டெப்போவில் போய் வாங்கிக் கொண்டு வர வேண்டுமா? என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் சென்று வாங்கி வர வேண்டுமெனில், வேளாவேளைக்குப் போய் பால் டெலிவரி எடுத்து வருகிற பணியைப் பொறுப்பாக ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். எமர்ஜென்ஸி என்றால், தொடர்பு கொள்ள பால் சப்ளை நிறுவனத்தின் முகவரி, டெலிபோன் எண் தயாராக இருக்கட்டும்.

● மளிகை சாமான்களை எடுத்து வைக்கிறபோது, சமையல் பணியாளர் ஒருவரையும் கூட வைத்துக் கொண்டால், எது எது எங்கே இருக்கிறது என்று தெரியும். பின்னர், தேவைப்பட்டதை, தேடிக் கொண்டிருக்காமல் சட்டென்று எடுத்துக் கொடுத்தனுப்பலாம். கூடுமானவரை ஒரு பாக்கெட்டைப் பிரித்தால், அதை முழுமையாகப் பயன்படுத்தியபின் அடுத்தப் பாக்கெட்டை எடுக்கலாம். அப்போதுதான், பயன்படுத்தாத ஐட்டங்களைக் கடைசியில் திருப்பிக் கொடுக்கும்போது சௌகரியமாக இருக்கும்.

● குறித்த நேரத்தில், ஏற்பாடு செய்திருக்கும் நாதஸ்வர பார்ட்டி வந்து விட்டார்களா என்று பார்க்கவும். போட்டோகிராபர், வீடியோ எடுப்பவர்களுக்கு எப்போது வர வேண்டும், எத்தனை மணி வரை அவர்களுக்கு வேலை இருக்கும் என்று கரெக்டாகச் சொல்லி விட வேண்டும். போட்டோகிராபருக்கு எத்தனை ரோல் படங்கள் எடுப்பது என்று சொன்னால் மிக சௌகரியம்.

● திருமணத்தின் பல்வேறு சமயங்களிலும் ஆரத்தி எடுக்க வேண்டி வரும். அதற்குத் தேவையான ஐட்டங்கள் தயாராக இருக்க வேண்டும்.

● பூக்காரர் வரவை மண்டபத்தில் பெண்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும்படி ஆகி விடக் கூடாது. அடுத்த வேளைக்கான பூ, மாலைகள், தலைக்கு வைத்துக் கொள்ள பூ எல்லாம், என்னென்ன வெரைட்டி, எந்த வேளைக்கு எத்தனை முழம், பந்து என்று தீர்மானித்து, முன்கூட்டியே சப்ளை செய்யச் சொல்லி விட வேண்டும். எதிர்பாராது தேவை ஏற்பட்டால், பக்கத்தில் பூக்கடை எங்கே என்று பார்த்து வைத்துக் கொண்டால் சௌகரியம்.

● மாப்பிள்ளை அழைப்பு அன்று, மரபுக்கேற்ப ஊர்வலம் இருக்கும். அதற்கு, போலீஸ் அனுமதி வாங்க வேண்டும். மறக்க வேண்டாம்.

● மண்டபத்தில் வந்து இறங்கிய கையோடு, தாம்பூலப் பையில் வெற்றிலை, பாக்கு தவிர



போட்டால் கஷ்டம் இல்லை!

பழம் அல்லது தேங்காய் போட்டு தயாராக வைத்து விட்டால், விருந்தினர்கள் வசதிக்கேற்ப, விடை பெறும் போது கொடுத்து அனுப்ப சௌகரியமாக இருக்கும்.

● மண்டபத்தில் திருமணத்துக்கு முந்தைய நாள் இரவு பெட்ஷீட், தலையணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முகூர்த்த நாட்களில் டிமாண்டு அதிகம் இருக்குமாதலால், முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். அதேபோல்தான் ரிசப்ஷனுக்கு அலங்கார சோபாக்களும்.

● முகூர்த்த தினத்தன்று காலை எத்தனை மணி வரை டிபன், எப்போது சாப்பாடு என்பதை சமையல்காரருடன் கலந்து பேசி, டிபனுக்கும் சாப்பாட்டுக்கும் இடையே கணிசமான நேரம் இருக்குமானால், அந்த நேரத்தில் வருகிறவர்களுக்கு காபி மட்டுமாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

● ஒவ்வொரு முறை சாப்பாட்டின்போதும், சாப்பிட்டு வருகிறவர்கள் போட்டுக் கொள்ள வெற்றிலை, பாக்குத் தட்டு தயாராக இருக்க வேண்டும். ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என தனித்தனியே இரண்டு டிரேக்களில் வைப்பதும் சௌகரியம். தட்டில் தீர்ந்து போனவுடன், வெற்றிலை, பாக்கு உடனடியாய் நிரப்பப்பட வேண்டியது ரொம்ப அவசியம். சீவல் பிரியர்களை ஏமாற்றாமல் அதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

● நலுங்கு போன்ற நிகழ்ச்சிகள் பிற்பகல் நேரத்தில் இருக்கும். அதற்கு குடும்பத்தில் மூத்த பெண்மணிகளின் ஆலோசனைப்படி, ரெடி பண்ணி விட வேண்டும்.

● ரிசப்ஷன் நேரத்தில் வருகிறவர்களை பூ, சந்தனம், பன்னீர் சகிதம் வரவேற்க இரண்டு பேர், அவர்களுக்கு உதவியாக இன்னொருவர் இருக்க வேண்டும். சட்டென்று ஒருவர் வேறு ஏதாவது வேலைக்கு அழைக்கப்பட்டாலும் சமாளிக்கலாம்.

● முகூர்த்தத்தின்போதும், ரிசப்ஷனின் போதும் மற்ற பரிசுப் பொருட்களை வாங்கி வைக்க நம்பிக்கையான, பொறுப்பானவர்களை விட வேண்டும். ரொக்க வரவைக் கணக்கெழுதி வைக்க நோட்டும் பேனாவும் தேடும்படி ஆகி விடக் கூடாது.

● சமீப காலமாக, கல்யாண மண்டபங்களில், திருட்டு போவது அதிகரித்து வருகிறது. எனவே, பல்வேறு வேலைகளின்கூடவே இரு தரப்பினரிலும் சிலர், கண் கொத்திப் பாம்பாய் கவனித்தபடி இருக்க வேண்டும். சந்தேகத்துக்கு இடமான அறிமுகமில்லாத நபர்கள், கண்காணிக்கப்பட வேண்டும்.

● மண்டபத்தில் டெலிவரியாகும் வாழ்த்துத் தந்திகளை ஒருவரே வாங்கி, இரு வீட்டாரிடத்தும் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

● மண்டபத்திற்கு வந்த உடனேயும், காலி செய்து புறப்படும் போதும் மின்சார மீட்டர் கணக்கீட்டைச் சரி பார்த்துக் கொள்ளவும்.

● குடிதண்ணீர், வெளியிலிருந்துதான் வாங்கும்படி ஆகிறது. எனவே சுத்தமான குடிநீர் வேண்டுமானால் மினரல் வாட்டர், ஐஸ்கட்டிக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும்.


● வீட்டிலிருந்து புறப்படுகிறபோதே, சாமி படம், விளக்கு, எண்ணெய், திரி, தீப்பெட்டி இவையெல்லாம் கொண்டு போக வேண்டும்.

● சில சம்பிரதாயங்களுக்கு, பிரத்யேகமாய் சில ஐட்டங்கள் (உதாரணம்: நெல்பொரி) தேவைப்படும். அவற்றுக்கும் முன்னேற்பாடாக இருக்க வேண்டும்.

● மண்டபத்தில் எத்தனை அறைகள், அவற்றுக்கு பூட்டு, சாவி தருவார்களா? என்று விசாரித்துக் கொண்டு, அவசியமானால் வீட்டிலிருந்தே பூட்டு, சாவி கொண்டு போகலாம்.

● மண்டபத்தைவிட்டுப் புறப்படும்போது, முழுமையாக ஒரு சுற்று வந்து, ஏதாவது எடுத்துக் கொண்டு போக விட்டு விட்டதா என்று செக் பண்ணிக் கொள்ள வேண்டும்.

— எஸ். சந்திரமௌலி



நீல வெல்வெட்டில் சதுரப் பலகை. சுற்றிலும் வில்லியில் எல்லை கட்டி, நடுவே பெரியதாக – மணமகன் : மணமகள் : சாமந்திப் பூக்களில் கோத்திருந்தான் கேசவன். பெயர் எழுத ரோஜா தேர்ந்தெடுத்திருந்தான். எவ்வளவு பொருத்தம்! மணம் மிகு வாழ்வு. பூப் போல மென் மனம். ஒவ்வொரு மலராக எடுத்துக் கவனமுடன், மிக்க பாசமுடன் பெயர் அமைத்தான். அவன் மனம் மிகவும் நெகிழ்ந்திருந்தது.

✱

“**வா** மூர்த்தி! ஆபீஸ் டூர் சீக்கிரம் முடிஞ்சுடுத்தா?”

“அப்பா... அது வந்து... பர்ச்சேஸ் நிறையப் பண்ணணும். கல்யாண நாள் வேறு நெருங்கிட்டிருக்கேன்னு ஆபீஸ்ல சொல்லி லோக்கல் வேலைக்கு...”

“சாரி மூர்த்தி! எ பேட் நியூஸ்! உன் கல்யாணத்தை நிறுத்திட்டேன்...”

“அ... அப்பா!”

“உனக்கு நிச்சயமான பெண்... அவ பேரு என்னடி?”

“வசந்தி!”

“ஆங்... வசந்தி! அந்தப் பொண்ணு ஒரு விபத்துல மாட்டி...”

“ஐயோ!”

“உயிர் பிழைச்சுட்டா! ஆனா...”

“ஆ... ஆனா?”

“துரதிர்ஷ்டவசமா கை போயிடுச்சு!”

“கடவுளே... கடவுளே...”

“என்ன பண்றது... விதி! உன் கல்யாணத்தை நிறுத்த வேண்டியதாயிடுச்சு!”

✱

வரவேற்பு மேசையருகே வந்தான் கேசவன். எல்லாம் சரியாக இருந்தது. தட்டில் கல்கண்டு. கிண்ணத்தில் சந்தனம்.

ஒத்திகை

பத்மா ரவிசங்கர்

பக்கத்தில் பன்னீர் சொம்பு. கூடையில் ரோஜா மலர்கள். வரவேற்று நிற்க, நிச்சயம் இன்று போட்டிதான்! அவனுக்குள் பெருமிதம்.

மண விழாவை நிறைக்க, கவனமுடன் தேர்ந்தெடுத்த அழைப்புகள்தான். நெருங்கின உறவினர்கள். துணை நின்ற நண்பர்கள். உயர உதவியவர்கள். மற்றும் பல நலம் விரும்பிகள்.

சொற்ப கூட்டம். சொந்தமாகப் பெரிய வீடும் இருக்கிறது. இந்த மண்டபம் எதற்கு? என்று வினவினான் ஒரு நண்பன். மண்டபத்தில்தான் என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டான் கேசவன். அது மட்டுமல்ல. மண வழக்கத்தில் உள்ள எதையுமே விடப் போவதில்லை. எல்லாம்... எல்லாமே செய்யப்பட வேண்டும்; செம்மையாக. ஏனெனில்...

✸

"மேரேஜை ஒத்திதானே வச்சிருக்கீங்கப்பா?"

"புரியாம என்ன உளர்றே? கல்யாணத்தை நிறுத்தியாச்சு மூர்த்தி!"

"இது சரியில்லைப்பா! பத்திரிகை கூட அடிச்சாச்சு. இன்னும் இருபது நாள்ல கல்யாணம். கையை இழந்தது ஒரு கொடுமை. இந்தச் சமயத்துல நீங்க பண்றது பெரும் கொடுமை!"

"நான்சென்ஸ்! எதுடா கொடுமை? கையை இழந்துட்டா. இனி, அவ எதுக்குடா பிரயோஜனம்? அவளுக்காகப் பரிதாபப்படறேன். ஆனா, உன் வாழ்க்கையை தாரை வார்க்க முடியாது."

"அப்பா! ப்ளீஸ். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. கொஞ்சம் அவகாசம் வேணுமானாலும் எடுத்துண்டு நல்ல முடிவாச் சொல்லுங்கப்பா."

✸

மெல்ல ஆடும் ஊஞ்சல். இருவரிடமும் நெருக்கம் இருந்தது. உல்லாசம் இருந்தது. வெட்கமும் இருந்தது. ஊஞ்சலில், உரிமையுடன் இடம்பிடித்த குழந்தைகளின் செல்லச் சிணுங்கல்கள். சுற்றிலும் கலகல சிரிப்பு. உற்சாகக் கலாட்டாக்கள். பிரத்யேகப் பாடல்கள். மின்னும் ஃபிளாஷ்கள்.

விழி கொள்ளாமல் தன் தம்பி பார்த்துக் கொண்டிருப்பதை கேசவன் பார்த்தான். தம்பியின் பார்வையில் பளபளக்கும் கண்ணீர்.

இந்த ஊஞ்சல், தம்பியின் தனி விருப்பம். மாலை மாற்றுதல் தன் விருப்பம். இது ஒரு விசேஷத் திருமண விழா. இதில், ஒவ்வொருவருக்கும் ஓர் ஆசை....

✸

"வசந்தி!"

"நீங்களா?"

"எப்படிம்மா இருக்கே?"

"முழுசாப் போகாம, இப்படிக் கடும் முடமா ஆக்கிய விதியை நொந்துண்டு இருக்கேன்..."

"ஆ... அப்படி எல்லாம் பேசப்படாது வசந்தி!"

"வேறு எப்படிப் பேசறது? ப்ச். என் வாழ்க்கைல இனி என்ன இருக்கு?"

"ஏன் நான் இல்லையா?"

"நீங்க... நீங்க என்ன சொல்றீங்க?"

"நான் உன் கணவன்னு சொல்றேன்! வாழ்நாள் முழுசும் உனக்கு நல்ல துணையா இருப்பேன்னு சொல்றேன்!"

"நெ... நெஜமாவா சொல்றீங்க?"

"ஆமா வசந்தி! உன்னைப் பார்த்து நிச்சயம் பண்ணதிலிருந்தே நான் உன் கணவன்னுதான் மனசுல நினைச்சுட்டிருக்கேன் வசந்தி. மத்தபடி, திருமணங்கறது வெளி உலகத்துக்கான சடங்கும், சம்பிரதாயங்களும் மட்டுமே...!"

"கையை இழந்த ஜடம் நான்!"

"ச்சீ ச்சீ வசு! அப்படி விரக்தியாப் பேசாதே! வாழ்க்கைக்குத் தேவை நம்பிக்கை. அதை மட்டும் என்னிக்கும் இழக்காதே வசந்தி."

"உங்க அப்பா..."

"என் அப்பா ரொம்ப கோபக்காரர்; பெரும் பிடிவாதக்காரர்தான். பேசிட்டிருக்கேன். பார்ப்போம். ஆனா ஒண்ணு. உன்னை என்னிடமிருந்து பிரிக்க எவராலுமே முடியாது!"

✱

தொலைவில் கையில் ஒரு ட்ரேயுடன் சுறுசுறுப்பாகச் செல்லும் தங்கையைப் பார்த்தான் கேசவன். அங்கிருந்தே, அவளிடமிருந்து ஒரு வெட்கச் சிரிப்பு. கேசவன் கையசைத்தான், பாசமுடன்.

மேடைக்கருகே ஊடாடும் தம்பிதான் என்னமாக வளர்ந்து விட்டான்! தன்னை விட ஐந்து வயது சிறியவன். நன்றாகப் படித்தான். நல்ல வேலையிலும் இருக்கிறான்; தன்னைப் போலவே. அவன் விருப்பம் கேட்டு விட்டு விரைவில் தம்பியின் திருமணம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்று அனைவரும் நல்ல நிலைமையில். இந்த நிலை அடைவதற்குத் தன் பெற்றோர் பட்ட பாடு, செய்த தியாகங்கள்...

✱

"என்ன மூர்த்தி... மனசு மாறிட்டியா?"

"இல்லைப்பா. எனக்கு ஒரு சொல்; ஒரு மனசுப்பா..."

"குத்தல்? ஹஹ்ஹா! போகட்டும்."


"அப்பா உனக்கு நல்லதுதானே சொல்றார்..."

"அம்மா! ஒரு பெண்ணா இருந்துண்டு நீயே இப்படிப் பேசலாமா?"

"தன் மகனோட நல்ல வாழ்க்கை விரும்பற ஒரு தாயார்ங்கறதை மறந்துடாதே!"

"வசந்திக்கும் அம்மா இருக்கா. அவ மனசு என்ன பாடுபடும்னு யோசிச்சியாம்மா?"

"இங்கே பாருடா மூர்த்தி. அப்பாவைப் புரிஞ்சுக்க. வசந்தி, வசதி குறைவான இடம்; அவங்க வீட்டுல அவளுக்கு அடுத்து ஒரு தங்கையும் இருக்கா. பணம், காசுக்கு அலையாம அந்த இடம் அப்பா நிச்சயம் பண்ணலியா... என்னவோ அவளோட துரதிர்ஷ்டம்; இப்படி ஆயிடுச்சு... அதுக்காக அவளை உன் தலைல கட்டி வெச்சு வாழ்நாள் முழுக்க உன்னை அல்லாட விட முடியுமா? குழந்தை குட்டின்னு வாழ்க்கைல எடுத்துச் செய்ய எவ்வளவோ விஷயம் இருக்கு... புரிஞ்சுக்கடா மூர்த்தி. நிச்சயமாகி, எவ்வளவோ இடங்கள்ல எவ்வளவோ அற்ப காரணங்களுக்காகக் கூட நின்னி



ருக்கு, தெரியுமா..."

"கல்யாணமானதும் இப்படி ஒரு விபத்து நடந்திருந்தா, அவளைத் தள்ளி வச்சிருப்பீங்களா?"

"நம்ம மூதாதைகள் பண்ண புண்ணியம்! அப்படி நடக்கலை. நீ தப்பிச்சுட்டே! அசட்டுத்தனமா ஏதாவது யோசிச்சு மனசைப் போட்டு உழப்பிக்காதே. உனக்கு வேறொரு நல்ல பொண்ணாப் பார்த்து..."

"என்னது! எனக்கு இன்னொரு மனைவியா! அந்தத் துரோகத்தைப் பண்ண வேற ஆளைப் பாருங்கப்பா!"

"ராஸ்கல்! என்ன பேச்சு பேசறான் பார்த்தியா? இப்ப, முடிவா என்னதான்டா சொல்றே?"

"அதான் சொல்லிட்டேனே!"

"ஓஹோ..."

"வசந்திதான் என் மனைவி! அதுல எந்த வித மாத்தமும் இல்லைப்பா!"

''அப்ப, உனக்கு இந்த வீட்லே இட மில்லை! அவளும், நீயும் 'அழகா' பண்ணப் போற அந்தக் கண்றாவி குடித்தனத்தைப் பார்க்க நாங்க தயாரில்லை. அது மட்டு மில்லை. எங்கிட்டருந்து ஒரு பைசா எதிர் பார்க்காதே...''

"இல்லைப்பா. உங்ககிட்ட நான் எதிர் பார்க்கறது... ப்ச்..."

✸

வந்தவர்களுக்கு வயிறார டிபன் முடிந் திருந்தது. சிறப்பான விருந்துச் சாப்பாடும் உண்டு. சளைக்காமல் வழங்கப்படும் காப்பி. முகூர்த்தம் முடிந்ததும் தர குளிர்பானமும் தயார். நிறைவுடன் திரும்புகையில், தாம் பூலத்துடன் சிறு பரிசுப் பொருளும் காத் திருக்கிறது.

சுகமாகப் பொழியும் நாயனம். துள்ளித் திரியும் சிறுசுகள். சந்தோஷமாக சளசளக் கும் பெரிசுகள். பளபளக்கும் பட்டுப் புடை வைகள். மொட மொடக்கும் வெளிர் வேட்டிகள். மற்றும் சூரிதார்கள்; ஜீன்ஸ்கள். வழக்கமான கைகுலுக்கல்கள். பெருமைப் பறைசாற்றல்கள். அன்பு விசாரிப்புக்கள். ஆதரவான வார்த்தைகள். இனிய ஒப்பீடு கள்...

சந்தனம், பன்னீர், மலர்கள், வத்திகள், ஹோமப் புகை எனக் கலவையாகக் காற்றில் சுகந்தமான மணம். எல்லாவற்றுக்கும் சாட்சியாக, கட்டுத் தள்ளும் காமிராக்கள். ஓ... என்ன ஒரு ரம்யமான சூழலில், இந்தத் திருமணம்...

✸

> **"சிட்டில எங்க இடமிருக்கு? இது த்ரி டயர் கல்யாண மேடை.. ஒரே சமயத்தில மூணு முகூர்த்தம். செலவு கம்மி."**
>
> **— மாதுரி**

"**அ**வங்க சம்மதிக்காதது எனக்கு வருத்தமாயிருக்கு..."

"எனக்கும்தான் வசந்தி. என்ன செய்ய? புரிய வைக்க, புண்ணை ஆத்த காலத்துக்குச் சக்தி இருக்கு. காத்திருப்போம். அப்புறம்... உன் கட்டு பிரிச்சதுக்கப்புறம் ஒரு நல்ல நாள்ல, ஒரு கோவில்ல வச்சு ரொம்ப எளி மையா நம்ம கல்யாணம்!"

"நீங்க ஒரு... ஒரு..."

"தெய்வம்னு சொல்ல வர்றியா வசந்தி! வாக்கு தவற விரும்பாத ஒரு சாதாரண மனுஷன் நான். அவ்வளவுதான்."

''ப்ச்! என்னால உங்களுக்கு ஒரு சேவையுமே செய்ய முடியாம-"

"உஷ்! இனி என் காதுபட அப்படிச் சொல்லாதேடா வசு...! நாம நல்லா வாழ்ந்து காட்டுவோம், என்ன..."

"ஊம்..."

"நம் குழந்தைகளை அருமையா வளர்க் கப் பாடுபடுவோம். அவங்களுக்கு நல்ல எதிர்காலம் அமைச்சுத் தரக் கடுமையா உழைப்போம். நம்மால முடியும் வசந்தி. முக்கியமா அவங்களை..."

"சொல்லுங்க!"

"நம் குழந்தைகளை விசால மனசுடைய வங்களா வளர்க்கணும்..."

✸

கேசவன் மெய்மறந்து பார்த்தான். முகூர்த்தம்! இந்த அரிய கணம் அவர்களின் லட்சியக் கனவு.

மணமேடையில் மணப்பெண்ணாக, கேசவனின் அம்மா – வசந்தி; பக்கத்தில் முகூர்த்த வேட்டியில் அப்பா – மூர்த்தி. இன்று... இன்று, தங்களை ஆளாக்கிய அந்த தெய்வங்களின் அறுபதாம் கல்யாணம்!

அம்மாவுக்கு அருகே உதவிக் 'கரமாக' தங்கை; தன் கணவனுடன். அப்பா பின், தன் மனைவி; தம்பி. மற்றும் பேரன் பேத்திகள் சூழ, ஆர்க் வெளிச்சம் வீச, வீடியோ விழுங்க –

உரத்த குரல்களில் "கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" உச்சஸ்தாயியில் ஒலிக்கும் மந்திரம். உற்சாகமுடன் நாதஸ்வரத்தின் இனிய முழக்கம். வசந்தியின் கழுத்தில் திருமாங்கல்யத் தாலியைக் கட்டினார் மூர்த்தி. இருவரும் பரவச நெகிழ்ச்சியில்.


வசந்தியின் தோள் பற்றி அழைத்துச் சென்றார் மூர்த்தி. மேடை மூலையில் மூர்த்தியின் பெற்றோர், புகைப்படமாக; ஸ்வாமி படங்களுடன். இருவரும் நமஸ் கரித்து விட்டு மேடைக்குத் திரும்பினர்.

தன் பெற்றோரின் பாதங்களில் விழ முதலில் கேசவன் முந்திக் கொண்டான். பின், தங்கை. அப்புறம்..

அந்தத் தம்பதியை நமஸ்கரிக்க, வரிசை நீண்டு கொண்டிருந்தது..... ●

சுபமுகூர்த்தப் பத்திரிகை:

சில டிப்ஸ்...



அண்மையில் ஒரு நண்பர் வீட்டில் திருமணம். அலுவலகத்தில் அனைவருக்கும் அழைப்பிதழ் கொடுத்தார். இரண்டுவித டிசைன்களில் அவை இருந்தன. காரணம் கேட்டபோது, "முதலில் அடித்த பத்திரிகை போதவில்லை; மறுபடி ஒரு நூறு பத்திரிகை அடிக்கும்படியாகி விட்டது. மறுபடியும், கார்டு கடைக்குப் போன போது, ஏற்கெனவே வாங்கி அழைப்பிதழ் அச்சிட்ட டிசைனில் கார்டு கிடைக்கவில்லை. எனவேதான் இரண்டுவித டிசைன்களில் பத்திரிகை அடிக்கும்படி ஆகி விட்டது" என்றார்.

இதற்கு என்ன காரணம்? ஆரம்பத்திலேயே, உறவினர்கள் எத்தனை பேர், ஆபீஸ் நண்பர்கள் எத்தனை பேர், பிறவகை நண்பர்கள் எத்தனை பேர் என்று கத்தமாய்க் கணக்கிட்டு, அதற்கேற்பத் திருமண அழைப்பிதழ் அச்சடிக்கக் கொடுக்கத் தவறுவதுதான்!

இன்னொரு அனுபவமும் உண்டு. ஜனவரி மாதம் கல்யாணம். முந்தைய நவம்பரிலேயே பத்திரிகை அச்சாகி விட்டது. ஆனால் ஞாபகப் பிசகாக, கல்யாணத் தேதியில் 99 என்று போடுவதற்கு பதிலாக வருஷத்தை 98 என்றே போட்டு, அச்சிட்டு விட்டார்கள்! அப்புறம்? எல்லா பத்திரிகைகளிலும் '8' ஐ '9' என்று கையால் அடித்துவிட்டு எழுதும்படி



யாகி விட்டது. எனவே புரூஃப் பார்ப்பதில் கவனம் தேவை.

யார் யாருக்கு பத்திரிகை தர வேண்டும் என்பதையும் முழு விலாசத்துடன் தயார் செய்ய வேண்டும். பத்திரிகையை எப்போது அனுப்பி வைப்பது என்பதும் முக்கியம். ரொம்பவும் முன்னாலேயே அனுப்பி வைத்து விட்டால், மறந்து போகக்கூடும்! அதே நேரம் கடைசி நேரத்தில் போஸ்ட் பண்ணினால், திருமணம் முடிந்தபின் போய்ச் சேரும் அபாயமும் உண்டு!

அதிமுக்கியமானவர்களாக இருந்தாலொழிய, மற்றவர் அனைவருக்கும் தபாலில் அழைப்பிதழை அனுப்பி விடுங்கள். அப்புறம் டெலிபோன் மூலம் அழைப்பு விடுப்பதும், கடைசியில் நேரமிருந்தால் நேரில் சென்று அழைப்பதுமாக நேரத்துக்குத் தகுந்தபடி செயல்படலாம்.

பத்திரிகை அச்சடித்து வரும்வரை காத்திராமல், விலாசங்களை எழுதி உறைகளைத் தயார் செய்து வைத்துக் கொண்டால் வெகு சௌகர்யமாக இருக்கும்!

— பாரதிமௌலி

படங்கள் : ஸ்ரீஹரி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

இலவச இணைப்பு

KALKI 17.1.99

கல்கி



திருமணச் சிறப்பிதழ்

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவீ



மூலமந்திரம் :— ஓம் க்ஷம் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே
கராள தம்ஷ்ட்ரே ப்ரத்யங்கிரே
க்ஷம் ஹ்ரீம் ஹூம் பட்

தினமும் பக்திசிரத்தையுடன் இம்மஹா மந்திரத்தை 108 முறை ஜெபம் செய்தால் கன்னிப் பெண்களுக்கு சீக்கிரம் திருமணம் நிறைவேறும்.

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவிலில் வெகு விரைவில் அம்பாள் எழுந்தருள இருக்கிறாள்.

படம் வெளியீடு : ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஆஸ்ரமம் டிரஸ்ட்

பதிவு எண். 464/98 2/34 கண்ணபிரான் கோவில் குறுக்குத்தெரு, கிழக்கு கடற்கரைச் சாலை, உத்தண்டி, சென்னை - 600 119.

காலமெல்லாம் இனிக்கும்!



சினிமாவில் காட்டப்படுவது போல் 'முதலிரவு' என்பது ஜிலுஜிலுப்பும் கிளுகிளுப்புமான விஷயமாக வாழ்க்கையில் அமைவதில்லை...

"முதல் இரவு என்பதை, ஒரு பெண்ணுடன் இணைந்து துவக்கப் போகும் வாழ்க்கையின் முதல் இரவாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, உடல்ரீதியாக அவளுடன் தொடர்பு கொண்டே தீர வேண்டிய முதல் இரவாக எடுத்துக் கொள்ளக் கூடாது" என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

காலமெல்லாம் இணைந்து வாழப் போகும் ஓர் ஆணும் பெண்ணும் மனரீதியாக ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும் இரவாக எடுத்துக் கொண்டால்தான் நீண்ட கால ஓட்டத்தில் வாழ்க்கையை இனிக்கச் செய்யும் இரவாக அது அமையும்.

அது சரி, மனரீதியாக ஒருவரையொருவர் அணுகுவது எப்படி என்கிறீர்களா?

அறையில் இருவரும் தனித்து விடப்படுகிறீர்கள். மல்லிகைப் பூவின் மணமும் ஊதுவத்தியின் நறுமணப் புகையும் சேர்ந்து ஒரு புதிய படபடப்பை வேறு உண்டாக்குகின்றன. என்னதான் படித்து முன்னேறிய நிலை இருந்தாலும் இந்தச் சூழலில் ஒரு பெண் முதலில் பேசத் தயங்கவே செய்வாள். அதனால் ஆணே பேச்சைத் துவங்கலாம். (வெட்கப்படும் ஆண்களும் இருக்கிறார்கள்.) நீண்ட நேரம் ஆண் பேசாமலே இருப்பதைப் பார்த்து விட்டு, பெண்ணே பேச ஆரம்பிக்கலாம்.

உரையாடலோடு முடிந்து போகும் முதலிரவுகள் 'தோல்வி'யுற்றதாக எண்ண அவசியமில்லை. உரையாடல்கள் உறவின் பலமான அஸ்திவாரம். பெரும்பாலான திருமணங்களில் மணமகனும் மணமகளும் அதிகம் பழகாதவர்களாகவே இருப்பார்கள்.

அதிலும் சற்று கட்டுப்பாடான குடும்பச் சூழலில் வளர்ந்தவர்களாயின், எதிர்ப்பாலினரிடம் பேசியோ பழகியோ அறியாதவர்களாகவும் இருப்பார்கள்.

இதன் விளைவான மனத்தடைகள் இயல்பான பரிமாற்றங்களுக்குக் குறுக்கே நிற்கத்தான் செய்யும்.

சினிமாவிலும் கதைகளிலும் வருவது போல் முதலிரவு அமையவில்லையே என்று வருந்துவதோ, உற்றார் உறவினரும் நண்பர்களும் தங்கள் கிண்டல் மூலம் தூண்டிய எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லையே என்று கவலையுறுவதோ அனாவசியமானது.

வாழ்க்கையையே பகிர்ந்து கொள்ளப் போவதன் அடையாளச் சடங்குதான் 'முதலிரவு' என்று முகூர்த்தம் நிர்ணயித்து நடத்தும் நிகழ்ச்சி. அன்பு மட்டுமே அதற்கு அஸ்திவாரமாக முடியும்... அன்பால் மனம் நிறைந்து உணர்வை இயக்கும் கணம்தான் அர்த்தமுள்ள முதலிரவாக முடியும். ●

தொகுப்பு : **ப்ரியன்**

குள்ளமான உருவம். மென்மையான தோற்றம். மறைந்த பாரதப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியை நினைவூட்டும் முகச் சாயல். (மகனாயிற்றே!) அவர்தான் அனில் சாஸ்திரி. வயது 48. காங்கிரஸ் கட்சியின் செயலாளர்களில் ஒருவர். தமிழ்நாட்டுக்கு இவர்தான் பொறுப்பு. அண்மையில் சென்னை வந்திருந்தார். நெருக்கடியான அலுவல்களுக்கிடையேயும் நேரம் ஒதுக்கி நம்முடன் பேசினார்.



"இந்திய அரசியலில், இன்றைக்கு எளிமையானவர்களைப் பார்க்க முடியவில்லையே! என்ன காரணம்?"

"காலம் மாறிக் கொண்டே இருக்கிறது; சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அதன் காரணமாக மாறிக் கொண்டே இருக்கின்றன. அரசியலில் மட்டுமில்லை. பத்திரிகைத் துறை உட்பட எல்லாவற்றிலுமே, உயர்ந்த நற்பண்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. இந்த மாறுதல்கள் எவ்வளவு காலம் தொடரும் என்பது எனக்குத் தெரியாது. அதே நேரம், நாலைந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த அளவுக்கு, இன்று நிலைமை மோசமாக இல்லை. பொதுவாகவே மக்களிடத்தில் விழிப்புணர்வு அதிகரித்திருப்பதை உணர முடிகிறது."

"இப்போது நீங்கள் காங்கிரஸில் இருக்கிறீர்கள் என்றாலும், நீங்கள் அரசியலில் நுழைந்தபோது வி.பி. சிங்கின் கட்சியில் சேர்ந்தது ஏன்?"

"நான் 'வோல்டாஸ்' நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். எனக்கு அரசியலில் நுழையும் எண்ணம் சிறிதளவும் இல்லை. ஆனால், ஒருநாள் வி.பி. சிங் எங்கள் வீட்டுக்கு வந்து, தம் கட்சியில் சேரச் சொன்னார். என்னால் உடனடியாக முடிவெடுக்க முடியவில்லை. எனவே, என் தாயின் ஆலோசனையைக் கேட்டேன். அவர் 'வி. பி. சிங் அடிப்படையில் காங்கிரஸ்காரர்; தூய்மையான அரசியல்வாதி. எனவே, அவரே வந்து கேட்கிறபோது, அவரது கட்சியில் சேர்' என்று ஆலோசனை சொன்னார். அதன்படி நான் அவருடன் சேர்ந்தேன். ஆனால் ஓராண்டுக்குள்ளாகவே, அது தவறு என்று உணர்ந்தேன். என்னுடைய எம்.பி. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தளத்திலிருந்து விலகி, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தேன்."

"காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று நம்புகிறீர்களா?"

"நிச்சயமாக! இன்றுள்ள சூழ்நிலையில் இந்திய நாட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் கட்சி காங்கிரஸ்தான். சோனியா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி புத்துயிர் பெற்றிருக்கிறது. கட்சியில் கறைபடியாத பின்னணி கொண்டவர்களுக்கும், காங்கிரஸ் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதுதான், சமீபத்திய சட்டசபைத் தேர்தல் முடிவுகளில் பிரதிபலித்திருக்கிறது. இது, காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமில்லை. நாட்டுக்கும் நல்லது; அடுத்த தேர்தலில் வென்று காங்கிரஸ் தனித்தே ஆட்சியமைக்கும் என்று நான் நம்புகிறேன்."



• அனில் சாஸ்திரி

''தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் மக்கள் செல்வாக்கில்லாத ஒரு கட்சியாகி விட்டதே!''

''இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும், சரியான மாற்று காங்கிரஸ்தான் என்ற கோணத்தில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி செயல்படவில்லை என்பது பெரும் குறை. அதை நிவர்த்திக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் சேர்க்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.''

''த.மா.கா., காங்கிரசுடன் இணைய வாய்ப்பு உள்ளதா?''

''நேரு, இந்திரா, ராஜீவ் பாரம்பரியம் காங்கிரசின் பாரம்பரியம். த.மா. காங்கிரசும், அதைத்தான் தமது கொள்கை என்று சொல்லுகிறது. அப்படிப் பார்த்தால், அவர்கள் காங்கிரசுடன் இணைந்து அந்தப் பாரம்பரியத்தைக் காக்க முன்வர வேண்டியதுதானே சரியான முடிவாக இருக்கும்? எனவே, அவர்கள் காங்கிரசில் இணைவதே சரி! இதை ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையில் நான் சொல்லுகிறேன்.''

அடுத்து, லால்பகதூர் சாஸ்திரியைப் பற்றி கேட்டபோது, மனம் நெகிழ்ந்து போய், மலரும் நினைவுகள் வழங்கினார் அனில் சாஸ்திரி :

கார் வாங்குவதற்காக கடன் வாங்கிய பிரதமர்!

''பொது வாழ்க்கையில் இருந்தவர் என்பதால், குடும்பத்துக்காக அவர் நேரம் ஒதுக்கியது ரொம்பக் குறைவு. காலையில் நாங்கள் எழுந்திருப்பதற்கு முன்பே, புறப்பட்டுப் போய் விடுவார். இரவு நாங்கள் தூங்கிய பின்னரே வீடு திரும்புவார். ஒரே வீட்டில் வசித்தாலும், நாங்கள் பல நாட்கள் தொடர்ந்து எங்கள் தந்தையாரைப் பார்க்கவே முடியாமல் போன நாட்கள் நிறைய உண்டு. என் தாயார் கூட அடிக்கடி, 'இந்த நாட்டில் உள்ள எத்தனையோ பேருக்கு உங்களால் நேரம் ஒதுக்க முடிகிறது. ஆனால் உங்கள் குடும்பத்துக்காக, சிறிது நேரம் ஒதுக்க முடியவில்லையே!' என்று வருத்தமுடன் கூறுவார்.

''அவர், மத்திய உள்துறை அமைச்சராக இருந்தபோது, அரசுக் காரில், குடும்பத்தினர் போக அனுமதித்தது கிடையாது. எனவே நாங்கள் குதிரை வண்டியில்தான் ஸ்கூலுக்குப் போய் வருவோம்.

அவர் பிரதமரான பின்னர், ஒருநாள் இரவு, அவர் வீடு திரும்பும் வரை கண் விழித்துக் காத்திருந்தோம். அவர் வந்த பின், 'உங்களது அரசாங்கக் காரை, நாங்கள் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்கவில்லை. எனவே, எங்கள் உபயோகத்துக்காக ஒரு கார் வாங்கிக் கொடுங்களேன்' என்று நானும், என் இரு சகோதரர்களும் அப்பாவிடம் கேட்டோம்.

''அவர், 'நீங்கள் ஆசைப்பட்டுக் கேட்கிறீர்கள்! வாங்கித் தர முயற்சி செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு, தம் செயலாளர் மூலம், அன்றைய தினம் ஒரு ஃபியட் கார் பன்னிரண்டாயிரம் ரூபாய் ஆகிறது என்று அறிந்தார். தமது பேங்க் பாஸ் புத்தகத்தை எடுத்துப் பார்த்தார். வெறும் ஏழாயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது! அவருக்கு மன வாட்டம். அதைக் கண்ட நாங்கள், 'பரவாயில்லை அப்பா! வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டோம். ஆனால் அவர் எங்களை ஏமாற்ற விரும்பவில்லை. மறுநாள் அரசாங்கத்துக்கு, ஐயாயிரம் ரூபாய் கடனுக்கு விண்ணப்பித்தார். பேங்கிலிருந்து ஏழாயிரத்துடன் கடன் வாங்கியதையும் சேர்த்து, பன்னிரண்டாயிரத்துக்கு சொந்தக் கார் வாங்கிக் கொடுத்தார்! இன்றைய அரசியலில் இப்படிப்பட்ட மனிதர் ஒருவரைப் பார்க்கவும் முடியுமா?''

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**
படம் : **கணேஷ்**

சக்திமான் தொடரைத் தடை செய்தால் என்ன?

● பெ. காசிராஜன், சேடப்பட்டி.

? ஊழல் வழக்குகளில் சிக்கியுள்ளவர்கள் தங்களுக்காக வாதாட, தமிழ் தெரியாத டெல்லி வக்கீல்களை நாடும்போது, குற்றப்பத்திரிகையைத் தமிழில்தான் தர வேண்டும் என்பது நியாயமா?

! இதை நீங்கள் உங்களூர்க்காரரிடமே கேட்கலாமே!

● சு. சுந்தையா, நாகர்கோயில்.

? பிரதமர் தாற்காலிக்கும் சோனியாவுக்கும் உள்ள இடைவெளி குறைந்து கொண்டே வருவது' உங்களுக்குத் தெரிகிறதா?

! நன்றாகத் தெரிகிறது. அந்தப் புண்ணிய காரியத்தை பா.ஜ. அரசே முன்னின்று நடத்தி வருவதும் கண்கூடாகத் தெரிகிறது!

● கே.வி. ராமன், சென்னை – 73.

? நோபெல் பரிசுத் தொகையை அமார்த்தியா சென் இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் கல்வியும் சுகாதாரமும் முன்னேறுவதற்காக நன்கொடையாக்கியிருக்கிறாரே... தங்கள் கருத்து?

! அவருடைய கருத்துகள் அவருடைய நன்கொடையைவிட மதிப்பு மிக்கவை. அவற்றை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாகச் சொல்வதோடு நில்லாமல் செயல்படுத்திக் காட்டினால் நம் தேசம் உருப்படும்.



• உருப்பட வழி...

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் – 4.

? கடற்படை தளபதி விஷ்ணு பகவத் டிஸ்மிஸ் செய்யப்பட்டது குறித்து?

! பி.ஜே.பி. ஆட்சியில் நடந்துள்ள அனுசிதமான காரியங்கள் பலவற்றில் ஒன்று. தவிர்த்திருக்க முடியும். தடையாக இருந்தது 'ஈகோ' பிரச்னைதான். அதிலும் பாதுகாப்புத் துறையில் குழாயடிச் சண்டை அளவுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது மிகவும் ஆபத்தானது.

● ஆர்.எஸ். லக்ஷ்மி, வடவள்ளி.

? 'மக்கள் தண்டித்ததே போதும்; வழக்கு வேறு எதற்கு என்று ஊழல் அரசியல்வாதிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள் சொல்கிறார்களே...?

! ஊழல் அரசியல்வாதிகள் அப்படித்தான் சொல்வார்கள். ஊழலுக்காக ஓர் அரசியல்வாதி சட்டப்படி தண்டிக்கப்படுகிற முன்னுதாரணத்தை ஊழல் பெருச்சாளிகள் எப்படி விரும்புவார்கள்?



• கீட்ஸ் எதிரொலி!

● கு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? 'எம்.எல்.ஏ.க்கள் தொகுதிக்குச் செய்தது என்ன என்பதை பட்டியலிட வேண்டும்' என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கிறாரே...?

! எம்.எல்.ஏ.க்கள் தரும் பட்டியல் சரிதானா என்பதைக் காண திடீர் 'விசிட்' நடத்தப்படும் என்று சேர்த்து அறிவித்திருந்தால் பட்டியலில் பித்தலாட்டம் இராது.



• நியாயமான பேச்சு



• பா.ஜ.க. ஆதரவில்...

நீங்கள் கேட்டவை – தராசு



• தலைமைத் தளபதி...

• சோதனை திலகம்!

• ஆபத்து அறிகுறி!

● எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

? ரஜினி பெரியாரை இழிவுபடுத்தவில்லை என்கிறாரே கலைஞர்?

! ரஜினி பேசிய பேச்சு முழுவதையும் நான் கேட்டேன். யாரையும் அவர் இழிவுபடுத்தவில்லை என்பது உண்மைதான்.

● ஆர். சாலமன், ஆலங்குளம்.

? சக்திமான் டீவி தொடர் பார்த்த பிறகு விபத்தில் சிக்கி பலியாகும் சிறுவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறதே. பேசாமல் அரசு இத்தொடரைத் தடை செய்தால் என்ன?

! கருத்து சுதந்தரம் என்று வந்த பிறகு சென்ஸார், தடை முதலியன செல்லுபடியாகாது. பெற்றோர்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நிகழ்ச்சிகளைப் பார்க்கத் துடிக்கும் குழந்தைகளிடம் பேசி யதார்த்தம் வேறு, கற்பனை வேறு என்று உணர்த்த வேண்டும்.

● பு. ப. சந்திரன், இராசி புதுப்பட்டி.

? கடந்த ஆண்டு யாருக்குச் சோதனையான ஆண்டு...?

! பிரதமருக்கு - அதனால் ஒவ்வொரு இந்தியனுக்கும்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.

? 'இந்துக்கள் விஷயத்தில் அரசியல் கட்சிகள் பாரபட்சமாக நடந்து கொள்கின்றன' என்ற ராமகோபாலனின் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக நினைக்கிறீர்களா...?

! சிறுபான்மையினர் நலன் என்ற அக்கறைக்குப் பின்னால் அரசியல் கட்சிகளுக்கு அரசியல் நோக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்தத் தவறை இதை விடப் பெரிய தவறால் சரி செய்து விட முடியாது. Fanaticism is worse than political hypocrisy.

● ஆர். ராஜதுரை, சீர்காழி ☐

? பத்திரிகைத் துறை போன்ற தனியார் துறை ஊழியர்களுக்கு அரசு நிவாரணத் தொகை வழங்குவது அவசியமா? இது பத்திரிகையாளர்களுக்கு ஐஸ் வைக்கும் முயற்சியாகத் தெரிகிறதே...?

! நியாயமான கேள்விதான். மற்ற தனியார் நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படாத நிதியுதவிகள் பத்திரிகையாளர்களுக்கு மட்டும் வழங்கப்படுவது தவறு என்பதே தராசின் கருத்தும்.

● வ.தே.பா, சென்னை - 50.

? எழுத்தாளர்களின் நடன விமர்சனங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! தினமணியில் வெளியானவைதானே? நடையழகுக்காகவும் அரங்கின் சூழலை உயிர்ப்பித்துக் காட்டிய நேர்த்திக்காகவும் ரசித்தேன். ஆனால், விமர்சனங்கள் என்பதைவிட சிலாகிப்புகளாகவே அவை பெரும்பாலும் அமைந்தன.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? பார்லிமெண்டின் இரு சபைகளும் ஒரு மணி நேரம் நடைபெறுவதற்கு 32 லட்ச ரூபாய் செலவாகிறது என்று பார்லிமெண்ட் விவகாரத்துறை அமைச்சர் மதன்லால் குரானா தெரிவித்திருக்கிறாரே...? இந்த அளவுக்குப் பயனான விஷயங்கள் பாராளுமன்றத்தில் பேசப்படுகின்றனவா...?

! பல தினங்களில் 32 பைசாகூட பெறாத பேச்சுகள்தான் நடக்கின்றன.

● ஆர். வேணுகோபால், பெரியகுளம்.

? ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு சர்வதேசத் திரைப்பட விழா நடத்துகிறதே. இதனால் யாருக்கு என்ன பயன்...?

! கதை தேடும் உள்ளூர் சினிமாக்காரர்களுக்கு தர்ஜுமா பண்ண அஞ்சாறு ஐடியா கிடைக்குமேங்க!

● அனாமிகா, சிவகங்கை.

? 'ஒரு சிறப்பான எழுத்து என்பது ஆனந்தப்படுத்துவதைவிட அதிகமாய், படிப்பவனை அல்லற்படுத்தும்' என்கிறாரே ஜெயகாந்தன்...?

! 'Our sweetest songs are those that tell of the saddest thought' - சொன்னவர் கீட்ஸ்!

● கலை அரசு, கோவை - 42.

? அடுத்தத் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வால் வோட்டு வாங்க முடியுமா...?

! வோட்டு கிடைக்கும். ஆனால் சீட்டு கிடைக்குமளவுக்கு இருக்காது!

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்

ஆர். ராஜதுரை,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி 609 110

Estd : 1920 "கடலங்குடி"யின் ☎ 4343406

புத்தாண்டு/பொங்கலை முன்னிட்டு 1920-லிருந்து வெளியிடப்படும் ஒரிஜினல் காப்பிரைட் புத்தகங்கள் 10% தள்ளுபடியில் 05/2/99 வரை. உடன் வாங்கி பயன்பெறவும். ஆசிரியர்கள் பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள், ஜோதிட கலாநிதி டாக்டர் ஸ்ரீமதி K.N. சரஸ்வதி.

ஆன்மீகப் புத்தகங்கள் : பாதுகாப்புக்கான கவசங்கள் ரூ. 15/-; துணைபுரியும் தோத்திரங்கள் 15/-; அதிர்ஷ்டம் தரும் அஷ்டகங்கள் 15/-; சுகமளிக்கும் சூக்தங்கள் 15/-; அருள் சுரக்கும் அன்னை 15/-; கருணைகாட்டும் கந்தன் 15/-; கிருபை செய்யும் கண்ணன் 15/-; உடனே உருகும் உருத்திரன் 15/-; ஸௌந்தர்யலஹரி 20/-; சின்னச் சின்ன சுலோகங்கள் 20/-; இதிகாச புராணச் சுலோகங்கள் 15/-; வினை தீர்க்கும் தோத்திரங்கள் 15/-; வினை தீர்க்கும் விநாயகர் 18/-; ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம் 25/-; நவக்கிரக ஆராதனை 30/-; ஸ்ரீசுப்ரமண்ய பூஜாக்ரமம் (வள்ளி பரிணய மணிப்ரவாள சதகத்துடன்) 50/-; ஒன்பது நாள்கள் ஒன்பது கோள்கள் (சூரியன் முதல் கேதுவரை) 1 செட் 29/-; மகான்களின் வாழ்வும் வாக்கும் 20/-; ஆன்மீகமும் ஆத்ம சக்தியும் 22/-; சிறப்புத் திருத்தலங்கள் 9/-; ஜோதிர்லிங்கங்கள் 17/-; காஞ்சி மஹா சுவாமிகளின் அருள்வாக்கு 15/-; விவாஹ மந்திரங்கள் 25/-; தைத்திரியாரண்யகம் (சூரிய நமஸ்காரம்) 30/-; சாஸ்திரமும் மறையும் 9/-; ஸ்ரீமத் பாகவதம் (1 முதல் 7 வால்யூம்கள்) 1 செட் ரூ. 1050/-; ப்ரம்ம சூத்திர ஸ்ரீ சாங்கர பாஷ்யம் (1 முதல் 3 வால்யூம்கள்) 1 செட் ரூ. 1000/-; மந்திரப் பிரச்னம் 110/-; த்ரிவேதி ஸந்தியாவந்தனம் 50/-; நாராயணீயம் (செட்) (1 முதல் 5 வால்யூம்கள்) 100/-; உபநிஷத்துக்கள் – காடகோபநிஷத் 50/-; ஈசகேனோபநிஷத் 55/-; தைத்திரீயோபநிஷத் 110/-.

பொது நூல்கள் : தன் மதிப்பை உயர்த்த வழிகள் 15/-; சிநேகம் சிறக்கச் சிந்தனைகள் 10/-; உழைப்பின் உயர்வில் வாழ்வு 20/-; சகோதரிகளுக்கு 10/-; இயற்கை வைத்தியம் 10/-; பாரதி கண்ட புதுமைப் பெண் 7.50/-; திருமணம் 15/-; கண்களும் பாதுகாப்பும் 20/-; நம் ஈடில்லாத பாரத தேசம் 20/-; பதஞ்சலி யோக ஸூத்ரம் 45/-; உங்களுடைய இறப்பும் பின் பிறப்பும் 10/-.

சிறுகதைகள் : அறிவுக்கு விருந்து 4/-; பயனுள்ள கதைகள் 4/-; சுவையான கதைகள் 4/-; இனிக்கும் கதைகள் 10/-.

ஜோதிடப் புத்தகங்கள் : நஷ்ட ஜாதகம் 10/-; அஷ்டக வர்க்கம் 12/-; அங்க ஆருடம் 8/-; ஜோதிடமும் உங்கள் ஆரோக்கியமும் 10/-; சகுனங்கள் 25/-; உங்கள் ஆயுளை அறிய வேண்டுமா? 20/-; ஜாதகமும் உங்கள் தொழிலும் 30/-; ராசிகளில் கோள்களின் நிலைகள் 15/-; ஜோதிடமும் சமையற்கலையும் 20/-; உங்கள் நட்சத்திரம் 25/-; ஜாதக சந்திரிகை 25/-; ஸ்திரீ ஜாதகம் 25/-; கோசார கிரக பலன்கள் 20/-; யோகங்கள் பலவிதம் 12/-; பிரச்ன ஆருடபல நிர்ணயம் 35/-; **கே.என். எஸ்ஸின்** ஜோதிட அனுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் 25/-; ஜாதக தத்துவம் 45/-; ஸர்வார்த்த சிந்தாமணி 45/-; பராசரஸம்ஹிதை 25/-; புத்திர பாவத்தை அறிய வேண்டுமா? 18/-; உடுதசாபலன் 90/-; ஸாராவலி (மூன்று பாகங்கள்) 90/-; ஜினேந்திரமாலை 50/-; ஜாதகபலதீபிகா 60/-; பிருஹத் ஜாதகம் 120/-; ஜாதக துவாதச பாவ பல நிர்ணயம் 130/-; ஜாதகாலங்காரம் (2 பாகங்கள்) 140/-; தமிழ் அறுபது ஆண்டுகள் 7/-; மனையடி நூல் 40/-.

தள்ளுபடி கழித்துப் புத்தகங்களின் தொகையை M.O./D.D. அனுப்பினால் தபால் செலவு V.P.P. யில் அனுப்பப்படும். நேரிலும் பெறலாம். வெளிநாட்டோருக்கு விலைகள் தனி.

குறிப்பு : ஏஜெண்டுகளுக்குத் தனிக் கழிவு உண்டு. இதர எமது English வெளியீடுகள் பற்றி அறிய catalogue க்கு ரூ. 3/- Stamp அனுப்புக.

KADALANGUDI PUBLICATIONS

38, Natesa Iyer Street,

(Near T.Nagar Bus Terminus), Madras - 600 017.

E.Mail:sara@giasmd01.vsnl.net.in

Website: http//www.indiayellow pages.com/K.N.Saraswathy.htm

ஜோதிட கலாநிதி Dr. K.N. சரஸ்வதி வழங்கும் தபால் வழியில் ஓவியம் கற்க (தமிழில் மட்டும்) Prospectus ரூ. 24/- "Kadalangudi Art Centre" பெயரில் M.O. செய்க. வகுப்புகள் 5.2.99 அன்று ஆரம்பம். வெளிநாட்டவர் £2 uncrossed British Postal Order அனுப்பி விவரங்களை அறியவும்.

ஜோதிட கலாநிதி Dr. K.N. சரஸ்வதி வழங்கும் தபால் வழியில் ஜோதிடம் கற்க தமிழ் Prospectus ரூ. 25/- English ரூ. 25/. Kadalangudi Astrological Research Centre பெயரில் M.O. செய்க. வகுப்புகள் 5.2.99 அன்று ஆரம்பம். வெளிநாட்டவர் £2 uncrossed British Postal Order அனுப்பி விவரங்களை அறியவும். ஜோதிட கலாநிதி Dr. K.N. சரஸ்வதி அவர்களின் தம்கிலேயான ஜோதிட பலன்கள் மாலை 3 மணி முதல் 6 மணி வரை பார்க்கப்படும். By appointment only. Computer-ல் ஜாதகம் கணித்துத் தரப்படும்.

ஹைர ஹைர ஹைரோப்பா 14

ஃப்ரெஸ்காட்டியில், ஒளி வெள்ளத்தில் மிதந்த வண்ணம் அழகிய கதீட்ரல் ஒன்று கண் சிமிட்டியது. அந்தக் காலத்தில், ஏதோ போர், புரட்சி என்று போப் இந்த மலைப் பிரதேச தேவாலயத்தில் அடைக்கலம் புக, அவரது கண்காணிப்பில் உருவான எழில் மிகு கிராமம் ஃப்ரெஸ்காட்டி!

வழி எல்லாம் ஒவ்வொரு ஸிக்னலிலும், மும்பையை நினைவு படுத்தும் வகையில், சில மொராக்கோ அகதிகள் திடீரென்று முளைத்து, கார்கள் மீது சோப் நீரைப் பாய்ச்சி, கறுகறுவென்று துடைத்து, பள பளப்பாக்கி, கையை நீட்டினர். (காசுக்குத் தான்!)

பஸ்ஸை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, அது புகமுடியாத குறுகிய, நீண்ட மேட்டுப் பகுதியில் காலாற நடந்தோம்; ஏழு மணிக்கே, வழியிலிருந்த கடைகளில் முக்கால்வாசி மூடியிருந்தன. ஒன்றின் ஷோ கேஸில் நடராஜர் சிலை கூட இருந்தது! (இந்தியர் கடையோ?) எல்லா கடைகளிலும் அந்த ஊரின் பிரபலமான பிஸ்கட்டுகள் காட்சியளித்தன. ஷோகேஸில் காட்சிக்கு அடுக்கி வைக்குமளவுக்கு அப்படி என்ன விசேஷமாம்?

உலகத்தில் எங்கேயும் காண முடியாத ஓர் அரிய காட்சியை அந்த பிஸ்கட்டுகளில் காண முடிந்தது. மூன்று ஸ்தனங்களையுடைய பெண்ணை வேறு எங்கே பார்க்க இயலும்? அதுவும், ஒன்றரை அடி உயர, நிர்வாணப் பெண் உருவங்கள்!

பெண்களெல்லாம் வெட்கிக்க, ஏனையோர் கிக்கிக்க, விடுவிடுவென்று நடந்து, நாங்கள் உணவருந்த வேண்டிய ரெஸ்டாரண்டை அடைந்தால்.. அங்கே மூலைக்கொரு பிஸ்கட் பொம்மை!

'சரி, அண்ணாந்து பார்க்காமல் சாப்பிட்டுவிட்டுப் போனால் போகிறது' என்று நினைத்துக் கொண்டிருக்

வெட்கப்பட

கையில், தலையை நிமிரவே முடியாதோ என்று நினைக்குமளவுக்கு, இடுப்புக்குக் கீழ் நீண்ட அங்கியும், அதற்கு மேல் மிக மெலிதான, பனியன் போன்ற ஒரு 'லோ லோ', 'டாப்'புமாக, செழுமையான பெண் வெயிட்டர்கள்!

'இது கொஞ்சம் கிராமீய ஸ்டைலில் இருக்கும்' என அடிக்கொருதரம் மரியா சொன்னது இதைத்தானா? 'இப்போது பரவாயில்லை; வெயில் காலத்தில், மேலே இது கூட இருக்காது!' என்று மரியா எங்களிடம் கிசுகிசுத்தபோது, எல்லோரும் மயங்கியே விட்டோம்! (எத்தனை பேர் ஸம்மர் விஸிட்டுக்குத் திட்டமிட்டார்

• டேவிட் சிலை எதிரில் நாங்கள்




• சர்ச் ஆஃப் த ஃபேமஸ் டெட்!

களோ?)

'வாருங்கள்' என சிரித்த முகத்துடன் வரவேற்று, நீண்ட பெரிய டேபிள், பெஞ்சு களில் எங்களை அமர்த்திவிட்டு, 'இது வேண்டுமா, அது வேண்டுமா' என அன்பு டன் விசாரித்து, உபசரித்து, மேலும் கீழுமாக அவர்கள் நடை பயிலுகையில், பல இத யங்கள் குலுங்கின. எங்கள் அவஸ்தையை உணர்ந்தோ என்னமோ, சிறிது நேரத்துக்குப் பின் ஆளுக்கொரு ஷர்ட்டை மாட்டிக் கொண்டு வந்தார்கள்; பட்டனை மாட்ட மறந்தார்கள். கொஞ்ச நேரத்தில் சில ஆண் வெயிட்டர்களும் எதிர்ப்பட்டனர்; நிம்மதி யாயிற்று!

நம்மூர் 'நான்' டைப்பில் ஒரு சுவையான ரொட்டி கிடைத்தது; மற்றபடி பி(ட்)ஸா, பாஸ்தா வகையறாக்கள்தான். இங்கேயும் ஒவ்வொரு டேபிளுக்கும் ஒருவர் வந்து, 'உங்கள் விருப்பம்' கேட்டு பக்க வாத்தியங் களுடன் இசைத்தார். எல்லோரும் ''ஆஹா.. ஊஹூ'' என்று பாராட்டவே, முடிவில் தாம் பாடிய கேஸட்டுகளைத் தள்ளிவிட முயன்றார். Wine, dine and seranade பண்ணிய பிறகு, கடைசி யில் ஒரு ட்ரே நிறைய,

வைத்த பிஸ்கட் சிலைகள்!

ஒரு இஞ்ச் உயரமான குப்பிகளில் கறுப்பு, பிரவுன் திரவங்களை நிரப்பி எடுத்து வந்து, 'காபி? டீ?' என அசத்தினார்கள். வெறும் டிகாக் ஷன்தான்! பலர் அதை அப்படியே விழுங் கினார்கள்! உணவு முடிந்தபின் வாயில் வரை வந்து வழியனுப்பினார்கள். (வெறும் கையசைப்புத்தான்... நோ சிறப்புப் பரிசு.)

மீண்டும் 'பினட்டி பேலஸ்' வாசம். மறுநாள் 'பளிச்'சென்ற வெயிலைக் கண்டு பரவசமாகி, ரோமின் மிச்ச மீதிப் பகுதி களைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். அந்த ஊமை வெயிலுக்கே எல்லோரும்

ஜெயஸ்ரீ ராஜ்

'உஸ்' உஸ்'த்தது வேடிக் கையாக இருந்தது! ஓர் ஆரஞ்சு கலர் காட்டன் ஸல்வாரை 'இலேசான' உணர்வு டன் அணிந்து ('சிவசேனை யூனிஃபார்ம் போலிருக்கு' என்று நம் நாட்டில் நிராக ரிக்கப்பட்டது!) கிளம்பியபோது, அந்த நிறத்துக்கு இப்படி ஓர் ஆகர்ஷிப்பு அங்கே இருக்கும் என எதிர்பார்க்கவேயில்லை!

''லவ்லி ட்ரெஸ்; வண்டர்ஃபுல் கலர் கார்ஜியஸ் ஷேட்'' என்றெல்லாம் பலர் விமர்சித்தது ஆச்சர்யமாயிருந்தது. நம்மூர் ரிஜெக்ஷன்களுக்கு இங்கேயும், இவர்கள் தள்ளுபடிக்கு அங்கேயும் மவுசு போலும்!

கொலோசியத்தையும், அதன் பாழடைந்த சுற்றுப் புறங்களையும் ஒரு 'கைடு' சுற்றிக் காட்டினார். ஜூலியஸ் சீசர் காலத்து சச்சரவுகள், போர்கள்,

ரோமானிய மன்னர்களால் சிதிலமாக்கப் பட்டு அரைகுறையாய் நிற்கும் கட்ட டங்கள், புலியுடன் சண்டையிடவிடப் பட்ட கைதிகள்... இப்படிப்பட்ட விளக் கங்களுடன் பண்டைய ரோமாபுரிக் காட்சிகள்! ஸ்போர்ட்ஸ் காம்ப்ளெக்ஸாக மாறும் லட்சணங்களுடன், கொலோசியம் ரிப்பேர் செய்யப்பட்டு வருகிறது.

வெளியரங்கில் எக்கச்சக்க நடை பாதைக் கடைகள். நீக்ரோக்கள், தோலா லான ரோமாபுரி வீரர்களையும், குதி ரைகளையும், மரப்பாச்சி போன்ற பொம் மைகளையும் விற்றார்கள். இத்தாலியர்கள் நூறு ரூபாய்க்கு டி-ஷர்டுகளை, டூரிஸ்டுகள் தலையில் கட்டினார்கள். மிக கம்பீர அழகு டன், ப்ரவுன், கறுப்பு நிறத் தோல் குதிரை களைக் கடை பரப்பியிருந்த பாகிஸ்தானி ஒருவர், 'நீங்கள் இந்தியர்கள் என்பதால் உங்களுக்குக் குறைந்த விலையில் தரு கிறேன்' என்று சிநேகமாகச் சிரித்த வண் ணம் சொன்ன விலை ஆயிரம் ரூபாய்!

சந்து பொந்துகளில் இன்னும் ஏராள மான நீக்ரோக்கள், பாகிஸ்தானியர், பங்களாதேஷிகள் நடைபாதைகளில் லெதர் ஹாண்ட் பாக்குகள், ஜாக்கெட்கள், பவழம், க்ரிஸ்டல் மாலைகளை விற்றனர். "இங்கே குடிக்கும் நீரிலிருந்து சுவாசிக்கும் காற்று வரை எல்லாமே காஸ்ட்லிதான்" என அங்கலாய்த்தார் ஒரு பங்களாதேஷி!

அண்ணாந்து ஒரு முறை ரோமின் அழகுகளைக் கண்ணால்பருகி, மனத்தில் இருத்திக் கொண்டு, மதியம் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த ஊரான, ஃப்ளா ரன்சை நோக்கிப் பயணித்தோம். பூக்களுக் குப் பெயர் போன நகரம்.

பழைய டங்கன் ராஜ்ஜியத்தின் தலை நகரிது. உலகின் தலைசிறந்த ஐஸ்க்ரீம் கிடைக்குமிடமிது!- கொழுப்புச் சத்து அதிகமில்லாமல், சாப்பிடச் சாப்பிட, 'லைட்'டாக உணர வைப்பதுதான் இதன் சிறப்பம்சம்! இங்கேதான் உலகின் மூன்றா வது பெரிய சர்ச்சான 'தேவில்வா சர்ச்' இருக்கிறது. (முதலாவது ரோமில், இரண் டாவது லண்டனில்!)

நுழைந்ததும் வரவேற்றது, மைக்கேல் ஆஞ்சலோவின், பிரசித்தமான "டேவிட்" சிலையின் அப்பட்ட காப்பி! சிலை அற்



"யாரை வேணுமின்னாலும் கேட்டுப் பாருங்க! எங்க ஆபீஸிலே இதுவரை யிலும் லஞ்சமா ஒரு ரூபாய்கூட வாங்காத ஒருத்தன் இருக்கான்னா... அது நான் தான்னு எல்லாருமே சொல்வாங்க!"

"நல்லவேளை! இது தெரியாமே என் தங்கையை உனக்குக் கொடுக்கலாம்னு இருந்தேனே!"

— சீத்தா தம்பி

புதம்.

நாங்கள் முதலில் சென்றது ஒரு லெதர் வர்க்ஷாப்-கம்-ஷோ ரூமுக்கு! சின்ன லிப்ஸ்டிக் கேஸ் (ரூ.300) தொடங்கி, பெல்டுகள், பர்ஸ், ஹேண்ட்பேக்குகள், டாய்லெட் பாக்ஸ், ப்ரீஃப்கேஸ், ஸூட் கேஸ் (ரூ.10,000) வரையிலான சின்ன பெரிய தோல் சாதனங்கள், மிக அழகாக 'காட்சிக்கு' வைக்கப்பட்டிருந்தன.

தோல் மீது 'கோல்ட் லீஃப் வாக்' என்று, தங்க இழையில் மெலிசான ஜரிகை போன்ற வேலைப்பாடுகள் செய்வதெப்படி என்பதை விளக்கிக் காட்டினார்கள்; கூரிய கத்தி போன்ற ஒரு கருவியால், ஒரு பொன்னிறத் தூரிகையில் முக்கி எடுத்து, லெதர் மீது ஒரே கோடாக இழுக்கிறார்கள்; பளபளப்பான தங்க பார்டர் தயார்! பொன்னிறத்துக்கு ஆயுள் கால க்யா ரண்டி!

அருகிலிருந்த "Church of the famouse dead"க்கு சென்றோம்; கலீலியோ கோபர் நிகஸ், மக்யாவிலி, லியனார்டோடாவின்சி என்று விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் எல்லோரும் இந்த "சர்ச் ஆஃப் சாந்தா க்ரோசே"வில் ஒற்றுமையாக உறங்குகிறார்கள். இந்த பிரம்மாண்ட சர்ச்சுக்குள் நுழையும் போதே ஒரு அமா னுஷ்ய உணர்வு! அரையிருட்டும், மெழுகு வர்த்தி ஒளியும், சுவரில் மின்னும் போர்ட் ரெயிட்டுகளும்... ஊ ஊ என்று பின்னணி இசை ஒன்றைக் கற்பனையில் ஓடவிட் டால்... கொஞ்ச நேரம் நடுங்கலாம்!

அப்புறம் இரண்டு மணி நேரம் ஊரைச் சுற்றுங்கள் என அவிழ்த்து விட்டு விட்டார்கள்! அகண்ட சுத்தமான தெருக் களில் குடை தேவைப்படாத மெலிசான தூரலில், வரிசையாகக் கடைகளை மேய்ந் தோம். இத்தாலிய அழகுகளை எல்லாம் வண்ண ஓவியங்களாய்த் தீட்டிய மர வேலைப்பாட்டுத் தட்டுகள் அபார மாயிருந்தன. ஷூக்கள், செருப்புகள் அசாத்திய விலையில் அசத்தின!

தொலைந்து போவதற்கு ஏற்ற சின்னச் சின்ன சந்துகள் ஏராளம்! பிரதான சாலை களில் ஓரளவு நடமாட்டமிருக்க, சந்துகள் சுத்தமாக காலி. நடப்பதற்கே பயமாயிருந் தது!

இங்கேயுள்ள 'ஹோல்ஸேல்' மார்க்கெட் ஒன்றிற்குப் படை எடுத்தோம். முக்கால் வாசிக் கடைகளைப் பெண்களே நடத்து கிறார்கள். மத்தள வடிவ ஹாண்ட்பாக்கை, மனநிறைவுடன் இங்கே பேரம் பேசி வாங்க முடிந்தது. மும்பைக்கு இந்த மாடல் இன்னும் இறக்குமதியாகவில்லை.

களைப்பே தெரியாமல் மைல் கணக்கில் நடந்து விட்டு, நீலம் வயலட் கலரில் பழங்களெல்லாம் போட்ட தயிரை வாங்கிக் கொண்டு, இரவு 'ஹோட்டல் யுரோப்பாவை' அடைந்தோம்.

பூஃபே டின்னர்; வெள்ளைச் சாதத்தில் வயலட்நிற தயிரை ஊற்றிக் கொண்டு, ஸேமியா பாயசம் போலிருந்த 'பாரிட்ஜை' தொட்டுக் கொண்டு அன்றைய உணவை முடித்தோம்.

இந்த ஊரிலெல்லாம் 'ஸ்வீட்' என்றால், வெறும் 'சாக்லேட்டை' நீட்டுகிறார்கள். நம் மூரிலிருக்கும் விதவிதமான லட்டு, ஜாங்கிரி, மைசூர்பாக், பேடா, மலா பர்ஃபி, ரசகுல்லா...ஹூம்! மூச்! இனிப்பு களைப் பொறுத்தவரை இவை 'richly poor' நாடுகள் தாம்!

அடுத்த நாள்... உலக அதிசயத்தில் ஒன்றை நோக்கிப் புறப்பட்டோம்.

(தொடரும்)

"கீதம்"

"மேரேஜ் மேட்சிங் சென்ட்டர்"



உங்களுக்குப் பொருத்தமான
வாழ்க்கைத் துணை அமைய
விரும்புகிறீர்களா?
இன்றே... இப்போதே எங்களை
அணுகுங்கள்.



வேலை நேரம் :

காலை 10 மணி முதல்
மாலை 5 மணி வரை.
ஞாயிறு விடுமுறை.
பண்டிகை நாட்கள்
விடுமுறை

இந்து
முதலியார்,வேளாளர்
(அனைத்துப் பிரிவினர்)
மட்டும்

பதிவுக் கட்டணம்
ரூ. 250/- மட்டுமே!

முகவரி : திருமதி கீதா தெய்வசிகாமணி, (எழுத்தாளர்)
என் 8, 8வது ட்ரஸ்ட் குறுக்கு தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை - 600 028.
(சாந்தோம் ஹைரோடு மைலாப்பூர் ரிஜிஸ்டர் ஆபீஸ் பின்புறம்)
தொலைபேசி என்: 4933886 (BETWEEN 10 AM TO 5 PM ONLY)

எமது உளங்கனிந்த புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்


Estd 1959



உங்கள் இல்லத்து அனைத்து விசேஷங்களுக்கும்
பாத்திரங்கள் வாங்க ராசியான நிறுவனம்







சுந்தர் ஸ்டோர்ஸ்

பாத்திர வியாபாரம்

68, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை – 600 017
போன்: 4343834



ஒரு கல்யாணம் என்று பேச்சு எடுத்தாலே, உடனே பொருளாதார ரீதியில் நம்மைத் தயார் செய்து கொள்ளத் தொடங்குவோம். ''பணத்தளவில் தயாராவது முக்கியம் தான். அதை விட மனத்தளவில் தயாராவது வெகு முக்கியம்'' என்கிறார் மன நல மருத்துவர் சௌந்தர்ராஜன்.

''ஒவ்வொரு பெண்ணும் ஆணும் பலவித எதிர்பார்ப்புகளோடுதான் வாழ்க்கையைத் துவக்குகிறார்கள். அது பொய்த்துப் போனால் கசப்பு வளர்கிறது. ஆனால் சகிப்புத் தன்மையும் விட்டுக்கொடுக்கும் மனோபாவமும் வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்த்து விடும்.


''ஒரு பேருந்தில் போகிறீர்கள். நீங்கள் உட்கார இடம் கிடைத்து விடுகிறது. பெரியவர் ஒருவர் நின்று கொண்டு வருகிறார். உடனே எழுந்து இடம் கொடுக்க முடியும். ஆனால் அதுவே வெளியூர் பிரயாணத்தின்போது இருக்கையிலிருந்து எழுந்து நின்று இடம் கொடுப்பீர்களா? மாட்டீர்கள்! ஏனென்றால், நகர பஸ் பயணம் நிமிடங்களில் முடிந்து போவது. விட்டுக் கொடுக்கலாம். நெடுந்தூர பஸ் பயணம் என்பது வாழ்க்கையைப் போன்றது. இந்த நீண்ட பயணத்திலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தால்தான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும்.

''ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு பெற்றோர், ஒரு குழந்தை, ஒரு பெரியவர் ஆகியோர் இருக்கிறார்கள். இவர்கள் சமயத்திற்கேற்றார் போல் 'ரியாக்ட்' செய்கிறார்கள். அலுவலகம் கிளம்பிக் கொண்டிருக்கிறீர்கள். மூக்குக் கண்ணாடியை எங்கு வைத்தோம் என்று தெரியவில்லை. மனைவியிடம் கேட்கிறீர்கள். மனைவியின் மனதிலுள்ள 'பெற்றோர்' எப்படி 'ரியாக்ட்' செய்யும் என்றால், ''உங்களுக்கு இதே வேலையாகப் போயிடுத்து; எங்கேயாவது வைத்து விட்டு என்னைப் படுத்துவீர்கள்'' - இப்படித்தான்.

''குழந்தை மனதோ, என்னைத் தேடச் சொல்றீங்களே! என்று கெஞ்சிக் குரல் கொடுக்கும். ஒரு 'பெரியவரின்' மன நிலையோ, 'அந்தக் கண்ணாடியை மூன்றாவது தட்டில் வைத்து இருக்கிறீர்களே' என்று பாஸிடிவ்வாக வழி காட்டும்.

எல்லா சமயங்களிலும் 'பெரியவன்' மனப்பான்மையில் நாம் இருப்பதில்லை. இதுதான் கசப்புணர்வுகளுக்கும் எரிச்சலுக்கும் காரணமாகப் போய் விடுகிறது!

திருமண வாழ்க்கையின் மகிழ்ச்சி என்பது ஒருவருக்கு மற்றொருவர் மேல் உள்ள நம்பிக்கை, எதிர்பார்ப்பு, கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைகிறது.



• டாக்டர் சௌந்தர்ராஜன்

கல்யாணம் செய்து கொண்ட பின் மெள்ள மெள்ள ஒருவருக்கொருவர் பற்றிய சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளும்போது சில தடுமாற்றங்கள் வரலாம்.

தடுமாற்றம் காரணமாக வாக்குவாதமோ கடுமையான சண்டையோகூட நிகழலாம். இதனால் மண வாழ்க்கை அஸ்தமித்ததாக எண்ணி கலங்கிப் போவதுதான் ஆபத்து. நமக்கிருப்பதைப் போலவே எதிராளிக்கும் எதிர்பார்ப்புகள் உண்டு என்பதை நினைவில் வைத்துக் கொண்டு பிரச்னையை அணுகி ஆராய வேண்டும்.

அலுவலக வெற்றி முன்னேற்றத்துக்காகத் திட்டமிட்டு உழைப்பதில்லையா... அதைப் போல் மண வாழ்வின் வெற்றிக்கும் முயற்சி மேற்கொள்வது தவறில்லை. வீட்டில் அமைதியும் சந்தோஷமும் நிலவினால் உங்கள் வெளியுலக வாழ்க்கை வெற்றிகரமாகும்!"

மாமியார், நாத்தனார் போன்றவர்களுக்கும் வீட்டிற்கு வரும் பெண்ணுக்கும் உள்ள தொடர்பு என்பது பெரும்பாலும் ஒருவித உரசலோடுதான் இருக்கிறது. இதற்குக் காரணம் தாயின் 'possessive nature'தான். 'இத்தனை நாள் நான் வளர்த்தேன். இவள் வந்து அபகரித்துக் கொள்கிறாளே' என்று தாயின் (மாமியார்) மனத்தில் தோன்றுகிறது. இது உலகம் தழுவிய பிரச்னை.

இதைச் சுலபமாக மாற்ற முடியும். 'மருமகள் என்பவள் யார்? தன் மகனின் வாழ்க்கைத் துணை. தனக்குப் பின்னும் அவனை கவனித்துக் கொள்ளப் போகிறவள் என்கிற விஷயம் புரியுமானால் பிரச்னையே இல்லை!

புதிதாக வீட்டுக்கு ஒரு பெண் வருகிறாள். அவளை எப்படி உங்களில் ஒருத்தியாக ஒன்ற வைப்பது?

- புகழுங்கள். நிறையப் புகழப் புகழ உங்கள் மேல் அவளுக்கு அன்பும் மரியாதையும் தானாக வரும்.


- புரிந்து கொள்ளுங்கள். சிறிய குறைகளைப் பொருட்படுத்தாதீர்கள். அவசியமென்றால் குற்றம் சாட்டுவது போலல்லாமல் இதமாகத் தவறுகளைச் சுட்டிக் காட்டிப் புரிய வைக்கலாம்.

- உங்கள் வீட்டு விவகாரங்களிலிருந்து அவளை அந்நியப்படுத்தாதீர்கள். அதாவது நீங்கள், உங்கள் மகன், மகள், கணவர்/மனைவி ஆகியோர் மட்டும் கூடிப் பேசுவது கூடாது. எந்த விஷயத்திலும் மருமகளாக வருபவளிடம் கருத்துக் கேட்கலாம். 'அவளுக்கு என்ன தெரியும்? சின்னப் பொண்ணு' என்கிற மனோபாவம் கூடாது.

- சில அடிப்படை நாகரிகங்கள் வேண்டும். உதாரணமாக, நம் வீடுதானே என்று இயல்பாக மகனும் மருமகளும் தனித்திருக்கும்போது உள்ளே நுழையாதீர்கள். கதவைத் தட்டுவதோ, லேசாகக் குரல் கொடுத்துக் கொண்டே செல்வதோ முக்கியம்.

- புதிய ஜோடி அடிக்கடி வெளியே சுற்றப் போவதையோ, நிறைய 'ஷாப்பிங்' பண்ணுவதையோ விமர்சிக்காதீர்கள். பொறுப்பு தன்னால் வரும். கவலை வேண்டாம்.

- மருமகள் இருக்கும்போது மகனைக் கொஞ்சுவதோ, அன்பு பொங்கி, உணவை ஊட்டி விடுவது போன்ற காரியங்களோ வேண்டாம். என்ன ஆனாலும் உங்கள் மகன்தான்! அதை நீங்கள் யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.



— ப்ரியன்

புன்னகைத்தால் போதும்!



"இந்தத் தெருவுல அமைச்சர்கள் அதிகமா...?"

"ஏன்?"

"பழைய பொன்னாடைகளுக்கு எவர்சில்வர்னு பாத்திர வியாபாரி கூவிக்கிட்டே போறாரே!"

— காட்டாங்குளத்தூர் கிருஷ்ணரத்னம்

"சார்! கேடி கந்தசாமிக்கு நாம் அதிகமா இடம் கொடுத்திட்டோமோன்னு தோணுது!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"நீங்க, அவனை தினமும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து கையெழுத்து போடச் சொன்னதை, அவன் எல்லார்கிட்டேயும் இன்ஸ்பெக்டர் என்னோட விசிறி, அதனால தினமும் என்கிட்ட ஆட்டோகிராப் கேட்கறார்னு சொல்லிட்டுத் திரியறான்."

— மதுரை என். உஷாதேவி





"உங்க ஆபீஸ்ல லஞ்சத்துக்குப் பஞ்சம் இல்ல போலிருக்கே...?"

"எதை வச்சு அப்படிச் சொல்றீங்க?"

"உங்க பக்கத்துல உட்கார்ந்திருக்கிற கிளார்க் நூறு ரூபாய் நோட்டைச் சுருட்டி காது குடையறதை வச்சுத்தான்!"

— சென்னை பானு

"மாப்பிள்ளைக்கு ரொம்ப பசி போல!"

"எப்படி சொல்றே?"

"பெண் பார்க்க உள்ளே நுழைஞ்சதும் 'டிபன் ரெடியா'ன்னு கேட்கறார்!"

— அம்பை தேவா





"நீங்க எழுதி ஜோக் பத்திரிகையில் பிரசுரம் ஆயிடுச்சே. அப்புறம் ஏன் கவலையா இருக்கீங்க சார்?"

"ஏதோ தொலைந்து போகட்டும்னு ஒரு ஜோக் பிரசுரம் செய்துள்ளோம். தொடர்ந்து சுத்தை சுத்தையா ஜோக் எழுதி அனுப்பி கழுத்தறுக்க வேண்டாம்னு எடிட்டர்கிட்ட இருந்து கடிதம் வந்திருக்கே!"

— பொள்ளாச்சி கே. சித்ரா



"சாப்பிடும்போது கூட உன் கணவருக்கு ஆபீஸ் ஞாபகமா? எப்படிச் சொல்றே?"

"உப்பு வேணும்னு கேட்டுட்டு டைனிங் டேபிளுக்குக் கீழே கையை நீட்டறார்!"

— நெ. இராமன்

"நீங்க எழுதிட்டு வர கிரைம் தொடர் பற்றி நீங்களே புகார் கொடுக்கணுமா? ஆச்சர்யமா இருக்கே...!"

"ஆமா சார், உண்மைக் கொலையாளி யாருன்னு எனக்கே தெரியலை... சீக்கிரம் கண்டு பிடிச்சுச் சொல்றீங்களா? கதையை முடிக்கணும்!"

— எஸ். மீனலோசனி





"வீட்டில் ரெண்டுக்கும் நாலுக்கு மிடையே பயங்கரத் தகராறு. ஒண்ணும் மூணும் சேர்ந்து ஒரு மாதிரி சமாதானப் படுத்திட்டாங்க!"

"விடுங்க ஸார்! எப்பப் பார்த்தாலும் உங்க நாலு மனைவிகளைப் பத்தியே பேசிக்கிட்டு...!"

— உ. ராஜாஜி

HALE & HEALTH **R.R. NATURA** NATURES WEALTH

52, Konnur High Road, 1 Floor, Ayanavaram, Chennai - 600 023

Manufacturers of Siddha Medicines - Made out of Herbals only - Coming to Market with Drug Manufacturing Licence

Hair Care (Hair oil) - பேன் மற்றும் பொடுகை நீக்குகிறது. தலைமுடி கொட்டுவதைத் தடுப்பதோடு முடி வளரவும் உதவுகிறது. மேலும் முடியை கருப்பாகவும், மிருதுவாகவும், பளபளப்பாகவும் ஆக்குகிறது.

Face Glow - முகத்திலுள்ள பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கம், கண்களைச் சுற்றி கருவளையம் ஆகியவற்றை போக்குகிறது. முகத்தை மிருதுவாகவும், பளபளப்பாகவும் ஆக்குவதோடு முகத்தை சூரியனின் ஒளிக்கதிர்கள் தாக்காமலும் காக்கிறது.

Hairclecon - பேன், பொடுகு, எண்ணெய், அழுக்கு, எண்ணெய்ப்பசை ஆகியவற்றை முடியிலிருந்து நீக்கி முடியை மிருதுவாகவும், சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும், கருப்பாகவும் ஆக்கி முடியை அலை அலையாக இருக்கும்படிச் செய்கிறது.

Obeslim - தளர்ந்து தொங்கும் தோல் பகுதியைக் குறைப்பதோடு, தோலிலுள்ள கொழுப்பு, ஊளைச்சதை, இரத்தத்திலும் பித்த நீரிலும் உள்ள கொழுப்பு, மூட்டு வலி, முதுகு வலி, முழங்கால் வலி ஆகியவற்றைப் போக்குகிறது. சரியான உடல் வாகினையும், சுறுசுறுப்பாகவும் இருக்க உதவும்.

Diacare - சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அதன் தீய விளைவுகளிலிருந்து நம்மைக் காக்கிறது.

Easetense - இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.

Liver Forte - கல்லீரல் நோய்களைக் குணப்படுத்தி கல்லீரலை சுறுசுறுப்புடன் செயல்படச் செய்கிறது.

Wheezcare - சுவாச சம்பந்தமான நோய்களையும், ஆஸ்துமா மற்றும் சிரமத்தோடு இரைந்து மூச்சுவிடுதல் ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது.

Carditone - இருதயத்தை பலப்படுத்தி மாரடைப்பு வராமல் தடுக்கிறது.

தகுந்த முதலீடும், இதுபோன்ற மருந்துகளை வியாபாரம் செய்யக்கூடிய திறமையான வியாபாரிகளும், வியாபார ஸ்தாபனங்களும் மேலும் விபரங்கள் அறிந்து கொள்வதற்கு மேலே குறிப்பிட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


P.R. ஜுவல்லரியில்

ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள்

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR,
CHENNAI - 17. PH: 4344442

TUESDAY HOLIDAY



அனைவருக்கும் இதயம் கனிந்த பொங்கல் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

விழாச்சலுகை: ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

மேஷம், விருச்சிகம்–பவழம் ● ரிஷபம், துலாம்–வைரம் ● மிதுனம், கன்னி–மரகதப் பச்சை ● கடகம்–முத்து ● சிம்மம்–மாணிக்கம் ● தனுசு, மீனம்–புஷ்பராகம் ● மகரம், கும்பம் –நீலம்

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் மோதிரம் விலை ரூ. 400/-. கார்னெட் மோதிரம் அணிந்தால் செல்வ வளம் பெருகும். படிப்பு, ஞாபகசக்தி, வியாபாரம் அதிகரிக்கும். அனைவரும் அணியலாம். நவரத்தின மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. **ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.** தபால் மூலம் ராசிக்கல் மோதிரம் பெற ரூ. 400/- இன்சூர் தபால் செலவு ரூ.50/-ஐ சேர்த்து ரூ. 450/-க்கு D.D. (or) M.O. அனுப்பவும். மெலிதான கம்பியில் அளவு அனுப்பவும். தெளிவான முகவரி எழுதவும். திருக்கணிதப் பஞ்சாங்கபட்டி கம்ப்யூட்டர் ஜாதகம் ரூ.50/ பெயர், பிறந்த நேரம், ஊர், தேதி எழுதி பதிவுத் தபால் கட்டணம் ரூ. 20/- சேர்த்து ரூ.70/-க்கு D.D. (or) M.O.அனுப்பவும். தபால் எழுதினால் முழு விபர பாம்லெட் இலவசமாக அனுப்புகிறோம்.

அநியாயமே! அட, அரசே!



• 'டெரரிஸ்ட்' படப்பிடிப்பில் சந்தோஷ் சிவன்



• ஸ்ரீராம்

எகிப்து நாட்டின் 'கெய்ரோ'வில் நடைபெறும் உலகத்திரைப்பட விழா, பெருமை வாய்ந்த ஒன்று. இவ்வாண்டு இங்கு நடைபெற்ற திரைப்பட விழாவில் நாற்பத்தைந்து நாடுகளிலிருந்து வந்திருந்த இருநூற்று இருபது திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அவற்றுள் சந்தோஷ் சிவன் இயக்கிய 'டெரரிஸ்ட்' திரைப் படத்துக்கு, மிகச் சிறந்த படத்துக்கான 'தங்கப் பிரமிடு' விருது தரப்பட்டது. சிறந்த இயக்குனருக்கான விருதும் சந்தோஷ் சிவனுக்கே கிடைத்தது.

நமது மத்திய அரசின் விருதுப் பட்டியலில் டெரரிஸ்டும் இடம் பெற்றிருந்தது. சிறந்த தமிழ்ப்படம் என்பது தவிர, எடிட்டிங்கிற்கான விருதும் டெரரிஸ்ட் படத்துக்கு வழங்கப்பட்டது.

இதுவரை டொராண்டோ, லண்டன், பாரிஸ் என்று பல்வேறு திரைப்பட விழாக்களிலும் டெரரிஸ்ட் திரையிடப்பட்டபோது ஏகப்பட்ட பாராட்டு கிடைத்தது. தவிர, இன்னும் இருபத்து மூன்று திரைப்பட விழாக்களில் திரையிடப்பட விருக்கிறது இந்தப் படம்!

உலக அளவிலும் தேசிய அளவிலும் இத்தகைய அமோக வரவேற்பைப் பெற்று, விருதுகள் பெற்று கௌரவிக்கப்படும் டெரரிஸ்ட் படம் தமிழக அரசால் உரிய முறையில் அங்கீகரிக் கப்படவில்லை என்பது வேதனையளிக்கும் நிஜம்!

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுக்கு 'டெரரிஸ்ட்' அனுப்பப்பட்டபோது, அது நடுவர் குழுவால் பார்க்கப்படாமல், அதற்கு முன்னதாகவே நிராகரிக்கப்பட்ட அநியாயம் நடந்திருக்கிறது!

காரணம்?

இந்தியாவில் மட்டுமின்றி, வேறு எங்கேயும் இல்லாத விசித்திரமான விதியொன்றைத் தமிழ்நாடு அரசு கடை பிடிப்பதுதான்!

விருதுக்கு அனுப்பப்படும் படங்கள் மூவாயிரம் அடி இருக்க வேண்டும் என்பது த.நா. அரசு விதி. டெரரிஸ்ட் படத்தின் நீளம் மூவாயிரத்துக்கு 222 அடிகள் குறைவு.

இந்தக் காரணத்தால் படம் நிராகரிக்கப்பட்ட விவரம் தெரிந்தவுடன், 'தேசிய அளவில் சிறந்த தமிழ்ப்படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட படத்தை, நிராகரிப்பது சரியில்லை. அந்த விதியிலிருந்து, இந்தப் படத்துக்கு விலக்கு அளித்து, நடுவர் குழுவின் பார்வைக்கு அனுப்ப வேண்டும்' என்று சந்தோஷ் சிவனின் நண்பர்கள் முயற்சி செய்தனர். திரைப்படக் கல்லூரி முதல்வரில் தொடங்கி, செய்தி மக்கள் தொடர்பு இயக்குனர், அந்தத் துறையின் அமைச்சர், முதலமைச்சரின் செயலாளர்கள் வரை அத்தனை பேரையும் சந்தித்தும் ஒரு பயனும் இல்லை!

"அரசாங்க விதியை மாற்ற முடியாது; விதி விலக்குக் கேட்டு விண்ணப்பம் கொடுங்கள், பரிசீலிக்கிறோம்; நான் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று சால்ஜாப்புகள் சொல்லப்பட்டது, சம்பந்தப்பட்டவர்களை மனவருத்தம் அடையச் செய்திருக்கிறது.

"படம் எவ்வளவு நீளமாக இருந்தால் என்ன? அது 'திரைப்படம்' என்ற பிரிவில் சென்சார் ஆகி, சர்டிபிகேட் அளிக்கப்பட்டிருக்கிறதா என்றுதானே பார்க்க வேண்டும்" – ஆவேசமாய்க் கேட்கிறார் படத்தின் இணை இயக்குனர் ஸ்ரீராம்.

'கலைஞர்' கவனிப்பாரா? ○

— மௌஷ்மி



நிஜமான அக்கறை! நிறைவான வாழ்வு!

• ஏ.எம்.எம். அருணாசலம்

சமீபத்தில் காலமான 'முருகப்பா' க்ரூப் அதிபர் ஏ.எம்.எம். அருணாசலத்தின் பொது நல நோக்கம் அபார மானது!

கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் என்று ஒரு ஊர். அங்கே முருகப்பா குரூப்புக்குச் சொந்தமான ரப்பர் தோட்டம் உண்டு. 'நியூ அம்பாடி எஸ்டேட்ஸ்' என்கிற இந்தத் தோட்டம் தான் முதன் முதலாக அவர்கள் வாங்கியது.

அடிக்கடி அங்கு போய் வந்த ஏ.எம்.எம். அவர்களிடம் திருவட்டார் பள்ளிக் கூடம் ஒன்றின் அவல நிலையை நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வட்டாரத்திலேயே இயங்கி வந்த நல்ல பள்ளிக் கூடம் அது! பொருளாதார சிரமங்களால் திணறிக் கொண்டிருந்தது. உடனே அந்தப் பள்ளிக் கூடத்தைத் தம்முடைய 'டிரஸ்ட்'டில் ஏற்றுக் கொண்டு பெரும் தொகை செலவிட்டுக் கட்டடங்கள் கட்டி மேம்படுத்தினார்!

காரைக்குடி அருகேயுள்ள அரியக்குடியில் திருவேங்கடம் உடையான் கோவில் உள்ளது. நானூறு ஆண்டுகள் பழைமையான இந்த ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் நடந்து கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளாகின்றன! ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகளை முடித்து, வரும் ஏப்ரல்-மே மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இந்தப் பணியைத் தம்முடைய வாழ்நாள் குறிக்கோளாகவே கொண்டு 'அரியக்குடி பெருமாள் டிரஸ்ட்' மூலம் திருப்பணி மளமளவென்று நடைபெற முயற்சி எடுத்துக் கொண்டார் ஏ.எம்.எம். இட்ட மதிப்பீட்டுத் தொகை ஒரு கோடியும் வெகு சுலபத்தில் சேர்ந்து விட்டது!

ஏ.எம்.எம்முடைய சகோதரியும் சகோதரியின் மகன், மருமகளும் ஒரு விமான விபத்தில் பலியானது பெரிய சோகம். வாரிசு இல்லாமல் போய்விட்ட அவர்களின் சொத்துக்களை அப்படியே 'உமையாள் ஆச்சி அருணாசலம் டிரஸ்ட்' என்று உருவாக்கிக் கல்விப் பணிக்குக் காணிக்கையாக்கிவிட்டார். இதன் மூலம் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் அமைந்தன. பயிற்சி பெற்ற செவிலியர்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை என்று டாக்டர்கள் எண்ணியபோது, ஆவடியில் ஒரு 'நர்ஸிங் கல்லூரி'யையே தொடங்கினார் ஏ.எம்.எம்.! போன டிசம்பர் மத்தியில் தான் வில்லிவாக்கம் அருகே ஒரு கிராமத்தில் மருத்துவ சேவை மையம் ஒன்றை 'உமையாள் ஆச்சி நர்ஸிங் கல்லூரி'க்காக ப. சிதம்பரம் தொடங்கி வைத்தார். இது தான் ஏ.எம்.எம். கடைசியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி.

அதற்குச் சில நாட்களுக்கு முன்னால், உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் தினமணி வணிக மணிக்காக ஒரு விரிவான பேட்டியை வழங்கியிருக்கிறார். அரசியல் தொடர்பாக மனந்திறந்து பல செய்திகளை வெளியிட்டது இந்தப் பேட்டியில்தான்.

FAIR and FIRM என்பதைத் தம் கோட்பாடாகக் கொண்டவர் ஏ.எம்.எம். அரசு, அரசியல்வாதிகள் உட்பட எவரிடமும் நியாயத்துக்குப் புறம்பாக மதிப்பீடுகளை விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து கொள்கிற போக்கே கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தார் ஏ.எம்.எம்.

தொழிலில், நிஜமான அக்கறைகொண்ட நிறைவான வாழ்வு அவருடையது. அவர் மரணம், தொழிலுலகத்துக்குப் பெரிய இழப்பு.

— சுப்ர.பாலன்

காண்ட்ராக்டர்களுக்கு உதவ

மொத்த திருமண செலவில் சுமார் பத்து சதவீதம் தரவேண்டும். யாருக்கு? கல்யாணத்தை காண்ட்ராக்டர்களிடம் விடுவதாக இருந்தால், அவர்களுக்கு! இத்தனை காஸ்ட்லியானாலும் காண்ட்ராக்டர்கள் முன்னின்று நடத்தும் திருமணங்கள் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன. என்ன காரணம்?

"முக்கியக் காரணம் இதுதான்: முன்பெல்லாம் அத்தை, மாமா, சித்தப்பா என்று ஒரு பெரும் உறவுப் பட்டாளமே கட்டுக்கோப்பாக இருந்து ஒரு கல்யாணத்தை நடத்துவார்கள். பொறுப்பைப் பலரும் பகிர்ந்து கொள்வதோடு, எல்லோருடைய மேற்பார்வையிலும் எந்த முக்கிய விஷயமும் விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. இப்போதுதான் உறவினர்கள் எல்லாம் வெவ்வேறு ஊர்களில் பிரியாக இருக்கிறார்களே. இதற்கெல்லாம் ஏது நேரம்? தவிர திருமண சம்பிரதாயங்கள் பற்றிய தெளிவு பலருக்கு இல்லை. என்னென்ன தேவை என்பது பற்றியெல்லாம் யாருக்கும் யோசித்து, நிதானமாகச் செயல்பட நேரம் இருப்பதில்லை" என்கிறார் 'யுனீக் மேரேஜ் சர்வீஸஸ்' என்ற அமைப்பை நடத்தி வரும் மோகன்.



• மோகன்

திருவாரூரில் மிகச் சிறு வயதிலிருந்தே ஊரில் யார் வீட்டுத் திருமணமாக இருந்தாலும், குதிரை வண்டியை ஏற்பாடு செய்வதிலிருந்து பரிமாறுவது வரை பல உதவிகளைச் செய்து வந்தாராம். பின்னாளில் "இதையெல்லாம் மத்தவங்க வீட்டுக் கல்யாணத்துக்கு ஒருத்தன் செய்யறான்னா, அது காரணம் இல்லாமலா இருக்கும். தேன் எடுத்தவன் புறங்கையை நக்க மாட்டானா?" என்று சிலர் கூறியதைக் கேட்டதும் முடிவெடுத்திருக்கிறார் – இப்படிப் பேச்சு கேட்டுக் கொள்வதை விட, கமிஷன் பெற்றுக் கொண்டு இதை பிஸினஸாகவே செய்யலாமே என்று.

தங்களைப் போன்றவர்களின் அத்தியாவசியத்தை விளக்கும் வகையில் சில சம்பவங்களைக் குறிப்பிட்டார்.

"அண்ணன் தங்கை இருவருமே பிஸியான டாக்டர்கள். அண்ணனின் மகளுக்குத் திருமணம். திருமண நாள் நெருங்கிக் கொண்டிருக்க, 'அண்ணா, என்னால் கல்யாணத்துக்கு ஒருநாள் முன்னால்தான் வர முடியும் போலிருக்கிறது' என்று சங்கடத்துடன் அந்தத் தங்கை தொலைபேசியில் தெரிவிக்க, பொறுப்பான வேலை இருக்கிறது போலும் என்பதைப் புரிந்து கொண்ட அந்த அண்ணன் எங்களிடம் திருமணப் பொறுப்பை விட்டிருப்பதைக் கூறி, கவலைப்பட வேண்டாம் என்றார்.

"இன்னொரு திருமணம். கலிபோர்னியாவில் வேலை செய்து கொண்டிருந்த இருவர் காதலித்து, கல்யாணம் செய்து கொள்ள முடிவெடுத்தார்கள். என்னைத் தொடர்பு கொண்டு திருமண ஏற்பாடுகளை செய்யச் சொன்னார்கள். திருமண அழைப்பிதழ் அச்சடிப்பதிலிருந்து, எல்லா வேலைகளையும் நான்தான் செய்தேன். அவ்வப்போது தொலைபேசியின் மூலம் ஆலோசனைகள் கேட்டுக் கொண்டேன். பதினெட்டாம் தேதி திருமணம் என்றால், அதற்கு முன் நாள்தான் அமெரிக்காவிலிருந்து பையனும் பெண்ணும் வந்து சேர்ந்தார்கள். ஜெர்மனியிலிருந்து ஸ்ரீரங்கம் வரை பரவியிருந்த அவர்களது உறவினர்களும் அன்றுதான் வந்து சேர்ந்தார்கள். திருமணம் முடிந்து, அதைப் பதிவுசெய்து கொண்டு, "ஒரு வாரம் கழித்து திருமணப் பதிவு சான்றிதழ்கள் வரும், அதை எங்களுக்கு அனுப்பிடுங்க" என்ற வேண்டுகோளுடன்

அடுத்த நாளே அமெரிக்காவுக்கு விமானம் ஏறினர். இந்த அளவில் இருக்கிறது எங்களது அத்தியாவசியத் தன்மை'' என்றார்.

கல்யாண ஸாஃப்ட்வேர்!



• ஜெயராமன்

குடந்தையில் பிறந்த ஜெயராமன் என்பவர், நடுவில் சில வருடங்கள் மத்திய தொழிற் பாதுகாப்புப் பிரிவில் பணி செய்தார். பிறகு அந்த அரசாங்க வேலையை ராஜினாமா செய்து விட்டு, சென்னை மேற்கு மாம்பலத்தில் 'ஜெய்மாஹி மேரேஜ் சர்வீஸஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறார்.

''எங்கள் நிறுவனத்தின் முதல் திருமணம் திருப்பதியில். பிறகு ஒசூர், மைசூர், பாண்டிச்சேரி, கடலூர், நெய்வேலி என்று பல நகரங்களிலும் திருமணங்களை வெற்றிகரமாக நடத்தி வருகிறோம்'' என்பவர் இந்தத் தொழிலில் தாம் சந்தித்த ஒரு இக்கட்டான அனுபவத்தைக் குறிப்பிடுகிறார்.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட அன்று சென்னையில் இரண்டு திருமணங்களை நடத்த ஒப்பந்தங்கள்! கடைகள் திடீரென்று மூடப்பட்டு விட, மாற்று ஏற்பாடுகளுக்காக வாகனத்தில் செல்லும் போது, இரண்டு வயதுக் குழந்தை ஒன்று அடிபட்டு உயிருக்குப் போராட, அதை மருத்துவமனையில் சேர்த்து விட்டு, பிறகு கல்யாண ஏற்பாடுகளையும் ஒரு வழியாகச் செய்து, குழந்தையின் உடல்நிலை தேறிய பிறகுதான் உயிர் வந்ததாம்.

இன்றையச் சூழலில் திருமணத்தில் பல்வேறு விஷயங்களையும் பார்த்துக் கொண்டு, விருந்தினர்களையும் உபசரிப்பதென்பது பெண் வீட்டாருக்கு மிகவும் சிரமம். அந்த விதத்தில் தாங்கள் பெரும் உதவியாக இருப்பதாகக் கருதுகிறார் ஜெயராமன்.

''சொல்லப் போனால் நான் சமையல் துறை வல்லுனரே அல்ல. ஆனால் தீவிர சாப்பாட்டுப் பிரியன். இதனால் உணவில் குறை நிறைகளைச் சரியாகக் கணிக்கும் திறமை எனக்கு இயல்பாகவே உண்டு.

தவிர திருமணம் என்பதை சுவையூட்ட அங்கங்கே சில ஸ்பெஷாலிட்டிகளைச் சேர்ப்பது வழக்கம். வெளிநாட்டு வரன் என்றால் அழகாகப் பின்னப்பட்ட மூங்கில் தட்டுகளில் பட்சணங்கள் வைத்து செலொபென் தாள்களால் சுற்றி வைப்போம். உள்ளூர்க்காரர்கள் என்றால் எவர்சில்வர் தட்டுகள் – பின்னாளில் உபயோகப்படும். வாசலில் வைக்கப்படும் கல்கண்டு கிண்ணத்தைக் கூட மூடி வைத்து விட்டு குறிப்பிட்ட நேரத்தில்தான் திறந்து வைப்போம். சாம்பார், ரசம் போன்ற கொதிக்கும் ஐட்டங்களில் பேக்டீரியா இருக்க வாய்ப்பில்லை. மற்றபடி சட்னி மோர் போன்ற தண்ணீர் சேர்க்கும் ஐட்டங்களில் மினரல் வாட்டரைப் பயன்படுத்தும்படி யோசனை சொல்வேன்'' என்றார் மோகன். யோசனைகள் இத்தோடு நின்று விடுவதில்லையாம்.

இப்போதெல்லாம் ஜானவாசம், ரிசப்ஷன் இரண்டையும் திருமணத்திற்கு முந்நாளே நடத்தி விடுகிறார்கள். செலவும் மிச்சம். என்றாலும், 'கட்டுசாதம்' என்ற சம்பிரதாயம் குறித்துத் தயங்குபவர்களுக்கு ''கவலை வேண்டாம். பிள்ளை, பெண் இருதரப்பு வீடுகளுக்கும் அன்று நாங்களே சென்று கட்டுசாதம் டெலிவரி செய்து விடுகிறோம்'' என்கிறார்கள். சில கல்யாண மண்டபங்களில் உள்ள குறைபாடுகள் தெரிந்திருப்பதால் அவற்றைப் பற்றி எச்சரிக்கை செய்யவும் இவர்களால் முடிகிறது.

கான்ட்ராக்ட் எடுத்துக் கல்யாணங்களை நடத்த, விருந்தினர் எண்ணிக்கைக்கேற்பத் துல்லியமான செலவு/அளவுக் கணக்குகளைத் தரும் ஒரு ஸாஃப்ட்வேர் உருவாக்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னார் மோகன்.

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள்: ஸ்ரீஹரி

வாடிக்கையாளர்களுக்கு எமது உளங்கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

KS&Co

PONGAL SPECIAL OFFER!

KS&Co

ரூ 500க்கு மேல் பொருட்கள் வாங்கும்
வாடிக்கையாளர்களுக்கு 500 கிராம் "KS BRAND" பாஸ்மதி அரிசி
இலவசம். பிப்ரவரி 15, 1999 வரை இச்சலுகை

தரமான அரிசி, பருப்பு வகைகள் மற்றும் அனைத்து
டிபார்ட்மெண்ட் பொருட்களும் வாங்க சிறந்த இடம்

K. SUBRAMANIAM & Co

இந்தக் கூப்பனை கொண்டு வரும் நபர்களுக்கு மட்டுமே இச்சலுகை	47, SOUTH WEST BOAG ROAD & 21. NATESAN STREET, T.NAGAR, CHENNAI - 600017	4337516 4337526 4332647

VISA & MASTER CREDIT CARDS ACCEPTED

அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குணா கூந்தல் தைலம்

குணா கூந்தல் தைலத்தை தினசரி உபயோகித்தால்

☆ தலைமயிர் நீண்டு, கறுத்து, அடர்த்தியாய் வளரும்

☆ தலைமயிர் உதிர்தல், செம்பட்டை நிறம்,
இளம் பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு,
சொரிந்தால் செதில் உதிர்தல் குணமாகும்.

☆ ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஏற்றது
இயற்கை தரும் அதி உன்னத மூலிகைகளால்
சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்டது.



இப்பொழுது
100ml, 200ml
Packing - களில்
கிடைக்கின்றது.

வியாபார விசாரணைகளுக்கு கீழ்க்காணும்
முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு

Agasthiar Pharmaceuticals
P.Box No. 588, SALEM - 636 005.

இப்பொழுது எல்லா மளிகை, மருந்து மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கிறது.

பொதுவா ஸிடில இருக்கறவங்களுக்கு இயற்கையை ரசிக்கிற வாய்ப்பு ரொம்பக் கம்மின்னு சொன்னா, யாரும் பதில் பேசாம ஒத்துப்பாங்க. ஃப்ளாட் கல்சர், போக்குவரத்து நெரிசல், டீஸல் புகை, அழுக்கு பத்தியெல்லாம் ஒண்ணுங்கிழ ஒண்ணா வார்த்தைகளை அடுக்கி நிறைய கவிதைகள் பார்த்தாச்சு. But, இருக்கற கொஞ்சநஞ்ச அழகை நாம கவனிக்கறோமான்னு யோசிச்சிப் பார்க்கலாம். என்னடா இப்படி ஒரே சீரியஸா பேசறாளேன்னு தோணுதா? நத்திங்! போன மாசத்துப் பனி உருவாக்கின ஜுரம் இது!

என் வீட்டுலேருந்து காலேஜ் போற வழில ஒரு குட்டி மலை இருக்கு. டெய்லி பஸ்ல போற போது கண்ல படறதுதான். ஆனா கூர்ந்து கவனிச்சதில்லை. கொஞ்ச நாளா அதிகாலை பஸ் பிடிக்க வேண்டிய கட்டாயம். ஜன்னல் ஓரத்து சீட் அப்ப சுலபமா கிடைச்சுடும். டிராஃபிக் நெரிசல் இல்லாத ரோடுல டிரைவர் ஒரு 'சோழவரம்' நடத்திட்டிருப்பார். அந்த மலைப் பக்கம் பஸ் கடக்கறது மொத்தமே இருபது செகண்ட்ஸ்தான். அந்தக் கொஞ்சூண்டு நேரத்துல, அந்த அதிகாலைக்குன்னு மலை ஒரு பிரத்யேகமான face எடுத்து மாட்டிக்கறதை கவனிச்சேன். (யூஷுவலா பார்க்கக் கண்றாவியா, அங்கங்க வெடி வெச்சு, கல் உடைச்ச பள்ளங்களோட, எருமை மாடு மேஞ்சிட்டிருக்கும்.)



ஒரு மலையின் அதிகாலை முகம்...

அந்த அதிகாலை, வெளேர்னு உச்சில பனி மூடிட்டிருக்கும். ஒரே ஒரு மரம் மட்டும் அங்க காலி ஃப்ளவர் வெச்சா மாதிரி தெரியும். பனி மூட்டம்னா சொன்னேன்? இல்லை... லேசா நகர்ந்துட்டிருக்கும். அசப்புல அந்த மலையே சுருட்டு பிடிக்கறாப்பல இருக்கும்! பக்கத்துல ஒரு மிலிட்டரி கேம்ப் இருக்கு. ஜவான்கள் டொம் டொம்னு டம்மி குண்டு வெச்சு ஷூட்டிங் ப்ராக்டிஸ் பண்ற சப்தம் கேட்கும். சட்டுனு ரெண்டு பறவை கடந்து மறையும். (அநேகமா காக்காவாத்தான் இருக்கும்.)

பத்துப் பதினஞ்சு நாளா தினமும், 'ஒரு நாளாவது அதிகாலை இங்க வந்து உட்கார்ந்து இந்த column எழுதிப் பார்க்கணும்'னு தோணுது. பார்க்ல உட்கார்ந்து கதை எழுதற அனுபவம் பத்தி அசோகமித்திரன் ஒரு முன்னுரைல எழுதியிருந்ததைப் படிச்சிருக்கேன். But, எனக்கு வாய்ச்சது ஒரு மூடிய அறை, டேபிள்-சேர், வெளில லாரி சப்தம்.

* * *

சுந்தர ராமசாமியோட 'விரிவும் ஆழமும் தேடி' (போன வாரம் ரிலீஸானது) – முன்னூறு பக்க பேட்டி – கட்டுரை – விமர்சன – கடிதத் தொகுப்பை ஒரே மூச்சா படிச்சு முடிச்சேன். அவரோட 'ஜேஜே' வேற யாருமில்லை; அவரேதான்ங்கற பேருண்மை தெரிந்தது. Great work.

இலக்கியம் பத்தி தீர்மானமான சில அபிப்பிராயங்களை சுரா. முன் வைக்கிறார். வணிகக் கலாசாரத்து மேல கடும் கோபம் வெச்சிருக்கார். சினிமா, விருது தரும் அமைப்புகள், ஜாலி பத்திரிகைகள், போலி அரசியல்வாதிகள் எல்லாத்தையும் – எல்லாரையும் நிக்க வெச்சு தோலை உரிக்கறார்.



"போட்டோ கிராபரைக் கட்டிக்கிட்டது வம்பாப் போச்சு!"

"ஏன்?"

"எந்த பெண்ணைப் பார்த்தாலும் 'க்ளிக்' 'க்ளிக்'னு சிரிச்சுடறார்!"

– அம்பை தேவா

"உங்களுக்கு இருந்த தோஷமெல்லாம் உங்க கல்யாணத்துக்கப்புறம் நீங்கிடுச்சாமே?"

"ஆமா! கடைசியா இருந்தது சந்தோஷம். இப்ப அதுவும் நீங்கிடுச்சு!"

– சத்யா முருகவேல்



சட்டுனு ரொம்ப மென்மையா காஃப்கா பத்தியும், எம். கோவிந்தன், சி.ஜே. தாமஸ், நாஞ்சில் நாடன் பத்தியும் அழகான அறிமுகங்கள் தரார். 'சகல உன்னதங்களையும் இந்த மண்ணில் முளைக்க வைக்க முடியும்'னு ஜோரா தன்னம்பிக்கை டானிக் குடுக்கறார். சின்ன வயசுல கம்யூனிஸ்ட் அனுதாபியா இருந்ததையும் அடிக்கடி கட்சி மேல சந்தேகக் கேள்வி எழுப்பிட்டே இருந்ததால உறுப்பினர் அட்டை கிடைக்காமல் போனது பற்றியும் போற போக்குல ஒரு தகவலா சொல்றார். கவிமணியை சந்திச்ச அனுபவம், மலையாள ரைட்டர் எம். கோவிந்தனை சந்திக்கப் போயிட்டு, அவர் வீட்டு வாசல் படி ஏறும் போது ஜிப்பால காக்கா அசிங்கம் பண்ணிட்டதால உள்ளே போகாமலே திரும்பி வந்துட்ட அனுபவம் – இப்படி எத்தனையோ சுவாரசியமான விவரங்கள்.

தமிழ்ல இது மாதிரி கதையும் அல்லாத, கட்டுரை மட்டுமேயும் அல்லாத ஒரு கதம்பத் தொகுப்பு வர்றது ரொம்ப அபூர்வம். (எனக்குத் தெரிஞ்சு, சுஜாதாவோட தொகுப்பு ஒண்ணு இது மாதிரி முன்ன வந்திருக்கு.) ஒரு எழுத்தாளரைப் பத்தி, அவரோட பன்முகப் பரிமாணங்கள் பத்தி வாசகனுக்கு முழுமையான அறிமுகம் கிடைக்க இது மாதிரி தொகுப்புகள் ரொம்ப உதவும்.

சுந்தர ராமசாமியோட இந்தத் தொகுப்பு தனிப்பட்ட முறைல சிலருக்கு வருத்தமும் சங்கடமும் தரலாம். (இலக்கியப் போலிகளை என்ன தாக்கு தாக்கறார்ங்கறீங்க?)

ஆனா, ஒரு நேர்மையான எழுத்தாளரோட வடிகட்டாத உணர்வுகள் இப்படி ஒட்டுமொத்தமா அனுபவிக்கக் கிடைக்கறது பெரிய விஷயம். தரமா எழுத, சிந்திக்க ஆசைப்படறவங்க எல்லாரும் அவசியம் படிக்க வேண்டிய புஸ்தகம் இது. (காலச்சுவடு பதிப்பகம், 151, கே.பி. சாலை, நாகர்கோவில் - 1. விலை ரூ. 120/-.)

* * *

'A'ன்னு குறுக்க பெரிய சைஸ்ல போட்ட நாலாந்தர மலையாளப்பட போஸ்டர்கள் கொஞ்ச நாளா அதிகம் கண்ணுல படாம இருந்தது. இப்ப மறுபடியும் நிறைய தென்பட ஆரம்பிச்சுடுச்சு. ரொம்பக் கேவலமான போஸ்ல போட்டோக்கள் – சாலை விபத்துகளுக்கு அதிக வாய்ப்பு ஏற்படுத்துது. இதெல்லாம் நம்ம ஜனநாயகத்தோட சில தீய விளைவுகள்ல ஒண்ணுன்னுதான் தோணுது.

இந்த மாதிரி போஸ்டர்ஸை கரெக்டா காலேஜ் காம்பஸ்களுக்கு எதிரே மட்டும் அதிகமா ஒட்டற அயோக்கியத்தனத்தைப் பொறுப்புள்ளவங்க பார்த்துட்டு இருக்கறது நல்லதில்லை. அட்லீஸ்ட், மகளிர் அமைப்புகள் மட்டுமாவது மறுபடியும் முழிச்சிக்கலாம்.

* * *

சுல்கில எனக்கு ப்ரமோஷன் குடுத்திருக்காங்க. இந்த வருஷம் ஹைதராபாத்ல நடக்கற Film festivalக்கு ஒரு ப்ரெஸ் பாஸ் வாங்கிக் குடுத்து போய்ப் பார்த்துட்டு எழுது சுமின்னு சொன்னாங்க, எடிட்டர். எட்டுத் திக்கிலேருந்தும் கலைச் செல்வங்களைக் கொண்டு வந்து சேர்க்கற வாய்ப்பு! ஸோ, கிளம்பறேன். அடுத்த வாரம் ஃபெஸ்டிவல் நியூஸோட சந்திக்கிறேன். பை!

— சுமி

பி.கு.: **This is not my usual joke... I'm serious...!**



மூட்டு வலியா? இனி கவலை வேண்டாம்!

மூட்டு வலி என்பது மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பை குறிக்கின்றது. இதனை கீழ்வாயும் என்றும் அழைப்பார்கள். வாதம், பித்தம், கபம் போன்றவைகள் கூடு வதாலும், குறைவதாலும் இந்நோய் உண்டாகிறது.

மூட்டு வலி பல வகைப்படும் அவைகள்

1. **வாதமூட்டு வலி** – வாயுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. வாயுப் பொருட்கள், பயிறு வகைகள், பருப்பு வகைகள், கிழங்கு வகைகள் முதலியன.

2. **பித்த மூட்டு வலி** – பித்தத்தை அதிகப்படுத்தும் உணவுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. டீ, காபி, மது, காரணமான உணவு வகைகள் முதலியன.

3. **கப மூட்டு வலி** – கபகுற்றம் மிகுதியான உணவுப் பொருட்கள் அதிகம் உண்பதால் கப மூட்டு வலி உண்டாகிறது. இனிப்பு பண்டங்கள், தயிர், இறைச்சி, நெய், எண்ணெய் பண்டங்கள் முதலியன.

4. **இதய கீழ் வாயு** – இதயத்தை நோய் கிருமிகள் தாக்குவதால் இதய மூட்டு வலி உண்டாகிறது. இதனால் ஜுரம், முழங்கால் மூட்டுகளில் வீக்கம், வலி, சூடு போன்றன தோன்றும். சோதனை செய்து பார்க்கும்போது இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

5. **மேக கீழ் வாயு**– விலை மாதர் உறவால் நோய் கிருமிகள் உடலில் பரவி மூட்டுக்களில் பாதிக்கின்றது. இதனால் மூட்டுக்களில் சீழ் பிடித்தல், வீக்கம், வலி, குத்தல், குடைச்சல் போன்றன இருக்கும்.

மூட்டு வலியின் அறிகுறிகள் – மூட்டுக்களில் வலி, குத்தல், குடைச்சல், வீக்கம், நடக்க இயலாமை, சுரம் போன்றவை காணப்படும். மேலும் எலும்பு தேய்மானம், சீழ்பிடித்தல் போன்றவையும் உண்டாகும்.

மூட்டு வலிக்கான மூலிகைகள்– வேப்பிலை, வில்வம், அத்தி, நாவல், அருகம்புல், அரசன், வாத நாராயணன், முடக்கற்றான், கீழாநெல்லி, முருங்கை போன்ற மூலிகைகளை பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பின் உரலில் போட்டு நன்கு இடித்துத் தூள் செய்து பின் சம அளவில் எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினமும் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு சுமார் மூன்று மாதம் செய்து வந்தால் எல்லா ரக மூட்டு வலிகளும் பூரண குணம் கிட்டும். சுமார் பதினைந்து நாட்களில் குணம் தெரிய ஆரம்பிக்கும்.

எண்ணெய் கலவை– தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய் ஆகிய மூன்றையும் சம அளவு ஒன்றாக கலந்து (சுமார் வகைக்கு 50 மில்லி) ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து ஒரு டீஸ் பூன் அளவு உள்ளங்கையில் விட்டு உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக நாவினால் நக்கி சாப்பிட வேண்டும்.

உணவு முறைகள் – தினம் காலை, அல்லது ஏதேனும் ஒரு வேளை பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழ ஜூஸ்கள், வெஜிடபிள் சாலட், ப்ரூட் சாலட் போன்றனவற்றில் ஏதேனும் இரண்டு அல்லது மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளவும். உதாரணம் பப்பாளி, மா, அன்னாசி, வாழை, பேரிட்சை நாவல், கொய்யா, மாதுளை, சப்போட்டா, தர்பூசனி, நொங்கு, இளநீர், பதனீர், தேங்காய், கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், கோவக்காய், பேரிக்காய் போன்றன உட்கொள்ளலாம்.

மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உண்பது நல்லது. இதிலும் ராகி கோதுமை, பார்லி, உளுவல் போன்ற தானியங்கள் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது முள்ளங்கி, அவரை, கேரட், பீட்ரூட், வாழைத் தண்டு, கத்தரி முருங்கை போன்றவைகளை பொறியல் அல்லது சூப் செய்து சாப்பிடுவது நல்ல பலன் அளிக்கும்.

மூட்டுக்களை பாதுகாக்கும் முறைகள் – எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் மூட்டுக்களில் எண்ணெய் சென்று நன்றாக செயல்படவும், மிருது படவும் செய்கின்றது.

சத்தான உணவுகள் உண்பது. மூட்டுக்களை பாதுகாக்கின்றது. மூட்டுக்களில் வீக்கம் ஏற்பட்டால் மூட்டுக்களில் விளக்கெண்ணெய் சிறிது தடவி ஐந்து நிமிடம் கழித்து உப்பை அல்லது அரிசி தவிடு அல்லது கோதுமை தவிட்டை சூடு செய்து பின் இதனை துணியில் முடிந்து ஒற்றடம் கொடுக்கலாம். பின்னர் சுக்கை தூள் செய்து வெந்நீரில் கரைத்து பற்று போட வீக்கம், வலி, குறையும். தினமும் காலை எழுந்தவுடன் இயன்ற அளவு தண்ணீர் குடிக்கவும்.

வாரம் ஒரு நாள் பகல் ஒருவேளை உணவை தவிர்த்தல் வேண்டும் ஒவ்வொரு வேளையும் 3/4 வயிறு ஆகாரமாக உட்கொள்ள வேண்டும்.

புகைத்தல், மதுவகைகள், குளிர் பானங்கள், காரமான உணவு, டீ, காப்பி போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

உடற்பயிற்சி

நடத்தல் உட்கார்ந்து எழுதல் குனிந்து நிமிர்தல், கை கால் விரல்களை, நீட்டி மடக்குதல், நின்ற இடத்தில் குதித்தல், ஓடுதல், நீந்துதல், மூச்சுப் பயிற்சி போன்றவைகள் சைக்கிள் ஓட்டுதல் முதலியன மூட்டுக்களை பலம் பெற செய்கின்றன. ஆகவே இதனை தினம் காலை, மாலை, சுமார் 20 நிமிடம் மெதுவாக செய்தல் நல்லது. சூரிய ஒளி தினமும் உடலில் படும்படி 10 நிமிடம் நிற்கவும். மேற்கூறிய முறைகளை பின்பற்றினால் எல்லாரக மூட்டுவலிகளில் இருந்தும் குணம் பெறலாம்.

தமிழகம் முழுவதும் முக்கிய நகரங்களிலும், மும்பை, புது டெல்லி, பெங்களூர் போன்ற தலை நகரங்களிலும் பிரதி ஒவ்வொரு மாதமும் டாக்டரை சந்தித்து மருந்து ஆலோசனை பெறலாம்.

முகவரி: Dr. M. SABAPATHY
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லீஸ், சென்னை – 600 010.
Ph: 642 76 38, 642 4285

மிஸ்டர் மிடில் கிளாஸ் அனுபவம்



கிரீம்ஸ் ரோடில் போய்க் கொண்டிருந்த மிஸ்டர் மிடில் கிளாஸ் ஒழுங்காய், ரோடோடு போயிருக்கலாம். 'ஓவிய, சிற்பக் கண்காட்சி' என்று போட்டிருந்ததைப் பார்த்து விட்டு, உள்ளே போனார். வருஷா வருஷம், தீவுத் திடலில் நடக்கிற சுற்றுலாக் கண்காட்சிக்குப் போய் மெகா சைஸ் டில்லி அப்பளம், ஹரியானா ஜமுக்காளம் என்று பழக்கப்பட்டவருக்கு, இந்த சிற்பக் கண்காட்சி ஆசையெல்லாம் வந்தது விதியின் சதி.



உள்ளே போனவரை வரவேற்றது ஒரு கல் பெண் முகம். சாதாரண பெண்ணாக இருந்தால், உடனடியாக அடுத்த ஐட்டத்துக்கு நடையைக் கட்டியிருப்பார். அந்தப் பெண் முகத்திலோ பல விசித்திரங்கள்! இடது காதில் ஒரு யானை, முன்நெற்றியில் ஒரு யானை. லாஜிக் படி பார்த்தால், வலதுபுறமும் ஒரு யானைதானே இருக்க வேண்டும்? ஆனால் கையில் ஒரு உளி சகிதம் பிள்ளையார் ஸ்டைலாக அமர்ந்திருந்தார்! பெண்ணின் முகத்திலே யானை எதற்கு என்பதே புரியாதபோது பிள்ளையார் எப்படி வந்தார் என்பது மட்டும் புரிந்து விடுமா என்ன?

பக்கத்தில் இன்னொரு பெண் முகம், அதே பாணியில். கடைந்தெடுத்தாற் போலப் பின் மண்டை. அதிலே ஒரு சிறுத்தை பொம்மை. இது என்னவாக இருக்கும் என்று மிடில் கிளாஸ் யோசிக்கத் தொடங்கியதும் அவரது பின் மண்டையில் ஏதோ ஊர்வது போல உணர்ந்தார்.

ஆங்காங்கே வரிசையாய் ஓவியங்கள்! கலர்களை அப்புவதில் காட்டின சிரத்தையை, இதைப் பார்க்கிறவன் புரிந்து கொள்ள வேண்டுமே என்பதில் காட்டாத இளமையான காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸ் ஆசாமிகள்! இன்னொரு டைப், புரியாத கலர் கலவைகளுக்கு 'லாண்ட் ஸ்கேப்' என்று போட்டு சமாளித்திருந்தனர்.

வெளியே வரும்போது அங்கிருந்த பார்வையாளர் புத்தகம் கண்ணில் பட்டது.


புரட்டினார்.

'உள்ளங்களின் பிரதிபலிப்பு; என் எண்ணங்களில் சிலதை இங்கு வண்ணங்களில் பார்த்தேன்' என்கிற ரீதியில் பல கமெண்ட்கள்!

"ம்... உங்கள் கமெண்ட்டையும் எழுதுங்கள்" என்றார் அங்கிருந்தவர்.

ஒரு நிமிஷம் சீரியஸாய் சிந்தித்து விட்டு, அர்த்தம் புரியாது போனாலும் ஏதோ ஒரு புதுக் கவிஞன், எப்போதோ எழுதிய வரிகளில் இரண்டு நினைவுக்கு வர, 'இவை மனங்களின் ஜ்வாலைகள்! எண்ணங்களின் புஷ்பங்கள்' என்று எழுதி விட்டு, 'குறிப்பாக அந்த வண்ணக் களஞ்சியமான நவீன ஓவியம்...' என எழுதி அதன் தலைப்பைப் பார்க்க மீண்டும் உள்ளே போனார்.... 'untitled' என்று சௌகரியமாக எழுதி வைக்கப்பட்டிருந்தது!

— மானஸா



தனிக்குடித்தனம் போறீங்களா? ஜல்சா மட்டுமில்லீங்க. பொறுப்பும் அதிகம்... எந்தெந்த விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்?

- தனி வீடு (அல்லது போர்ஷன்) பார்த்திருப்பீர்கள். ஆனால் அது உங்களுக்குத் தகுந்த வீடா என்பதைப் பற்றி ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துப் பாருங்கள். அது பாதுகாப்பான இடத்தில் அமைந்திருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். மனைவி வீட்டிலேயே இருப்பவராயிருந்தாலும் சரி, வேலைக்குச் செல்பவராயிருந்தாலும் சரி, இது மிக முக்கியம்.
- கணவனின் அலுவலகம் இருக்கும் பகுதியைவிட, மனைவியின் அலுவலகம் இருக்கும் பகுதியில் வீடு பார்ப்பது புத்திசாலித்தனம். ஏனென்றால் வீட்டில் அதிக நேரம் இருப்பதும், அதிக வேலை செய்வதும் பெண்தான். தினமும் பயணத்திலேயே அவளது பெரும்பாலான நேரம் கழிந்தால், வீட்டில் அலுப்பும் எரிச்சலும்தான் மிஞ்சும்.
- குழந்தை பிறந்தபின் தனியே போவதென்றால் இவை இரண்டையும்விட, க்ரஷ் அல்லது பள்ளிக்கூடத்தினருகே உள்ள பகுதிக்குத்தான் முன்னுரிமை.
- வீட்டில் தொலைபேசி இல்லையென்றால் தொலைபேசி உள்ள ஒரு அக்கம்பக்கத்து வீட்டிலாவது நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒரு அவசரத்துக்குத் தகவல் தொடர்பு கொள்ள உதவும். தொலைபேசி இணைப்பு கலபத்தில் கிடைப்பதாக இல்லையே என்பவர்கள், அதுவரை பேஜர் வைத்துக் கொள்ளலாம்.
- பொருளாதாரச் சூழல் தனிக்குடித்தனத்தைத் தாங்குமா என்பதை உணர்ச்சி வசப்படாமல் ஆராய்ந்து முடிவெடுங்கள். மனைவியின் அப்பா அல்லது உங்கள் நண்பர் மாதாமாதம் பண உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார் என்பதையெல்லாம் முழுவதும் நம்பி, தனிக்குடித்தன சோதனையில் இறங்க வேண்டாம்.
- காஸ் கனெக்ஷன், ரேஷன், பால் ஆகியவை பற்றியெல்லாம் நிச்சயம்

யோசித்திருப்பீர்கள். போதாது. ஒரு தாளை எடுத்து நீங்கள் வாங்க நினைத்திருக்கும் பொருள்களை (1) அவசரம்+அவசியம் (2) அவசியம்! ஆனால் அவசரமல்ல (3) இருந்தால் ஓகே. இல்லையென்றாலும் பரவாயில்லை - இப்படிப் பல்வேறு பகுதிகளாகப் பட்டியலிடுங்கள். அப்போதுதான் உடனடித் தேவை மற்றும் உடனடிச் செலவை அறியமுடியும். வரும் மாதங்களில் என்ன செலவுகள் காத்திருக்கின்றன என்பதும் புரியும்.

● தொடக்கத்தில் சில வசதிக் குறைவுகள் இருக்கலாம். ஆனால், இப்போதுள்ள வசதிகளில் பாதியாவது தனிக் குடித்தனத்தில் கிடைக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அல்லது அப்படி ஒரு நிலை வரும்வரை தனிக் குடித்தனத்தைத் தள்ளிப் போடுவதே நல்லது. ஏனென்றால் ஒரேயடியாக வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொள்வது மனச் சோர்வை அளிக்கும்.

● சில திடீர் அசௌகரியங்களுக்கும் மனத்தைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கூட்டுக் குடித்தனத்தில் டெலிபோன் பில், மின்சார பில், இன்சூரன்ஸ் ப்ரீமியம் போன்றவற்றை யாராவது பெரியவர்கள் பார்த்துப் பார்த்துக் கட்டிக் கொண்டிருப்பார்கள். இப்போது அதெல்லாம் உங்கள் தலையில் விழும்.

● வீட்டுப் பணியாள் எப்போது வேண்டுமானாலும் வந்து வேலை செய்பவராக இருக்கலாம். தவிர, வீட்டில் பலர் இருக்கும்போது திருட்டு போன்றவற்றுக்கான வாய்ப்புகள் குறைவு. இந்த நிலைகளில், தனிக் குடித்தனத்தின்போது மாற்றம் நேரக்கூடும். கவனமாக இருப்பது அவசியம்.

● "தனிக்குடித்தனம் வந்ததும் இவள் ஏன் எரிந்து விழுகிறாள்?" என்று கணவன் சலிப்பு கொள்ளும் நிலை ஏற்படலாம். உணர்வுகளை வெளியே (கொட்ட இப்போது சூழல் இடம் கொடுக்கிறதே! தவிர, வீட்டில் பலரிருக்கும்போது தெரியாத தனிமை, இப்போது பூதாகாரமாக உருவெடுக்கலாம். கணவன் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அலுவலகக் கட்டாயம் போன்ற தவிர்க்க முடியாத காரணமென்றால் மாற்றிக் கொள்ள வேண்டியது, மனைவியும்தான்.

● அதேபோல் அம்மா சமையலுக்குப் பழகிப் போன கணவனின் நாக்கு, மனைவியின் வித்தியாசமான கைவண்ணத்தைத் தொடக்கத்தில் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். அட்ஜஸ்ட்மெண்ட் தேவை.

● "ஐய, இப்படி முத்தல் காய்கறிகளை வாங்கிட்டு வந்து நிக்கறீங்களே?" என்று கணவனைக் கோபிக்க வேண்டாம். தனிக் குடித்தனத்தில் இன்னும் பல விஷயங்களில் அவனது அறியாமை வெளிப்படக் கூடும். பொறுமை தேவை.

● "குழந்தைக்கு ஜுரம்னா ஒரு கைவைத்தியம் கூடத் தெரிஞ்சுக்காம இருக்கியே" எனும் கணவனுக்கும் சகிப்புத் தன்மை தேவை.

● எந்த நோக்கத்திற்காகத் தனிக்குடித்தனம் வந்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள். இதன் மூலம் மற்ற எந்த இடர் மற்றும் கருத்து வேறுபாடு வந்தாலும் அதைச் சமாளிக்க முடியும், சந்தோஷமாக.

— குல்லு



ஒரு டஜன் கோடியில் ஒரு கோடி!...

இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு அந்தப் பசுமையான சூழ்நிலையில் கூடியிருந்தார்கள் அவர்கள். அத்தனை பேரும் சென்னை ஐ.ஐ.டி.யின் முன்னாள் மாணவர்கள். (1973 பேட்ச்).

"அந்த நாள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது என்பது மட்டுமல்லாமல், இந்த நாளில் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் இதுமாதிரி நிகழ்ச்சிகள் பயன்படுகின்றன. தவிர தங்கள் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இருந்த இந்த ஐ.ஐ.டிக்கு எந்தவிதத்தில் உதவ முடியும் என்பதை ஆராயவும் இது ஒரு சந்தர்ப்பம்'' என்றார் கேப்டன் சுப்ரமணியன். முன்னாள் மாணவர்கள் அமைப்பின் நிர்வாகச் செயலாளர். 1973 பேட்சின் அத்தனை பி.டெக் மாணவர்களும் அழைக்கப்பட, அதில் பாதிப் பேர் வந்திருந்தார்கள். இதுவே சந்தோஷமான விஷயம்தான். உலகெங்கும் சிதறியல்லவா கிடக்கிறார்கள் நம் ஐ.ஐ.டி. திறமைசாலிகள்!

சிவில், மெக்கானிக்கல், மெடலர்ஜி என்றெல்லாம் படித்ததாகச் சொன்னார்களே தவிர, யாரும் கம்ப்யூட்டர் பிரிவில் படித்ததாகச் சொல்லவில்லை. காரணம் வேறொன்றும் இல்லை. அப்போது ஐ.ஐ.டி.யில் கம்ப்யூட்டர் பிரிவு கிடையாது!

எந்த நோக்கத்தோடு ஐ.ஐ.டி.யில் சேர்ந்தார்கள்? அதில் எந்த அளவு நிறைவேறியுள்ளது?

"தஞ்சாவூரில் உள்ள கோதண்டராமபுரம் என்ற கிராமத்திலிருந்து இங்கு வந்து படித்தேன். தரமான கல்வி ஐ.ஐ.டி.யில் உண்டு என்பதுதான் காரணம். வெளிநாடுகளிலிருந்து வாய்ப்புகள் வந்தன. என்றாலும் பெரியதொரு குடும்பத்தில் நான் இருப்பதாலும், எங்களது ஆசார்யரின் எண்ணம் காரணமாகவும் நான் இந்தியாவிலேயே தங்கிவிட்டேன். எங்கள் 'செட்'டில் மெட்டலர்ஜி படித்தவர்களில் வெறும் மூன்று பேர்தான் டெக்னிகலாக இந்தத் துறையிலேயே செயல்படுகிறோம். பலரும் மேனேஜ்மெண்ட் பிரிவுக்கு மாற்றிக் கொண்டு விட்டனர்'' என்றார் கிருஷ்ணன் – வெல்டிங் என்ஜினியராகவும் சீனியர் கன்சல்டன்டாகவும் பணிபுரிபவர்.

ஜான்சன் விப்ட்ஸ் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குனராக உயர்ந்திருக்கும் தாமஸ், மெக்கானிக்கல் பிரிவைத் தேர்ந்தெடுத்தவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பெருமையாகக் கூறிக் கொள்கிறார்.


"அந்தக் காலத்தில் எங்களுக்கு இருந்த கொண்டாட்டமான மனநிலையும், போட்டியும் கும்மாளமுமான ஹாஸ்டல் வாழ்க்கையும் இந்தக் கால மாணவர்களுக்கு இல்லை என்றே தோன்றுகிறது. ரொம்ப பிஸினஸ்லைக் ஆகிவிட்டார்கள்" என்றார்.

"அதில் ஒரு தவறும் இல்லை. கடும் போட்டிக்கிடையே இப்போது அவர்கள் ஐஐடிக்குள் நுழைய வேண்டியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை ஐ.ஐ.டி.யில் படிப்பதே என் குறிக்கோளாக இருந்தது. ஆனால் இப்போது வருங்கால லட்சியம், என்னென்ன மாற்றுத் துறைகளில் பிரகாசிக்கலாம் என்பதையெல்லாம் கணக்குப் போட்டுக் கொண்டுதான் வருகிறார்கள். என்ன தப்பு?" எனும் சுபலட்சுமி, கல்கத்தாவாசி. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே சென்னை வந்திருக்கிறார்.


''வெளிநாட்டில் வேலை செய்வது பற்றி நினைத்துப் பார்த்தது கூட இல்லை" என்றவரிடம், "ஒரு பெண்ணாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணமா?'' என்று கேட்டோம்.

''அப்படிப் பார்த்தால் ஒரு பெண்ணா இருந்து கொண்டு பி.டெக் மெடலர்ஜியில்


• கிருஷ்ணன்



• கேப்டன் சுப்ரமணியன்



• தாமஸ்



"அந்தக் காலத்தில் சேர்ந்தது கூட ஒரு சாதாரண விஷயமில்லையே" என்ற சுபலட்சுமி, கல்கத்தா நிறுவனம் ஒன்றில் டெக்னிகல் அதிகாரியாக இருக்கிறார்.

சென்னை ஐ.ஐ.டி.யின் முன்னாள் மாணவர்கள் குழுவின் செயலாளரான ஓ.ஆர்.எஸ். ராவ் தங்கள் குழுவுக்காக இன்டர்நெட்டில் ஒரு வெப்ஸைட் தொடங்கியிருப்பதை ஸ்பெஷலாகக் குறிப்பிட்டார். லண்டன், அமெரிக்கா, நியூஸிலாந்து என்று பரவியுள்ள அந்நாள் ஐ.ஐ.டி. தோழர்கள் இதன் மூலம் தகவல் பரிமாறிக் கொண்டும், ஒருவரையொருவர் கிண்டல் செய்து கொண்டும் ஆனந்தப்படுகிறார்களாம்.

"ஆந்திராவில் எஸ்.எஸ்.எல்.சி. வரை தெலுங்கு மீடியத்திலேயே படித்த நான், ஐ.ஐ.டி.யில் சேர்ந்த பிறகுதான் ஆங்கிலம் உட்பட பிற மொழிகளின் அத்தியாவசியத்தையும், இளைஞர்கள் விசாலமான போக்கைக் கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் அறிந்து கொண்டேன். ஐ.ஐ.டி. சில விதங்களில் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அதற்குக் கைகொடுப்பதும் எங்கள் கடமை தானே" என்றார்.

• சுபலட்சுமி



• ராவ்



• தேஷ் பாண்டே



சில வருடங்களுக்கு முன் வரை ஐ.ஐ.டி.களுக்கான முழு நிதி உதவியையும் மத்திய அரசே ஏற்று வந்தது. "இனி ஓரளவு செலவைத்தான் அரசு செய்யும். கட்டணத்தை உயர்த்திக் கொள்வதோ, ஸ்பான்ஸார்களை நாடுவதோ உங்கள் பாடு" என்று மன்மோகன் சிங் அறிவித்து விட, பல செலவுகளைக் குறைக்கவேண்டிய நெருக்கடியிலிருக்கிறது ஐ.ஐ.டி.

தம்மால் இயன்ற உதவியாக ஒரு கோடி ரூபாயை அளித்திருக்கிறார் தேஷ்பாண்டே. ஒரு பெரும் வெற்றிக் கதை இவருடையது.

ஐ.ஐ.டி.யில் எலக்ட்ரானிக்ஸ் முடித்த கையோடு கனடாவுக்குச் சென்று பல்வேறு தொழில்நுட்பங்களை அறிந்தார். 1984-ல் பாஸ்டனுக்கு இடம் மாறினார். தொழில்நுட்பம் என்பது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை தன்னை முழுவதுமாகப் புதுப்பித்துக் கொள்ளும் என்பதை அறிந்தார். பிரபல மோடோரோலா நிறுவனத்தில் பணி புரிந்த போது இவரது ஐடியாக்களின் காரணமாக வியாபாரம் பல மடங்கு உயர்ந்தது. பிறகு சொந்தமாக கோரல் நெட்வொர்க்ஸ் மற்றும் காஸ்கேட் கம்யூனிகேஷன்ஸ் ஆகிய நிறுவனங்களைத் தொடங்கினார். "ஒவ்வொரு கம்ப்யூட்டரும் வருங்காலத்தில் இணைக்கப்படும். டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் மாதிரியே கம்ப்யூட்டர் எக்ஸ்சேஞ்சும் காலத்தின் கட்டாயமாகி விடும்" என்பதை எதிர்பார்த்த இவர், அது தொடர்பான சில புது ஐடியாக்களை நடைமுறைப்படுத்த, வேறொரு பிரபல நிறுவனம் இவரது நிறுவனத்தை சுமார் முப்பத்தேழு லட்சம் டாலர் கொடுத்து வாங்கிக் கொண்டது! அதாவது தம் தொழில்நுட்ப அறிவை மட்டும் மூலதனமாகக் கொண்டு சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய் சம்பாதித்திருக்கிறார்! அதில் ஒரு கோடியைத்தான் ஐஐடிக்கு நன்கொடையாக்கியிருக்கிறார்!

"இப்போது புதிய தொழில் நுட்பங்களைப் பிறருக்குப் பயிற்றுவிப்பதையே முக்கியக் கடமையாகக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிய தேஷ் பாண்டேவிடம், கொஞ்சம் தயக்கத்துடன்தான் அந்தக் கேள்வியைக் கேட்டோம்.

"இப்படி ஐ.ஐ.டி.யில் படிக்கும் மேதைகள் எல்லாம் வெளிநாடுகளில் செட்டிலாகி விட்டால் எப்படி?"

"வருங்காலத்தில் நாடு என்ற கோணத்தில் யோசிப்பதே கஷ்டம்! உலகம் என்பதே ரொம்பவும் சுருங்கி விடும். இந்தியா தனது தயாரிப்பைப் பணக்கார நாடுகளுக்குத்தானே விற்க வேண்டும்? அப்போது உலகெங்கும் பரவியுள்ள இந்தியர்களும் அதற்கு உதவியாக இருப்பார்கள்! தவிர, ஒரு ஐ.ஐ.டி. மாணவர் வெளிநாட்டில் வேலைக்குச் சென்றால், இருபது ஐ.ஐ.டிக்காரர்கள் இந்தியாவிலே தானே இருக்கிறார்கள்?" என்று பதில் வந்தது.

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : **ஸ்ரீஹரி**

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும் ?



மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் சூரிய பகவான்.

ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் சூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர் : ஸங்கராந்தி சமயம் சூட்க்ஷமமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

- ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

'ஜீரோ டிலே' நூறு மார்க் வாங்குமா?

அரசு மருத்துவமனைகளின் 'இமேஜ்' என்னவென்பது நமக்குத் தெரியும். சென்னை கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவமனையும் இதற்கு விதிவிலக்கல்ல! ஆனால் இதை மாற்றுவதற்காகப் பெருமுயற்சிகள் நடந்து வருகின்றன - இப்போது!

"எங்கள் மருத்துவமனையில் இயங்கும் தீக்காய சிகிச்சைப் பிரிவு ஏற்கெனவே சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அதன் விரிவாக்கமாக 'தோல் வங்கி' ஒன்றை விரைவில் தொடங்கப் போகிறோம். சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, டாக்டர் சௌந்தரராஜனுக்குப் பிறகு இங்கு தொடரப்படாமல் இருந்தது. அது மீண்டும் தொடங்கப்பட உள்ளது. பிரிட்டிஷ் அரசின் 'வெளிநாட்டு முன்னேற்ற உதவி' திட்டத்தின் கீழ் நூறு கோடி ரூபாய் ப்ராஜக்ட் ஒன்றை இங்கு நிறுவ விண்ணப்பித்திருக்கிறோம். அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் இங்கு ஒரு ஒன்பது மாடி மருத்துவமனை ஸ்டார் தரத்துடன் இயங்கும்'' என்றார் மருத்துவமனையின் டாக்டர் வி. தியாகராஜன். மதுரை, தஞ்சாவூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி விட்டு வந்தவர். வந்து சில மாதங்கள்தான் ஆகிறது என்றாலும் அசுர வேகத்தில் சில முடிவுகளை எடுத்திருக்கிறார். ''சரியானபடி அணுகினால் அரசு நிதியுதவி அளிப்பதிலே எந்தத் தடங்கலும் வருவதில்லை'' என்கிறார்.

பொங்கல் அன்று அறிமுகப்படுத்தவிருக்கும் 'ZERO DELAY WARD' நம் கவனத்தைக் கவர்ந்தது. தரையில் சலவைக்கல் பதிப்பது உட்பட கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக அவசர சிகிச்சைக்காக ஒருவர் வந்தால், காஷுவாலிடியில் அவரது நிலையைப் பரிசோதித்து விட்டு (இதயநோய் சிகிச்சை, தொண்டை, இ.என்.டி. போன்ற) சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்புவார்கள். இதற்குள் ஒரு கால் மணி நேரமாவது ஆகிவிடும். இந்தச் சில நிமிடங்கள் தாமதம் கூட உயிருக்கே ஆபத்தாகக்கூடும். இதைத் தவிர்க்கத்தான் இந்த 'ZERO DELAY WARD.'

அவசர சிகிச்சைப் பிரிவிலேயே ஒதுக்கப்படவிருக்கும் ZERO DELAY WARD என்ற ஒரு தனி அறையில் எல்லா பிரிவு டாக்டர்களும் இருப்பார்கள்! நோயாளி வந்தவுடனே, "இதை நான் பார்த்துக் கொள்கிறேன். இது நாமிருவரும் சேர்ந்து செய்ய வேண்டிய சிகிச்சை'' என்பது போல் பிரித்துக் கொள்வார்கள். சுமார் [illegible] கைகள், ஏசி சூழலில் இருக்கப் போகின்றன. விஷம் சாப்பிட்டிருந்தால் அதை 'வாஷ்' செய்து வெளியேற்ற ஒரு தனிப்பிரிவு, செப்டிக்கான பகுதிகளை நீக்க ஒரு மினி ஆபரேஷன் தியேட்டர் - அடுத்தடுத்து உள்ளன. இதய சிகிச்சை உள்பட வேறென்ன அறுவைச் சிகிச்சை உடனடித் தேவை என்றாலும் அதற்காக இதே கட்டடத்தில் ஒரு பெரிய ஆபரேஷன் தியேட்டரும் சகல வசதிகளுடன் காத்திருக்கும். எக்ஸ்ரே, அல்ட்ரா சோனிக், ஸ்கானிங் கருவிகளும் அருகிலேயே. இந்தப் புதிய முயற்சி, பல உயிர்களைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன்'' என்றார் டாக்டர் தியாகராஜன்.


• டாக்டர் தியாகராஜன்

கேட்பதற்கு இனிமையாக இருந்தது. இது முறையாக, நோக்கத்தைப் புரிந்து கொண்டு செயல்படுத்தப்பட்டால் சிறப்பாக இருக்கும். சென்னை பொது மருத்துவமனையில் கூட முன்பு கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு சூழல் அறிமுகப்படுத்தப்பட்டு, 'பழைய குருடி கதவைத் திறடி' என்று ஆனதும் நினைவுக்கு வந்தது. கீழ்ப்பாக்கத்தில் அது நேராது என நம்புவோம்!

— அருண் சரண்யா

சோனியா ஆதரித்த பட்ஜெட்!

● மியன்மர் (பர்மா) தேசத்தவரான, நம் ஜனாதிபதியின் மனைவி உஷா நாராயணன், பர்மியச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஒரு தொகுப்பு வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். ஆனால், பர்மிய சூழ்நிலையில் எழுதப்பட்ட கதைகள் எல்லாமே, இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்புடையதாக இருக்குமா என்பதில் அவருக்குக் கொஞ்சம் சந்தேகம். ஆகவே அவர் என்ன செய்கிறார் தெரியுமா? பர்மியக் கதைகளைப் படித்துவிட்டு, ஜனாதிபதியிடம் கதைச் சுருக்கத்தைக் கூற, ஜனாதிபதி ஓ.கே. சொன்னால், மொழி பெயர்க்க எடுத்துக் கொள்கிறார்! இலக்கியத் தம்பதி!

● ஏ.ஆர். கித்வாய், தற்போதைய மே. வங்காளத்தின் கவர்னர். ராஜ்பவன் வளாகத்தில் பிரமாதமாகத் தோட்டம் போட்டிருக்கிறார் கவர்னர். அமோகமான காய்கறி விளைச்சல்! காய்கறி விற்று, அந்தப் பணத்தை மறுபடி காய்கறிகள் பயிரிடப் பயன்படுத்தச் சொல்கிறார் கவர்னர். ஆனால், அதிகாரிகள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. "ராஜ்பவனில் விளையும் காய்கறிகளை விற்று வரும் பணத்தை ரிசர்வ் பாங்கில், அரசாங்கக் கணக்கில் கட்டி விட வேண்டும்; அல்லது ராஜ்பவன் உபயோகம் போக பணியாளர்களுக்கு இலவசமாய்த் தாலாம்" என்று விதிகள் கூறுவதாய்ச் சொல்லி விட்டார்கள். 'இதற்கு முன் பீகார் மாநில கவர்னராக இருந்தபோது, ராஜ்பவன் வளாகத்தில் கோழிப்பண்ணை நடத்தினேனே! அப்போது இந்த விதி எங்கே போனது?' என்று கவர்னர் கேட்க, அதிகாரிகள் மௌனமாகி விட்டார்கள்.

● சாகிப் சிங்வர்மா யார் என்று ஞாபகம் இருக்கிறதா? சுஷ்மா ஸ்வராஜுக்காக, டெல்லி முதலமைச்சர் பதவியைக் கட்டாயத்தின் பேரில் தியாகம் செய்தவர். சட்டசபைத் தேர்தல் தோல்வியை அடுத்து, மத்திய அமைச்சர் பதவியும் கிடைக்க வாய்ப்பில்லாத சூழல். மறுபடியும் டெல்லி கல்லூரி ஒன்றில், தாம் முன்பு பார்த்து வந்த லைப்ரரியன் பணிக்கே திரும்பி விட்டார் என்று தகவல். படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் ஒரு அரசியல்வாதியை, தேர்தல் தோல்வி கல்லூரிக்கு அனுப்பியிருப்பது விசித்திரம்தானே!



• மன்மோகன் சிங்



• பால்தாக்ரே



• வாஜ்பாய்



• சோனியா

● ராஜ்ய சபையில், நாட்டின் பொருளாதார நிலைமை பற்றிய விவாதத்தின்போது, கடைசியாக பதிலளித்துப் பேசிய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, 'இந்த அரசு டாக்டர் மன்மோகன் சிங் ஆரம்பித்து வைத்த தாராளமயமாக்கலை, தொடர்ந்து நிறைவேற்றும்' என்று சொன்னதும் காங்கிரஸ்காரர்களுக்கே கூட ஆச்சர்யம்! ஒரு காங்கிரஸ் எம்.பி மகிழ்ச்சியில் இலேசாய் மேஜையைத் தட்டினார். அவர் சாட்சாத் டாக்டர் மன்மோகன் சிங்கேதான்.

● முன்னாள் சிவசேனைக்காரர் ஒருவர், பால்தாக்கரே

பற்றிய சம்பவம் ஒன்றைச் சொல்லி, கிண்டலடிக்கிறார். ஒருதடவை நாசிக்கில் ஒரு பண்ணை வீட்டுக்குப் போயிருந்தாராம் தாக்கரே. சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தவர், ஒரு குறிப்பிட்ட கொடியைக் காட்டி, 'இதில் நல்ல வெரைட்டி திராட்சை கிடைக்குமா?' என்றபோது, கூட வந்தவருக்கு தர்மசங்கடமாகி விட்டதாம். காரணம், தாக்கரே காட்டியது திராட்சைக் கொடியில்லை; நெல்லிக்காய் மரம்!

● சோனியாகாந்தி, அண்மையில் சண்டிகருக்கு விஜயம் செய்தார். அவருக்கு, காங்கிரஸ் பிரமுகர் வினோத் சர்மா ஒரு விருந்து அளித்தார். விருந்தில், சோனியாவுக்காகப் பிரத்யேகமாக இத்தாலிய சாலட், கேக் எல்லாம் வரவழைத்திருந்தார். ஆனால், சோனியாவோ அவற்றைத் தொடாமல், விருந்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் தொண்டர்களுக்கான பகுதியில் போய், சப்பாத்தி, தால் என்று அவர்களுடன் தோழமையாய்ப் பேசியபடியே சாப்பிட்டார். மகளிர் பிரிவினரிடம், ஹரியானா லட்டு எப்படிச் செய்வது என்று 'ரெஸிபி' கேட்டுக் கொண்டாராம். சோனியாவும் அரசியல்வாதியாகி விட்டார்!

● பிரதமர் வாஜ்பாயிடம் சமீப காலமாக ஒரு மாற்றம் தெரிகிறது. தினமும் தம் கட்சி எம்.பி.களை, மாநிலம் வாரியாகக் காலைச் சிற்றுண்டிக்கு அழைக்கிறார். மனம் விட்டு அவர்களுடன் பேசுகிறார். அவர்கள் மாநிலத்தில் கட்சியை வளர்க்க என்ன செய்யலாம்? அமைச்சர்களின் பணி திருப்திகரமாக உள்ளதா என்றெல்லாம் விசாரிக்கிறார். அண்மையில் துருவித் துருவி அவர் கேட்டு அறிந்தது உ.பி.யில் கல்யாண்சிங் ஆட்சியைப் பற்றித்தான்!

● ஜெயப்பிரகாஷ் நாராயண் மறைந்து இருபது வருடங்கள் கழித்து, பாரத ரத்னா வழங்கப்பட்டுள்ளது குறித்து, டெல்லியில் சொல்லப்படும் ஜோக்... "அடுத்து அசோகர், விக்ரமாதித்தர், வீர சிவாஜி எல்லாருக்கும் தரப் போகிறார்கள்!" ●

— நியூஸ் பையன்

படம் எப்ப வரும்? கதவு எப்ப திறக்கும்?

● திரைப்பட விநியோகத்தில் கொடி கட்டிப் பறக்கும் பிரமுகர் ஒருவரை சந்தித்தோம். ''நீதி, நேர்மை, நியாயம், ஊழல் ஒழிப்பு என்றெல்லாம் பேசுகிறார் ரஜினி. பாராட்டுகள். ஆனால் இவரது படத்தை விநியோகிக்கக் கையாளும் வழி முறைகளால் அரசுக்கு வருமான இழப்பும், ஊழல்களும் நடக்க வழி வகுக்கிறாரே... இது சரிதானா?'' என்று கேட்டார் அவர். ''ரஜினி நேரடியாக தியேட்டர் அதிபர்களுக்குப் படத்தை விற்கிறார். சென்னைக்கு வெளியே தியேட்டர்காரர்கள் போட்ட பணத்தை எடுக்க அரசை ஏமாற்றுகிறார்கள். 'Flat' என்ற முறையில் 10, 20 ரூபாய் டிக்கெட்டுகளுக்கு 30, 40 என்று ஒரே விலை நிர்ணயம் செய்து விடுகிறார்கள். 'OVER' என்ற முறையில் நாற்



காலிகளைக் கூடப் போட்டு வசூலைப் பெருக்கிக் கொள்கிறார்கள். இந்த இரண்டு முறைகளிலும் அரசை ஏமாற்ற, தியேட்டர்களுக்கு அதிகாரிகளே உடந்தை!'' என்றார் அவர்.

தியேட்டர்களுக்கு விற்றது போகப் பல்வேறு உரிமைகளுக்கும் சேர்த்து 'படையப்பா' இருபத்தெட்டு கோடிக்குப் போயிருக்கிறதாம்! இது தவிர, முதல் ரவுண்டு ஓடி முடிந்தவுடன் தியேட்டர்காரர்களிடம் பெட்டியை வாங்கி விநியோகஸ்தர்களிடம் விற்று விடுவார்களாம். அப்படி அருணாச்சலம் படத்தை இரண்டாவது ரவுண்டில் நாற்பது லட்சம் கொடுத்து வாங்கிய ஒருவர் தலையில் துணியைப் போட்டுக் கொண்டாராம்.

''எந்த நம்பிக்கையில் கோடி, கோடியாய்க் கொட்டுகிறார்கள்... புரியலையே... ஸார்'' என்று புலம்பினார் அந்த விநியோகஸ்தர்.

● இதுவும் படையப்பா விவகாரம் தான். ஆனால் அரசியல். மூன்றாவது அணியில் அவரை இழுத்து முடிச்சுப் போட மூப்பனார், வை.கோ போன்றவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்களாம். ஆனால் இது சம்பந்தமாகத் தன்னைச் சந்திக்கும் பிரமுகர்களிடம் ''ஜெயலலிதா ஆட்சிக்கு வரக் கூடாது. கலைஞரையும் சேர்த்துதான் கூட்டணி அமைக்கணும்'' என்று சொல்கிறாராம் ரஜினி. இதன் காரணமாக ரஜினியிடம் மேற்கொண்டு பேசத் தயங்கி வாபஸ் ஆகிவிடுகிறார்களாம் பிரமுகர்கள்.

''குண்டு வெடிப்பு, விலைவாசி என்ற பல பிரச்னைகள் இருந்தும் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் எங்கள் கூட்டணி கிட்டத்தட்ட பத்து தொகுதிகளில் பத்தாயிரத்திலிருந்து இருபதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் தோற்றது. இந்த அளவுக்கு வோட்டுக்கள் வாங்க ரஜினியின் ஆதரவே காரணம். எனவே ரஜினிக்கென்று ஒரு ஆதரவு வங்கி தமிழகத்தில் உண்டு'' என்றார் ஒரு ஸீனியர் த.மா.கா. பிரமுகர். இதற்கிடையில் 'படையப்பா வெளிவந்த பின்தான் இனி அரசியல் சந்திப்புகள்' என்று தாற்காலிகமாக அரசியல் கதவை மூடி வைத்திருக்கிறாராம் ரஜினி. ●

— தில்லப்பா


Wedding life begun well with
Sathya FURNITURE
"ONE - STOP" CENTRE FOR
A to Z in FURNITURE
Bed Room Furniture
Living Room Furniture
Dining Room Furniture
SATHYA CORPORATION



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நீங்கள் எது செஞ்சாலும் ஜெயிக்கலாம்கிறது உண்மைதான்னாலும் அதுக்குக் கடுமையா உழைக்க வேண்டியிருக்கும். இயந்திரம் தொடர்பான வேலையோ, தொழிலோ பண்றவங்களுக்கு அனுகூலமான காத்து வீசது. கலைத் துறையினருக்கும் இலக்கியவாதிகளுக்கும் கற்பனை ஊற்று பிய்த்துக் கொண்டு கிளம்பும். புகழோடு லாபமும் கிடைக்கும்! பிரண்ஸ ுங்களும் உறவுக்காரங்களும் உதவிக்கரம் நீட்டுவாங்க. அரசியல்வாதிகளுக்குத் திடீர் திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டு லேர்ந்து உற்சாகச் சேதி வரும். எல்லோருமே உடல் நலத்துல கவனம் காட்டறது முக்கியம். இல்லேன்னா, சனி படுத்திடுவான்!




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க வாழ்க்கைப் பாதைல இருக்கற தடைகளெல்லாம் நீங்கிடும். ஆனாலும் அது ராஜ பாட்டையா இருக்காது. கொஞ்சம் அலைச்சல், கொஞ்சம் குழப்பம், கொஞ்சம் வீண் செலவெல்லாம் இருக்கத்தான் இருக்கும். குழந்தைகள் உங்களை டாக்டர் பீஸ் அழ வெச்சாலும் வெப்பாங்க. வாரக் கடைசில எல்லாம் சரியாயிடும். குடும்பத்துல விருந்து, கேளிக்கைன்னு உற்சாகம் துள்ளும். பெண்களுக்கு அனுகூலமான வாரம்னே சொல்லலாம். சிலபேருக்கு சாதுக்கள் தரிசனம் சித்திக்கும். சிலருக்கு தத்துவ விசாரத்தில் மனசு ஈர்க்கப்படும்.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

நீங்க நெனைக்கறதெல்லாம் உடனே நடந்திடாது. அங்கங்கே ஸ்பீட் பிரேக்கர்கள் இருக்கும். அதுக்காக சோர்ந்து போயிடாதீங்க. சுத்தியிருக்கறவங்க ஓரளவுக்காவது உதவுவாங்க. சின்னச் சின்ன பிரச்னைகளால மனக் குழப்பம் ஏற்பட்டாலும் வெளிநாட்டுத் தொடர்பால நல்ல சேதி கிடைக்கும். ஏற்றுமதி - இறக்குமதி மற்றும் வியாபாரத் துறையிலிருக்கிறவங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். வீடு, மனை, வாகனாதி விஷயங்களில் எச்சரிக்கை அவசியம். பேச்சுல கவனமும் நிதானமும் தேவை. இல்லேன்னா, திருவாளர் - திருமதிக்கிடையிலேயே புகைச்சல் கிளம்ப ஆரம்பிச்சிடும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்களோட ஆற்றல் அணுகுண்டு மாதிரி வெடிச்சுக்கிட்டு வெளிப்படற வாரம் இது. எதிரிங்களெல்லாம் ஒளிஞ்சுக்க இடம் தேடி ஓடுவாங்க. சட்டம் - போலீஸ் துறையைச் சேர்ந்தவங்களோட அந்தஸ்து கம்மா ஒரு தூக்குத் தூக்கிடும். போட்டி, பந்தயம், வழக்கு விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமாவே இருக்கும். சிலருக்குப் பயணத்துல பலன் கிடைக்கும். குழந்தைங்க விஷயத்துல கவனமா இருங்க. கட்டுப்பாட்டைத் தளர்த்திடாதீங்க. அலுவலகப் பணியாளர்கள் விழிப்போட செயல்படணும். பண விஷயம், வாரக் கடைசியிலதான் திருப்திகரமா இருக்கும்.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

துணிச்சலும் தன்னம்பிக்கையும் அமோகமா இருக்கறதால உங்க திறமையும் உழைப்பும் வீண் போகாது. பொருளாதார நிலையிலும் அபிவிருத்தி ஏற்படும். குருவோட இட மாற்றத்தால சிறு சிறு பிரச்னைகள் வர்றதுக்கும் வாய்ப்பிருக்கு. சிலருக்கு பிரண்ஸ ுங்க உதவுவாங்க. தொழிலதிபர்களுக்குப் பயணத்தால லாபம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு ரேஷன் மாதிரியான லாபம்தான். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியும். பெண்கள் எதையும் நிதானமா அணுகறதுதான் நல்லது. இல்லேன்னா பக்கத்து வீட்டு அம்மாவோட சண்டை ஏற்படலாம். கூடவே சிக்கனமும் அவசியம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் இருந்த மந்தகதி அப்படியே தலை கீழாய் மாறிடும் உங்களுக்கு. அதுக்காக எதையும் யோசிக்காம செஞ்சிடாதீங்க. நல்ல படியாத் திட்டமிட்டுச் செஞ்சாத்தான் பலன் இருக்கும். குடும்பத்தில் சில்லறைப் பிரச்னைகள் எட்டிப் பார்க்கலாம். வீடு, மனை, வாகன விஷயங்களில் எச்சரிக்கை தேவை. கொடுக்கல் வாங்கல், ஸ்பெகுலேஷனெல்லாம் இந்த வாரம் வேண்டாம். உத்தியோகஸ்தர்களுக்குச் சில தடைகளோ, வேண்டாத ட்ரான்ஸ்ஃபரோ வரலாம். புது ஆளுங்ககிட்ட உஷாரா இருங்க. இல்லேன்னா கைப் பொருளைக் கூட இழக்கற நிலை ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கற அறிகுறியும் இருக்கு!



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

காரியத் தடைகளுக்கு நிறைய

நடக்குமென்பார், நடக்கும்!



தனுசு ராசிக்காரரான குமரி அனந்தனின் செயல் திறன் இந்த வாரம் மின்னல் மாதிரி பளிச்சினு வெளிப் படுமாம்!


ஜனவரி 13 முதல் 19 வரை

சான்ஸ் இருக்கு. சில திடீர் மாற்றங்களால, உங்க மனகல குழப்பங்களும் வரலாம். ஆனாலும் நிதானமா சிந்திச்சுச் செயல் பட்டால் எல்லாம் நல்லபடியாவே நடக்கும். வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு ஆதாயமான வாரம். குடும்பத்தில் சில பிரச்னைகள் வர்ற துக்கு சான்ஸ் இருந்தாலும் கூடப் பிறந்தவங்க உதவுவாங்க. பெண்களுக்கு, இந்தப் பொங் கலுக்கு நல்ல பட்டுப்புடைவை கிடைக்கறதுக்கு கியாரண்டி. வாரக் கடைசியில பண விஷயம் நல்லபடியாயிடும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட மும் பண வரவும் கிட்டும்!




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

சின்னச் சின்னத் தடைகள் வரும் னாலும் குருவோட சப்போர்ட் இருக்கறதால கடைசியில ஜெயிச்சுடுவீங்க. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கறதுக்கான அறிகுறிகள் ஏற் படும். ஆலை மற்றும் அரங்கத் தொழிலாளர் களின் வாழ்க்கையில் ஒரு புதிய பாதை புலப் படும். பொதுவாவே வீடு, மனை, நில விஷயங் களில் ஆதாயம் ஏற்படும். புதிய பொருள் வாங் கற யோகமும் இருக்கு. சிலருக்குப் பயணத்தால் பலன் கிடைக்கும். சிலரோட மனசுல சஞ்சல மும் சபலமும் எட்டிப் பார்க்கலாம். வைராக் கியத்தோட விரட்டியடிச்சுடுங்க. இல்லேன்னா கவுத்துடும்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க செயல் திறன் மின்னல் மாதிரி பளிச்சினு வெளிப்படுகிற வாரம் இது. இயந்திரம் தொடர்பான தொழில் செய்பவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். காவல், ராணுவத் துறையினர் சாதனை படைக் கற சான்ஸ் இருக்கு. கலைத் துறையினருக்கு வளர்ச்சி உறுதி. பொதுவாவே, குடும்பத்தில் விருந்து, ஆடை, ஆபரணச் சேர்க்கையால உற் சாகம்னு சந்தோஷ சூழ்நிலை இருக்கும். சனி காரணமாகப் பிள்ளைகளால் மனக் குழப்பம் வர்றதுக்கும் வாய்ப்பு இருக்கு. ஸ்பெகுலேஷன், கைமாத்துக் கொடுக்கறதெல்லாம் வேண்டாம். பயணத்தில் எச்சரிக்கை அவசியம். பண விஷயம் பிராப்ளம் தராது.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

மேகக் கூட்டங்கள் சூரியனை மறைச்சிட்டுப் போற மாதிரி, குடும்பத்தில் சிறு சிறு சலசலப்புகள் ஏற்பட்டு அடங்கும். செவ் வாய் உதவியால உங்க திறமை வெளிப்படும். ஓரிரு காரியங்களும் நிறைவேறும். கலைத்துறை யினருக்கு வெற்றி வாய்ப்பு உறுதி. பெண் களுக்குப் பிரச் னையில்லாத வாரம். உத்தியோகஸ்தர்களுக் கும் முன்னேற்றம் நிச்சயம். சிலருக்குக் குழந்தைகளால சந்தோஷம் நிலவும். சிலருக்குத் திருமணியால! ஆனாலும் தந்தையின் உடல் நலத்துல அக்கறை அவசியம். புது ஆளுங்க உங்களை ஏமாற்ற சான்ஸும் இருக்கு.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க திறமையும் உழைப்பும் வீண் போகாது; எடுத்த காரியங்கள் எல்லாத்துலேயும் ஜெயிச்சுக் காட்டுவீங்க. விவசாயிகளுக்கு லாபம் நிச்சயம். உத்தியோகஸ்தர்களுக்கு பிரமோஷன் சான்ஸ் இருக்கு. பயணத்தால சிலருக்கு ஆதாயம் உறுதின்னாலும் பயணத்துல எச்சரிக்கை அவ சியம். கலைத்துறையினருக்குப் பாராட்டும் புகழும் கூடும். ஆனாலும் எல்லோருமே வீடு, மனை, ரியல் எஸ்டேட் விஷயங்களில் ரொம் பவே எச்சரிக்கையா இருக்கணும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

கிரக சஞ்சாரம் சரியில்லதனால, பிரச்னை களுக்கும் தடைகளுக்கும் பஞ்சமே இருக்காதுங்க. அதனால விசேஷமான பலன்கள் அரிதோ அரிதுதான். பண விஷயமும் சீரா இருக்காது. கொடுக்கல் வாங்கலிலும் சிக்கல் வரலாம். பேச்சுல நிதானமும் இனிமையும் இல்லேன்னா, பக்கத்து வீட்டுக்காரருக்கு குட்மார்னிங் சொன்னாக் கூட அது சண்டையில் முடியலாம்! ஆனாலும் வாரக் கடைசியில் எல்லாமே மாறிடும். எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு தீர்வு கிடைக்கும். எதையும் சமாளிக்கிற மன உறுதியும் கிடைக்கும். ●

சினிமா சாஸ்திரி!

'கெட்டி மேளம்... கெட்டி மேளம்' என்று கல்யாண சாஸ்திரிகளாக நூற்றுக் கணக்கான படங்களில் நடித்திருக்கும் ராமகிருஷ்ண ஐயரைத் தெரியாதவர்கள் திரையுலகில் இருக்க முடியாது. திரைப் படங்களில் தலையைக் காட்டுவது தவிர ஐயரின் ஸ்பெஷாலிட்டி, படங் களுக்குப் பூஜை போடுவது!

"நாளைக்கு பூஜைக்கு எல்லா ஏற்பாடும் செய்தாச்சா" என்று அக் கறையுடன் தயாரிப்பு நிர்வாகி யிடம் விசாரிக்கும் தயாரிப் பாளர் மறக்காமல் தொடர்ந்து, "நம்ம ஐயரைத்தானே ஏற்பாடு செய்திருக்கிங்க" என்று கேட் பார். காரணம், ராமகிருஷ்ண ஐயரை வைத்துப் பூஜை போட்டால், "போட்ட பணத்தை எடுத்து விடலாம்" என்பது மற்றொரு திரையுலக சென்டிமென்ட்!

கடந்த முப்பது வருட காலமாகத் திரை யுலகத் தொடர்போடு இருக்கும் 'ராம்கி ஐயர்' முதலில் சில காலம் வடபழனி கோயில் குருக்களாக இருந்திருக்கிறார். உருண்டையான முகம், சற்றே பூசின உடம்பு, அப்பாவித்தனமாக மின்னும் கண்கள், உச் சிக்குடுமி – இவை ஐயருக்கு நகைச் சுவைக் காட்சிகளில் நடிக்க வாய்ப்புப் பெற்றுத் தருபவை.

"நாங்கதான் எல்லா நடிக, நடிகையரை யும் ஆட்டி வைக்கறோம்னா எங்களுக்கு முன்பே பூஜையின்போது ஆட்டி வைப்பது ஐயர்தான்" என்று பல இயக்குனர்கள் சொல் வதுண்டு.

"ஸார்... நல்ல நேரம் போயிண்டிருக்கு..." என்று ஐயர் குரல் கொடுத்தால், "என்ன ஐயரே... வேற பூஜைக்கு கால்ஷீட் கொடுத் திருக்கியா" என்று கிண்டல் குரல்கள் வரு மாம்.

பேச்சுக்கு பேச்சு, "எல்லோரும் ரொம்ப நல்லவா. ஆனா பாருங்கோ, இப்போ நேரம் சரியில்லை. போன வருஷம் 22 படங்களுக்கு பூஜை போட்டா... அதில் 18 படங்களுக்கு நான்தான் பூஜை நடத்தி வெச்சேன். இது வரை எட்டுப் படங்கள்தான் வெளி வந் திருக்கு. கடந்த ஆறு மாத காலமாக ரொம்ப மோசம். ஒரு கோடி வாங்கறதா நீங்கள் சொல்லும் வெற்றிகரமான ஹீரோக்கள் கூட முப்பது, நாப்பது லட்சத்தோடு திருப் திப்பட்டுக்கறாங்க. மாசத்துக்கு ஒரு லட்சம் என்று ஊதியத்துக்கு, பிரபல நடிகைகள்

• ராமகிருஷ்ண ஐயர்



டீ.வி. தொடரில் நடிக்கிறா" என்று கோடம்பாக்கம் பொருளாதாரத்தை வெளிச்சம் போடுகிறார் ஐயர்!

எம்.ஜி.ஆர் பூஜையின் போது வந்து கற்பூரம் ஒற்றிக் கொள்ள மாட்டாராம். மேக்கப் ரூமிலிருந்து சரியான நேரத்துக்கு செட்டுக்கு வந்து விடுவாராம். ஆனால் சிவாஜி பயபக்தியுடன் பூஜைக்கு ஆஜர் ஆகி விடுவாராம். கல்யாண ஸீன் போது செட் ப்ராபர்ட்டியில் சில நேரங்களில் தாலி இடம் பெறத் தவறுவதால் கைவசம் எப்போதுமே தாலி எடுத்துக் கொண்டு முன் ஜாக்கிரதையாக ஷூட்டிங் செல்கிறார் ஐயர்.

"எனக்கு விட்ட் கொடுத்தவர் பி. வாசு தான். உழைப்பாளி படத்துல செமை ரோல்! ஸ்கூட்டர்ல, சிவன் வேடத்திலிருக்கும் ரஜினியை பின்னால் ஏற்றிக் கொண்டு அடிக்கும் கொட்டம்... பார்த்தேளா?!" என்று ஆர்வத்துடன் கேட்கிறார். வீரா படத்தில் "மாடத்திலே கன்னி மாடத்திலே" பாட்டில் இரண்டு வரி பாடி நடிக்கும் காட்சியில் ராம்கி ஐயரும் நடித்திருக்கிறார்.

"என்ன ராமகிருஷ்ண ஐயர்... பாருங்க, நான் பாடற பாட்டையே உங்களுக்குக் கொடுத்து விட்டேன்" என்று ரஜினி கிண்டலடித்தாராம். ரஜினியின் படங்களுக்கு பூஜை போடுவது தவிர துவக்க கால வெற்றிப் படங்களான முரட்டுக்காளை, போக்கிரி ராஜாவிலிருந்து அநேகமாக எல்லாப் படங்களிலும் தலையைக் காட்டுவதால் செல்லமாக 'ரஜினி ஐயர்' என்று இவரை அழைப்பவர்களும் உண்டு! அருணாச்சலம் செட்டில் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ரஜினி வெயிட் பண்ண, புரொடக்ஷனில் சரியாக மெஸேஜ் கொடுக்காததால் அந்தப் படத்தில் ஐயரால் நடிக்க முடியவில்லை. இத்தனைக்கும் குஷ்புவிடம் கூட, 'எனக்காக சுந்தரிடம் சிபாரிசு செய்யுங்கம்மா.. அப்பதான் உங்க கல்யாணம் சீக்கிரம் நடக்கும்' என்று கிண்டலடித்திருக்கிறார். "நல்ல ரன்னிங் ரோல் இருந்தா ஐயரைக் கூப்பிடுங்கப்பா... தலை காட்டற சமாசாரமெல்லாம் வேண்டாம்" என்று 'படையப்பா' ரஜினி சொல்லி விட்டாராம்.

திரையுலகம் இப்போது டீவியில் குடி பெயர்ந்திருப்பதால், ஐயரும் டெலிவிஷன் தொடர்களில் பிஸி!

"மர்மதேசத்தில் பண்ணியிருக்கேன். பால சந்தர் சார், நம்மை மறக்கவே மாட்டார். 'ஜன்னல்', 'காசளவு நேசம்' எல்லாத்துலயும் நான் உண்டு" என்கிறார். இது தவிர அவ்வப்போது தலை காட்டும் விளம்பரப் படங்கள் வேறு!

"நகைச்சுவைக் காட்சிகளில் நடிப்பதென்பது எனக்கு மிகவும் பிடித்த விஷயம். ஆனால் வருத்தமான சமாசாரம் என்னவென்றால் நமக்கும் வயிறு இருக்கு, குடும்பம், பிள்ளை குட்டி இருக்குங்கறதை மறந்துடறா. பண விவகாரத்தைத்தான் சொல்றேன். தினசரி சாயந்திரம் ஆனா பாக்கியை வசூல் பண்ண கம்பெனி கம்பெனியாய் ஸ்கூட்டரில் சுற்றவே சரியாக இருக்கிறது" என்று சொல்லும் ஐயர், சமீபத்தில் வெளி வந்திருக்கும் ஒரு படத்தைக் குறிப்பிட்டு 'பூஜை போட்டதுக்கே பணம் கொடுக்கலே' என்கிறார். ஆனால் இதையெல்லாம் மனத்தில் வைத்திருக்காமல், அடுத்தப் பட பூஜைக்கும் கூப்பிட்டால் உடனே போய் விடுவாராம்!

செல்லுலாய்ட் கல்யாண காட்சிகள் ஒரு புறம் இருக்க, நிஜக் கல்யாணங்கள், கிரஹப்ரவேசம், காதுகுத்தல், சீமந்தம் என்று ஐயரின் கால்ஷீட்டைக் கேட்டு ஆட்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

"படங்களில் இரண்டு வரி மந்திரத்தோடு நிறுத்திக் கொள்ளும் எனக்கு, முழு மந்திரங்களையும் சொல்லி வைதிகக் காரியங்கள் செய்யும் போதுதான் மனசு திருப்தியா இருக்கு ஸார்" என்கிறார் ராமகிருஷ்ண ஐயர். ●

— ஸ்ரீநிவாசன்

"பொண்டாட்டிக்குப் பயப்படுவதில்லைன்னு முடிவுக்கு வந்துட்டேன்."

"சபாஷ்! எப்பலேர்ந்து...?"

"அவ செத்துப் போனதிலேர்ந்து!"

— ஜோதி ரஞ்சன்





மறுநாள் சொன்னபடி ரங்கசாமி வருவான். பணத்தை எடுத்து பத்திரம், என்று தந்து விடலாம். அத்தோடு இந்த விஷயம் முடிந்து விடும் என்று நினைத்திருந்தான் சபேசன். மறுநாளுங் கூட அவன் பணத்தை வாங்கிக் கொள்ள வரவில்லை.

வீட்டில் பணம் மயில்க் கண் வேஷ்டிக்குள் பத்திரமாய் இருந்தது. ஒரு லட்சம். பீரோவில்தான் எல்லாருடைய துணிமணிகளும் இருந்தன. யார் வந்து பீரோவைத் திறந்தாலும், போச்சு - இப்ப மாட்டிக்கப் போறோம் என்று பரபரப்பாய் இருந்தது. பணம் இருக்கிறதா, இருக்கிறதா என்று அவ்வப்போது சரி பார்த்துக் கொண்டான். முழுக்கத் திறந்து பார்க்க முடியாது. பீரோவைத் திறந்து உள்ளே கையால் அமுக்கிப் பார்ப்பான். இருந்தது. அதில்கூட, ஒரு கட்டு, ரெண்டு கட்டு குறைந்தால்...? என்று பதட்டமாய் இருக்கும். வெளியே எடுத்து, துணியை விரித்து எண்ணிப் பார்த்தால் நல்லது. போச்சு. வேறு வினையே வேண்டாம். ஆளாளுக்கு அவனைக் குடைய ஆரம்பித்து விடுவார்கள். பயமுறுத்த ஆரம்பித்து விடுவார்கள்... ஏற்கெனவே அவன் பயந்திருக்கிறான்.

சபேசன் ஆளே பித்துப் பிடித்



எஸ். சங்கரநாராயணன்

ரங்கசாமி

3



தாற்போல ஆகிப் போனான். அவனில் ஒரு ரகசியம் உறங்கிக் கிடந்தது. அதை யாரிடமாவது உளறிக் கொட்டி விடுவோமோ என்று பயமாய் இருந்தது. அவன் பேச்சு குறைந்து விட்டது. தூக்கமே இல்லை. யார் என்ன கேட்டாலும், ஆம் இல்லை, என்று வார்த்தையில் பதில்.

எவ்வளவு உற்சாகமான ஆள் அவன். வெற்றிலை, பன்னீர்ப் புகையிலை, கூடவே வாயில் மகாராஜபுரத்தின் துக்கடா அதக்கிக் கொண்டிருப்பான்.

கிணற்றடியில் குளிரக் குளிர நீரிறைத்துத் தலைக்கு ஊற்றிக் கொள்ளும்போது பாட்டு. தொடர்கதை போல, விட்டு விட்டு, அதன் அடுத்த வரியைத் தலை துவட்டிக் கொள்ளும்போது பாடுவான். அடுத்த வரி கண்ணாடி பார்த்தபடி. 'அப்பா என் பேனாவை எடுத்தியா?' என்று ரமணி கேட்டால், 'இல்ல' என்று விட்டு, 'வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்' என்று ராகமிழைப்பான்.

மௌனம் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டது. இருளான, அச்சுறுத்தலான மௌனம். யாரோடும் பேசவே பயந்தான். ஏன் வரவில்லை ரங்கசாமி? இன்று வந்து விடுவான், நாளை வந்து விடுவான் என்று பார்த்துப் பார்த்து, ஒரு வாரம் ஓடி விட்டது. வீட்டில் சொல்லாமல் இருக்கலாமா, என்று லேசாய் ஒரு கவலை அவனுள் குடைய ஆரம்பித்தது. ச், சொல்லலாம் என்றால் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். கிழவி சும்மா இருக்க மாட்டாள். 'ஐயையோ' என்றுதான் அவள் முதல் பேச்சையே ஆரம்பிப்பாள். "ஏண்டா நான் சொல்றேன்னு மட்டும் உனக்கு ஆத்திரம் வருதே, இப்ப நீ பண்ணியிருக்கிற காரியத்துக்கு என்ன அர்த்தஞ் சொல்லு? என்ன தெரியும் உனக்கு? யாராவது ஆக்கிப் போட்டா, நன்னா மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவே..."

வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. வெளியே போய்க் கோவில் பக்கம் ரங்கசாமியைத் தேடி, இந்தாப்பா உன்

பணம், ஆள விடு, என்று கொடுத்து விட லாம் என்றிருந்தது. அவன் வீடு சபே சனுக்குத் தெரியாது. அவனைப் பற்றிய விவ ரங்கள் எதுவும் தெரியாது. இதில் பணத்தை வீட்டுக்குத் தெரியாமல் எடுத்துப் போக முடி யாது. குளத்தங்கரையில், சுத்து வட்டத்தில் மயில்க்கண் வேஷ்டியும் பண்முமாக அலைய முடியுமா? எவனாவது நம்மட் டேர்ந்து அபேஸ் பண்ணிட்டாப் போச்சு. வேற வினையே வேண்டாம். பணத்தை வீட்டில் வைத்துவிட்டு தான் வெளியே போய் வரவும் பயமாய் இருந்தது.

பரவாயில்லை என்று வெளியே கிளம் பினான். வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந் தது தாள முடியாதிருந்தது. சிநேகிதர்கள் எல் லாரும் அவனை இத்தனை நாள் காணாத காரணம் விசாரித்தார்கள். யாரிடமும் அவன் முகங் கொடுத்துப் பேசவில்லை. அவனை நம்பி ஒருத்தன் ஒரு லட்சம் கொடுத்துவிட்டு, திரும்ப வாங்கிக் கொண்டு போனான் - என்றிருந்தால் எவ்வளவு உற்சாகமாய் இருப்பான்?

ஆகா, என்று எழுச்சி கொண்டான் சபேசன். அதோ படபடவென்று பைக்கில் வருவது... அது ரங்கசாமிதான்! தெய்வமே, என்று எழுந்துக்கொண்டு அவனைப் பார்க்க ஓடினான். 'அண்ணா... அண்ணா!'

பைக் நின்றது. குளிர் கண்ணாடியைக் கழற்றியபடி ரங்கசாமி திரும்பிப் பார்த்தான். 'அப்பப்பா, உங்களை இன்னிக்குப் பிடிச் சிட்டேன்!' என்றான் சபேசன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு. அவனுக்கு மூச்சிறைத் தது. "என்ன இப்பிடிப் பண்ணிட்டீங்க?" என்றான்.

"என்னாச்சி?"

"என்ன, ஆச்சா?" என்று புன்னகைத் தான் சபேசன். அவனுக்கு உற்சாகம் மீள ஆரம்பித்திருந்தது. "அந்தப் பணம்...!"

"அது உங்களுக்குத்தான்!" என்று புன்னகைத்தான் ரங்கசாமி.

"எனக்கா?" அவனுக்குத் திகைப்பாய் இருந்தது. "சும்மா விளையாடாதீங் கண்ணா..."

"இல்ல - நிஜம்தான். அந்தப் பணம் உங் களுக்கேதான்!"

"வேற ஏதாவது லாட்டரில ரெண்டு லச்சம் விழுந்ததாக்கும்!" என்று சபேசன் சிரித்தான்.

"சாமி நீங்க நம்மாளு. இங்க யாரையும் நம்புந் தரமா இல்ல, கேட்டிங்களா..." என்

> "ஜான்வாசத்துக்கு மட்டும் போற கார்! அதான் எஞ்சினைத் தூக் கிட்டு சைக்கிள் பெடல் மாட்டிட் டேன்!"
>
> - மாதுரி

றவன், "வாங்க காபி சாப்பிட்டுட்டே பேசு வோம்" என்று பைக்கை நிறுத்தி விட்டு வந்தான்.

சபேசனுக்கு அவன் பேசுவது புரிய வில்லை. கூடவே போனான். "உங்ககிட்டே யிருந்து அந்த இடத்தை வாங்கிறணும்னு நிறையப் பேர் திரியறாங்க, தெரியுதுங்களா?"

"இந்த சபேசன்கிட்ட அது நடக்காது!"

"அவங்க என்ன ரேட் பேசறாங்க சொல் லுங்க."

"கிரவுண்ட் நாற்பதுன்னு பேசறாங்க, நம்மது ஒண்ணரை கிரவுண்டு. வேஸ்டேஜ் இல்லாத நல்ல சதுர நிலம்."

"கரெக்டு. பணத்தாசை காட்டுவாங்க. ரெடி கேஷ்ம்பாங்க. அறுபது ரெடி கேஷ் வாங்கினாலும் உங்களுக்கு நஷ்டம்."

"அதெப்பிடி?" என்றவன், "சரி, அதெல் லாம் நான் வித்தாதானே?"

"காபி எடுத்துக்கங்க" என்றான் ரங்க சாமி. அவன் காபி குடித்து முடிக்கும்வரை எதுவும் பேசவில்லை.


"நீங்க நம்ப சாமி. அதான் நான் இன் னொரு திட்டம் போட்டிருக்கேன்."

"திட்டமா?' என்று கேட்டான் சபேசன். திடீரென்று சந்தேகம் வந்தாற்போல "நீங்க ரியல் எஸ்டேட்டா?" என்று அவனைப் பார்த்தான்.

"அதுவும் பார்க்கறதுதான். அதான் தொழில்னு இல்லை" என்றான் ரங்கசாமி. அவனைப் பார்க்கத் திடீரென்று சபே சனுக்கு அடிவயிற்றில் சிலீரென்று பயந் தட்டியது.

"வெறும் நிலத்தைக் கிரயம் பண்ணினா அறுபதுதான் கிடைக்கும் பாத்துக்கிடுங்க. நாம என்ன பண்ணலாம், அதுல நான் ஃபிளாட் கட்டி, அத்தனையும் வித்ததுல, பாதி உங்களுக்கு, பாதி எங்களுக்கு..."

சபேசனைப் பார்க்கவேயில்லை அவன். ஏதோவொரு ஜுவல்லரி பேர் போட்ட பையிலிருந்து கால்குலேட்டரை எடுத்து விறு விறுவென்று ஏதோ கணக்கு போட்டான்.



'உங்களுக்கு ஒரு கோடி ரூவாய்க்கு மேல இதுல வரும், பாத்துக்கிடுங்க."

'கோடியா' என்று அதிர்ந்தான் சபேசன். "அதெல்லாம் சரிதான். அந்த இடத்தை நான் விக்கறதா இல்லையே" என்றான்.

"நல்லா யோசிச்சுச் சொல்லுங்க சாமி. வேற யார்கிட்டியோ மாட்டிக்கிட்டு பைத்தாரத்தனம் பண்ணிறாதீங்க" என்றவன், மேற்கொண்டு ஏதோ பேச வந்த சபேசனை நிறுத்தி, "நாலு பேர்கிட்ட விசாரிச்சுப் பாருங்க ரங்கசாமி பத்தி... நான் எடுத்தா, எடுத்த காரியத்தை முடிக்காம விட மாட்டேன்" என்றான் அழுத்தமாய்.

கொஞ்சம் கோபப்பட்டாற் போல அவன் கண்கள் சிவந்தன. அதில் தெறித்த வெறி, அந்த உறுதி கலக்கமாய் இருந்தது.

சட்டென்று நெகிழ்ந்து ரங்கசாமி "மத்த ஆளுங்க மாதிரியில்லை நான். பாதில ஓடற தில்லைன்னு சொல்ல வந்தேன்... இந்த ஃபிளாட்டுலயே உங்களுக்கும் ஒரு ஃபிளாட் தருவேன். இந்த இடத்தை விட்டுட்டுப் போறமேன்னு கவலைப்பட வேண்டாம் நீங்க. கட்டி முடிக்கற வரை, வேற வாடகை வீடு பக்கத்துலயே நான் பாத்துத் தர்றேன். வேற யாரும் செய்ய மாட்டாங்க, புரிஞ்சிக்கங்க." சற்று நிறுத்தி அவனைப் பார்த்தான். 'வேற ஏதாச்சும் சாப்பிடறீங்களா?' - "இல்ல வேணாம்" - "அப்ப சரி வாங்க போலாம்."

பணத்தை இந்த நிமிடம் இவன் முகத்தில் விட்டெறிய முடிந்திருந்தால் எத்தனை நன்றாய் இருக்கும்.

இப்போது என்ன பண்ண? இரு, பதட்டப்படாதே. நிதானமாய் இதுபற்றி யோசி. வீட்டை விற்பது என்றால் இன்னும் ஆயிரம் விஷயம் இருக்கிறது. அவன் அந்தப் பணத்தை அட்வான்ஸ் என்று தரவில்லை. அக்ரிமெண்ட் போடவில்லை. ஹா, யாரென்று நினைத்து விட்டான், என்னைப் பற்றி? அவ்வளவு ஏமாளியாகவா எடை போட்டு விட்டான்?

ஒருவேளை அவன் நினைத்ததை சாதித்து விடுவானோ, என்று நினைக்கவே பகீரென்றது. ச்சே, யாரோ ஒருவன் வந்து நம்மிடம் பணம் தந்தால், அதுவும் ஒரு லட்சம் தந்தால், வாங்கிக் கொள்வதா? இடத்துக்கு விலை அறுபது லட்சம். அதற்கு ஒரு லட்சம் அட்வான்ஸ் யாராவது வாங்குவார்களா... நடந்ததை வீட்டில் சொல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது. எல்லாரும் கத்துவார்கள். கத்தாதிங்கடி சனியன்களா. இதில் நான் மாட்ட மாட்டேன். எப்படிச் சமாளிக்கிறேன் பாருங்கள். பார்த்துவிட்டுச் சொல்லுங்கள், நான் ஏமாளியா புத்திசாலியா என்று.

சபேசன் வீடு திரும்பியபோது ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவன் வீட்டு வாசலில் 'ரங்கசாமி ரியல் எஸ்டேட்' என்ற போர்டு பார்த்ததுமே திக்கென்றது. பரபரப்புடன் உள்ளே போனான். பாட்டி, இவள், கீதா, ரமணி எல்லாரும் பேயறைந்தாற் போல உட்கார்ந்திருந்தார்கள். "கண்டவன் வந்து போர்டு வெச்சிட்டுப் போறான், இதை எல்லாருமாப் பாத்திட்டிருந்திங்களாக்கும்?" என்று கத்த வந்தவன், பேச வாயற்று அப்படியே நின்றான். மேஜையில் அவன் மயில்க்கண் வேஷ்டி இருந்தது.

"என்ன இதெல்லாம்?" என்று பாட்டி நேரடியாக ஆரம்பித்தான்.

"இங்க பாருங்கோ, இப்ப ஒண்ணும் ஆயிடலை. நான் வீட்டை விக்கிறதா இல்லை. புரிஞ்சுதா?"

"அப்ப ஏன் பணம் வாங்கினே?"

"இது அதுக்கு வாங்கின அட்வான்ஸ் பணம் இல்லை. போதுமா?"

"அவன் அட்வான்ஸ்ன்றானே?"

"எவன்?" என்றான் ஆத்திரமாய்.

"சாமிட்ட ரேட்டுல்லாம் பேசியாச்சி. அட்வான்ஸ் குடுத்தாச்சி. உங்களுக்காக எண்ணெய்க்காரத் தெருவுல வாடகைக்கு வீடும் பாத்திருக்கு... அவன் என்னவெல்லாமோ சொல்லிட்டு, ஃபிளாட் ஃபார் சேல்-னு போர்டையும் வெச்சிட்டுப் போறான். நாங்க என்ன பண்றது?"

"அதெல்லாம் என்கிட்ட நடக்காது. பாட்டி, அவன் ஒரு ஃபிராடு. இதுலல்லாம் நான் மாட்ட மாட்டேன்" என்று வெளியே போனவன், ஒருவிநாடி போர்டைப் பிடுங்கி எறிந்து விடலாமா, என்று ஆவேசமாய் யோசித்தான். வேண்டாம், சமாதானமாய்ச் சொல்லிப் பார்ப்போம். முடியலின்னா இருக்கவே இருக்கு போலீஸ் ஸ்டேஷன்.



''ஏர்போர்ட் லவுஞ்சில கல்யாணமா?''

''அமெரிக்க மாப்பிள்ளை. தாலி கட்டின கையோட ப்ளேன் ஏறணும்னு சொன்னார்.''

– மாதுரி

இதை நான் விடறாப்ல இல்ல, என்று தோன் றிய்து.

எல்லாரும் அவனையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி இருந்தது. ''இப்ப ஒண்ணும் ஆயிடல. சும்மா காபரா பண்ணாதீங்க. காலைல அந்த ரங்கசாமி வந்தா அவன் மூஞ்சில பணத்தை விட் டெறிஞ்சுர்றேன். தெரிஞ்சுதா?'' என்றான் பாட்டி முகத்தைப் பார்த்து. எல்லாரும் பாட்டி பேசும்போது கூடப் பேச வேண்டாம் என்றிருந்தார்கள்.

''அவன்கிட்ட எப்ப பணம் வாங்கினே?''

''ஆச்சி, ஒரு வாரம் ஆச்சி.''

''ஈஸ்வரா!''

படபடப்பாய் இருந்தது. மாடிக்குப் போனான். அங்கிருந்து இருளில் போர்டு தெரிந்தது. ரங்கசாமி ரியல் எஸ்டேட். என்ன தைரியம்! ஒரு கோடி ரூபாய் பிராஜெக்ட். பிராஜெக்ட் பெரியது. அதில் என் வரு மானம் மாத்திரம், அவன் சொன்னபடி, ஒரு கோடி. மயக்கமாய் வருகிறது. இதற்கு ஒரு லட்ச ரூபாய் அட்வான்ஸ். நான் ஏமாளியா என்ன? ரங்கசாமியின் கோபமான முகம் உடனே ஞாபகத்தில் வந்தது. அவனுக்கு பய மாய் இருந்தது. இந்த இடம், இந்த வீடு... இது நம் கைவிட்டுப் போய்விடுமோ...? ஓவென்று அழுகை வந்தது. பய அழுகை.

வெட்கத்தை விட்டு அந்த இரவில் அவன் அழ ஆரம்பித்தான். யாரோ மேலேறி வரும் சத்தம் கேட்டது. சட்டென்று துடைத் துக் கொண்டு பார்த்தான். பாக்கியலெட்சுமி. 'அம்மாவுக்கு உடம்பு ரொம்ப முடியல... மூச்சு முட்டறது. ஆஸ்துமா மாதிரியிருக்கு.'

அவசரமாய்க் கீழேயிறங்கிப் போனார்கள். ஜெகதாம்பாளுக்கு மூச்சிறைத் துக் கொண்டிருந்தது. ''என்ன பண்றது உங் களுக்கு?'' என்று போய் அவள் கையைப் பிடித்துக் கொண்டான். ''இப்பிடிப் போய்க் காரியம் பண்ணிட்டியேடா'' என்று அவள் திக்கித் திணறிச் சொன்னாள். அவன் அதைச் சட்டை செய்யாமல் ''வேணா டாக் டரைப் பார்ப்போமா?'' என்றான்.

பெரிய ஆஸ்பத்திரிதான். செலவு என்ன ஆகும் தெரியாது. டாக்டருக்கு போன் பண்ணி அவர் வந்து பார்க்க அரை மணி நேரம் ஆனது. ''நான் படிச்சிப் படிச்சிச் சொன்னேன். நீ கேக்கலியேடா...'' என்று புலம்பிக் கொண்டிருந்தாள். ''அதெல்லாம் அப்பறம் பாத்துக்கலாம். நீ பேசாமக் கண்ணை மூடித் தூங்கும்மா'' என்றாள் பாக்கியலெட்சுமி.


நடந்தது எதுவும் அவனுக்கு முக்கிய மாகப் படவில்லை. இந்த வீட்டின் அச் சாணி இவள். கிழவி. இவள் பிழைக்க வேண் டும். அதுதான் முக்கியம் இப்போது. எப்ப வாவது குளிர், மழை என்று அவளுக்கு ஆஸ் துமா வரும்தான். இந்த அதிர்ச்சி அவளைத் தூக்கியடித்து விட்டது.

கிழவி பிழைக்க வேண்டும். அவன் கட வுளை வேண்டிக் கொண்டான். இதற்கெல் லாம் காரணமான அந்த ரங்கசாமி இப் போது எதிரே இருந்தால் நரசிம்மாவதாரம் எடுத்திருப்பான். நான் அவனுக்கு இடத்தை விற்கப் போவதில்லை. இடத்தையும் காலி செய்யப் போவதில்லை. என்னதான் செய் கிறான், நானாச்சி அவனாச்சி, பார்த்து விடுவோம்.

ஆனாலும் கவலையாய், பயமாய் ரொம்ப பயமாய் இருந்தது. கிழவி இல்லாமல் அவனால் என்ன செய்ய முடியும்? அந்த வீட்டின் தூண் அவள். எப்படியாவது கிழவி பிழைக்க வேண்டும் என்று பதட்டமாய் இருந்தது. அதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை.

பணம் கொண்டு வந்திருந்தான். இருபதா யிரம் ரூபாய். மீதி எண்பதாயிரம் மயில்க் கண் வேஷ்டியில் முடிந்து வீட்டில் பத்திர மாய் இருந்தது.

(தொடரும்)


பின்னலிழையில்
மென்மை சுகம்!
Sun
Sun
VESTS
BRIEFS
TRUNKS &
PANTIES
சன் நிட்டிங் கம்பெனி
திருப்பூர்-641 608.

வட்டமேஜை

இன்னும் உலுக்கும் பூதம்!

✉ பொன்னியின் செல்வனுக்கான பத்மவாசனின் அட்டைப்படம், எங்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக அமைந்திருந்தது.
வந்தவாசி, எம். எம். ஆனந்தன்.

✉ 'பிரதமருக்கு வாழ்த்துச் சொன்னால்...' படிக்க இனிப்பாகவும் அதே சமயம் நிலைமையை எண்ணி வேதனைப்படவும் வைத்தது!
மதுரை - 16, ஆர். லட்சுமி.



✉ கர்நாடக சங்கீதத்தை பிரைம் டைமில் இடம் பெறச் செய்யாமல் தனி சேனலாக உருவாக்கி இடம் பெறச் செய்தால், நிச்சயம் ரசிகர்கள் குறைந்துதான் போவார்கள். நமது பாரம்பரிய சங்கீதம் அழிந்து போகாமல் இருக்க, தலையங்கம் கொடுத்த உத்திகள் நன்று!
திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

✉ 'வீடு வீடாகச் சென்ற எம்.எல்.ஏ., கட்டுரையைப் படித்தேன். வெற்றி பெற்ற பிறகு தொகுதிப் பக்கமே தலையைக் காட்டாத எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்களுக்கு மத்தியில், பெருந்துறை எம்.எல்.ஏ. நா. பெரியசாமி வீடு வீடாக விசிட் அடிப்பது பாராட்டத்தக்கது. உண்மையிலேயே பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மக்கள் கொடுத்து வைத்தவர்கள்தாம்.
ஆலங்குளம், ஆர். சாலமோன்.

✉ "பட்டதாரி ஆசிரியர்களுக்கு இருபுறமும் அடி" என்ற செய்தியினை வெளியிட்டு எங்களது கண்களிலிருந்து வழியும் இரத்தக் கண்ணீரைச் சிறிது துடைத்து ஆறுதல் அளித்துள்ளீர்கள்.
சேலம், எஸ். அங்காயம்மாள்.

✉ 'பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் சுயராஜ்ய அரசியலில் ஊழல்கள் மலிந்து விட்டன என்ற புகார் ஏற்கெனவே அதிகமாயிருக்கிறது' என்று சொன்ன 'பூதம் விழுங்கியது' - கல்கி கலெக்ஷன் படித்தேன். வாய்க்கு சர்க்கரைதான் போட வேண்டும். இன்னும் ஊழல்கள் தொடர்ந்து நாட்டை உலுக்குகின்றன. சமீப உதாரணம் - யூரியா ஊழல்!
சென்னை - 73, கே. வி. ராமன்.

✉ அடேயப்பா, ஒரு குண்டாதி குண்டு பாகவதர் படத்தைப் பிரசுரித்திருக்கிறீர்கள். உண்மையில் இப்படி ஒரு சரீர அமைப்புடன் ஒருவர் இருந்தாரா! அமர ஓவிய மேதை மாலியின் தூரிகை வண்ணம், எழுத்துலக மாமேதை அமரர் கல்கியின் கைவண்ணங்களுடன் கூடி யானைசைஸ் மனிதரை தத்ரூபமாகக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது.
சென்னை - 91, பாலகல்கி.

✉ முன்னாள் அ.தி.மு.க. வி.ஐ.பி.கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை நடைபெற்று வரும் தனி நீதிமன்றச் செய்திகளை, தினசரி செய்தித்தாள்களில் படித்த போது ஏற்படாத மனநிறைவு, கல்கியளித்திருந்த நேர்முக வர்ணனையைப் படித்ததும் ஏற்பட்டது.
தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

✉ சி.சு. செல்லப்பா அவர்கள் பற்றிய செய்தியை 'சுபி'யில் படித்தேன். அவருடைய இலக்கியப் பணி வணங்கத்தக்கது. அவரது சுதந்தர தாகம் நாவலை தமிழக அரசு, அரசுடைமையாக்கி மலிவு விலையில் தர வேண்டும். நூலகங்களில் இருக்கச் செய்ய வேண்டும். அரசு செய்யுமா?
திருத்தங்கல், ஈ. சிதம்பரம்.



• கஸ்தூரியா மகளிர் அமைப்பினர்

மத்திய தர வகுப்பினர் குடியிருக்கும் பகுதி கோவை டாடாபாட். அங்கு நட்ட நடுவே ஒரு குடிசைப் பகுதி... குடியிருப்பை நரகமாக்கும் குடிசைவாசிகளின் நடவடிக்கைகள்... அதை எதிர்த்துப் போராகக் கிளம்பிய இயக்கம், அன்பு சார்ந்த வெற்றிக்கதையாக முடிந்தது...



• அரசு கட்டித் தந்த புதிய குடியிருப்புப் பகுதி

ஜடிவன்ஜியான உடவன்வி!

“எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அங்கே பன்றிகளா ஓடும்! அத்தனை குடிசைவாசிகளும் சாலையையே கழிப்பிடமாக்கிக் கஷ்டப்படுத்துவார்கள். கஞ்சா, மதுவிற்பனைகூட அமோகமா நடக்கும். ‘எப்போ போலீஸ் வரும்? யாரை விசாரிக்கும்? யாரை ஸ்டேஷனுக்குக் கொண்டு போகும்?’ என்றே புரிபடாத சூழ்நிலையில் அப்பகுதி குடிசைவாசிகளைத் தட்டிக் கேட்கவே பலருக்கும் பயம்!

ஒரு நிலையில் அந்த இடத்தின் சொந்தக்காரர் மூலமாக நாங்கள் அவர்களைக் காலி செய்யச் சொல்லிக் கேட்டபோது பயங்கரமாக எதிர்த்தனர். கண்டனக் கூட்டமெல்லாம் போட்டு, கண்டபடி திட்டினர். சகட்டுமேனிக்குக் கட்சிக் கொடிகள்.. அரசியல் தலைவர்களெல்லாம் வந்து வந்து பயமுறுத்தினர்...

“ஒருமுறை குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்ய அந்தச் சேரிக்குள்ளே

போனபோதுதான் அவர்களின் அவலம் எங்களுக்கே தெரிந்தது. ஒரு குடிசைக்குள்ளே ஒன்பது குடும்பங்கள்! தலைமுறை தலைமுறையா வேற்றிடம் கிடைக்காத நிலை. உள்ளுக்குள்ளேயே சாக்கடை. அசிங்கத்திலேயே உட்கார்ந்து சாப்பிடும் குழந்தைகள். கொசுக்கடி. அதன் பின்புதான் அவர்களின் மீது அக்கறை சுரந்தது. அவர்களுக்காக அடிக்கடி கலெக்டர் அலுவலகம் படையெடுத்தோம். எங்கள் குறைகள் எல்லாம் அவர்கள் குறைபாடுகளாக மாறிப் போனது. கிட்டத்தட்ட நான்கைந்து கலெக்டர்கள். பல்வேறு அமைச்சர்கள். எண்ண முடியாத மனுக்கள். எம்.பி. குறை கேட்கும் நாளானாலும், கலெக்டர் குறை கேட்பு நாளானாலும், நாங்கள் அங்கு ஆஜர் ஆகிவிடுவோம். அப்படி பார்த்துப் பார்த்து எழுதி, எழுதி எட்டு வருடங்கள் கழித்து அவர்களுக்கு விடிவு காலம் பிறந்தது..'' என்கின்றனர் கஸ்தூர்பா மகளிர் அமைப்பின் உறுப்பினர்கள். ''சாலை வசதி, சாக்கடை வசதி, பள்ளி, கழிப்பறை வசதிகள், சமூகக்கூடம், எல்லாம் அடங்கியக் குடியிருப்புப் பகுதிக்கு அவர்களை இடம் மாற்றியிருக்கிறோம். அவர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகை, தொழில் தொடர்பாக வங்கிக் கடன் என்றெல்லாம் பெற்றுத் தந்து அவர்களை நல்ல சூழலில் வடவள்ளி என்கிற இடத்தில் குடியமர்த்திய போது கிடைத்த நிறைவு – அவர்களுக்குள் பொங்கிய மகிழ்ச்சி... எப்படிச் சொல்வது?''

– கொஞ்சம் திக்கு முக்காடித்தான் வார்த்தைகளைத் தேடினர் மகளிர் அமைப்பினர். முதன்முதலாகச் சேரி மக்களின் மீது அக்கறை கொண்டு ஏற்படுத்திய மருத்துவ முகாம்தான் இவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியதாம். அதுவரை இவர்களை எதிரிகளாகவே பாவித்த மக்கள், சிநேகம் கொண்டு வெளிப்படையாகப் பேசவே, உண்மை வெளிப்பட்டிருக்கிறது.

ஆக்கிரமிப்பாளர்களான குடிசைவாசிகள், முதலில் நிலச் சொந்தக்காரர்களிடம் எக்கச்சக்க (தலைக்கு முப்பதாயிரம்!) நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார்கள். எதற்கு? இடத்தை காலி பண்ண! பிறகு சமாதானப்படுத்தி மூவாயிரத்துக்கு சம்மதிக்க வைத்திருக்கிறார்கள்.

அதே போல் குடிசைவாசிகளின் அடிப்படைத் தேவைகளை அரசிடம் எடுத்துக் கூறி சிறிது சிறிதாக ஈடேற அங்குலம் அங்குலமாகப் போராடியிருக்கிறார்கள்.

டாடாபாடில் அவர்கள் ஆக்கிரமித்த இடம் இப்போது விற்பனையாகி, அப்பார்ட்மெண்டாக வளர்ந்து நிற்கிறது.

வடவள்ளிக்குப் போனவர்கள் வளர்ந்தார்களா...? அங்கேயே சென்று பார்த்தோம்.

“அவங்களை நாங்க முதல்ல தப்பா புரிஞ்சுக்கிட்டோம். எங்க எம்.எல்.ஏ பேச்சைக் கேட்டுட்டு முரண்டு பிடிச்சோம். கண்டபடி தண்ணியப் போட்டுட்டுப் பேசி ரகளைகூடப் பண்ணியிருக்கோம்! ஆனா அவங்க, எங்களுக்கு செஞ்சிருக்கிற காரியம் எந்த எம்.எல்.ஏ.வும், எம்.பி.யும் ஏன் மந்திரிகூட செய்யாதது...!'' என்றார்கள் நெஞ்சு நெகிழ.

பாலசுப்பிரமணியம், நாகராஜன்,



• வடவள்ளி வாசிகள்: பாலசுப்ரமணியன், நாகராஜன், ஆறுமுகம், ராமன்

ஆறுமுகம், ராமன் ஆகியோர் வடவள்ளி குடியிருப்பை நமக்குச் சுற்றிக் காட்டினார்கள்.

முகப்பில் எதிர்ப்படும் கோவில். குடிசை மாற்று வாரியத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்! (ஒரு சென்ட் நிலத்தில் ஒரு வீடு) குறுக்கும் நெடுக்கும் 'டைல்ஸ்' பதிக்கப்பட்ட வழித்தடங்கள். எல்லா வீடுகளுக்கும் மின் வசதி. சமுதாயக் கூடம். சிறுவாணி பொதுக்குழாய். ட்ரைனேஜ். 'Tokra' திட்டத்தில் உருவாக்கப்படும் தொழிற்கூடம். இரவுப் பாடசாலை.

''டாடாபேட்டில் இருந்தப்ப சாக்கடையக் கையில அள்ளி வெளியே வீசுவோம். மழை வந்தா சேறும், நாத்தமுமா ஒரே கஷ்டமா இருக்கும். இங்கே, நாங்க எல்லாம் அந்த மகாலட்சுமியம்மா (மகளிர் அமைப்புச் செயலாளர்) புண்ணியத்துல நல்லா இருக்கோம் சாமீ...!'' – எதிர்ப்படும் பெண்களிடம் மனம் நிறைந்த வார்த்தைகள்.

''எங்களுக்கும் அரசுத் தரப்பிற்கும்

முதலில் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்ததே அவங்கதான். அங்கே ஒரு லைட்டு வசதி கூடக் கிடையாதுங்க. ஒரு தடவை, ரெண்டு தடவையில்லை... நாலு தடவை ஜெயித்த எம்.எல்.ஏ செஞ்சு தர்றேன்னு சொல்லி ஏமாத்தினாரு. இருக்கிற இடத்தைப் 'பட்டா' பண்ணித் தர்றதா வாக்குறுதியும் கொடுத்தாரு. ஆனா செய்யல. கலெக்டர்கிட்ட சாலை



• டாடாபேட்டில் உருவான ஃப்ளாட்கள்



வசதி, வீதி விளக்கு கேட்டுப் போனா, 'நீங்க குடியிருக்கிறது தனியார் இடம். அவங்க கிட்ட 'நோ அப்ஜெக்ஷன்' கடிதம் வாங்கிட்டு வாங்க'ன்னு சொல்லி திருப்பியனுப்பறதே வேலையாயிருந்தது. எந்த நிலச் சொந்தக்காரார் அப்படிக் கடிதம் கொடுப்பார் சொல்லுங்க? அவங்களுக்கும் எங்களுக்கும் கூடத் தொடர்பு கிடையாது. அவங்க கூடவும் பேசி, கலெக்டர் கூடவும் பேசி நிலம் வாங்கித் தந்தது. நஷ்டஈடு வாங்கித் தந்தது மட்டுமல்ல; கூடவே இருந்து இன்னமும் நிறைய உதவிகள் செஞ்சுட்டும் வர்றாங்க இவங்க."

கஸ்தூரிபா மகளிர் அமைப்பு இந்தக் குடியிருப்பை இன்னும் தன் தத்துப் பிள்ளையாகவே பாவித்து வளர்க்கிறது என்பது இப்பகுதி மக்களின் நன்றி கலந்த பாராட்டுரை.

பல இடங்கள் அரசுத் தரப்பில் காட்டப்பட்டு, இந்த இடம் உகந்ததாக தொண்ணூறு சதம் பேர் சொன்ன பின்பே குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.

1992இல் இங்கே வந்து குடியேறும்வரை, 'எங்கே எல்லோரும் நட்டாற்றில் விட்டு விடுவார்களோ?' என்கிற அவநம்பிக்கையே மகளிர் அமைப்பின் மேல் வைத்திருந்தனராம். குடி வந்து ஆறேழு வருடங்கள் ஆன நிலையிலும் அவர்கள் அடிக்கடி வந்து பார்க்கும் வேகம், அரசிடம் இப்பகுதி குறைகளை எடுத்துச் செல்லும் பாங்கு தங்களைத் திக்குமுக்காடச் செய்வதாகச் சொன்னார்கள்.

பதினான்கு ஆண்டுகளாக இயங்கி வரும் கஸ்தூரிபா மகளிர் அமைப்பிற்கு ஆரம்ப நோக்கம் ஆக்கிரமிப்பு அகற்றுவதாக இருந்தது என்றாலும் இப்போது அதற்கு சமூக சேவையே வேலையாகி விட்டது என்று கூறுகின்றனர்.

இரத்த தானம், கண்கொடை, பெண்களை அவமதிக்கும் சக்திகளை எதிர்த்தல், விதவைகளுக்கும் வயதானவர்களுக்கு அரசு தரும் நிதியுதவிகளை முறைப்படி பெற்றுத் தருதல்... என்று இவர்களின் பணி விரிவடைந்திருக்கிறது.

உள்ளூர் பிரச்னை என்றில்லை. வெளியூரில் பெண்கள் சம்பந்தமான பிரச்னை வரும்போதுகூட அப்பகுதி போலீஸ் கமிஷனர், கலெக்டர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அது சார்ந்த நியாயத்தை வலியுறுத்துகிறது இவ்வமைப்பு.

கட்டுரை, படங்கள்:
கா.சு. வேலாயுதன்



புடவை புராணம்!

'மணப்பெண்ணுக்குப் புடவை வாங்கும் போது...' என்று வாக்கியத்தை முடிக்கவில்லை. அடுக்கடுக்காக ஆலோசனைகளை அள்ளித் தெளித்தார்கள், நாம் விசாரித்த சில பெண்கள் :

- தரம்மிக்க புடவைகளையே, நீண்ட காலமாகப் பெயர் பெற்று விளங்கும் கடைகளிலிருந்து வாங்குங்கள். முக்கியமாக, தள்ளுபடி விற்பனையில் வாங்க வேண்டாம். அப்படி விற்கப்படுபவை நீண்ட நாள் தேங்கியவை ஆகவோ, ஏதாவது குறைபாடு கொண்டதாகவோ இருக்க வாய்ப்புண்டு. சீக்கிரமே அந்த உடை கிழிந்து போனால் சென்டிமென்டாக மன உறுத்தல் ஏற்படலாம். இந்துத் திருமணங்களில் மணமகளுக்கு இரு வீட்டாருமாக நாலைந்து புடவைகளாவது வாங்க வேண்டியிருக்கும். ஒருத்தருக்கொருத்தர் கலந்து பேசி, பார்டர், நிறம் ஆகியவை எதிலும் ரிபீட் ஆகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

- புடவைக்கு 'பட்ஜெட்' ஒதுக்கும்போது ரவிக்கை, தையல் கூலி இரண்டையும் மறக்காமல் சேர்த்துக் கொள்ளுங்கள். இதற்குக் கணிசமாகச் செலவாகும்.

- முகூர்த்தத்திற்கான புடவை காஞ்சிபுரம் பட்டாக இருக்கலாம். அப்போது அடிக்கடி எழுந்து உட்கார வேண்டியிருப்பதால் புடவை கசங்கக்கூடிய வாய்ப்பு அதிகம். எனவே அதிக அழுத்தம் கொண்ட காஞ்சிப் பட்டு நல்லது. மாலை ரிசப்ஷனுக்கு, பளிச்சிடும் வண்ணம் கொண்ட புடவையே சிறந்தது. அந்த வேளையில் அதிக ஜரிகைகள் கொண்ட லைட்டான பனாரஸ் பட்டு அற்புதமாக இருக்கும்.

- ஒரு புடவை நன்றாக இருக்கிறதா என்பதை மட்டும் பார்க்காமல் அது மணப்பெண்ணுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்போதெல்லாம் ரிசப்ஷனுக்கு மணமகள் அழகு நிலையத்திற்குச் சென்று தன்னைப் 'புதுப்பித்து'க் கொண்டு வருவது சகஜமாகி விட்டது. குஜராத்தி பாணியில் புடவையை உடுத்தி விடுகிறார்கள். இதற்குப் பொருத்தமான டிசைனாகத் தேர்வு செய்யலாம்.

- மடிசார் கட்ட வேண்டுமென்றால் உயர்ரக காட்டனில் கூட புடவைகள் கிடைக்கின்றன.

- மணமகள் பளிச்சென்று புடவை உடுத்த வேண்டியது நியாயம்தான். ஆனால் பின்னாளில் வேறு விசேஷங்களுக்கும் உடுத்து மளவிற்கு ஒரு லிமிட்டுக்குள் இந்த பளீர் தன்மை இருக்க வேண்டும். வேறு திருமணங்களுக்குச் செல்ல நேரும் போது, "ஐய, இதை கட்டிக் கொண்டு போனால் கல்யாணப் பெண்ணை விட நான்தான் கிராண்டாகத் தெரிவேன்" என்றபடி அதை வருங்காலத்தில் பயன்படுத்தவே முடியாத அளவுக்கு இருந்தால் அது வேஸ்ட்தானே?

— குல்லூ


உலகம் முழுவதும் உஜாலா வெண்மை !
UJALA
FOR
SUPER WHITENESS OF
வெண்மையின் புதிய நிறம்
உஜாலா

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (3) M4092 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (5) 161 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki Issue Dated 17.1.99



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

